


பிரதேச செயலகம்
வடமராட்சி தெற்கு மேற்கு,
கரவெட்டி.

**பிரதேச மலர் - 02**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவுடையாள் – 02

PUBLIC LIBRARY
JAFFNA



இணையாசிரியர் :

**கலாநிதி தம்பிஐயா கலாமணி**
சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்

**திரு. கிருஷ்ணபிள்ளை நடராசா**
ஓய்வுபெற்ற கல்லூரி அதிபர்

**பிரதேச கலாசாரப் பேரவை**
**வடமராட்சி தெற்கு மேற்கு**
**பிரதேச செயலகம்**
**கரவெட்டி**
**2008**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5313(P) Archive.

| | | |
|---|---|---|
| மலரின் பெயர் | : | 'திருவுடையாள் - 02' |
| உரிமை | : | கலாசாரப் பேரவை<br>பிரதேச செயலகம்<br>வடமராட்சி தெற்கு மேற்கு<br>கரவெட்டி |
| பதிப்பு | : | 2009 மார்கழி |
| அட்டை வடிவமைப்பு | : | கோ. கைலாயநாதன் |
| கணினி வடிவமைப்பு | : | கு. மஞ்சுளா |
| அச்சுப்பதிப்பு | : | தமிழ்ப்பூங்கா அச்சகம்<br>பிரதான வீதி, நெல்லியடி<br>கரவெட்டி. 021-2264014 |
| அளவு | : | 176 X 250 |
| பிரதிகளின் எண்ணிக்கை | : | 750 |
| பக்கங்கள் | : | 191 + xxxiii |

| | | |
|---|---|---|
| Title | : | **"Thiruvudaial - 02"** |
| Copy Rights | : | "Kalasara Peravai"<br>Divisional Secretariat<br>Vadamaradchi South West<br>Karaveddy |
| Edition | : | 2009 December |
| Cover design & Art | : | K. Kailayanathan |
| Computer design | : | K. Manchula |
| Printers | : | Tamil Poonka Printers<br>Main street, Nelliady<br>Karaveddy. 021-2264014 |
| Size | : | 176 x 250 |
| No.of copies | : | 750 |
| Pages | : | 191 + xxxiii |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

# "திருவுடையாள் - 02"

## (பிரதேச மலர் - 2008)

**ஆசியுரைகள்** *vii - xiii*

**இதழ் ஆசிரியர் உள்ளத்திலிருந்து...** *xiv - xv*

**பிரதேச செயலாளரது நிர்வாக அறிக்கை** *xvi - xxxiii*

**வரலாறு படைத்தோர்** *01 - 38*

**கட்டுரைகள்**

- ஈழத்தில் பழந்தமிழர் பண்பாட்டுக் கட்டுமாணப் பரப்பின் புதிய எல்லைகள் - பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா *39 - 59*
- வடமராட்சி இலக்கியப் பாரம்பரியம் - சில அவதானிப்புக்கள் - கலாநிதி செ. யோகராஜா *60 - 70*
- வடமராட்சியின் மொழி வழக்காறுகள் - கலாநிதி சுபதினி ரமேஷ் *71 - 83*
- பிரதேச அபிவிருத்தியும் சமூகமட்ட அமைப்புக்களும் - திரு. சி. கேதீஸ்வரன் *84 - 94*
- வடமராட்சிப் பிரதேச சிறுகதை எழுத்தாளர்கள் - ஒரு சுருக்க அறிமுகம் - தெணியான் *95 - 101*
- வடமராட்சிப் பிரதேச சுகாதார சேவைகள் ஓர் அபிவிருத்திக் கனவு - வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் *102 - 120*
- வடமராட்சியாளும் வேளாண்மையும் - கலாநிதி கு. மிகுந்தன் *121 - 127*
- வடமராட்சிப் பிரதேச மக்கள் வாழ்வும் வளமும் குடிப்புள்ளியல் நோக்கு - பேராசிரியர் கா. குகபாலன் *128 - 137*
- வடமராட்சியின் வாழ்வியலை வகுத்துக்காட்டும் நெடும்பாட்டு - கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் *138 - 153*
- கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் சிறுதொழில் முயற்சியாண்மை - சில அவதானிப்புக்கள் - திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம் *154 - 161*
- வடமராட்சியில் வழக்கிலிருக்கும் பழமொழிகள் ஓர் ஆய்விற்கான முன்னோட்டம் - திரு. ஐ. சண்முகலிங்கம் *162 - 165*
- நோயற்ற வாழ்வுபெற சித்த வைத்தியம் கூறும் வழிவகைகள் - ஆயுள்வேத வைத்தியர் டாக்டர் சி. வேலும்மயிலும் *166 - 170*
- கரவெட்டி பிரதேசத்தின் திண்மக்கழிவு முகாமைத்துவம் - திரு. மு. கந்தசாமி *171 - 185*

**பிரதேசத்திற்கு பெருமை சேர்த்தோர்** *186*

**2008ல் "கலைவாரிதி" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டோர்** *187 - 191*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச கலாசாரப்பேரவை

# பிரதேச மலர்க்குழு

- **திரு. சி. சத்தியசீலன்**
  (பிரதேச செயலாளர், தலைவர், பிரதேச கலாசாரப் பேரவை)
- **திரு. ச. சிவசிறி**
  (உதவிப் பிரதேச செயலாளர்)
- **திரு. கி. சிறிபாஸ்கரன்**
  (உதவி திட்டமிடல் பணிப்பாளர்)
- **திரு. செ. கிருபாகரன்**
  (கணக்காளர்)
- **கலாநிதி த. கலாமணி**
  (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம், மலர் இணை ஆசிரியர்)
- **திரு. கி. நடராசா**
  (ஓய்வுபெற்ற கல்லூரி அதிபர், மலர் இணை ஆசிரியர்)
- **கலாபூஷணம் க. நடேசு (தெணியான்)**
  (எழுத்தாளர், ஓய்வுபெற்ற உபஅதிபர்)
- **திரு. குப்பிழான் ஐ. சண்முகலிங்கன்**
  (எழுத்தாளர், ஓய்வுபெற்ற ஆசிரியர்)
- **திரு. க. அம்பலவாணர்**
  (கோட்டக்கல்விப் பணிப்பாளர்)
- **செல்வி சறோஜா தம்பு**
  (ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர், அழகியற் கல்வி)
- **திரு. வி. க. சண்முகநாதன்**
  (நிர்வாக கிராம அலுவலர்)
- **திரு. சு. சிவகுமார்**
  (தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர்)
- **செல்வி. சே. செல்வசுகுணா**
  (கலாசார உத்தியோகத்தர்)
- **திரு. செ. ரூபகுமார்**
  (கலாசார அபிவிருத்தி உதவியாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வணக்கம்

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதில் சிறந்த திரவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே. (1)

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே. (2)

**மனோன்மணியம்**

**பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச கீதம்

வாழுக ஊழிகள் வண்மை நலத்துடன்
வாழுக வளருக வாழுகவே.

சீர்செம் பாடு திகழிரு வாட்டி
நரைமண் வளமார் நலம்பெறு நாடு
வடமர் ஆட்சி தெற்கு மேற்கு
பிரதே சத்தின் கலைநலம் என்றும் வாழுக.........

கைவினை கமவினை பனைவளம் உப்பு
உய்வினைத் தருமிறை கோயில்கள் ஞானம்
பெய்கலை கல்விப் புகழ்கல் லூரிகள்
பெருமைகள் சேர்ந்தே விளங்கும் திருநிலம் வாழுக.........

ஆடல் பாடல் அருங்கவின் கலைகள்
நாடல் கொண்ட நற்றிறன் காணத்
தேடல் பதித்தல் நாடிடு வோரைக்
கூடல் கொண்டு குலவிடு பூமி வாழுக.........

முத்தமிழ் வித்தகர் மூதறி வாளர்
மெத்தவே நிறைந்த மேன்மைப் பூமி
இத்தனை நலன்கள் இனிதமை வதனால்
இத்தலம் மண்ணில் இனிதுயர்ந் திடுமே. வாழுக.........

**அமரர் கலைஞான கேசரி**
**மன்னவன் கந்தப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின் அருளாசிச்செய்தி



அன்புசார் பெருமக்களுக்கு,

கரவெட்டி பிரதேச செயலகத்தால் ஆண்டுதோறும் வெளியீடு செய்யப்படும் "திருவுடையாள்" மலர் அனைவருக்கும் பயனுடையதாக அமையப்பெற்றுள்ளமையால் மகிழ்ச்சி அடைகின்றோம். கரவெட்டி பிரதேச கலாசார பேரவையினால் பிரதேசத்தின் சமூக, பொருளாதார, சமூக கலாசார பண்பாடுகளை வெளிக்கொணரும் ஓர் ஆவணமாக இம்மலர் விளங்குகின்றது. இம்மலரானது இப்பிரதேச மக்களின் கலைப் பாரம்பரியங்களை உலகறியச் செய்கின்றது. மக்கள் நற்பிரஜைகளாக வாழ்வதற்கு நல்லறிவுசார் நூல்களின் பங்கு அளப்பரியதொன்றாகும். அந்தவகையில் "திருவுடையாள்" என்னும் மலரினை வெளியீடு செய்யும் கரவெட்டி பிரதேச கலாசார பேரவையின் முயற்சி ஏனையோருக்கு முன்னுதாரணமாக அமையப்பெற்றுள்ளது. ஒரு பிரதேசத்தின் வளர்ச்சி ஒவ்வொரு குடிமக்களினதும் ஒற்றுமையால் மட்டுமே கட்டியெழுப்பப்படலாம் என்ற வாசகத்திற்கு எடுத்துக்காட்டாக வருடந்தோறும் மலரினை வெளியீடு செய்யும் பிரதேச செயலர் திரு. சி. சத்தியசீலன் அவர்களையும், கலாசார பேரவையினரையும், கரவெட்டி வாழ் மக்களையும் மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம். "திருவுடையாள்" மலர் சிறப்புற வெளிவந்து என்றும் மணம் கமழ வேண்டும் என்றும், கலாசார பேரவையினரின் சேவை தொடர்ந்தும் நடைபெற வேண்டும் எனவும் எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

***ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்***
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிவணக்கத்திற்குரிய பேராயர்
## கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்களின் ஆசிச்செய்தி



"திருவுடையாளின்" இரண்டாவது இதழும் வெகுவிரைவில் வெளிவரவிருப்பது பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. ஆரம்பகால கண்டங்களைத் தாண்டி குறுகுறு நடைநடந்து, வெற்றிநடை போடப்போகின்றது என்று நம்பியிருக்கலாம்.

தமிழ்மக்களின் இன்றைய அவலநிலைக்கு அவர்களிடையே வரலாற்று நோக்கும் பதிவுசெய்யும் விருப்பும் இல்லாதிருப்பது முக்கிய காரணமாகும். ஒருவரைப் பற்றி அல்லது ஒரு நிறுவனத்தைப் பற்றி மணிக்கணக்காக விஷயந் தெரிந்த ஒருவர் பேசுவார். ஆனால் அதனை எழுதித் தாருங்கள் என்று கேட்டால் ஏதோ சமாதானம் கூறிக் கடத்திவிடுவார்.

மேற்கத்தைய சமுதாயங்களில் வரலாற்றுணர்வு பரக்கக் காணப்படுகின்றது. இங்கிலாந்தில் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் மறைந்துபோன மக்களைப் பற்றிய செய்திகளை ஆலயங்களிலும், பிரதேச செயலகங்களிலும் தேடிக் கண்டுபிடிக்க முடிகின்றது. சென்ற மாதம் இங்கிலாந்தின் முக்கிய துறைமுகமான போட்ஸ்மவுத்திற்குச் சென்றிருந்தேன். பதினைந்தாம் நூற்றாண்டில் எட்டாவது ஹென்றி அரசர் கட்டுவித்த "மேரி றோஸ்" என்ற பாய்க்கப்பல், நெல்சன், பிரெஞ்சுக் கடற்படையை துவம்சம் செய்த "விக்டரி" என்ற பாய்க்கப்பல், விக்டோரியா மகாராணியார் கட்டுவித்த "வொறியர்" என்ற பிரமாண்டமான புகைக்கப்பல் என்பன மிகுந்த கவனத்துடன் பாதுகாக்கப்பட்டு வருவதனைக் கண்டேன். நமது நாட்டிலும் போர்த்துக்கீசர் காலத்திலும், ஒல்லாந்தர் காலத்திலும் தீரம்மிக்க செயல்கள் பல நடைபெற்றன. இவை நடைபெற்ற இடங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றனவா? சுவாமி விவேகானந்தர், அண்ணல் காந்தி, கவி தாகூர், ஜவஹர்லால் நேரு முதலிய மகான்கள் நமது நாட்டிற்கு விஜயம் செய்துள்ளனர். இந்த நிகழ்வுகள் எங்கே பதிவு செய்யப்பட்டுள்ளன.

பிரதேச மலர்கள் இத்தகைய நிகழ்வுகளையும் வரலாற்றுச் சின்னங்களையும் பதிவுசெய்ய சிறந்த ஊடகங்களாக அமையும். இவற்றிற்கு தமிழ் மக்கள் ஆதரவு கொடுப்பதனால், தமது பிரதேசத்தின் சிறப்பினைப் பேணிக் கொள்கின்றனர்.

வடமராட்சி, நீர் வளமும், நில வளமும் நிறைந்த பிரதேசமல்ல. ஆனால் மன வளமும், மூளை வளமும் நிறைந்த பிரதேசம். இலங்கையின் மிகச்சிறந்த விஞ்ஞானிகள், அறிஞர்கள், தமிழ்ப் புலவர்கள் இங்கு தோன்றியிருக்கின்றனர். மக்களின் கல்வியார்வத்தைக் கண்டு, கத்தோலிக்க திருச்சபையினரும், அமெரிக்க மிஷனரிமாரும், மெதடிஸ்த மிஷனரிமாரும் இங்கு சிறந்த கல்விச்சாலைகளை அமைத்தனர். "திருவுடையாள்" வடமராட்சியின் சகல விழுமியங்களையும் உள்வாங்கி சிரஞ்சீவித் தன்மை வாய்ந்த ஆவணமாகத் திகழவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

***எஸ். ஜெபநேசன்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කාර්යාලය / அலுவலகம் / Office : 2584374, 2584373

නිවස / வதிவிடம் / Residence : 2503467

කේ. එන්. ඩග්ලස් දේවානන්දා පා.ම.
கே. என். டக்ளஸ் தேவானந்தா பா.உ.
**K.N. DOUGLAS DEVANANDA M.P.**
සමාජ සේවා හා සමාජ සුභසාධන අමාත්‍ය
சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்
MINISTER OF SOCIAL SERVICES & SOCIAL WELFARE

Mobile - 0777781891
Email - deva@slt.lk

ෆැක්ස් / பக்ஸ் / Fax : 2584375

ෆැක්ස් / பக்ஸ் / Fax : 2585255

ඔබේ අංකය/ உமது இல./ Your No : මගේ අංකය/ எனது இல /My No : දිනය /திகதி /Date :

**சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களது ஆசிச்செய்தி**



வெறுமனே பக்கங்களை நிரப்பி 'மலர்' என்ற கோதாவில் வெளியீடுகளை நடாத்தி வருவதை விடுத்து, பல்வேறு தரப்பினருக்கும் பயனுள்ள வகையில் மிகவும் சிறந்த படைப்பு களாகத் தெரிவுசெய்து அவற்றைக் கொண்டு 'பிரதேச மலர்' வெளியீட்டில் ஈடுபட்டு வருகின்ற வடமராட்சி தெற்கு, மேற்கு கரவெட்டி பிரதேச செயலகத்தின் செயற்பாட்டினை நான் பெரிதும் மதிப்பதுடன் அவர்களுக்கு எனது நன்றியையும் பாராட்டினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அனைத்துத் துறைகளையும் சார்ந்த மிகச் சிறந்த படைப்புகளை வெளிக்கொண்டுவருவதில் இப்பிரதேச படைப்பாளிகள் சிறந்து விளங்குகின்றனர் என்பதில் சந்தேகமில்லை. மூத்த படைப்பாளிகளின் உறவுகளை அவர்களது படைப்புகளின் மூலமாவது இளம் தலைமுறை படைப்பாளிகளுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்கு 'திருவுடையாள்' எனும் இப்பிரதேச மலர் தனது பங்களிப்பை மிகவும் காத்திரமாகவே செய்து வருகிறது.

மண் வாசனைமிக்க இலக்கியப் படைப்புகளுடன் அறிவு விருத்திக்கும் பிரதேசம் தொடர்பிலான தேடலுக்கும் பெரிதும் உதவக்கூடிய ஆய்வுக் கட்டுரைகள் உட்பட பல்வேறு அம்சங்களை இதேபோன்று தொடர்ந்தும் தர 'திருவுடையாள்' பிரதேச மலர் உழைக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

இந்த உயரிய உழைப்பிற்காக தங்களை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்தி வருகின்ற பிரதேச செயலாளர், ஆசிரியர் குழுவினர் மற்றும் மலருடன் தொடர்புடைய பங்களிப்பாளர்கள் அனைவருக்கும் எமது நன்றியும் பாராட்டுதல்களும் உரித்தாகட்டும்.

**டக்ளஸ் தேவானந்தா பா.உ**
செயலாளர் நாயகம் ஈ.பி.டி.பி.
தலைவர், வடமாகாணத்திற்கான விசேட செயலணி
சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்
TMF/Dar



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය
தொலைபேசி } 021-222 2235
Telephone

දුරකථනය පොදු
பொது தொலைபேசி } 021-222 2233
General Telephone } 021-222 2234

ෆැක්ස්
பக்ஸ் } 021-222 2355
Fax

E-mail: gajaffna@sltnet.lk

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

මගේ අංකය / எனது எண் / My No. } Message from GA
ඔබේ අංකය / உமது எண் / Your No. }
දිනය / திகதி / Date } 20.07.2009

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி



"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடு" என்று ஒரு நாட்டிற்கு வள்ளுவனால் வழங்கப்பட்ட வரைவிலக்கணத்திற்கு அமைய, பல்வகைப் பெருமைகளும் பாங்குறப் பொருந்திய கரவெட்டியின் சிறப்பினைச் செப்பும், கரவெட்டி பிரதேச செயலகத்தின் இரண்டாவது பிரதேச மலராய் "திருவுடையாள்" முகையவிழ்க்கின்றாள்.

இப்பிரதேசத்தில் பிறந்து, வளர்ந்து, பிரதேசத்திற்கப்பாலும் மனித சமுதாயத்திற்காகப் பெரும்பணி செய்த பெரியவர்களின் காலத்தை வென்ற வரலாறுகளின் விழுமைகளை விளம்பத் தலைப்பட்டவேளை, அவர்கள் சார்ந்த துறைகளும் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. இதனால் "திருவுடையாள்" ஆன்மீகம், அரசியல், வரலாறு, அறிவியல் என்று எல்லாத் துறைகளையும் தொட்டுச் செல்கின்றாள்.

கால மாற்றத்திற்கும், தேவைகளுக்கும் அமைவாக பிரதேசத்தின் வாழ்வியற் கோலங்களையும், வரலாற்று விழுமியங்களையும் அழகுறத் தொகுத்துள்ள "திருவுடையாள்", பிரதேசத்திற்கு வெளியிலும் விரும்பிப் பயிலும் ஒரு பயன்மிகு நூலாய் சிறப்புடன் தொடர மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

க. கணேஷ்,
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலர்,
யாழ் மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை மாவட்ட நீதிபதியின் ஆசிச் செய்தி



கரவெட்டி பிரதேச கலாசாரப் பேரவையினால் ஆண்டாண்டுதோறும் வெளியிடப்பட்டுவரும் இத் "திருவுடையாள்" பிரதேச மலர் இவ் ஆண்டும் வெளியிடப்படுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். இக்காலகட்டத்தில் எம்முன்னோர் பேணிவந்த சமூக, பொருளாதார, கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் சீர்கெட்டு இப்படித்தான் வாழவேண்டும் என்ற ஒரு எண்ண வரையறை இன்றி எப்படியும் வாழலாம் என தமது வாழ்க்கை முறைமையை மாற்றியமைத்து வாழும் இக்கால சமுதாயத்திற்கு இவ்வாறான சமூக, பொருளாதார, கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் பேணிப் பாதுகாக்கப்படவேண்டியவை என்பதை விளங்கப்படுத்துவதாக அமைந்துள்ளது. இவற்றினைவிட இன்னும் பிரதேச அபிவிருத்தி மற்றும் வேலைத்திட்டங்கள் தொடர்பிலான தகவல்களையும் உள்ளடக்கியதாக இம்மலர் வெளிவருகின்றது.

"வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயர குடியுயரும்
குடியுயர கோன் உயர்வான்"

என்ற ஔவையாரின் பாடலடியிலமைந்துள்ள படிப்படியான வளர்ச்சிக் கட்டங்களை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. வளர்முக நாடுகளாக இருக்கும் எம்நாட்டினை நாம் உயர்த்தவேண்டுமாயின் இவ்வாறான பிரதேச அபிவிருத்தி மற்றும் வேலைத்திட்டங்களை பல்வேறு கோணங்களில் மேற்கொள்ளவேண்டிய தேவைப்பாடுள்ளமையால் இவ்வாறான செயற்பாடுகளைக் கொண்டதாகவும் இம்மலர் வெளிவருவது மிகவும் போற்றுதற்குரியதாகும்.

இத்தகைய பெருமை கொண்ட "திரு" "உடையாள்" அதாவது திரு என்பது குறிக்கும் தெய்வத்தன்மை, மேன்மை, பெருமை என்பவற்றினைக் கொண்ட திருவுடையாள் மலரிற்கு நான் எனது மனம் நிறைந்த ஆசிகளை வழங்குகின்றேன்.

நன்றி

*க. அரியநாயகம்*
பருத்தித்துறை மாவட்ட நீதிபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாண பிரதம செயலாளரின் வாழ்த்துச்செய்தி



கரவெட்டி பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவை "திருவுடையாள்" இரண்டாவது பிரதேசமலர் வெளியீட்டைச் செய்யவிருப்பதை அறிந்து மகிழ்வுறுகின்றோம். இப் பேரவையின் கலைப்பணி குறித்து பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது கலை கலாசார விழுமியங்கள் எமது பெருமைக்குரியவை. அவை போற்றிப் பேணப்படவேண்டியவை. இவை குறித்து ஆர்வம் மிக்கவர்கள் ஆற்றுகின்ற கலைப்பணிகள் உன்னதமானவையும் வரவேற்கத்தக்கவையுமாகும்.

கலாமன்றங்கள், கல்வி நிலையங்கள், உயர்கல்வி நிலையங்கள் போன்றவை இப்பணியில் தம்மை வெகுவாக ஈடுபடுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. கடந்த சில வருடங்களில் பிரதேச கலாசாரப் பேரவைகளும் இப்பணிகளில் ஈடுபாடு காட்டி தமது ஆர்வத்தையும் வெளிப்படுத்தி வருகின்றமை மகிழ்ச்சியை ஊட்டுகின்றது. பொதுமக்கள் மத்தியில் கலையுணர்வுக்கு உரமூட்டி அவர்கட்கு வாய்ப்புக்களை அளிக்கும் பணியை ஆற்ற பிரதேச கலாசாரப் பேரவை பயன்படுத்தப்படக்கூடியது.

கரவெட்டி பிரதேச செயலக கலாசாரப் பேரவை திருவுடையாள் முதலாவது மலரை வெளியீடு செய்த வகையில் பெற்ற அனுபவம் மேலும் சிறப்பான ஓர் ஆக்கமாக திருவுடையாள் இரண்டாவது மலர் வெளிவர உறுதுணையாக இருக்குமெனத் திடமாக நம்புகின்றேன். தொடர்ச்சியாக எடுக்கப்பட்டுவரும் இம் முயற்சிகுறித்து இப்பேரவையினர்க்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இம்மலரின் ஆக்கங்கட்குத் தமது பங்கினை ஆற்றிய சான்றோர்கள் ஆர்வலர்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன். தொடர்ந்தும் இத்தகைய முயற்சிகளை மேற்கொள்ள கரவெட்டி பிரதேச கலாசாரப் பேரவைக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

***ஆ. சிவசுவாமி***
பிரதம செயலாளர்,
வட மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரின் வாழ்த்து



திருவுடையாள் - இதழ் 2 இன் வரவு மனதுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

எங்கள் பண்பாட்டில் 'திரு' என்ற சொல்லுக்கான அர்த்தம் உயர்வானது. செல்வத்தின் குறியீடாகவும் அழகு, மேன்மை ஆகியவற்றின் வெளிப்பாடாகவும் திருவின் பெருமை கொண்டாடப்படுகின்றது.

எங்கள் பிரதேச செயலகத்தின் செல்வவளம், அழகு, மேன்மையிலேயே பிரதேசத்து மக்களின் வாழ்வும் வளமும் தங்கியுள்ளது.

வடமராட்சிப் பிரதேச வளங்களை அழகுற சித்திரிக்கும் வடமராட்சி தெற்கு மேற்கு கலாசாரப் பேரவையின் இந்த இதழின் உருவாக்கத்திற்குக் காரணரான பிரதேச செயலர் திரு. சி. சத்தியசீலன், அவரது செயலணியினர், இதழாசிரியர்கள் கலாநிதி த. கலாமணி, திரு. கி. நடராஜா ஆகியோர் எம் பாராட்டுக்குரியவர்கள்.

அதிகார பரவலாக்கம், அதிகார பகிர்வு என்ற சனநாயக விழுமியங்களின் நடைமுறை யதார்த்தத்தில் பிரதேச செயலகங்கள் பெரிதும் துணையாக முடியும்.

தம் பிரதேசத்தினை, பிரதேச செயலகத்தினை திருவுடையதாக்கும் இந்த ஆக்கப் பணியின் பயன் கனிகள் அனைத்தும் மக்களுக்கும் அமைதியான, நீதியான வாழ்வினை உறுதிசெய்திட என் அன்பு வாழ்த்துக்கள்.

*பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன்*
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரும் இந்த மலரைப்பற்றி....



வாசலிலே வணங்குகிறோம்

வளமும் வரலாறு முடைய
வடமராட்சி தெற்கு மேற்கு
பிரதேச செயலகத்தின்
கலை கலாசார குழுவினரின்
திருவுடையாள் - 2
உங்கள் கரங்களில் அரங்கேறி
இன்று இதழ் விரிக்கின்றது.



பிரதேச வாழ்வியல்; பிரதேச வரலாறு;
பிரதேசக் கலைகள்; பிரதேச இலக்கியம்;
பிரதேச மொழி; பிரதேச அபிவிருத்தி
முதலான பல்வகைத் தொடர்கள்
இன்றைய கல்வி ஆராய்ச்சியில்
பல்கிப் பயின்று வருகின்றன
வளர்ந்துவரும் சமூகவியல்; மானுடவியல்;
பண்பாட்டியல்; இனவரையியல் போன்ற அணுகுமுறைகள்
பிரதேசம் பற்றிய கற்றலை
முதன்மைப் படுத்துகின்றன.

பிரதேச விருத்தி என்பது
மொழியிலிருந்து இலக்கியம் வரை
வளத்திலிருந்து வாழ்வு வரை
அரசியலில் இருந்து ஆளுமை வரை
உற்பத்தியிலிருந்து உணவுப் பழக்கம் வரை
சமயத்திலிருந்து சட்டம் வரை
உறவு முறையிலிருந்து ஊர்ப்பேர் வரை
தொழிலிலிருந்து தொன்மக் கதைகள் வரை
கல்வியிலிருந்து கலாசாரம் வரை
விரிந்தும் பரந்தும் செல்லும்

பிரதேசம் பற்றிய எழுத்துக்கள்
ஈழத்தமிழர்களிடம் மிகக் குறைவு
சமூகவியல் நோக்கிலான ஆய்வுகளில்
அநேகர் அக்கறை காட்டுவதில்லை
வரலாற்று நோக்கிலான தேடும் இயல்பின்
உத்வேகம் குறைவு
நாம் கற்ற கல்வி நம் சமூகத்திற்கு
பயன்படாவிட்டால் ஏது பயன்?
மடமைக் கல்வியில் மண்ணும் பயனில
எமது பிரதேசம்; எமது வாழ்வு;
எமது பண்பாடு; எமது விழுமியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னோக்கம் பற்றியே அழகாய் மலர்கிறது
திருவுடையாள் - 2

முதலில் ஆசிச் செய்திகள்
அன்பும் அறமும் கொண்ட
நல்லறிஞர் பலரின் நயப்புரையோடு
உள்ளே செல்லலாம்
அடுத்து எண்ணும் எழுத்தும்
பிரதேச வளர்ச்சியே என
அர்ப்பணிப்புடன் செயற்படும்
பிரதேசச் செயலரின் அறிக்கை

தொடர்ந்து செல்கையில்
வடமராட்சியில் வாழ்ந்து வரலாறுகண்ட
பத்துப்பேரின் வரலாற்றுச் சுவடுகள்
தொடரும் எம் பாதையில்
ஆய்வறிவாளர்களின் அரிய கட்டுரைகள்
அவை வன்மை பெற்றவை
எமது பிரதேசத்தின் பல்வேறு விழுமியங்களை
வெளிக்கொணர்பவை

சற்றுத் தூரத்தில் செல்ல,
கலையால் உழவுசெய்து
மண்ணுக்கு நீர் பாய்ச்சிய
கலை வாரிதிகள் தென்படுவர்
கௌரவிக்கப்பட்ட இவர்களின் பதிவுகள்
அடுத்த தலைமுறைக்கு நல்ல நடைபாதை.

பயணத்தின் முடிவிலே
விருது பெற்ற விழுதுகள்
பிரதேசத்தை தாங்கி நிற்கின்றன
எழுத்தாளர் முதல் ஏடறிந்தோர் வரையுள்ள
வாண்மை மிக்கவர்கள் பொலிந்து தோன்றுவர்.

சென்ற ஆண்டு மலர்ந்த திருவுடையாள்
பெரும் வரவேற்பினைப் பெற்று
எம்மையும் பிரதேசச் செயலரையும்
மகிழ்ச்சியில் ஆழ்த்தின.
உயர் கல்வி நிறுவனங்கள் செய்ய வேண்டியவற்றை
நாம் செய்கின்றோம் என்பதில் மகிழ்ச்சி
ஆக்கங்கள் தந்தோர் ஊக்கப்படுத்தியோர்
அனைவரையும் நெஞ்சார வாழ்த்துகிறோம்.

இணை இதழாசிரியர் :

**கி. நடராசா**
முன்னாள் அதிபர்,
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

**கலாநிதி த. கலாமணி**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்புலம், யாழ். பல்கலைக் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக நிர்வாக அறிக்கை - 2008

**திரு. சிவலிங்கம் சத்தியசீலன் SLAS – I**

BA, MA(Public Administration), MA(Regional Planning)

**பிரதேச செயலாளர், கரவெட்டி.**

யாழ்மாவட்டத்தின் வடமராட்சி பிரதேசத்தின் தென்மேற்குப் புறமாக அமைந்துள்ள பிரதேசம், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக நிர்வாக பரப்பில் அமைந்துள்ளது. யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் 29 கிலோ மீற்றர் தூரத்தில் இவ் அலுவலகம் அமைந்துள்ளது. 63.7 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பினையும் 2.2 சதுர கிலோமீற்றர் நீர் நிலைகளையும் கொண்ட இப்பிரதேசமானது 35 கிராம சேவையாளர் பிரிவுகளையும் 195 கிராமங்களையும் கொண்டதாக உள்ளது. வடமராட்சி பிரதேசம் தனி ஒரு நிர்வாக கட்டமைப்பாகவே இருந்துவந்துள்ளது. 1960 களில் பருத்தித்துறை தேர்தல் தொகுதியிலிருந்து உடுப்பிட்டி தேர்தல் தொகுதி தனியாக பிரிவடைந்ததன் பின்னர் தொகுதி ரீதியான நிர்வாக ஒழுங்கினை ஏற்படுத்தும் நோக்குடன் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. அதிகாரங்களை மக்களின் காலடிக்கு எடுத்துச் செல்லவேண்டும் என்ற அரசாங்கத்தின் நோக்கத்திற்கமைவாக 1993 ஆண்டு பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டது.

## கிராம அலுவலர் பிரிவும் சனத்தொகையும் :-

இப்பிரிவில் 35 கிராம சேவையாளர் பிரிவுகளும் 195 கிராமங்களும் காணப்படுகின்றன. 31.12.2008 இல் 14540 குடும்பங்களைச் சேர்ந்த 45626 அங்கத்தவர்கள் இப்பிரிவில் வசித்துள்ளனர். இக்குடும்பங்களுள் நிரந்தரமாக வதியும் குடும்பங்களுடன் வலிவடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் அதி உயர் பாதுகாப்பு வலயத்தினைச் சேர்ந்த மக்களும், 11.08.2006 இல் தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்து இடம்பெயர்ந்து எமது பிரிவில் தங்கியுள்ள மக்களும் உள்ளடக்கப்படுகின்றனர். இப்பிரிவில் உடுப்பிட்டி தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் ஒரு நலன்புரி நிலையம் அமைந்துள்ளது. இதில் 17 குடும்பங்களைச் சேர்ந்த 63 அங்கத்தவர்கள் வசிக்கின்றனர். உடுப்பிட்டி வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 11 குடும்பங்களைச் சேர்ந்த 39 அங்கத்தவர்களைக் கொண்ட நலன்புரி நிலையம் ஒன்றும் அமைந்துள்ளது. கரணவாய் கிழக்கு, கட்டைவேலி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள விநாயகர், கட்டைவேலி தற்காலிக நலன்புரி நிலையங்களில் தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியுள்ளனர். இதற்கு மேலதிகமாக இடம்பெயர்ந்த மக்கள் 1133 குடும்பங்களைச் சேர்ந்த 3943 அங்கத்தவர்கள் உறவினர் நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

**அரச நிறுவனங்கள், வங்கிகள், ப.நோ.கூ. சங்கங்கள் :-**

கரவெட்டி பிரதேச செயலகப்பிரிவின் நிர்வாக எல்லைப் பரப்பினுள் பல்வேறு அரச நிறுவனங்களும், வங்கிகளும் செயற்பட்டு வருகின்றன.

**அரச நிறுவனங்கள் :-**

01. கரவெட்டி பிரதேச சபை
02. கமநல சேவை நிலையம், புலோலி
03. வீதி அபிவிருத்தி திணைக்களம், பருத்தித்துறை
04. வீதி அபிவிருத்தி அதிகார சபை, பருத்தித்துறை
05. வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி
06. கால்நடை சுகாதாரத் திணைக்களம்
07. இலங்கை மின்சார சபை, பருத்தித்துறை
08. ஸ்ரீலங்கா ரெலிகொம், பருத்தித்துறை

**வங்கிகள் :-**

01. இலங்கை வங்கி, நெல்லியடி
02. மக்கள் வங்கி, நெல்லியடி
03. வர்த்தக வங்கி, நெல்லியடி
04. ஹற்றன் தேசிய வங்கி, நெல்லியடி

**ப.நோ.கூ. சங்கங்கள் :-**

01. கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்
02. உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்

## பிரதேச ஒருங்கிணைப்புக் குழு (Divisional Coordinating Committee)

இப்பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட அரச நிறுவனங்களும் மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்களும் இக்குழுவில் உள்ளடக்கப்படுகின்றனர். பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டமானது இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை நடைபெற்று வருகின்றது. பிரதேச அபிவிருத்தி சம்பந்தமாக கலந்துரையாடப்படுவதுடன் முன்னேற்றங்களும் மீளாய்வு செய்யப்படுகின்றன. இக்கூட்டத்தில் நிறுவனங்கள் தமது வேலைகளை முன்னெடுத்துச் செல்வதிலுள்ள இடர்பாடுகள் ஆராயப்பட்டு அதற்கான தீர்வு காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரதேச விவசாயக்குழு** (Divisional Agricultural Committee)

இப்பிரதேசத்தின் விவசாயம் சார்ந்த திணைக்களங்கள் மற்றும் விவசாய அமைப்புக்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோர் இக்குழுவில் உள்ளடக்கப்படுகின்றனர். இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை இக் குழுவின் கூட்டம் இடம்பெறுவதுடன் விவசாய துறை சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வும் மேற்கொள்ளப்படுகின்றது. விவசாய அமைப்புக்களின் தேவைகள் பரிசீலிக்கப்பட்டு பொருத்தமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

**பிரதேச வீடமைப்புக் குழு** (Divisional Housing Committee)

பிரதேச செயலகப்பிரிவினுள் நடைமுறைப்படுத்தப்படும் உலக வங்கி வீட்டுத் திட்ட முன்னேற்றம் தொடர்பாக இக்குழு இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை ஆராயும். வீடமைப்புத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் உள்ள பிரச்சனைகள், இடர்பாடுகள் என்பன அறியப்பட்டு அதற்கான தீர்வுகளும் வழங்கப்படுகின்றது.

**பிரதேச அபிவிருத்தி** (Divisional Development)

பிரதேசத்தின் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்காக பல்வேறு நிதிமூலங்கள் ஊடாக பெறப்படும் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம், கிராம எழுச்சித்திட்டம், மகிந்த சிந்தனை வேலைத்திட்டம், துரித அபிவிருத்தி திட்டம், மீள் எழுச்சித்திட்டம், உலக வங்கி வீட்டுத்திட்டம், மாகாண நிதி மூலங்கள் ஊடாக பெறப்படும் திட்டங்கள் தொழில் திணைக்கள வேலைத்திட்டங்கள் என்பவற்றின் ஊடாகவும் அரச சார்பற்ற நிறுவனங்களின் வேலைத்திட்டங்களின் ஊடாகவும் பிரதேச அபிவிருத்தி முன்னெடுக்கப்படுகின்றது.

இப்பிரதேச செயலகத்தினால் மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக பல்வேறு வேலைத்திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு பல்வேறு கிளைகளினால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

| | | | |
|---|---|---|---|
| 01. | தாபனக்கிளை | - | *(Establishment Branch)* |
| 02. | நிதிக்கிளை | - | *(Finance Branch)* |
| 03. | புனர்வாழ்வுக்கிளை | - | *(Rehabilitation Branch)* |
| 04. | சமூகசேவைக்கிளை | - | *(Social Service Branch)* |
| 05. | சிறுவர் நன்னடத்தைக்கிளை | - | *(Child Promoting Branch)* |
| 06. | திட்டமிடற்கிளை | - | *(Planning Branch)* |
| 07. | சமுர்த்திக்கிளை | - | *(Samurdhi Branch)* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. காணிக்கிளை - (Land Branch)
09. மேலதிக மாவட்டப் பதிவாளர் கிளை - (Additional District Registrar Branch)
10. கிராம அபிவிருத்தி பிரிவு - (Rural Development Unit)
11. தொழில் திணைக்கள பிரிவு - (Industrial Department Unit)
12. கலாசார திணைக்கள பிரிவு - (Cultural Department Unit)
13. விளையாட்டு பிரிவு - (Sports Unit)

## தாபனக்கிளை (Establishment Branch)

தாபனக்கிளையானது தேசிய அடையாள அட்டை விநியோகம், கடவுச்சீட்டு விநியோகம், வெளிநாட்டு தூதரங்களுக்கான கடிதங்களை வழங்குதல், தென்பகுதி செல்வதற்கான பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் சிபார்சு செய்தல் மற்றும் செயலகத்தின் ஆளணி, உத்தியோகத்தர்களின் தாபன நடவடிக்கைகள் என்பவற்றை கையாளுகின்றது.

## 2008 இல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் :-

### I. தேசிய அடையாள அட்டைகள் :-

2008 இல் அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை விபரம் :

| | புதிய விண்ணப்பங்கள் (RPD/V/1) | தொலைந்த விண்ணப்பங்கள் (RPD/V/7) | திருத்தத்திற்கான விண்ணப்பங்கள் (RPD/V/8) | மொத்தம் |
|---|---|---|---|---|
| சாதாரண சேவை | 414 | 167 | 750 | 1331 |
| ஒருநாள் சேவை | 05 | 03 | 104 | 112 |
| மொத்தம் | 419 | 170 | 854 | 1443 |

2008 இல் ஆட்பதிவுத்திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகளின் எண்ணிக்கை விபரம் :

| புதிய விண்ணப்பங்கள் (RPD/V/1) | தொலைந்த விண்ணப்பங்கள் (RPD/V/7) | திருத்தத்திற்கான விண்ணப்பங்கள் (RPD/V/8) | மொத்தம் |
|---|---|---|---|
| 408 | 144 | 329 | **881** |

2008ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற 881 தேசிய அடையாள அட்டைகளில் :

2005 இல் அனுப்பிய விண்ணப்பங்களுக்குரியவை - 03

2006 இல் அனுப்பிய விண்ணப்பங்களுக்குரியவை - 27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 2007 இல் அனுப்பிய விண்ணப்பங்களுக்குரியவை | - | 652 |
| 2008 இல் அனுப்பிய விண்ணப்பங்களுக்குரியவை | - | 199 |
| **மொத்தம்** | | **881** |

## II. கடவுச்சீட்டு :-

2008 இல் அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை :

| இல. | விண்ணப்ப வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | புதிய விண்ணப்பங்கள் | 382 |
| 02. | திருத்தத்திற்கான விண்ணப்பங்கள் | 02 |
| 03. | புதுப்பித்தலுக்கான விண்ணப்பங்கள் | 59 |
| 04. | புதுப்பித்தலுக்கும் திருத்தத்திற்குமான விண்ணப்பங்கள் | 04 |
| மொத்தம் | | 447 |

**III.** 2008 இல் சிபார்சு செய்யப்பட்ட பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை: 10000

## நிதிக்கிளை (Finance Branch)

இக்கிளையின் மூலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வசிக்கும் ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவருகின்றது. அத்துடன் மோட்டார் வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல், வியாபார பெயர் பதிவுகள் மேற்கொள்ளுதல், செயலக உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகள் போன்ற நடவடிக்கைகளை இக்கிளை மேற்கொண்டுவருகின்றது.

## ஓய்வூதிய நடமாடும் சேவை :-

ஓய்வூதியப்பணிப்பாளரின் தலைமையில் கொழும்பிலிருந்து வருகைதந்த குழுவினர்களால் வடமராட்சி பிரதேசத்திற்கான ஓய்வூதிய நடமாடும் சேவை 28.08.2008ந் திகதியில் நடைபெற்றது. இதில் நீண்டகாலமாக தீர்த்து வைக்கப்படாதிருந்த விதவை அநாதை ஓய்வூதியம், திணைக்கள ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதிய முரண்பாடுகள் சீர்செய்யப்பட்டது. ஓய்வூதியம் தொடர்பான பல பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்பட்டதுடன் 16 விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய அட்டையும் வழங்கப்பட்டது. அத்துடன் ஓய்வூதியர்களின் விபரங்கள் யாவும் கணனிமயப்படுத்தப்பட்டு இணையத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. ஓய்வூதியர்கள் தமது மாதாந்த ஓய்வூதியத்தினை *www.pensions.gov.lk* இணையத்தள முகவரியில் பார்வையிடமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வூதியம் பெறுவோர் :-

| இல. | ஓய்வூதிய வகை | தொகை |
|---|---|---|
| 01. | உள்நாடு | 1129 |
| 02. | வெளிநாடு | 111 |
| 03. | உள்ளூராட்சி | 35 |
| | **மொத்தம்** | 1275 |

2008 இல் வழங்கப்பட்ட மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்கள் :- 3849

2008 இல் வழங்கப்பட்ட வியாபார அனுமதிப்பத்திரங்கள்

1. புதிதாக வழங்கப்பட்டவை - 22
2. புதுப்பிக்கப்பட்டவை - 00

## புனர்வாழ்வுக் கிளை (Rehabilitation Branch)

இடம்பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவுத் திட்ட நிவாரண விநியோகம் மற்றும் உலக உணவுத்திட்ட நிவாரண விநியோகம், கடும்பாதிப்புற்றோருக்கான நட்ட ஈட்டுக்கொடுப்பனவு, சனத்தொகை புள்ளி விபரங்கள், குடும்ப பதிவு அட்டை வழங்குதல், நலன்புரி நிலைய பராமரிப்பு போன்ற கடமைகளை இக்கிளை மேற்கொண்டுவருகின்றது.

2008 இல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் :-

| இல. | நிவாரண வகை | குடும்ப எண்ணிக்கை | அங்கத்தவர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணங்கள் 11.08.2006 இற்கு முன் | 471 | 1699 |
| 02. | உலக உணவுத்திட்ட நிவாரணம் நலிந்த பிரிவினர் | 3734 | 9826 |
| | இடம்பெயர்ந்தோர் 11.08.2006 பின் | 662 | 2294 |
| **மொத்தம்** | | **4867** | **13819** |

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கத்தின் 30 கிளைகள் ஊடாகவும், உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கத்தின் 29 கிளைகள் ஊடாகவும் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண விநியோக மற்றும் உலக உணவுத்திட்ட நிவாரணம் என்பன வழங்கப்பட்டுவருகின்றது.

கடும்பாதிப்புற்றோருக்கான கொடுப்பனவுக்காக 03 கோவைகள் மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இவ்வாண்டு 02 நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நலன்புரி நிலையங்கள் (31.12.2008 இல் உள்ளவாறு)**

உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் உடுப்பிட்டி, சின்னக்கொலனி ஆகிய நலன்புரி நிலையத்தில் பராமரிக்கப்பட்டுவருகின்றனர். அத்துடன் தென்மராட்சி பிரிவிலிருந்து 11.08.2006 இற்குப் பின்னர் இடம்பெயர்ந்த மக்கள் கட்டைவேலி, விநாயகர் ஆகிய நலன்புரி நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

| இல. | நலன்புரி நிலையம் | குடும்ப எண்ணிக்கை | அங்கத்தவர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | உடுப்பிட்டி | 17 | 63 |
| 02. | சின்னக்கொலனி | 11 | 39 |
| 03. | கட்டைவேலி | 18 | 68 |
| 04. | விநாயகர் | 26 | 98 |
| 05. | விக்கினேஸ்வரா | 12 | 47 |
| **மொத்தம்** | | **84** | **315** |

**சமூக சேவைக்கிளை** (Social Service Branch)

பொது சன மாதாந்த உதவிப்பணம் வழங்குதல், சுயதொழில் உதவித்திட்டங்கள், சமூகப்பாதுகாப்பு ஓய்வூதியத்திட்டம், முதியோர்களுக்கான வேலைத்திட்டங்கள் என்பன இக்கிளையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. எமது பிரிவில் பதிவு செய்யப்பட்ட 06 முதியோர் சங்கங்கள் செயற்பட்டுவருகின்றன.

**2008 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் :-**

**சமூகசேவை கிளையினால் இவ்வாண்டில் பொது மக்களுக்கு வழங்கப்பட்ட உதவித்திட்டங்கள் :**

| இல. | உதவித்திட்டத்தின் விபரம் | பயனாளிகளின் எண். | |
|---|---|---|---|
| | | திணைக்களம் | அமைச்சு |
| 01. | பொதுசன மாதாந்த உதவிப்பணம் | 2713 | - |
| 02. | புற்றுநோய் கொடுப்பனவு | 88 | - |
| 03. | காச நோய் கொடுப்பனவு | 08 | - |
| 04. | சுயதொழில் உதவித் திட்டம் | 27 | 86 |
| 05. | வலுவிழந்தோருக்கான மாதாந்த உதவிப் பணம் | - | 07 |
| 06. | வீட்டுத்திட்டம் (120,000/-) | - | 02 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்டம்

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் மூலமாக நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்தில் இவ்வாண்டில் எமது பிரிவிலிருந்து 3825 பயனாளிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். பிரதேச செயலர், உதவிப்பிரதேச செயலர் ஆகியோரின் வழிகாட்டலில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் கூடுதலான பயனாளிகள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவ் ஓய்வூதிய திட்டத்தில் 12 அலுவலர்கள் 50 இற்கும் மேற்பட்ட பயனாளிகளையும், 14 அலுவலர்கள் 100 இற்கும் மேற்பட்ட பயனாளிகளையும் இணைத்துள்ளனர். கிராம அலுவலர் திரு.K.T.புவனேந்திரன் 379 பயனாளிகளையும், கிராம அலுவலர் திரு.N.கந்தசாமி 365 பயனாளிகளையும் இவ் ஓய்வூதிய திட்டத்தில் இணைத்துக் கொண்டமை பாராட்டத்தக்கதாகும்.

### தேசிய மட்டத்தில் முதலாம் இடம் பெற்றமை

சமூக பாதுகாப்பு ஓய்வூதியதிட்டத்தின்கீழ் 2008 ஆம் ஆண்டில் 3825 பயனாளிகளை சேர்த்துக்கொண்டதன் மூலமாக மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றுள்ளதுடன் அகில இலங்கை ரீதியாக முதலாம் இடத்தைப் பெற்றிருப்பது ஒரு வரலாற்று சாதனையாகும். பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் கடின உழைப்பினாலும் அர்ப்பணிப்பு மிக்க சேவையினாலும் தேசிய மட்டத்தில் இக் கௌரவம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

### முதியோர்களுக்கான மருத்துவ நடமாடும் சேவை

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு எமது செயலகத்தினால் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட மருத்துவ நடமாடும் சேவை 12.10.2008ந் திகதியில் கரவெட்டி யா/ விக்னேஸ்வரக் கல்லூரியிலும் 19.10.2008ந் திகதியில் யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியிலும் நடைபெற்றது. யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களும் மற்றும் சுகாதார திணைக்கள வைத்திய அதிகாரிகளும், பருத்தித்துறை சுகாதார பணிமனை உத்தியோகத்தர்களும், பிரதேச செயலக அலுவலர்களும் இந்நடமாடும் சேவையில் கலந்துகொண்டு மக்களுக்கான மருத்துவ சேவையினை வழங்கினார்கள். இந்நடமாடும் சேவையில் பார்வைக்குறைபாடுடைய 52 முதியோருக்கு வடமராட்சி லயன்ஸ் கழகத்தினரால் S.M.Fernando நிறுவனத்தின் மூலம் கண்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு கண்ணாடிகள் வழங்கப்பட்டது.

| திகதி | நடமாடும் சேவை நடைபெற்ற இடம் | பயனடைந்த மக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 12.10.2008 | யா/ விக்னேஸ்வரக் கல்லூரி | 140 |
| 19.10.2008 | யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி | 125 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் மேம்பாட்டுக் கிளை (Child Promoting Branch)

சிறுவர்களுக்கான உதவித்திட்டங்களும், சிறுவர் கழகங்களை உருவாக்குதல், பாடசாலை இடைவிலகிய சிறுவர்கள் தொடர்பான வேலைத்திட்டங்கள், சிறுவர் இல்ல மேற்பார்வை கடமைகள் என்பன இக்கிளை மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

### 2008 இல் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் :-

| | | |
|---|---|---|
| 01 | அமைக்கப்பட்ட சிறுவர் கழகங்களின் எண்ணிக்கை | 12 |
| 02 | சிறுவர் இல்லத்திலுள்ள பிள்ளைகளில் பெற்றோர்களுடன் மீள இணைக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை | 02 |
| 03 | சிறுவர்களுக்கான உதவித்திட்டங்கள் : | |
| | i) சைக்கிள் | 10 |
| | ii) பாடசாலை உபகரணப்பொதி | 32 |
| | iii) மாதாந்த நிதியாக | 20 |
| 04 | சிறுவர்களுக்கான கல்விசார் உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | 143 |

### ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம்:

எமது பிரிவில் ஆதரவற்ற முதியவர்கள், சிறுவர்களை பராமரிப்பதற்காக ஸ்ரீபரமானந்த சுவாமிகளால் உருவாக்கப்பட்ட இச்சிறுவர் முதியோர் இல்லமானது முதியோர் சிறுவர்களுக்கான வேலைகளை ஆற்றிவருகின்றது. பருத்தித்துறை மாவட்ட நீதிபதியின் கண்காணிப்பு, ஆலோசனை, வழிகாட்டல் என்பனவற்றிற்கு அமைவாக கரவெட்டி பிரதேச செயலர் மற்றும் உத்தியோகத்தர்களின் மேற்பார்வையில் இவ்வில்லத்தின் வேலைத்திட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. இவ்வில்லத்திற்கான வழிகாட்டலினை வழங்கி இல்லத்தை நிர்வகிப்பதற்காக கல்விமான்கள், சமூகசேவையாளர்கள், உள்ளடங்கிய இயக்குனர் சபை ஒன்று உருவாக்கப்பட்டு இல்லத்தின் செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. இவ்வில்லத்தில் 05 முதியவர்களும் 34 சிறுவர்களும் தங்கியுள்ளனர்.

### சிறுவர் முதியோர் தின விழா – 2008

எமது பிரதேச செயலகத்தின் சிறுவர் முதியோர் தின விழா 31.10.2008ந் திகதி எமது செயலக மாநாட்டு மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி திரு.க.அம்பலவாணர் சாந்திகம் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர், திரு.எஸ்.வி.சங்கரப்பிள்ளை ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008ஆம் ஆண்டு 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 101 மாணவர்களுக்கு வெற்றிக்கேடயங்கள் வழங்கப்பட்டன. இவ்விழாவில் 35 முதியோர்களுக்கு "சாந்திகம்" நிறுவனத்தின் மூலம் அன்பளிப்பு பொருட்கள் வழங்கப்பட்டதுடன் பாடசாலை மாணவர்களிடையே சிறுவர் முதியோர் தின விழா சம்பந்தமாக நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

## திட்டமிடற்கிளை (Planning Branch)

### பிரதேச அபிவிருத்தி திட்டங்கள் :-

அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் வேலைத்திட்டங்கள் என்பவற்றை ஒருங்கிணைப்புச் செய்யும் நடவடிக்கைகளையும் பிரதேச அபிவிருத்தி தொடர்பான குறுகிய, நீண்ட கால திட்டங்களைத் தயாரிக்கும் பணிகளையும் இக்கிளை மேற்கொண்டு வருகின்றது. பிரதேச மட்டத்தில் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தலும் அபிவிருத்தி தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றை தயாரிக்கும் பணியினையும் இக்கிளை மேற்கொண்டுவருகின்றது.

### 2008 இல் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள்:-

| இல. | வேலைத்திட்டத்தின் விபரம் | திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி (மில்லியன்) |
|---|---|---|---|
| 01. | பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் | 24 | 1.85 |
| 02. | மகிந்த சிந்தனை அபிவிருத்தி திட்டம் | 38 | 1.02 |
| 03. | கமநெகும வேலைத்திட்டம் | | |
| | தனிநபர் வேலைத்திட்டம் | 238 | 13.90 |
| | பொது வேலைத்திட்டம் | 08 | 5.40 |
| 04. | துரித அபிவிருத்தி திட்டம் | 04 | 13.25 |
| 05. | வடக்கு கிழக்கு வீடமைப்பு புனரமைப்புத்திட்டம் | 166 | 49.45 |
| 06. | மாயக்கை அத்துளு நீர் விநியோகத் திட்டம் | 01 | 17.50 |
| 07. | பிரதேச செயலக வாகனத்தரிப்பிடம் (மிகுதி வேலை) | 01 | 0.70 |
| 08. | Solidar வதிரி தமிழ்மன்றம் | | 0.55 |
| 09. | சுயதொழில் கடன் | 20 | 0.46 |
| மொத்தம் | | 500 | 104.80 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீள் எழுச்சி திட்டம் (Re Awakening Project)

இத்திட்டத்தின் கீழ் அந்திரான், யார்க்கரு ஆகிய இரு கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு அக்கிராம மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்கும், கிராமத்தின் உட்கட்டுமான அபிவிருத்திகளினை மேற்கொள்வதற்குமான வேலைத்திட்டங்கள் கிராம மக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன்மூலம் கிராம மக்களின் வாழ்வாதாரத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுவருவதனைக் காணமுடிகின்றது.

| இல. | கிராமத்தின் பெயர் | உட்கட்டுமானத்திற்கு ஒதுக்கீடு செய்யபட்ட நிதி (மில்லியன்) | வாழ்வாதாரத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி (மில்லியன்) |
|---|---|---|---|
| 01. | அந்திரான் | 1.75 | 2.18 |
| 02. | யார்க்கரு | 1.73 | 2.17 |

## மேலதிக மாவட்ட பதிவாளர் கிளை
## (Additional District Registrar Branch)

இப்பிரிவில் கரவெட்டி, கட்டைவேலி, உடுப்பிட்டி, பொலிகண்டி ஆகிய நான்கு பதிவாளர் பிரிவுகள் உள்ளடக்கப்படுகின்றன. பிறப்பு, இறப்பு விவாகப் பதிவுகள் உரிய பதிவாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு உரிய ஆவணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ் அத்தாட்சிப் பத்திரங்கள் இல்லாதவர்களுக்கான நடமாடும் சேவை ஒன்று 03.10.2008ந் திகதியில் நடைபெற்றது. இதில் வடமாகாண உதவி பதிவாளர் நாயகமும் ஏனைய உதவி மாவட்ட பதிவாளர்களும் பிரதேச அலுவலர்களும் கலந்து கொண்டனர். இந்நடமாடும் சேவையின் போது பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பெற்றுக் கொள்ள முடியாதவர்களுக்கு உத்தேச வயதுச் சான்றிதழ் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இச்சேவையின் போது 250 பயனாளிகளுக்கு உரிய ஆவணங்கள் வழங்கப்பட்டன.

### 2008 இல் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள்:-

| இல. | சான்றிதழின் வகை | வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் | 3033 |
| 02. | விவாக பதிவு சான்றிதழ் | 965 |
| 03. | இறப்பு அத்தாட்சிப்பத்திரம் | 235 |
| 04. | உத்தேச வயது சான்றிதழ் | 75 |
| 05. | காலங்கடந்த பதிவுகள் (பிறப்பு/ இறப்பு) | 336 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிக் கிளை (Land Branch)

அரச காணி தொடர்பான கடமைகளை இக்கிளை மேற்கொண்டு வருகின்றது. அனுமதிப்பத்திரங்கள் வழங்கல், அளிப்புக்கள் தயாரித்தல், காணி உபபிரிவிடல், காணி சுவீகரிப்பு, தத்துவ உரிமை மாற்றம் ஆகிய விடயங்கள் இக்கிளை மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. மரம் தறிப்பதற்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கல், மரங்களை கொண்டு செல்வதற்கான வழி அனுமதிப்பத்திரங்கள் வழங்கல் என்பன இக்கிளை மூலம் மேற்கொள்ளப் படுகின்றது.

**2008 இல் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் :-**

| இல. | | வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | *LDO* அனுமதிப்பத்திரங்கள் | 32 |
| 02. | அளிப்புக்கள் | 86 |
| 03. | காணி மாற்றங்கள் | 08 |
| 04. | தத்துவ உரிமைமாற்றம் | 39 |
| 05. | மரங்கொண்டு செல்வதற்கான வழி அனுமதிப்பத்திரம் | 123 |
| 06. | மரம் தறித்தல் | 74 |
| 07. | காணி இரத்துச் செய்தல் | 86 |

## கிராம அபிவிருத்தி திணைக்களக்கிளை (Rural Development Branch)

கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் என்பவற்றை அமைத்தலும் அச்சங்கங்களுக்கான மேற்பார்வை, ஒழுங்குபடுத்தல், ஆலோசனை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளில் சங்கத்தின் நிதிச் செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக, தேவையான ஒழுங்குகளை மேற்கொள்வதும் இக்கிளையின் கடமையாக உள்ளது. எமது பிரிவில் பதிவு செய்யப்பட்ட 14 கிராம அபிவிருத்திச் சங்கங்களும் 23 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் இயங்கிவருகின்றன. *NEIAP* திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வாழ்வாதார சுழற்சிக் கடன் திட்டங்களை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் சிறப்பான முறையிலே முன்னெடுத்து வருகின்றன. கிராம அபிவிருத்தி சங்கங்கள் கிராம அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதுடன் அரச ஒப்பந்த வேலைகளையும் நடைமுறைப்படுத்துகின்றன. அத்துடன் ஏனைய பொது வேலைத்திட்டங்களிலும் தமது பங்களிப்பினை மேற்கொண்டு வருகின்றன.

## தொழில் திணைக்களக் கிளை (Industrial Department Branch)

வட மாகாண தொழில் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு பயிற்சி நெறிகள் இக்கிளை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ் ஆண்டில் மின்னிணைப்பு, பற்றிக் பிறின்ரிங், மோட்டார் இயந்திரவியல், கணனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்பொருள் ஆகிய 04 பயிற்சிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இப் பயிற்சி நெறியினை மேற்கொள்ளும் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி நெறியின் முடிவில் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

| இல. | பயிற்சி நெறியின் பெயர் | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | மின்னிணைப்பு | 18 |
| 02 | பற்றிக் பிறின்ரிங் | 25 |
| 03 | மோட்டார் இயந்திரவியல் | |
| | 15.12.2007 - 15.06.2008 | 12 |
| | 15.07.2008 - 15.01.2009 | 10 |
| 04 | கணனி வன்பொருள் | 21 |

பற்றிக் பிறின்ரிங் பயிற்சி நெறியினைப் பெற்ற பெண்கள் இவ் உற்பத்தி முயற்சியில் ஈடுபட்டு வருவதனையும் இதன்மூலம் தமக்கான வாழ்வாதாரத்தினை பெற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இப்பயிற்சியாளர்கள் 03.08.2008ந் திகதியில் கண்காட்சி ஒன்றினை நடாத்தி உள்ளனர். இத்திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெறும் நெசவு, தும்பு தொழிற்சாலைகளில் பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு போதனாசிரியர்கள் மூலம் அவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

| இல. | கைத்தொழில் | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | நெசவு | 08 |
| 02 | தும்பு | 05 |

## கலாசார திணைக்களக் கிளை (Cultural Department Branch)

பிரதேசத்தில் காணப்படும் ஆலயங்கள் தொடர்பான வேலைத் திட்டங்களையும் மற்றும் கலைஞர்களின் விபரங்களைப் பெறுதல் கலைஞர்களுக்கான கௌரவிப்பு, பிரதேச கலாசார விழாவினை நடாத்துதல், “திருவுடையாள்” பிரதேச மலர் வெளியீடு, அறநெறிக்கருத்தரங்கு, “சிவநெறி” நூல்வெளியீடு போன்ற பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எமது பிரிவினுள் பதிவு செய்யப்பட்ட ஆலயங்களின் தேவைகளை இந்து கலாசார திணைக்களத்திற்கு சிபார்சு செய்வதும் திணைக்களத்தினாலும், பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலமும் ஆலயங்களுக்கு வழங்கப்படும் வேலைத்திட்டங்கள் உரிய முறையில் நிறைவேற்றப்படுகின்றதா என்பதனை மேற்பார்வை செய்வதும் இக்கிளையின் செயற்பாடாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "திருவுடையாள்" பிரதேச மலர் வெளியீடு

பிரதேசத்தின் கலை கலாசார சமூகவியல் பண்பாட்டு அபிவிருத்தி நடவடிக்கைகளை தாங்கிவரும் மலராக "திருவுடையாள்" பிரதேச மலர் அமைந்துள்ளது. இம்மலரை உருவாக்குவதற்கு மலர்க்குழு ஒன்று அமைக்கப்பட்டு அக்குழுவின் மூலமாக இம் மலர் வெளியீட்டுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், அறிஞர்கள், கல்வியாளர்கள், மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் ஆகியோரின் ஆக்கங்கள் பெறப்பட்டு பிரதேசம் சார்ந்ததாகவும், பிரதேசத்தின் பெருமைகளையும் சிறப்பம்சங்களையும் ஆவணப்படுத்தும் அரிய பொக்கிஷமாகவும் இம்மலர் அமைந்துள்ளது. "திருவுடையாள்" பிரதேச மலர் வெளியீடு 20.02.2008ந் திகதி யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், திரு.ஆ.சிவசுவாமி அவர்கள் கலந்து சிறப்பித்தார். இம்மலரின் வெளியீட்டுரையினை யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் நிகழ்த்தினார். நூலின் மதிப்பீட்டுரையினை ஓய்வுபெற்ற இலங்கை நிர்வாக சேவை அதிகாரி கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்) அவர்களும், யாழ் பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகம் அவர்களும் நிகழ்த்தினர். நூலின் அறிமுகவுரையினை ஓய்வுபெற்ற அதிபரும் மலர் இணை ஆசிரியருமாகிய திரு.கி.நடராஜா அவர்களும், ஏற்புரையினை யாழ் பல்கலைக்கழக கல்வியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும், மலர் இணை ஆசிரியருமாகிய கலாநிதி.த.கலாமணி அவர்களும் வழங்கினார். பெருமளவிலான மக்கள் இவ்விழாவில் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும். இம்மலரினை ஆண்டுதோறும் வெளியீடு செய்வதற்குரிய நடவடிக்கைகள் பிரதேச கலாசார பேரவை மலர்க்குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## பிரதேச கலாசார விழா

பிரதேச கலைஞர்களின் ஆக்கங்களை வெளிக்கொண்டுவருவதற்கும் இலைமறை காயாக இருக்கும் கலைஞர்களின் கலைப்படைப்புக்களை வெளிக்கொண்டு வருவதற்கும் பிரதேசத்திற்குச் சிறப்பான கலைப்பணியினை ஆற்றிய கலைஞர்களை கௌரவிக்கும் நோக்கிலும் ஆண்டுதோறும் பிரதேச கலாசார விழா நடைபெறுகின்றது. இக்கலாசார விழாவில் பாடசாலை மாணவர்கள், கலைமன்றங்கள் மற்றும் கலைஞர்களின் படைப்புக்கள் மேடையேற்றப்படுகின்றன. கலாசார திணைக்களத்தினால் நடாத்தப்படும் கலை இலக்கிய போட்டிகளில் பங்குபற்றி வெற்றியடைந்தவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் பிரதேச கலை விழாவில் வழங்கி கௌரவிக்கப்படுகின்றது. இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் மாவட்ட போட்டியில் கலந்துகொள்வதற்குரிய சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றது. 2008 ஆம் ஆண்டில் பிரதேச கலை இலக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழா 28.06.2008, 29.06.2008ந் திகதிகளில் நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற்றது. 28.06.2008ந் திகதி நடைபெற்ற விழாவில் மன்னார் மாவட்ட முன்னைநாள் அரச அதிபரும் மீள் எழுச்சித்திட்ட பிரதி திட்டப் பணிப்பாளருமாகிய திரு.வே.விசுவலிங்கம், அவர்கள் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக யா/விக்கினேஸ்வராக் கல்லூரி அதிபர், திரு.வே.சிவசிதம்பரம் அவர்களும், யா/நெல்லியடி, மத்திய மகா வித்தியால அதிபர், திரு.செ.சேதுராஜா அவர்களும் கலந்து சிறப்பித்தனர். 29.06.2009 இல் நடைபெற்ற விழாவில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. கணேஷ் அவர்கள் பிரதம விருந்தினராகவும், யாழ் பல்கலைக்கழக தமிழ் துறைத் தலைவர், பேராசிரியர்.எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

### பிரதேச சைவ ஆலோசனைச் சபை

பிரதேசத்தின் சமய விழுமியங்களை பேணிப் பாதுகாக்கவும், அறநெறியில் மாணவர்களையும் சமூகத்தினையும் வழிநடத்துவதற்கும் சைவ சமய அறிஞர்கள், கல்விமான்கள் அடங்கிய சைவ ஆலோசனை சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இச்சபையினூடாக அறநெறி கருத்தரங்குகள் மற்றும் சமய நடவடிக்கைகள் என்பன முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர்களினால் அறநெறிக்கருத்தரங்கு 17.07.2008ந் திகதியில் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

### "சிவநெறி" நூல் வெளியீட்டு விழா

பிரதேச சைவ ஆலோசனைச்சபையினால் "சிவநெறி" எனப்படும் சமய நூல் வெளியீடு 11.10.2008இல் நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர், திரு.க.கணேஷ் அவர்கள் பிரதம விருந்தினராகவும் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு.ஆ.சிவசுவாமி அவர்களும் யாழ் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை தலைவர் கலாநிதி மா.வேதநாதன் அவர்களும் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்தனர்.

### பிரதேச விளையாட்டு விழா

பிரதேச செயலகப் பிரிவினுள் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தடகள போட்டிகளும் மற்றும் உதைபந்தாட்டம், துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், எல்லே, கபடி போன்ற பெரு விளையாட்டுக்களும் நடாத்தப்பட்டு இப்போட்டிகளில் வெற்றியீட்டும் விளையாட்டு கழகங்கள் விளையாட்டு வீரர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் வெற்றிக்கேடயங்கள் வழங்கப்படுகின்றன. பிரதேச மட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும் விளையாட்டு வீரர்கள் மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. 2008 இற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச விளையாட்டு விழா 22.03.2008 சனிக்கிழமை யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் யாழ் மாவட்ட அரச அதிபர் திரு.க.கணேஷ் அவர்கள் பிரதம விருந்தினராகவும், ஓய்வுபெற்ற வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்கள உதவி பணிப்பாளர் K.W.விமலராஜன் அவர்களும், யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு.எஸ்.துரைசிங்கம் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர். பெரு விளையாட்டுக்களில் பிரதேச செயலக அணி மாவட்ட மட்ட போட்டிகளில் பங்குபற்றுகின்றது. பிரதேச விளையாட்டு சம்பந்தமான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கும் விளையாட்டுத்துறையில் அனுபவமுள்ளவர்களையும் மற்றும் அதிகாரிகளையும் இணைத்து பிரதேச விளையாட்டு ஆலோசனை சபை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

## சமுர்த்திக் கிளை (Samurdhi Branch)

இப்பிரதேச செயலகப் பிரிவினுள் உடுப்பிட்டி, நெல்லியடி, துன்னாலை ஆகிய 03 சமுர்த்தி வலயங்கள் அமைந்து காணப்படுகின்றன. இவ்வலயங்களுக்குத் தனித்தனியாக சமுர்த்தி வங்கிகளும், வங்கி கட்டுப்பாட்டுச் சபைகளும் காணப்படுகின்றன. சமுர்த்தி திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்ட 4041 குடும்பங்களைச் சேர்ந்த 15724 அங்கத்தவர்களுக்கு சமுர்த்தி நிவாரண முத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இக்குடும்பங்களுக்குரிய சமூக பாதுகாப்பு உதவித்திட்டத்தின் கீழ் பிறப்பு, திருமண, இறப்பு மற்றும் வைத்தியசாலைக் கொடுப்பனவு என்பன வழங்கப்பட்டுவருகின்றன. சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களைச் சேர்ந்த தாய்மாருக்கான பால்மா முத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. சமுர்த்தி வங்கிகள் மூலமாக சிறுகுழு சேமிப்புக்கள், தனிநபர் சேமிப்புக்கள், மக்களுக்கான கடன் வழங்கல் நடவடிக்கைகள் என்பனவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

| இல. | வங்கியின் பெயர் | சிறுகுழுவின் எண்ணிக்கை | 31.12.2008இல் உள்ளவாறு சேமிப்பு | 2008ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடன் தொகை |
|---|---|---|---|---|
| 01. | உடுப்பிட்டி | 543 | 18,472,202/- | 12,570,000/- |
| 02. | நெல்லியடி | 473 | 11,639,513/- | 6,749,000/- |
| 03. | துன்னாலை | 336 | 9,831,819/- | 5,110,000/- |

### சமுர்த்தி சமூகமன்றும், புகைத்தல் எதிர்ப்பு தின கொடிவாரமும் :

புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நடைபெறும் கொடிவாரத்தினூடாக சேகரிக்கப்படும் பணம் பிரதேசத்தின் வறிய மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளுக்கு குறிப்பாக, பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும், க.பொ.த(உ.த) வகுப்பில் கல்வி பயிலும் சமுர்த்தி பயனாளிகளின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் வழங்கப்படுவதற்காகவும் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சமுர்த்தி பயனாளிகளின் பிள்ளைகளுக்கும் விசேடமாக இந்நிதியிலிருந்து கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. இதன்மூலமாக வறுமைக்கோட்டின் கீழ் இருக்கும் சமுர்த்தி பயனாளிகளின் வறுமையினை நீக்கும் ஒரு உதவித்திட்டமாக இத்திட்டம் அமைந்துள்ளது.

**புகைத்தல் எதிர்ப்பு தின கொடிவாரத்தில் சேகரிக்கப்பட்ட நிதி**

| | சமுர்த்தி வலயம் | தொகை |
|---|---|---|
| 01. | உடுப்பிட்டி | 693474.00 |
| 02. | நெல்லியடி | 239152.00 |
| 03. | துன்னாலை | 276450.50 |
# பொருளியல் வல்லுநர் கலாநிதி இ. மஹாலிங்கசிவம்



*வி. செ. சுவாமிநாதன் (SLPS 1)*
ஓய்வுபெற்ற செயலாளர், புனர்வாழ்வு, சமூகநலன் அமைச்சு, வடகிழக்கு மாகாணம்

தனது தொழிற்பரப்பினுள் வாழ்ந்த, மற்றவர்களை வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய சான்றோர்களின் வரலாறுகளை ஆவணமாக்குவதில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகம் எடுத்துவரும் முயற்சிகளில் ஒரு அங்கமாக கலாநிதி மஹாலிங்கசிவம் அவர்களின் வரலாறும், பங்களிப்பும் தனக்குரிய இடத்தை இங்கே பெற்றுக்கொள்கின்றது.

வடமராட்சி - உடுப்பிட்டியில் பண்டகை என்றழைக்கப்படும் பூர்வீக கிராமத்தில் **12.01.1933**ஆம் நாளில் இராசையா இராசம்மா தம்பதிகளுக்கு மூத்த மகனாகப் பிறந்தார். தந்தையார் பணிசெய்த திருகோணமலையிலே சிறீ சண்முகா வித்தியாலயத்திலும், இந்துக் கல்லூரியிலும் ஆரம்பக் கல்விகற்று பின்னர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பில் முதற்பிரிவில் சித்தியெய்தினார். பல்கலைக்கழக புகுமுக வகுப்பிற்காக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் சேர்ந்துகொண்ட அவருக்கு அமெரிக்கரான அதிபர் எஸ். கே. பங்கர் அவர்களின் நல்லாசி கிடைத்தது, அவரின் பாரிய முன்னேற்றத்திற்கு அடிக்கல்லாக அமைந்தது.

**உயர்கல்வி :**

**1951**ம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி **1955**இல் கணிதத்தில் கௌரவப்பட்டத்தைப் *(Hons)* பெற்றுக்கொண்டார். பொதுநலவாயப் புலமைப் பரிசிலினைப் பெற்றுக்கொண்ட அவர் கனடா - ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் **1967**இல் பொருளாதாரத் துறையில் முதுமாணிப் பட்டத்தையும் **1969**இல் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். அவர் இறக்கும் வரை என்றும் கற்றுக்கொண்டேயிருந்தார்.

**பணி :**

**1955**இல் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கணிதத்திற்கான வருகை விரிவுரையாளராக இருந்த அவர் அதைத்தொடர்ந்து கொட்டாஞ்சேனை சென்ற் - பெனடிக் கல்லூரியில் கணித ஆசிரியராகப் பணியாற்றினார். **1956**இல் இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் கணித போதனாசிரியராகப் பணியேற்ற அவர் அவ்வாண்டிலேயே திட்டமிடல் செயலகத்தில் குடிசனப் புள்ளிவிபரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களத்தின் ஆய்வலுவலராக நியமனம் பெற்றார். தொடர்ந்து நிதித் திட்டமிடல் அமைச்சில் திட்டமிடல் உதவி, பிரதி, மேலதிக பணிப்பாளர் பதவிகளில் அமர்ந்து தேசத்தின் பலவேறு சமூக பொருளாதார திட்டமிடுகையிலும், செயல்திட்ட மேலாய்வுகளிலும் பங்கெடுத்திருந்தார்.

கலாநிதியின் அனுபவம், ஆற்றல் ஆகியவை காரணமாக உலக உணவு விவசாயத் தாபனம் பாகிஸ்தானில் தனது ஆலோசகராக அவரை நியமித்தது. மாலைதீவிலும் அவரது உசாவுனர் பணி சிறந்திருந்தது. 1987ஆம் ஆண்டு அரசியல் அமைப்பிற்கான 13ஆம் திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சூத்திரத்தை வடிவமைப்பதில் நிதி ஆணைக்குழுவின் பொருளியலாளராக இருந்த அவர் செய்த பங்களிப்பு நினைவுகூரப்படுவதாகும்.

**மேலதிக பங்குப் பணிகள் :**

தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் 30 ஆண்டு கால புள்ளி விபரங்களை ஆராய்ந்து எதிர்வுகூறினார். திட்டமிடல் அமைச்சின் பிரதிநிதியாக அளவு நியம அதிகார சபையிலும், பழச்சபையிலும், சீனிக்கூட்டுத் தாபனத்திலும், தேசிய வளங்கள், விஞ்ஞான அதிகார சபையிலும், சமூக விஞ்ஞான ஆய்வு நிலையத்திலும், நன்னீர் மீன் வளர்ப்பு ஆய்வு முகவர் நிலையத்திலும், சி நோர் திட்டத்திலும் பலதுறைசார் பணிகளை ஆற்றினார்.

மொறட்டுவ பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், ஜயவர்த்தனப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கணிதம், பொருளியல், புள்ளிவிபரம் தொடர்பான துறைகளில் வருகை விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

**சமய, சமூக ஈடுபாடுகள் :**

தொழில் ரீதியான தனது பணிச் சுமைகளின் மத்தியிலும் தனது குல தெய்வமான பண்டகைப் பிள்ளையார், செல்வச்சந்நிதி, கற்ற கல்லூரியான உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆகியவற்றுடன் இடையறாத் தொடர்புள்ளவராக இருந்து தனது சொந்தக் கிராமத்தில்/ பிரதேசத்தில் ஒரு கண்ணையும் காலையும் பதித்திருந்தார். உதவி கேட்டவர்களுக்கு சாத்தியமான அத்தனையையும் செய்யும் மனோவளம் படைத்தவராகக் கலாநிதி அவர்கள் இருந்தார்.

<u>தக்கார்</u> என்பது அவரது பிள்ளைகளின் உயர்வினாலும், நற்சந்ததியினாலும் அவரது பங்களிப்பினாலும் நிரூபணமானது. அன்போடும், அறிவோடும், மனிதாபிமானத்துடனும், தெய்வ சிந்தனையோடும் 74 அகவைகள் வாழ்ந்த பெருந்தகையின் நினைவுகள் என்றும் நிலைநிற்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதாவதானி கதிரைவேற்பிள்ளை

திரு. ப. சிவசுப்பிரமணியம்
ஆசிரியர்,
யா/ வேலாயுதம் மகா வித்தியாலயம்



சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளை வடமராட்சியின் மேலைப்புலோலி என்ற கிராமத்தில் நாகப்பிள்ளை சிவகாமி தம்பதியினருக்கு மகனாக 1871ம் ஆண்டில் பிறந்தார். தமது ஆரம்பக்கல்வியை மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் கற்றுக்கொண்டார். தமது இருபத்தியிரண்டாம் வயதில் கல்வியறிவைத் தேடும் வகையில் தமிழ்நாடு சென்ற கதிரைவேற்பிள்ளை அறிவைத் தேடுவதோடு அமையாது அறிவைப் பரப்புவதிலும் ஈடுபட்டார். சென்னை சாந்தோம் உயர்நிலைப் பள்ளி, வெஸ்லிக் கல்லூரி, ஆயிரம் விளக்குப் பள்ளி போன்ற கல்வி நிறுவனங்களினூடாக தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்தார். அன்னார் விட்டுச்சென்ற செல்வங்களுள் ஒன்றெனக் கொண்டாடத்தக்க தமிழ்த்தென்றல் திரு. வி. கலியாணசுந்தர முதலியார், கதிரைவேற்பிள்ளை சரித்திரத்தை ஒரு நூலாக எழுதி வெளியிட்டதோடு, வாழ்க்கைக் குறிப்புகள் என்ற தம் நூலிலும் கதிரைவேற்பிள்ளை பற்றி மதிப்போடு குறிப்பிடுகின்றார்.

இரு மொழிப் பாண்டித்தியம் பெற்ற பிள்ளையவர்கள் நாவலர் வழியிலே சைவத்தையும் தமிழையும் வளர்க்க முற்பட்டார். சுப்பிரமணிய கான சபாவை நிறுவி தேவார திருமுறைகளை ஓதவும், அவற்றின் பெருமைகளை உணரும்படியாகவும் திருமுறைகளுக்கு உரை எழுதினார். இவரது செயலை பாரட்டும் வகையில் யானை மீதேற்றி பிள்ளையவர்களை மக்கள் சிறப்பித்தனர். திருமுறைகளுக்கு மாத்திரமன்றி திருவாதவூரடிகள் புராண உரை, கூர்ம புராண உரை, யாப்பருங்கல விருத்தி, பழனித் தல புராண உரை, திருவருணைக் கலம்பகம், சிவராத்திரி புராண விருத்தியுரை போன்றன கதிரைவேற்பிள்ளையின் உரை வன்மைக்குச் சான்று பகருகின்றன. நைடதம் என்ற நூலுக்கு, வழக்கில் இருந்ததை புதுக்கியும் திருத்தியும் விளக்கியும் எழுதப்பட்ட விருத்தியுரை 850 பக்கங்களைக் கொண்ட பெருநூலாக அமைந்தது.

சிவசேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம், சைவசந்திரிகை, சைவ சித்தாந்தச் சுருக்கம் என்பனவும் அவர் ஆக்கியுள்ள நூல்களாகும். எண்பத்தொரு தமிழ் நூல்களையும் எழுபத்தொன்பது வடமொழி நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட சுப்பிரமணிய பராக்கிரமம் என்ற நூல் அவரது ஆய்வுப் புலமைக்கு எடுத்துக்காட்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரைவேற்பிள்ளையின் மிகச் சிறந்த பணி பேரரகராதி ஒன்றினைத் தொகுத்து வெளியிட்டமையாகும். இப்பேரரகராதி 1899ம் ஆண்டு வெளிவந்தது. இரண்டாவது பதிப்பு 1901ம் ஆண்டு வெளிவந்தது. ஆயிரத்து அறுநூற்றி முப்பத்தாறு பக்கங்களைக் கொண்ட இவ்வகராதி பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் பராட்டுதலையும் பெற்றிருந்தது.

நாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை, உ. வே. சாமிநாதையரின் வழியில் கதிரைவேற்பிள்ளை சிறந்த பதிப்பாசிரியராகவும் விளங்கினார். ஏகாதசி புராணம், சிவராத்திரி புராணம், கதிர்காமக் கலம்பகம், தாயுமான சுவாமிகளின் திருப்பாடற்றிரட்டு போன்ற நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டிருந்தார். கதிரைவேற்பிள்ளை கவிநயம் மிக்கவர் என்பதற்கு 'கருவூர் மான்மியம்' சான்றாக அமைகின்றது.

கதிரைவேற்பிள்ளை தமிழகம் சென்றிருந்தபோது இராமலிங்க சுவாமிகளின் வழியில் வந்தவர்கள் நாவலரை இழிவுபடுத்த முற்பட்டனர். இதற்காக அவர் நீதி மன்றம் செல்லவும் தயங்கவில்லை. கதிரைவேற்பிள்ளையின் அருட்பா - மருட்பா வாதம் அக்காலத்தில் மிகவும் பிரபல்யம் பெற்றிருந்தது. நீதிமன்றத்தில் தனது குருவிற்காக திரு. வி. க. சாட்சி சொன்னதும் நினைவுகூரத் தக்கது. பிள்ளையவர்களது 'போலியருட்பா மறுப்பு' என்ற கண்டன நூலின் காரணமாக 'போலியருட்பா பிரபந்த நிர்க்கந்த கிஞ்சுக கண்டனப் பிரசண்ட மாருதம்' என்று கௌரவப்படுத்தப்பட்டார். கதிரைவேற்பிள்ளையின் வாதத் திறனை திரு. வி. க. அவர்கள்,

'மன்னவன் நீதி மன்றினிலோதிப்
பன்னிரு முறையே உன்னருட்பாவென
ஆணி பசு மரத்தறைந்தாலென்ன
காட்டிச் சாத்திரம் நாட்டினனெவனோ
சிற்றம்பலத்திலும் மற்றத்தலத்திலும்
வளவன் நடாத்திய வளமார் திருமுறை
விழாவை இந்நாள் வழாமல் நிகழ்த்தி
உண்மையருட்பா வன்மையை முன்போல்
எங்கனும் பரப்பிய கங்கணன் எவனோ

என்று புகழ்ந்துரைக்கின்றார்.

கதிரைவேற்பிள்ளையின் கிரகித்தல் திறனுக்கும் புலமைத்திறனுக்கும் எடுத்துக்காட்டாக அவர் சதாவதானம் செய்த நிகழ்ச்சி அமைந்திருந்தது. தமிழ்ப் புலவர்கள், வடமொழிப் பண்டிதர்கள், சட்ட வல்லுநர்கள், கணித விற்பன்னர்கள் கூடியிருந்த சென்னை இலக்குமி விலாச மண்டபத்தில் 24.02.1907 அன்று பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளித்த வேகம் சதாவதானி கதிரைவேற்பிள்ளை என்ற நாமத்தைப் பெற்றுக்கொடுத்தது.

பேச்சு வன்மையுடையவராக இருந்ததினால் நாவலர் என்ற பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். 1897ம் ஆண்டு காசிவாசி செந்தில்நாதையர் தலைமையில் கதிரைவேற்பிள்ளையவர்கள் மாயாவாதிகளை பேச்சில் வென்றதன் காரணமாக, 'மாயாவாத தும்ச கோளரி' என சிறப்பிக்கப்பட்டார். ஆரணி சமஸ்தானத்திடமிருந்து 'அத்துவித சித்தாந்த மாகோத்தாரணர்' என்ற சிறப்பையும் பெற்றுக்கொண்டார். இவைதவிர சித்தாந்த மகாசரபம், பெருஞ்சொற்கொண்டல், மகாவித்துவான் போன்ற பட்டங்களையும் பெற்றுள்ளார்.

சிறுவயதில் இருந்து முருகனது அருளைப்பெற்றதே அவரது புலமைத்திறனுக்குப் பின்னணியாக இருந்தது என்று ஊரவர் அடிக்கடி குறிப்பிடுவர். சுப்பிரமணிய பராக்கிரமம், புதுச்சந்நிதிக் கந்தர்பிள்ளைத் தமிழ், கந்தர் நவமணிமாலை போன்றன அவரது முருக பக்திக்கு சான்று பகரும். முப்பத்தாறு வருடங்கள் மட்டும் உயிர் வாழ்ந்தபோதும் தமிழுக்கும் சைவத்திற்கும் ஆற்றிய தொண்டு அளப்பரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் த. இராமலிங்கம்



கந்தையா நீலகண்டன்
சட்டத்தரணி.

யாழ்ப்பாணத்தில் வடமராட்சி, பல அறிஞர்களையும் உழைப்பாளிகளையும் உருவாக்கித்தந்த மண். அந்த மண் வாசனையை இன்னும் பெருக்கி வைத்த பெருமை வடமராட்சியில் அறிவுப்பசி தீர்த்த கல்விக்கூடங்களைச் சாரும். அவற்றுள் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கு ஒரு தனித்துவமும் புகழ்மிக்க இடமும் உண்டு. அக்கல்லூரி நிறுவப்பட்டு 150 ஆண்டுகள் நிறைவெய்திய சமயம், கல்லூரி உருவாக்கிய புகழ்பூத்த பழைய மாணவர்கள் ஐவரை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தத் தீர்மானித்தபோது பருத்தித்துறை தொகுதியின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் திரு. தாமோதரம்பிள்ளை இராமலிங்கம் ஒருவராக அடையாளம் காணப்பட்டார்.

எல்லா வசதிகளும் வளமும் மிக்க பெருமையுடன் வாழ்ந்த புகழ்பூத்த ஒரு குடும்பத்தில் பிறந்தார் திரு. இராமலிங்கம். "பணக்காரன்" என பெருமையுடன் திகழ்ந்த செல்வந்தர்; - நியாய துரந்தரர்; திரு. தாமோதரம்பிள்ளையின் மூத்த புதல்வராக குடும்பத்தில் அவர் அவதரித்தார். அவரின் தந்தையார் ஆலயங்களைப் பரிபாலித்து கல்விக்கூடம் நிறுவி சமுதாயத்திற்கு அறப்பணிகள் பல செய்து புகழ்பெற்றவர். "பணக்காரப்பா" என்று ஊரார் அவரைப் புகழ்ந்து துதி பாடிய காலம் அது. அந்த சூழ்நிலையில் பிறந்த திரு. இராமலிங்கம் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் தனது படிப்பை ஆரம்பித்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, கொழும்பு ஆனந்தாக் கல்லூரி, கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரி ஆகியவற்றில் கற்று விஞ்ஞானப் பட்டதாரியாகி அதன்பின் சட்டக் கல்லூரியில் வழக்குரைஞர் பயிற்சியைப் பெற்று யாழ் மாவட்டத்தில் அமைந்திருக்கும் நீதிமன்றங்களில் - குறிப்பாக பருத்தித்துறை நீதிமன்றத்தில் பல வழக்குகளில் ஆஜராகிச் சிறப்புற வாதிட்டுப் பலரும் பாராட்டும் வகையில் சிறப்புற்றிருந்தார்.

திரு. இராமலிங்கத்தின் ஆற்றலை அடையாளம் கண்டு அன்று அவரை நீதித்துறையில் பணியாற்றுமாறு அழைப்புக் கிடைத்தது. விண்ணப்பம் செய்து பரீட்சைகளை எதிர்நோக்கித் தொழிலாக நீதிபதி பதவிபெறும் காலம் அல்ல அது. பொருத்தமான கண்ணியம் மிக்கவர்களைத் தேடி நீதிபதியாக வருமாறு கேட்டுக்கொண்டார்கள். அவ்வாறான பெருமை கிடைப்பது அழைக்கப்பட்டவரின் அறிவையும், அனுபவத்தையும், ஆற்றலையும், திறமையையும், கண்ணியத்தையும், கடமையுணர்வையும் மெச்சும் செயலாக கணிக்கப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்புரிந்து உழைத்து வாழவேண்டிய நிலையில் இல்லாத திரு. இராமலிங்கத்திற்கு அக்கௌரவத்தை ஏற்பதில் எவ்வித தயக்கமும் இருக்கவில்லை. எனவே அவர் கொழும்பு நீதவான் மன்றில் நீதிபதியாகப் பதவியேற்றார். அதன்பின் பாணந்துறை மாவட்ட நீதிபதியாக பதவி உயர்வு பெற்றுச் சென்று அவருக்கு இன்னும் ஒரு படி உயர்வாக மாத்தறை மாவட்ட நீதிபதிப் பதவி கிடைத்தது. வடமராட்சி தந்த தவப்புதல்வன் இலங்கையின் தென் முனையில் - மாத்தறையில் - செங்கோலேந்தி நீதி செலுத்தும் மன்னராக மதிக்கப்பட்டார். சுதந்திரத்திற்கு முன் இலங்கையில் இருந்த நிலைமை வேறு.

அடக்கமும் புன்சிரிப்பும் திரு. இராமலிங்கம் அவர்களுக்கு ஆண்டவன் அணிவித்த அணிகலன்கள். தமிழ்மறை தந்த வான்புகழ் கொண்ட திருவள்ளுவர் பாடினார்,

"பணியுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணி அல்ல மற்றுப் பிற"

ஒருவரை உண்மையான மனிதனாக ஏற்றுப் போற்றிவைப்பவை அவனின் குணாதிசயங்கள். மானிட விழுமியங்கள் பலவேறுபட்டவை. ஆனால் பணிவும் இன்சொல்லும் மானுடன் அணிந்துகொள்ளக்கூடிய தலைசிறந்த அணிகலன்கள் என்பதனை வள்ளுவன் வாக்கில் மட்டுமல்ல திரு. இராமலிங்கத்திலும் தென்னிலங்கை கூட கண்டு நெகிழ்ந்தது.

1947ல் இலங்கை சுதந்திரம் அடைந்து முதலாவது பொதுத்தேர்தல் நடந்தசமயம் வடமராட்சியை உள்ளடக்கிய பருத்தித்துறைத் தொகுதியில் அன்று தமிழ் மக்களின் ஏகோபித்த குரலாக விளங்கிய அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தனது அபேட்சகராக திரு. இராமலிங்கத்தை நிறுத்தியது. வடமராட்சியின் புகழ்பூத்த பெருமகன்களில் இன்னுமொருவரான இலங்கைத் தமிழ் காங்கிரசின் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் பருத்தித்துறையில் தன் கட்சி சார்பில் தேர்தலில் திரு. இராமலிங்கம் நிற்கவேண்டும் என வலியுறுத்திவந்தார். தன் மண்ணிற்குச் சேவைசெய்யும் சந்தர்ப்பத்தை நழுவாது திரு. இராமலிங்கமும் நீதிபதிப் பதவியைத் துறந்து தேர்தல் களத்தில் இறங்கினார். வெற்றி அவரைத் தேடி வந்தது என்றே கூறலாம். அமோக வெற்றியை சூடி பருத்தித்துறையின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட திரு. இராமலிங்கம் புதிய பாராளுமன்றத்தின் குழுக்களின் முதலாவது துணைத் தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

"…. ஒருவருக்கும் தீங்கு செய்யா உயர்வு காண்போம்,
எப்போதும் சாந்த குணம் முகத்திற் காண்போம்
இராமலிங்க எம்பியையோர் நாட் கண்டாலே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என திரு. இராமலிங்கம் மறைந்தபோது வித்துவான் பண்டிதர் க. கிருஷ்ணபிள்ளை பாடியிருக்கிறார்.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரசில் இருந்து திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் தலைமையில் ஒரு குழு பிரிந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்த பின் 1952இல் இரண்டாவது பொதுத்தேர்தல் நடந்தது. அது வடக்கில் கடும் போட்டிமிக்க சூட்டுடன் நடந்த தேர்தல். ஏழு ஆசனங்களை முதலாவது பொதுத் தேர்தலில் பெற்ற அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் இரண்டாவது தேர்தலில் நான்கு ஆசனங்களைப் பெற்றவேளை பருத்தித்துறைத் தொகுதியில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸிற்கு மீண்டும் அமோக வெற்றியைத் தேடித்தந்து திரு. இராமலிங்கம் சாதனை படைத்தார்.

ஒரு தசாப்தமாக பருத்தித்துறைத் தொகுதியை (இன்றைய பருத்தித்துறை உடுப்பிட்டித் தொகுதிகள் இணைந்து ஒரு தொகுதியாக அன்று இருந்தன) திரு. இராமலிங்கம் தான் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்திய வடமராட்சியின் வளர்ச்சியில் அக்கறை காட்டினார். கல்விக்கூடங்களின் வளர்ச்சியிலும் மக்களின் வாழ்க்கைத்தர உயர்ச்சிக்குமாக அவர் உழைத்தார். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அவரினால் கட்டுவிக்கப்பட்ட ஒரு தொகுதிக் கட்டடம் இன்றும் இராமலிங்கம் கட்டிடத் தொகுதியென்று அழைக்கப்படுவதாக அறிகின்றோம். மேலும் நல்ல குடிநீர் வசதி இல்லாத உப்பளத்தையடுத்த கப்புதூ மக்களுக்கு நன்னீர் கிடைக்க நன்னீர்த் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். மேலும் காணிக் கந்தோரில் தேவையானவற்றைச் செய்விக்கவும், பெறவும் 25 மைல்களுக்கப்பால் யாழ்ப்பாண நகர் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் வடமராட்சி மக்களுக்கு இருந்தது. அக்குறையைப் போக்கும் வண்ணம் பருத்தித்துறையில் ஒரு காணிக் கந்தோரைத் திறப்பித்து வைத்த பெருமையும் திரு. இராமலிங்கத்தையே சேரும்.

புகழுடன் சிறப்புற்று வாழ்ந்த திரு. இராமலிங்கத்தின் சேவை தொடர்ந்தும் மக்களுக்குத் தேவை இல்லை என்பது ஆண்டவன் சித்தமாக அமைந்தது போலும். நோய்வாய்ப்பட்டிருந்த காரணத்தினால் திரு. இராமலிங்கம் 1956இல் நடந்த மூன்றாவது பொதுத்தேர்தலில் போட்டியிட மறுத்துவிட்டார். அம்முடிவு அவரின் கட்சிக்குப் பேரிழப்பாக அமைந்தது.

1956இல் 52 வயதில் இறையடியெய்திய அமரர் திரு. இராமலிங்கத்திற்கு பல இடங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. முக்கியமாக நாடாளுமன்றத்தில் அஞ்சலி செலுத்தி 30.07.1956 இல் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. 1956 பெப்ரவரி வரை நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் பெற்றிருந்த திரு. இராமலிங்கத்திற்கு புகழாரம் சூட்டி அன்றைய சபைத் தலைவர் மாண்புமிகு அமைச்சர் சி. பீ. டி சில்வா உரையாற்றுகையில் எல்லோராலும் விரும்பப்பட்ட இனியவராக விளங்கிய அமரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியாகக் கடமையாற்றிய செம்மைத்திறனைப் புகழ்ந்துரைத்தார். கலாநிதி என். எம். பெரரா தனது அஞ்சலியுரையில் திரு. இராமலிங்கம் இளம்வயதில் நோய்வாய்ப்பட்டு காலமாவார் என தாங்கள் எதிர்பார்க்கவில்லை என்றும், அவரின் மரணம் தங்களுக்குக் கிடைத்த அதிர்ச்சிச் செய்தி என்றும் குறிப்பிட்டார். தொடர்ந்து கலாநிதி என். எம். பெரரா தனது உரையில் திரு. இராமலிங்கம் குழுக்களின் கூட்டங்களில் தலைமை தாங்கும்போது திறமையுடன் மட்டுமல்ல - காத்திரமாகவும் - சமன்செய்து சீர்தூக்கியாற்றிய தலைமைத்துவச் சிறப்பையும் மெச்சினார். சட்ட உலகம் மதித்த நீதவானாக நீதிபதியாக கடமையாற்றிய அவருக்கு அது சிரமமான பணியாக இருந்திருக்கமாட்டாது.

பருத்தித்துறை சட்ட உலகில் எல்லோரும் உயர்த்தி மதித்த வழக்குரைஞர் திரு. இராமலிங்கத்தின் மறைவுக்கு 01.08.1956 அன்று பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது. அதில் மாவட்ட நீதிபதி தனது இரங்கலுரையில் அமரரை மெச்சுவதற்கு வார்த்தைகளின்றி தடுமாறுவதாக நாக்குத் தழுதழுத்தமை மாவட்ட நீதிமன்ற பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடற்பாலது. அந்த மறைவு யாழ். மாவட்டத்திலிருந்த ஏனைய நீதிமன்றங்களிலும் சோகக் குரலை எழுப்பியது. சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. தம்பித்துரை தனது புகழாரத்தில் தமிழ் மண் பெற்றெடுத்த தங்கமான மனிதர்கள் சிலரில் அமரர் ஒருவர் என சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நடந்த அஞ்சலி நிகழ்வில் 30.07.1956 அன்று குறிப்பிட்டார். அதே நிகழ்வில் வழக்குரைஞர் எம். பாலசுந்தரம் உரையாற்றினார். 29.07.1956 அன்று நடந்த அவரின் இறுதிச் சடங்கில் வடமராட்சி மக்கள் திரண்டுவந்து கண்ணீரும் கம்பலையுமாக செய்த அஞ்சலிக் காட்சி அவர் மக்களின் மனதில் அன்புடன் பிடித்திருந்த இடத்தைப் படம்பிடித்துக் காட்டியது.

யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் 30.07.1956 அன்று திரு. இராமலிங்கத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அங்கு சிறப்புரை நிகழ்த்திய மூத்த முடிக்குரிய வழக்கறிஞர் திரு. முத்துச்சாமிப்பிள்ளை பேசுகையில் கூறினார். He, as American soy, *was a name of independent dreams and independent facility* (அமெரிக்கர்கள் எடுத்துக்காட்டுவது போல் அவர் தனிப்பட்ட வசதிகள் கூடியவர் மட்டுமல்ல சுகந்திரமாக சிந்தித்தவர்) யாழ். மாவட்ட நீதிபதியாக அன்றிருந்த (பின்பு உயர் நீதிமன்ற நீதியரசராக உயர்ந்த) திரு. பொன். ஸ்ரீஸ்கந்தராஜா திரு. இராமலிங்கத்தை ஒரு உயர்ந்த கணவானாப் போற்றி அஞ்சலி செலுத்தினார்.

வடமராட்சி மக்கள் அவரை "எம். பி" என்றே என்றும் அன்பாக போற்றினார்கள். அவர் மறைந்து பல ஆண்டுகளின் பின்பும் அவர் எம். பி. ஆகவே நினைவுகூரப்பட்டார். அப்போது நான் பாடசாலை மாணவன். "எம். பி" யின் உறவினன் என்று அடையாளம் காணப்பட்டு வந்தேன், அதிலும் எனக்கு சிறுவன் என்றும் அது ஒரு சிறு பெருமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை முதலில் உருவாக்கிய கல்வித்தாய் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியையும் அவர் என்றும் மறக்கவில்லை. அக்கல்லூரியின் புகழ்பூத்த அதிபர் திரு. கே. ரி. ஜோன் அக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தை 1949இல் ஆரம்பித்த போது திரு. தா. இராமலிங்கம் எம். பி. அதன் உப தலைவர்களில் ஒருவராகத் தெரிவுசெய்யப்பட்டமையையும் கல்லூரி வரலாற்றுப் பதிவுகளில் காண்கிறோம்.

"சமன்செய்து சீர்தூக்குங்கோல் போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி"

தான் சமமாக நின்று, பின் தன்னிடத்து வைக்கப்பட்ட பொருளின் பாரத்தைச் சரிவரக் காட்டுகின்ற தராசு போல், மனத்தில் சமநிலையாக நின்று ஒரு பக்கம் சாயாது உண்மையை உணர்தல் வேண்டும். இது உயர்ந்தோருக்கு அழகாகும். இக்குறளுக்கும் விளக்கம் தந்து அமரர் இருந்தார் எனப் பலர் மெச்சக் கேள்விப்பட்டிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரிப்பிள்ளை துரைரத்தினம்
## (பாராளுமன்ற உறுப்பினர்)

*வீ. க. சண்முகநாதன்*



யாழ்ப்பாணம் வடமராட்சியில் பருத்தித்துறைக்கும் தொண்டைமானாற்றுக்கும் இடையில் கடற்கரையோரமாக அமைந்திருந்த வல்வெட்டித்துறை கடல் வாணிபத்திற்கு பெயர்பெற்ற நகரமாகும். இந்நகரத்தில் வாழ்ந்து கடல் வணிகத்தில் ஈடுபட்ட குடும்பங்களில் திரு. கதிரிப்பிள்ளையின் குடும்பமும் ஒன்றாகும். கடற்கலங்களை கடலில் வழிநடத்திச் செல்லும் மேலானவர்களை தண்டயர் என அழைப்பது வழக்கம். திரு. கதிரிப்பிள்ளை அவர்களும் ஒரு புகழ்பெற்ற தண்டயர் ஆவார். திரு. கதிரிப்பிள்ளை தம்பதியினருக்கு 10.08.1930 ம் திகதி துரைரத்தினம் அவர்கள் மகனாக பிறந்தார். இவருக்கு இரண்டு சகோதரிகள் உண்டு. திரு. துரைரத்தினம் அவர்களின் கல்வி ஆர்வத்தினை இனம்கண்ட தந்தையார் இவரை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் சேர்த்து கல்வி கற்பதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார். கல்வியை ஆர்வமாகக் கற்ற துரைரத்தினம் அவர்கள் பட்டப்படிப்பை கண்டி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு தமது இருபத்தியோராவது வயதில் பட்டதாரியாக வெளியேறினார்.

இளம் வயதிலேயே சேவை மனப்பான்மை கொண்டவராகவும் வசதி குறைந்த ஏழை மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவேண்டும் என்ற ஆர்வம் கொண்டவராகவும் விளங்கினார். தனது சேவை நோக்கத்தை பொதுச்சேவை ஊடாக நிறைவேற்ற 1982ம் ஆண்டு முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற தேர்தலில் உடுப்பிட்டி கிராம சபைக்கான தேர்தலில் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டார். கிராம சபையின் முதலாவது உதவித் தலைவராக ஏக மனதாக தெரிவுசெய்யப்பட்டு திறமையாக கடமையாற்றினார். அத்துடன் தான் கற்ற கல்வி ஏனையோருக்கும் பயன்படவேண்டும் என்ற நோக்கத்திற்கமைய 1952ம் ஆண்டு புலோலி இந்து ஆண்கள் ஆங்கிலப் பாடசாலையில் (வேலாயுதம் மகா வித்தியாலயம்) ஆசிரியராக சேர்ந்து 1960ம் ஆண்டுவரை கடமையாற்றினார்.

இவரது ஆளுமையினையும் பொதுச்சேவையில் ஆர்வத்தினையும் இனம்கண்ட தமிழரசுக் கட்சித் தலைவர் சா.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் இவரை தனது கட்சியில் சேர்த்துக்கொண்டார். 1956ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவினார். ஆனால் தோல்வியே வெற்றிக்கான படி என்ற முதுமொழிக்கிணங்க 1960ம் ஆண்டு மீண்டும் பொதுத்தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டு தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்தைந்து வருடங்கள் பருத்தித்துறை தொகுதியில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து மக்களுக்கான சேவையை குறைவின்றி நிறைவேற்றி வந்தார். இவரது துடிப்பான செயற்பாட்டினையும் பொருளாதார ரீதியான சிந்தனைகளையும் இனம்கண்ட தமிழரசுக் கட்சி இவரை பொருளாதாரத் துறை செயலாளராக நியமித்தது. தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை திறம்பட நிறைவேற்றுவதற்காக அரும்பாடுபட்டு உழைத்தார். முக்கியமாக

1. விவசாயத்துறை
2. மீன்பிடித்துறை
3. பனைவள அபிவிருத்தி

ஆகிய துறைகளை மேம்படுத்துவதற்காக பல திட்டங்களை வகுத்து செயற்படுத்தினார்.

விவசாய குடியேற்றங்களை ஏற்படுத்தி தமிழ் மக்களை குடியேற்றி அவர்களது பொருளாதார வளத்தை மேம்படுத்த வேண்டும் என்ற சிந்தனைக்கிணங்க அயராது உழைத்த உத்தமராவார்.

பரம்பரை பரம்பரையாக குறிப்பிட்ட சில மரக்கறி வகைகளையே பயிரிட்டு வந்த யாழ்ப்பாண விவசாயிகளுக்கு மலைநாட்டில் இருந்து உருளைக்கிழங்கு, கரட், பீற்றூட் போன்ற கிழங்கு வகைகளையும், கோவா, லீக்ஸ், பம்பாய் வெங்காயம் போன்ற பயிர்களையும், விவசாயத் திணைக்களத்தின் உதவியுடன் அறிமுகப்படுத்தி அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிகாட்டினார். யாழ் மாவட்டத்தில் கோதுமை செய்கை பண்ணமுடியும் என்பதை செயல்முறைமூலம் நிரூபித்து காட்டினார்.

1964ம் ஆண்டு இஸ்ரேல், பிலிப்பைன்ஸ், டென்மார்க் போன்ற நாடுகளுக்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் தூதர் குழுவில் இடம்பெற்று அந்நாடுகளில் விவசாய முறைகளையும் நுட்பங்களையும் அறிந்துவந்து எமது விவசாயிகளுக்கு விவசாயத் திணைக்களத்தின் ஊடாக அறிமுகப்படுத்தினார். மேலும் இஸ்ரேல் நாட்டில் இருந்து முந்திரிகைத் துண்டங்களைப் பெற்றுவந்து யாழ்ப்பாண விவசாயிகளிடையே முந்திரிகைச் செய்கையினை அறிமுகப்படுத்தினார். இஸ்ரேல் நாட்டில் இருந்து முந்நூறு முந்திரிகைத் துண்டங்களை தனது கையிலேயே கொண்டுவந்து செய்கை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இம் முந்திரிகைச் செய்கையானது யாழ்ப்பாண விவசாயிகள் பலராலும் விரும்பி மேற்கொள்ளப்பட்டு பெரும் இலாபம் ஈட்டப்பட்டதாகும். இம் முந்திரிகைச் செய்கையை யாழ்ப்பாண மக்களிடையே அறிமுகப்படுத்துவதற்கு அப்போதைய யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்த திரு. நெவில் ஜெயவீர இவர்களுடன் நெருங்கி செயற்பட்டு விவசாயத் திணைக்களத்தின் உதவியையும் பெற்றுக்கொடுத்தார். மேலும் பிலிப்பைன் நாட்டிற்கு சென்று அங்குள்ள இலாபம் மிகுந்த தென்னை இனங்களை வரவழைத்து யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்து வெற்றிகண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னி மண்ணின் செழுமையை இனம்கண்டு வன்னியில் விசுவமடு என்னும் இடத்தில் விவசாய செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் படித்த வாலிபர்களை விவசாயச் செய்கையில் ஈடுபடுத்தி பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்தினார். மிளகாய், வெங்காயம் போன்ற மேட்டுநிலப் பயிர்களை பெருமளவில் உற்பத்திசெய்து பெரும் லாபம் ஈட்டினார்கள்.

விவசாயக் குடியேற்றங்களை ஏற்படுத்தும்போது காடுகள் அழிக்கப்படுவதனால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை தடுப்பதற்காக மரக்காடுகளை உருவாக்கும் திட்டத்தை வனவளத் திணைக்களத்துடன் சேர்ந்து முன்னெடுத்தார். அந்தவகையில் யாழ்ப்பாணத்தில் வடமராட்சி கிழக்கு, வல்லிபுரம், மணல்காடு ஆகிய பிரதேசங்களில் சவுக்கு மரங்கள் நாட்டி வளர்ப்பதற்கு தேவையான நிதி உதவிகளை பெற்றுக்கொடுத்து பெரும் பங்காற்றினார். சவுக்கு மர வளர்ப்பினால் மண்ணரிப்பையும் தடுக்கக்கூடியதாக இருந்தது.

யாழ்ப்பாணத்தில் கற்பகதரு எனப் போற்றப்படும் பனை மரத்தில் இருந்து உச்சப் பயனைப் பெற்று மக்களின் பொருளாதார லாபத்தினை மேம்படுத்தவும் மேலும் பனை மரத்தில் இருந்து பெறக்கூடிய பயனை ஆராய்ந்து கண்டறிந்து அபிவிருத்தி செய்வதற்குமாக பனை அபிவிருத்திச் சபை ஒன்றை நிறுவுவதற்கான ஒரு சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை நிறைவேற்றி பனை அபிவிருத்திச் சபை என்ற ஒரு சபையை நிறுவி அதன்மூலம் ஏழை மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த மேலும் பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்தார்.

கடலால் சூழப்பட்ட எமது நாட்டில் மீன்பிடி துறையை மேம்படுத்த வேண்டும் என்று சிந்தித்து மீன்பிடி துறையில் பல அபிவிருத்தி திட்டங்களை வகுத்து செயற்படுத்தி கரையோரங்களில் வாழ்ந்த மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த அரும்பாடுபட்டார். கடல் உணவு குறையாக இருந்த மீன்பிடி முறைமைகளில் தங்கியிருந்த மக்களுக்கு நன்நீர் குளங்களிலும் குறுகிய கால மீன்களை வளர்த்தெடுக்க முடியும் எனக்கண்டு குறுகிய கால நன்நீர் மீன் பிடித்தல் முறையை அறிமுகப்படுத்தினார்.

யாழ்ப்பாணத்தில் ஏரிகளில் மீன்கள் வளர்ப்பை மேற்கொள்ளலாம் என்பதை மன்னாரில் இருந்து மீன் குஞ்சுகளை கொண்டுவந்து தொண்டமானாறு கடலேரியில் விட்டு வளர்த்துக்காட்டினார்.

காரைநகரில் இருந்து கடற்கரையோரமாக தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, முல்லைத்தீவு, திருகோணமலை ஊடாக பொத்துவில் பகுதிக்கு நீண்ட நெடுஞ்சாலை ஒன்றை அமைத்து மக்களின் போக்குவரத்தை இலகுபடுத்தலாம் என கண்டறிந்து அதற்கான முன்னோடி முயற்சிகளை மேற்கொண்டார். இம் முயற்சிக்கு அப்போது முல்லைத்தீவு பாராளுமன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினராக இருந்த திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பியுடன் ஒத்துழைத்து செயற்பட்டார்.

மேலும் சங்குப்பிட்டிக்கும் பூநகரிக்கும் இடையில் ஒரு பாலம் அமைத்து யாழ்ப்பாண தீபகற்பத்தை பெரு நிலப்பரப்புடன் இணைக்கவேண்டும் என சிந்தித்து மன்னார் புத்தளம் போன்ற பிரதேசங்களுக்கு குறுகிய நேரத்தில் பிரயாணங்களை மேற்கொள்ளலாம் என கண்டறிந்து அதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஆனால் அரசியல் சூழ்நிலைகள் மாறுபட்டதால் இம் முயற்சி கைவிடப்பட்டது.

பேராதனை பல்கலைக்கழக பட்டதாரியான திரு. க. துரைரட்ணம் அவர்கள் இலங்கை சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டக்கல்வி பயின்று ஒரு சட்டத்தரணியாக வெளியேறினார்.

தமிழரசுக் கட்சியின் நிர்வாகக் குழுவில் பல வருடங்களாக பொருளாதார துறையில் செயலாளராக இருந்து பொதுமக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த அரும்பாடுபட்டார். இச் செயற்பாட்டினால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொருளாதார துறை செயலாளராகவும் இருந்து பொதுமக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த வழிசமைத்தது. இதன்மூலம் உள்ளூர் வளங்களைக் கொண்டு சுயமாக சம்பாதிக்கக்கூடிய வழிமுறைகளை மக்களிடையே ஏற்படுத்தினார்.

இவர் தாம் சார்ந்த கட்சியில் தலைமைபீடத்துக்கு எப்போதும் இடையறாத விசுவாசமாக இருந்து அதன் போராட்டங்களில் தம்மை ஈடுபடுத்தி அதனால் நீதிமன்ற வழக்குகளையும் சந்தித்தார்.

ஒரு வீட்டில் ஐந்து தென்னை மரங்களும், பத்து கோழிகளும், ஒரு ஆடும் இருந்தால் அக்குடும்பத்தின் ஆகக்குறைந்த போசாக்கு தேவைகளை பூர்த்திசெய்ய முடியும் என்னும் கொள்கைக்கேற்ப மக்களை விழிப்படையச் செய்ய பாடுபட்டார்.

பாகிஸ்தானில் இருந்து நல்லின ஆடுகளை தருவித்து பொதுமக்களுக்கு விநியோகித்து மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த உழைத்தார்.

இவர் 23.11.1996 ம் ஆண்டு சுகயீனம் காரணமாக இவ் உலகைவிட்டு போகும் வரை அரசியலிலும், பொதுமக்களின் சேவையிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி பெரும் பங்காற்றியவருமாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகக் கவிமணி எம். வீ. கிருஷ்ணாழ்வார்



*பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா*

வடமராட்சிப் பகுதியின் தொன்மைவாய்ந்த கிராமங்களுள் ஒன்றான கரவெட்டியிலே, மு. வீரகத்தி இலக்குமி தம்பதியினருக்கு மகனாக கிருஷ்ணாழ்வார் 1895ஆம் ஆண்டு பிறந்தார். கரவெட்டி சரஸ்வதி வித்தியாலயத்திலே எட்டாம் வகுப்புவரை கற்றார். குடும்பச் சூழ்நிலை காரணமாக இவரது கல்வி எட்டாம் வகுப்புடனே நிறைவுற்றது.

இயல்பான விவேகமும் அறிவும், அழகும் கொண்ட ஆழ்வாப்பிள்ளை தமது பதினைந்தாவது வயதிலேயே கலையுலகில் காலடி எடுத்துவைத்தார். உடுப்பிட்டியைச் சேர்ந்த அண்ணாவியார் ஆறுமுகம் இவருக்கு ஆரம்பகால நாடகக் குருவாக அமைந்தார்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கோலோச்சிய இசை நாடகத்தில் தன்னை இணைத்துக்கொண்ட ஆழ்வாப்பிள்ளை தாம் ஏற்று நடித்த நாடகப் பாத்திரங்களின் சிறப்பு நோக்கிக் கிருஷ்ணாழ்வார், சுபத்திரை ஆழ்வார், கம்பர் ஆழ்வார் எனப் பலவகையான பெயர்களினால் அழைக்கப்பட்டார். எனினும் இறுதிவரை கிருஷ்ணாழ்வார், சுபத்திரை ஆழ்வார் என்ற பெயர்களே நிலைபெற்றிருந்தன. ஊரவர்கள் அண்ணாவியார் என்றும், அண்ணாவி அப்பா என்றும் அழைத்தனர். இவரது இயற்பெயரான ஆழ்வாப்பிள்ளையைக் கிருஷ்ணர், சுபத்திரை என்ற நாடகப் பாத்திரங்கள் விழுங்கி அவரைக் கிருஷ்ணாழ்வார், சுபத்திரை ஆழ்வார் என்றே உலாவவிட்டன. அக்காலத்துப் பத்திரிகைகளிலும் பிரசுரங்களிலும் எம். வீ. கிருஷ்ணாழ்வார், எம். வீ. சுபத்திரை ஆழ்வார் என்றே இடம்பெற்றுள்ளது.

மிகச் சிறந்த நாடகக் கலைஞரான எம். வீ. கிருஷ்ணாழ்வாரோடு அவரது முதுமைக் காலத்திலே பழகும் வாய்ப்பு இக்கட்டுரையாசிரியருக்குக் கிடைத்தமை பெரும் பாக்கியமே.

பல்வேறு பாத்திரங்களிலும் சிறப்புறப் பாடி நடித்துப் புகழ்பெற்ற கிருஷ்ணாழ்வாருக்கு ஈழத்து இசைநாடக வரலாற்றிலே அழியாததோர் இடமுண்டு. கிருஷ்ணாழ்வாரின் இசை நாடகப் புலமை பற்றிப் பேராசிரியர் கா. சிவத்தம்பி, கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை, கலாநிதி கலாமணி முதலானோர் நிறையவே எழுதியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த நாடகப் புலமையாளனாகத் திகழ்ந்த கிருஷ்ணாழ்வார் நல்ல கவிஞனாகவும் விளங்கினார். அவரது கவித்துவ மேதாவிலாசத்தினால் ஈர்க்கப்பட்டவன் என்ற வகையிலே அவரது கவித்துவ ஆற்றலையே இச்சிறு கட்டுரையிலே குறிப்பிடுகிறேன்.

கிருஷ்ணாழ்வார் பிறந்து வளர்ந்த கிராமியச் சூழல், நாடகத் தொடர்புகள், கற்றோர் உறவும் கலந்துரையாடல்களும் இலக்கிய - கவிதை - வாசிப்புப் பரிச்சயம், சமயப் பின்னணி, அரசியற் சூழல், இயல்பாக அமைந்த கற்பனையாற்றல் முதலான எல்லாமே அவரைச் சிறந்த கவிஞனாக உருவாக்கின எனக் கொள்ளலாம்.

கிருஷ்ணாழ்வார் சரமகவிகள், நாடகப்பாடல்கள், வாழ்த்துப்பாக்கள், வரவேற்புப்பாக்கள், கடவுளர் துதிகள் முதலான பலவற்றைப் பாடியுள்ளார். இவரது சரமகவிகள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. ஈழத்துச் சரமகவிப் பாடல்களை ஆராயப் புகுவோர் கிருஷ்ணாழ்வாரையே தலைமைக் கவிஞனாகக் கொண்டு ஆராயவேண்டும்.

'உள்ளத்து உள்ளது கவிதை' என்றும், ஓசைதரும் இன்பம் உவமையிலா இன்பம் உவமையிலா இன்பமடா" என்றும் பாரதி கூறுவான்.

அண்ணாவியாரின் கவிதைகள் அவரது உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்துச் (ஓசை நயத்தோடு) சந்தம் பிசகாமல் இருந்தமைக்குச் சான்றுகள் பலவற்றைக் காட்டலாம். விரிவஞ்சி அவற்றை விடுத்தோம்.

கிருஷ்ணாழ்வாரின் கவிதை ஓட்டம் கம்பனிலே தொடங்கிப் பிற்காலப் பக்தியுகக் கவிஞர்களுக்கூடாகப் பாய்வதை அவதானிக்கமுடியும். இவர் கையாளும் சொற்கள் மந்திரச் சொற்களாக அமைந்தன. உவகைகள் வாழும் சூழலை முதன்மைப்படுத்தின. உணர்வுகள் எக்காலத்துக்கும் பொருந்துவனவாக அமைந்தன.

வெண்பா, விருத்தம், கட்டளைக் கலித்துறை, அகவல் முதலான யாப்பு வடிவங்களை இவர் செம்மையாகப் பயன்படுத்தியமை இவரது நுண்மாண் நுழைபுலத்தையே புலப்படுத்துகின்றது.

ஒரு காலகட்டத்து இசை நாடக மரபில் மாத்திரமன்றித் தமிழ்க் கவிதைத் துறையிலும் நின்று நிலைக்கக்கூடிய கிருஷ்ணாழ்வார் கரவெட்டிக்குப் பெருமைசேர்த்த பெரியார்களில் ஒருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னவன் கந்தப்பு



**இளையதம்பி இராகவன்**
அதிபர்,
யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம்,
கரவெட்டி.

## பிறப்பு

"காகம் கலைத்த கருங்குயில் மாங்கொம்பரிசைத்
தாகம் தணிக்கின்ற தச்சையே"

என விதந்துரைக்கப்படும் தச்சை விநாயகன் குடிகொண்டிருக்கும் தச்சந்தோப்பைச் சுற்றியுள்ள குறிச்சிகளான வாழைத்தோட்டம், பெரியதோட்டம், சிறுமணியந்தோட்டம், மலையாளந்தோட்டம், அரிய தோட்டம் ஆகியவற்றில் ஒன்றான பெரியதோட்டத்தில் பெரியார் முருகேசு, பொன்னாச்சி தம்பதிகளின் ஒரே மகனாய் சேனா வளவில் 18.06.1926 இல் பிறந்தார். சிறுவயதில் தாயை இழந்த இவர் தாய்வழிப் பேத்தியாரின் அரவணைப்பில் வளர்ந்தார். தனது தாய் வழி உறவினராகிய நாகநாதியப்பா, கண்ணகி தம்பதிகளின் புதல்வி பத்தினிப்பிள்ளை அவர்களை இல்லற வாழ்வில் இணைத்து ஐந்து ஆண்கள், மூன்று பெண்களென இல்வாழ்வில் இனிமையைப் பெற்றார்.

## கல்வி

கற்பதற்கு இடமில்லையே என எவரையும் கவலைப்பட வைக்காத இடம் கரவெட்டி. எத்துறை ஐயத்தையும் கேட்பதற்கு ஆளில்லையே என அலைய வைக்காத இடம் கரவெட்டி. அதற்கு அடிநாதமாக விளங்கிய மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் தனது கல்வியை ஆரம்பித்து S.S.C பரீட்சையில் முதல் தரத்தில் சித்திபெற்று ஆங்கிலப் புலமைபெற நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இணைந்துகொண்ட இவர் கலாநிதி சிவப்பிரகாசம் அவர்களின் சிறந்த மாணவராக இனங்காணப்பட்டு அவரது தொடர்பால் புலோலி கந்தமுருகேசனாரிடம் தமிழ் இலக்கியத்தில் பாண்டித்தியம் பெற்றார். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைத் தேர்வில் சித்திபெற்ற இவர் திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலே பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களிடம் சிறந்த ஆசிரியராகப் பட்டை தீட்டப்பட்ட வைரமானார்.

## தொழில்

'இந்துபோட்' ராஜரத்தினம் அவர்களால் ஆசிரியர் கலாசாலையில் இனங்காணப்பட்ட இவர் 'இந்துபோட்' நடாத்திய பாடசாலை ஒன்றில் நியமிக்கப்பட்டு ஆசிரியத் தொழிலை ஆரம்பித்தார். பின் 1954 இல் பயிற்றப்பட்ட ஆசிரியராக நியமனம்பெற்று புசல்லாவை, பதுளை, கிளிநொச்சி ஆகிய இடங்களில் கடமையாற்றித் தன் பிறந்த ஊருக்குச் சேவையாற்ற வந்தார். விக்னேஸ்வரக் கல்லூரி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார்க்கரு விநாயகர் வித்தியாலயம், மாணிக்கவாசகர் வித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் 1982 - 1986 வரை தான் கற்ற, கற்பித்த மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் சிறப்புமிகு அதிபராகக் கடமையாற்றி 17.06.1986இல் ஓய்வுபெற்றார்.

மேதை, பண்டிதர் க. வீரகத்தி அவர்களுடன் வாணி கலைக்கழகத்தில் பாலபண்டித, பண்டித பரீட்சையெடுக்கும் மாணவர்களுக்கான வகுப்புக்கள் நடாத்தினார்.

## மன்னவன்

மாணிக்கவாசக வித்தியாலயத்தில் மாணவனாக இருந்த காலத்தில், செல்லையா உபாத்தியாயர், கார்த்திகேசு உபாத்தியாயர் ஆகியோரின் நெறிப்படுத்தலில் உடற்பயிற்சி, யோகாசனம், சாரணியத்தில் கோபுரம் அமைத்தல், கையால் நடத்தல், தடியில் நடத்தல், வளையத்தில் தொங்கி சாகசம் செய்தல், விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி வாகை சூடுதல் என்பவற்றின் சிறப்பால் சக மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் ஒருவகை ஈர்ப்பைப் பெற்றிருந்தார். இவர்கள் மனதில் அனைத்துத் துறைகளிலும் ஒரு மன்னனாகவே இருந்தார். இவர் பின் நெ.ம.ம.வி. இல் பயின்ற காலத்தில் புகழ்பெற்ற கல்வியாளர் Dr. சிவப்பிரகாசம் அவர்கள் இவரது சகபாடிகள் 'மன்னன்' என அழைத்தமையை மனதில் கொண்டு இவரது துடிப்பு, துடுக்கு, செயல் சிறப்புக் கண்டு 'நீ என்ன மன்னவனோ' என அழைத்து தனது சிறந்த மாணவர்களில் ஒருவராக்கினார்.

திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கல்விகற்ற காலத்தில் இவரது சிலேடைத் தமிழ் சிந்தி விளையாடும் அழகும், கவியிலே பொடிவைத்து உரைக்கும் சிறப்பும், பழந்தமிழ் இலக்கியங்களின் பரிச்சயமும் கண்டு உண்மையிலே நீ 'மன்னவன்'தான் என பண்டிதமணி அவர்கள் கூறியதன்மூலம் சகபாடிகள் மட்டத்திலிருந்த மன்னன் → மன்னவன் எனும் பெயர் சமூக மட்டத்தில் நிலைபெற்று, கந்தப்பு எனும் இயற்பெயர் மறைந்து மன்னவன் எனும் பெயர் நிலைபெற்றுப் புகழ்பெற்றது.

## கவிதை

கவியுலகில் தனக்கென தனியிடத்தைப் பதித்த மன்னவன் அவர்கள் 1966 - 1970 காலப்பகுதியில் வானொலி மூலம் தமிழ் உலகெங்கும் அறிமுகமானார். கவியோட்டமும் அதற்கேற்ற குரல் வளமும் அவரின் கவிதையை அனைவர் மனங்களிலும் பதிவுபெறச் செய்தன. கவியரங்குகளில் பொருள் பொதிந்த சமயோசிதமான, சாமர்த்திய சிலேடைகள் அனைவரையும் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தன. இளம்வயதில் பத்திரிகைகளில் இவரது கவிதை இரசிகர்கள் பலர். தினகரன் கவிதைப் போட்டியில் "குறளாமை" எனும் கவிதை தங்கப்பதக்கம் பெற்றது. ஈழநாடு கவிதைப் போட்டியிலும் இவரது கவிதை முதற்பரிசு பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவுத் துன்பப் புலம்பல்கள் எனப்படும் சரமகவி படைப்பதிலே மிக வல்லவராவார். இளம்வயதில் தாயை இழந்த துயரை மனதிலே தேக்கிவைத்து தன்னை வளர்த்த வள்ளிப் பேத்தி மறைந்தபோது அவர் யாத்த சரமகவி இரண்டைத் தருகின்றேன்.

தொட்டுப் பிசைந்துணவீந்த என் தாய் புவி நீங்கவுயிர்
விட்டுப் பிரிந்தன என்றே ஒரு தந்திகண்டு ரயில்
எட்டிப் பிடித்திர வோடிராவாக நான் வந்தும்
சுட்டுப் பொசுக்கிய சாம்பலைக் கண்டனன் சூழ்வினையே.

ஊருக்கு நல்லவள் உற்றார் அயல் பிறருள்ள சுற்றம்
யாருக்கும் நல்லவள் எல்லோர்க்கும் குஞ்சி உறவு முறைப்
பேருக்கும் நல்லவள் ஆவி துறந்திறை ஈசனது
ஊருக்கு நல்லது சொலவோ போயினாள் ஓ சதியே.

பிரிவால் துயருறுவோரின் உள்ளுணர்வை படம்பிடிக்கும் பாங்கு மன்னவனுடன் இல்லாது ஒழிகிறதெனப் பலரும் துயருறுகின்றனர்.

அத்துடன் வாழ்த்துப் பாடல்கள், பாடசாலைக் கீதங்கள், சிறுவர் பாடல்கள் எனப் பல துறைகளிலும் இவர் கவிதைகள் எழுதியுள்ளார்.

இவரது கவித்திறன் பற்றி பிள்ளைக்கவி சிவராஜசிங்கம் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"ஆசுமது ரஞ்சரம மிறையென் றின்ன
　　அனைத்து வகைப் பாவினமும் பாட வல்லான்
பேசுகையிற் சொல்லுக்குச் சொல் சிலேடை
　　பிறங்குநகை அங்கதங்கள் மிளிரப் பேசும்
வாசியுடை யானெந்த விடத்துங் கம்பன்
　　வரகவிபா ரதிபாவின் வேந்தன் என்னும்
தேசுடைய கவிகளின் சிறப்பே பேசும்
　　கீர்த்தியினான் மன்னவனும் நின்றன் சேயே.

**சமூகப்பணி**

சமூக வழித்தடத்தில் முற்போக்குச் சிந்தனையுடன் ஓய்வொழிச்சலின்றி சமூக ஈடுபாட்டுடன் செயலாற்றிய இவரின் செயல் திறன் கண்டு பல சமூக நிறுவனங்கள் தமது நிர்வாக அமைப்பில் அவரை இணைத்துக்கொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| தலைவர் : | கலைவாணி சனசமூக நிலையம் |
| இயக்குனர் : | கட்டைவேலி ப.நோ.கூ. சங்கம் |
| உபதலைவர் : | கலாசார கூட்டுறவு பெருமன்றம் |
| அமைப்பாளர் : | வடமராட்சி கம்பன் கழகம் |
| தலைவர் : | கிருஸ்ணாழ்வார் நூல் வெளியீட்டுச் சபை |
| தலைவர் : | மாணிக்கவாசகர் வித்தியாலய நூற்றாண்டு விழா மலர் வெளியீட்டுக் குழு |
| தலைவர் : | சண்டில் கிளைக் குழு |
| உபதலைவர் : | வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச கலாசாரப் பேரவை |
| நிர்வாக உறுப்பினர் : | ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம் |
| நிர்வாக உறுப்பினர் : | வட இலங்கை சங்கீத சபை |

எனப் பல பதவிகளிலும் முன் உதாரணமாகச் செயற்பட்ட மன்னவன் என்றும் எங்கள் மனங்களிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார், இருப்பார்.

"வாழ்க அவர் நாமம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்திரன் சிவஞானசுந்தரம்



திரு. த. சிதம்பரப்பிள்ளை
தலைவர்,
கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்

"எந்த எழுத்தாளனும் சூனியத்தில் பிறப்பதில்லை. சூனியத்தில் வாழ்வதும் எழுதுவதும் இல்லை. இலக்கியப் பாரம்பரியம் என்கிற நீண்ட சங்கிலியில் அவன் ஒரு கண்ணி. அதற்குமுன் இருந்த இலக்கியங்கள் எல்லாம் அவன் குடும்பச்சொத்து. அவைகளைக் கற்பதன் மூலமும் படிப்பதன் மூலமும் அவன் விஷயஞானம் உள்ளவனாகிறான். இந்த ஞானத்தின் அடிப்படையிலேதான் அவன் எழுத்தும் அமைகிறது. முன்பிருந்த இலக்கியங்களால் அவன் செல்வாக்குப் பெற்று உந்தப்பெறுவது என்பது இயற்கையாகும்" (கிருஷ்ணன் குட்டிமேனன்).

இந்தவகையில் தான் பெற்றுக்கொண்ட இலக்கியச் சிந்தனைக்கூடாக தமிழ் இலக்கியப் பரப்பில் ஒரு புதிய உத்தியைக் கையாண்டு புதுமை படைத்துச் சென்றவர் சிரித்திரன் சிவஞானசுந்தரம் அவர்கள். சிவஞானசுந்தரம் அவர்களை நாம் சிரித்திரனைத் தவிர்த்துப் பார்க்கமுடியாது. அல்லது சிவஞானசுந்தரன் (சுந்தர்) அவர்களை விட்டு சிரித்திரனைப் பார்க்கவும் முடியாது. அப்படியான ஒரு பிரிக்கமுடியாத தொடர்தான் இந்தச் சிரித்திரனும் சுந்தரும். ஏனெனில், சிரித்திரனைப் படிக்கும் வாசகர்களுக்கு சுந்தர் அவர்களின் மெய்ப்பாட்டுணர்வுடனான முழுத்தோற்றமும் அவர்கள் முன் தோன்றும். அதுதான் சிரித்திரன் சிவஞானசுந்தரம் அவர்களின் ஆளுமை சார்ந்த வெளிப்பாடாகும்.

இப்பேர்ப்பட்ட சுந்தர் அவர்கள் ஓரிரண்டு நூல்களையோ அல்லது ஒரு சில ஓவியங்களையோ அல்லது குறிப்பிட்ட சில கட்டுரைகள், சிறுகதைகளையோ எழுதித் தன் எழுத்துப்பணியில் பிரகாசித்தவரல்லர். கலாநிதி க. குணராசா (செங்கையாழியான்) அவர்களின் தரவின்படி சிரித்திரனின் அகவை 32 ஆக விரியும். இக்காலகட்டத்தில் எல்லாமாக 318 சிரித்திரன் இதழ்கள் வெளிவந்துள்ளன. தமிழ் இலக்கியப் பரப்பில் இது ஒரு பெரும் சாதனையாகும். இன்றும் எம்மத்தியில் பேசப்படுகின்ற ஒரு விடயம், இந்தியாவிலும் சரி இலங்கையிலும் சரி கடந்த காலங்களில் வெளிவந்த சிறு சஞ்சிகைகள் நீண்டகாலம் வாழாமல் ஒரு சில காலங்களில் மரித்துவிட்டமை வரலாறாகும். இவற்றுக்கெல்லாம் காரணமாக சஞ்சிகைகள் வெளியிட்டவர்களின் பொருளாதாரப் பற்றாக்குறையே காரணமெனப் பேசப்படுகிறது.

இப்படியான ஒரு சூழ்நிலையிலும் சிரித்திரன் என்ற சஞ்சிகை 32 பக்கங்களில் குறைந்தது 16 பக்கங்களில் தனிமனித சுந்தரின் கைவண்ணப் படைப்புக்களை பல்வேறு வடிவங்களில், பல்வேறு புனைபெயர்களில் தாங்கி தொடராக வெளிவந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்ததென்றால் அது ஓர் அசுரசாதனையாகும். இந்தச் சாதனையை அவர் சாதிப்பதற்கு அவரது துணைவியார் திருமதி. கோகிலம் மிகப் பக்கபலமாக விளங்கியிருக்கிறார். தன்னால் வெளியிடப்பட்டு வந்த இதழ்களின் ஆசிரியர், ஓவியர், புரூவ்றீடர், விளம்பரம் சேகரிப்பவர், விநியோகத்தர் முதலான பல்வேறு பணிகளையும் பதவிகளையும் தாமே பொறுப்பேற்றுத் தனிமனிதனாகச் செயற்பட்டவர். இத்தகைய கடின உழைப்பும் விடாமுயற்சியும் சிரித்திரன் சுந்தர் என்ற தனிநபர், தான் மட்டும் சிரித்திராமல் மற்றவர்களையும் சிரித்து மகிழவைக்கவேண்டும் என்ற உயரிய நோக்கம் அவரிடம் குடிகொண்டிருந்தமையைக் காட்டுவதாகும்.

'சிரித்திரன்' சராசரியான ஒரு 'கார்ட்டூன்' சஞ்சிகையல்ல. "கார்ட்டூன் என்பது சிறுமையை, நளின நையாண்டியுடன் பூதாகாரமாக படம் வரைந்து காட்டும் வித்தகம்" என்பது சுந்தரின் வாதம். இதற்கமைவாகவே அவருடைய "சவாரித்தம்பர்", "மைனர் மச்சான்", "மிஸ்டர்டாமோதரனும் மிஸிஸ்டாமோதரன்" எனப் பல்வேறு பாத்திரங்களூடாக சமூக அசிங்கங்களையெல்லாம் தனது கார்ட்டூனுக்கூடாக தினகரன், வீரகேசரி போன்ற நாளிதழ்களில் சமூகத்தின் மத்தியில் உலாவவிட்டார். அவருடைய கார்ட்டூன் சித்திரங்கள் ஒரு சராசரியான கேலிச்சித்திரங்களாகக் காட்சிப்படுத்தப்படவில்லை. அவை ஒவ்வொன்றும் தலைசிறந்த கருத்தோவியங்களாக விளங்கின. சுந்தர் தனது கருத்தோவியங்களில் சமூக மாந்தர்களின் திருத்தவேண்டிய அம்சங்களைச் சுட்டிக்காட்டினார். எவரது மனதையும் நோகச் செய்வதற்கு அவற்றை அவர் பயன்படுத்தவில்லை என்பது குறிப்பிடக்கூடியதாகும்.

வெறும் கருத்தோவியங்கள் மூலம் மட்டும் சமூக நிலைப்பாட்டை எடுத்துக்காட்டும் முறைமையோடு இருக்காமல் தனது சிந்தனை வயப்பட்ட பல நல்ல கருத்துக்களையும் எம்மத்தியில் விதைத்துவிட்ட சிந்தனையாளருமாவர். இலங்கைக்கு வழங்கப்பட்ட சுதந்திரமானது பெரும்பான்மை இனத்துக்குச் சுளையும், சிறுபான்மை இனத்துக்கு குந்துமாக வழங்கப்பட்டிருந்ததென மிகவும் நாசுக்காக ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார். "சிரிக்கத் தெரிந்தவன் மனிதன்" உத்தியோகத்தனை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளாகவே கல்வி நிலையங்கள் செயற்படுகின்றன. பூரண மனிதனை உருவாக்குவது அவற்றின் இலட்சியமாக இல்லை. இவ்வாறான அறிவுலகச் சிந்தனையுடையவராகத் திகழ்ந்தார்.

சிரித்திரன் சுந்தர் அவர்கள் ஒரு சிறந்த ஆக்க இலக்கிய கர்த்தாவாகவும் விளங்கினார். சிரித்திரன் சஞ்சிகையில் கருத்தூண் சித்திரங்களோடு - இலங்கையின் பிரபல்யமான எழுத்தாளர்களின் படைப்புக்கள் பல இடம்பெற்று வெளிவந்துள்ளன. இச்சஞ்சிகையில் இடம்பெற்ற சிறுகதைகள் பெரும்பாலானவை நகைச்சுவை பொதிந்தவையாக விளங்கின. இலங்கையின் மூத்த எழுத்தாளர்களிலொருவரான செங்கையாழியானின் நகைச்சுவைப் படைப்புக்களான "ஆச்சி பயணம் போகிறார்" (மீள் பதிப்பு), "மயான பூமி", "கொத்தியின் காதல்", "கங்கைக்கரையோரம்", "வாழிநீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழுக்கையாறு" என்பனவும், "குடாரப்பூர் சிவா", "திக்கவயல் தர்மு", "வ. இராசையா", "ஸா. சண்முகநாதன்", "காசி ஆனந்தன்", "அம்மையப்பன்", "யாழ் நங்கை" என பட்டியலிட்டுக் காட்டக்கூடிய இலக்கிய கர்த்தாக்கள் வெளிப்பட்டனர் என்றால் எழுத்தாளர்களை பிரவாகித்ததில் சிரித்திரனின் சாதனையுமாகும். இதற்கூடாக மேலும் பல நகைச்சுவை எழுத்தாளர்களான காவியமணி அகளங்கன், பிரம்மஞானி, அகஸ்தியர், டானியல் அன்ரனி, ராதேயன், கே. ஆர். டேவிட், நந்தினிசேவியர், சுதாராஜ், அமிர்தகழியான், பைரவி, கா. பாலசுந்தரம், வடகோவை வரதராஜன், நவாலியூர் சச்சிதானந்தன் என வரிசைப்படுத்தக்கூடிய எழுத்தாளர்களை எமக்கு அறிமுகப்படுத்தி வைத்த பெருமை சிரித்திரனுக்குரியதாகும்.

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட சிரித்திரன் சுந்தர் அவர்கள் தபால் அத்தியட்சகரான வி. கே. சிற்றம்பலம் அவர்களின் வழிகாட்டலில் வளர்ந்தவர். பெண் சகோதரர்கள் பலரைக் கொண்ட பாரிய குடும்பநிலையில் பள்ளிப்பருவம் மிகவும் சுமை நிறைந்த ஒன்றாக விளங்கியது. பெற்றோர்களின் விருப்பம் அவரை ஓர் உயர்ந்த அரச பதவியில் அமர்ந்து அதிகாரம் செய்யும் ஒருவராகவும் பெருமளவிலான பணம் ஈட்டுபவராகவும் திகழவேண்டுமென்பதேயாகும். ஆனால் அவரிடம் இயல்பாகவே உறங்கிக் கிடந்திருந்த முற்போக்கான சமுதாய நோக்கு, அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான சிந்தனைகள், அரசியலில் காணப்படும் சித்து விளையாட்டுக்கள் என்பன அவரை ஒரு கார்ட்டூனிஸ்டாக முகிழச்செய்தது. இவற்றுக்குப் பின்புலமாக அவருடைய மாணவப் பராயத்திலே பருத்தித்துறையில் இடம்பெற்ற எழுத்தாளர் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களையும், மாலி என்ற அற்புதமான கார்ட்டூன் ஓவியரையும் சந்தித்தமையையும், கட்டிடக்கலைத் துறை சார்ந்த கல்விக்காக இந்தியாவிலுள்ள பம்பாய்க்குச் சென்றபொழுது அங்கு வெளிவந்த ஆங்கிலப் பத்திரிகைகளில் கார்ட்டூன் படங்கள் வரைந்தமை என்பன அமைந்தன.

இவ்வாறாகத் தன்னை ஒரு தலைசிறந்த ஒரு கார்ட்டூனிஸ்டாக நிலைநிறுத்திய சுந்தர் அவர்களால் வெளியிடப்பட்டு வந்த "சிரித்திரன்" சஞ்சிகை கலை இலக்கிய அம்சங்களுடன், அவரது கோட்டுச் சித்திரங்கள், கேலிச் சித்திரங்கள் என்ற வகைக்கப்பால் அவை சமூகக்கருத்துக்களை எடுத்துக்காட்டும் கருத்தோவியங்களைக் கொண்டநிலையில் மக்களிடம் சென்றடைந்தது. புதுமையுடன் புதிய அமைப்புடன் வெளிவந்த 'சிரித்திரன்' சஞ்சிகை மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. இறுதிவரை தான் வரித்துக்கொண்ட கொள்கைவழி நின்று தனிமனித சக்தியாக விளங்கி தன்னால் வெளியிடப்பட்டு வந்த 'சிரித்திரன்' சஞ்சிகையின் வரவில் தன்னை ஆகுதியாக்கிக் கொண்டு வாழ்ந்தார். சுந்தர் எனப்படும் சிவஞானசுந்தரம் அவர்கள் இறுதி நேரத்தில் தனது வலதுகையின் செயற்பாடு ஸ்தம்பித்த பொழுதும் வளமற்ற இடதுகையை வளப்படுத்தி தன் காரியங்களைச் சாதித்தவர். சிரித்திரன் சிவஞானசுந்தரம் அவர்களின் ஆக்கங்கள் வெளியீடுகள் என்பவற்றின் கொடிக்கால்களாக பலர் விளங்கியுள்ளனர். இலங்கையில் பல பாகங்களிலும் தகைசார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலருடைய தொடர்புகள் அவரைக் கௌரவித்து ஊக்கப்படுத்தின எனலாம். சுந்தர் அவர்களுடைய ஆரம்பகால வெளியீடு என நாம் பார்க்கும்பொழுது, ஏரிக்கரைப் பத்திரிகையான தினகரன் பிரதான தளமாக விளங்கியது. அக்காலத்தில் தினகரன் பத்திரிகையின் ஆசிரியராகப் பொறுப்பேற்றிருந்த பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் தினசரிப் பத்திரிகையிலும் வார மஞ்சரிகளிலும் ஈழத்து எழுத்துத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுத்தாளர்களை ஊக்கப்படுத்திய காலப்பகுதியாகும். இந்நிலையில் கொழும்பில் வசித்துவந்த சுந்தர் அவர்கள் பேராசிரியர் க. கைலாசபதி அவர்களால் இனங்காணப்பட்டு அவருடைய படைப்புக்களை தினகரன் நாளிதழ்களில் வெளிக்கொணர்ந்தார். இதில் சுந்தர் அவர்களின் சவாரித்தம்பர் சின்னக்குட்டி என்ற கதாபாத்திரங்கள் வாசகர்கள் மனதில் தினகரனைப் படிப்பதில் ஆர்வத்தைத் தூண்டியது எனலாம். சுந்தர் அவர்களின் அறிவுப்புலத்தில் அவரோடு மிக நெருக்கமான சிந்தனைப் பகிர்வாளர்களாக விளங்கியவர்களில் பேராசிரியர் கா. சிவத்தம்பி, கரவை பண்டிதர் க. வீரகத்தி போன்ற தமிழ் அறிஞர்களின் தொடர்பும் முக்கியமானதாகும். ஒரு கலைஞன் ஒருவனுடைய ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு அதனை ஆவணப்படுத்திப் பாதுகாக்கப்படவேண்டியது எதிர்காலச் சந்ததியினருக்குரிய சொத்தாகும். சுந்தர் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த நேரத்தில் - அவருடைய ஆக்கங்கள் பலவற்றைத் தொகுத்து "சிரித்திரன் சித்திரக் கொத்து" என்ற தலைப்பில் கட்டைவேலி நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சிரித்திரன் காந்தளகம் - வெளியீடாக வெளிவந்துள்ளமை முக்கியமாகும். இது சுந்தர் அவர்கள் தான் பிறந்த மண்ணில் மக்களால் எந்தளவுக்கு நேசிக்கப்பட்டார். அந்த மக்களுடைய பங்களிப்பினாலே இயங்குகின்ற ஒரு கூட்டுறவு நிறுவனம் இவ்வாறு முன்வந்து செய்தமை அவரை தகுந்த முறையில் கௌரவித்துள்ளமைக்கு எடுத்துக்காட்டாகும்.

இத்தகைய மகாமேதை எம்மத்தியில் இருந்து மறைந்துவிட்டார் என்பது எமக்குப் பேரிழப்பாகும். குறிப்பாகக் கலை இலக்கிய உலகுக்கு ஈடுசெய்ய முடியாத வெற்றிடமாகும். எனினும் கலைஞன் மரித்துவிடுவதில்லை. அவன் தனது ஆக்கங்களுக்கூடாக சிரஞ்சீவியாக சமூகத்தில் என்றும் உலா வருவான் என்பதற்கமைவாக "சிரித்திரன்" சுந்தர் அவர்களும் சமூகத்தில் என்றும் பேசப்படுவார் என்பது உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் பழந்தமிழர் பண்பாட்டுக் கட்டுமானப் பரப்பின் புதிய எல்லைகள்

*பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா*

## நாகர் வம்சங்களும் நாக மரபுகளும்

## தொல்லியற் சான்றுகளினூடான ஒரு புதிய விளக்கம்

### ஆய்விற்கோர் அறிமுகம் :

கீழைத்தேயத்தைப் பற்றி மேலைத்தேயத்தவர் கடந்த நூற்றாண்டில் மேற்கொண்ட ஆய்வுகள் பின்னர் இப்பிராந்தியத்தில் தீர்க்கமுடியாத வரலாற்று, பண்பாட்டுச் சிக்கல்கள் பலவற்றை உருவாக்கிவிட்டிருந்தன. அவ்வாறான பண்பாட்டுச் சிக்கல்களுள் மிகப் பிரதானமாக விளங்குவது **ஆரியர் - ஆரியரல்லாதார்** பற்றிய பிரச்சனையாகும். முதன்முதலாக இப்பிரச்சனை பற்றிய **கருவினை** (Embryo) உருவாக்கிவிட்டிருந்தவர்கள் ஜேர்மனிய அறிஞர்கள் ஆவர். அவர்களுள் குறிப்பிடத்தக்க இருவர் **மாக்ஸ்முல்லர்** (Max Muller) **வில்லியம் கைகர்** (Willium Geiger) என்போராவர். மாக்ஸ் முல்லர் **பிராகிருத மொழியில்** தொகுத்து ஒருங்கிணைக்கப்பட்டிருந்த **வேத இலக்கியங்களை** முதலில் **ஜேர்மனிய** மொழிக்கும் பின்னர் **ஆங்கிலத்திற்கும்** மொழிபெயர்த்து ஆரியர் - ஆரியரல்லாதார் பற்றிய பிரச்சனையை தென்னாசியாவில் உருவாக்கிவைத்தார். இதேபோன்று, வில்லியம் கைகர் என்பவர் **பாளி - பிராகிருதமொழியில்** எழுதப்பட்டிருந்த இலங்கைத் தீவின் வரலாற்று நூல்களான **மஹாவம்ஸம், சூளவம்சம்** ஆகிய நூல்களை முதலில் ஜேர்மனிய மொழிக்கும், பின்னர் ஆங்கில மொழிக்கும் மொழிபெயர்த்து வைத்ததன்மூலம் தென்னாசியாவில் குறிப்பாக இலங்கைத் தீவில், பின்னாளில் **இனத்துவ** அடிப்படையிலான பிரச்சினைகள் பல உருவாவதற்கு **வழிசமைத்து** வைத்தார். **மஹாவம்ஸத்தின்** மொழிபெயர்ப்பில் **வில்லியம் கைகர்** விட்ட தவறு என்னவென்றால் அந்நூலின் மொழிபெயர்ப்பின்போது மூலத்தில் காணப்பட்டிருந்த **நினைவுச் செய்யுட்கள்** பலவற்றை தனது மொழிபெயர்ப்பில் **மொழிபெயர்க்கப்படாது** கைவிட்டுச் சென்றமையே ஆகும். இச்சம்பவமே ஈழத்தில் ஈழத்தமிழர் பற்றிய வரலாற்று எழுத்தியலில் தெளிவற்றதும், தொடர்ச்சியற்ற – நிச்சயமற்றதுமான **வரலாற்றுத் தகவல்** போக்கு அமையக் காரணமாகியது.

**அன்று** முதலாம் காசியப்ப மன்னனால் அமைக்கப்பெற்ற சீகிரிய அரண்மனைக் குகையிலுள்ள **சுவரோவியங்களைப்** பற்றி அதே பளிங்குச் சுவர்களில் அவ்வோவியங்களைப் பார்த்தும் ரசித்தும் சென்ற மக்களால் வரையப்பட்ட **இருமொழி** மூலமான கவிதைகளையும், உரைநடைகளையும், இந்நாளில் இலங்கையின் வரலாற்றாசிரியர்களும், தொல்லியலாளர்களும் இணைந்து **படியெடுத்தும்கூட** அச்சுவரோவியம் பற்றிய **தமிழ்மொழி மூலமான கவிதைகளையும்,** உரைநடைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகங்களையும் **பிரசுரித்து வெளியிடாது இற்றைவரை மறைத்து வைக்கப்பட்டமை** போன்றதொரு **நிகழ்வினை ஒத்து, அன்று** வில்லியம் கைகரும் மஹாவம்ஸ மொழிபெயர்ப்பின்போது **திராவிடர்** சம்பந்தமான **பல நினைவுச் செய்யுட்களை** மொழி பெயர்க்காது **தவிர்த்துவிட்டார்** எனலாம். இவ்வாறான **மறைப்புக்களைப் பின்னணியாகக்** கொண்ட இலங்கையின் வரலாற்று எழுத்தியலின் விளைவாகவே ஈழத்தமிழ் மக்களது அரசியல், பண்பாட்டு அடிப்படையிலான **புராதன பங்களிப்புக்கள் மறைக்கப்பட்டும்,** தெளிவற்றதாக்கப்பட்டும், **தொடர்ச்சியற்ற தாக்கப்பட்டும்** மாற்றம் பெறக் காரணமாகியது. இருந்தபோதும் **இன்று** எவ்வாறு இந்திய இதிகாசங்களுள் ஒன்றான இராமாயணம் தொடர்பான தொல்லியல் அகழ்வாய்வுக் கண்டுபிடிப்புகளும் அகழ்வாய்வு முடிபுகளும், **'லங்கா'** வை புராதன **கலிங்க நாடாகக்** (தற்கால ஒறிசா மாநிலம்) கொள்ளவைத்ததோ அதேபோன்று **தமிழக - ஈழப்பெருங்கற் பண்பாடு (Megalithic Culture) பற்றி அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்ட விரிவான அகழ்வாய்வறிக்கைகள் ஈழத்து வரலாற்றுதயகால மக்களை தனித்துவமான கறுப்பு சிவப்பு மட்பாண்ட மரபிற்குரிய ஆதித்திராவிட குலக்குழுவினராக இனங்காட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.** அவ்வாய்வு முறையியலினூடே அவ்வினத்தின் ஒரு பிரிவினரான **ஈழத்து நாகர் மரபினரே இங்கு முதன்முதலாக குளம்கட்டி வளம் பெருக்கிய காலஎல்லைக்கு முன்னரான (குறுணிக் கற்காலப்) பண்பாட்டினை முடிவுக்குக் கொணர்ந்ததோடு, இலங்கையில் இரும்பு யுகமொன்றினையும் ஆரம்பித்து வைத்த வரலாற்றுப் பெருமையையும் ஈட்டியிருந்தனர்** என்ற மிக முக்கியமான **பண்பாட்டுத் தகவல்களையும்** உறுதிப்படுத்திக் கொள்ளமுடிந்தது. *(The Nagas were Protohistoric A people who displaced the stone age [Mesolithic ] Yakka hunter – gatheres from the Northern and Western secters of Sri Lanka from around 1000 B.C. )* இப்பின்னணியில் ஈழத்தமிழர் பண்பாட்டுக் கட்டுமானப் பணியின் புதிய எல்லைகள் பற்றிய இவ்வாய்வின் கண் **அந்நாகர் இனமக்கள் வாழ்வின் பகைப்புலம்** தொடர்பான கால, பிரதேச எல்லைகளை, அண்மைக்காலங்களில் கிடைத்த தொல்லியல் அகழ்வாய்வெச்சங்கள் வாயிலாக உறுதிப்படுத்துவதே இவ்வாய்வுக் கட்டுரையின் பிரதானமான நோக்கமாக அமைகின்றது.

## நாகர்இன வம்சத்தின் தொன்மையான ஐந்து பிராந்தியங்கள்

இதுவரையிலும் பெருங்கற்காலப் பண்பாடு தொடர்பாக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வுகளினதும், அகழ்வாய்வுகளினதும் பெறுபேறாக **பூர்வீகத் திராவிடநாகரின்** வாழ்வுப் **பகைப்புலம்களாக** ஐந்து பிரதான பிராந்தியங்களை அடையாளம் காணமுடிந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வைந்து பிராந்தியங்களிலும் **பூர்வீகத் திராவிடநாகர் மரபோடு** இணைந்து இற்றைவரைக்கும் நிலவிக் கொண்டிருக்கின்ற ஐதீகங்களையும், அவற்றின் பின்னணியில் தொன்மையாக அமைந்துள்ள பெருங்கற் பண்பாட்டின் வளர்ச்சியின் உச்சநிலையினையும், வரலாற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால வளர்ச்சியை அம்மையங்களுடன் இணைத்து உறுதிப்படுத்தும் தொல்லியற் சான்றுகளையும் **மிகத்தெளிவாக அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது.** அவையாவன :

அ) **கதிர்காமக் குன்றுகள்** உள்ளிட்ட இலங்கையில் தென்கிழக்குப் பிராந்தியம் ஈழத்துப் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களும் **தென்கிழக்காசிய நெல்லுற்பத்திப்பண்பாட்டுக்குரிய பெருங்கற் பண்பாட்டு வணிக மக்களும் சந்தித்த மையமாக திஸமஹரகமம், கதிர்காமக் குன்றுப்பரப்பு அமைந்து காணப்பட்டமை.** தினை, குரக்கன் பயிரிடப்பட்டது பற்றிய ஐதீகமொன்று **'வள்ளி தினைப்புனம் காத்துநின்ற'** கதைமரபாக இற்றைவரைக்கும் கதிர்காமத்தோடு இணைக்கப்பட்டு நிலைத்து நின்று வருவதற்குரிய பின்னணியும் அத்திராவிடப் **பெருங்கற்பண்பாட்டு மேல்கட்டுமானமே ஆகும்.**

ஆ) **பூநகரி தொடங்கி பொன்பரப்பி வரையான** முத்து வியாபார மார்க்கத்தினூடான, பெருங்கற்பண்பாட்டுத் தளங்களும், **ஈமக்காடும்** இணைந்த ஆதித்திராவிடநாகரின் பகைப்புலம். **மேற்காசிய, மத்தியாசிய வாணிபக்கடல் மார்க்கங்கள் ஒன்றிணையப் பெற்ற முத்து வியாபார மார்க்கங்களை ஒன்றிணைத்த வகையில் மன்னார் மாதோட்டத்துறைப் பரப்பினைப் பின்னணியாகக் கொண்டு வளர்ச்சி பெற்ற திராவிடநாகர் வம்சத்தினரின் கடல் முகப்புத்தளம். ஈழத்துப் பூதன்றேவனார் வாழ்ந்த நாகதேவன்துறைக் கிராமமும், பண்பாட்டுச் சூழலும் ஒருங்கிணைக்கப் பெற்ற ஓர் மையம் - பூநகரி, மண்ணித்தலைப்பகுதி.**

இ) **வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கு** வெளியிலுள்ள பெருங்கற்காலப் படிமங்களும், **பாண்டிய - நாகர் வாணிப மரபுத் தொடர்புகளும்** கொண்ட ஆதித்திராவிடநாகரின் வாழ்வுப் புலம். **புத்தரின்** இலங்கைக்கான மும்முறை விஜயத்தில் **இரண்டாவது வருகை** இரு **நாகதீபராஜாக்களுக்கிடையே** ஏற்பட்ட முரண்பாட்டைத் தீர்த்து வைப்பதற்காக **நாகதீபத்திற்கு** கௌதம புத்தர் வந்தார் என்ற ஐதீகம் **திராவிட நாகர் வம்சம்** கொண்டிருந்த **அரசியல் ஆதிபத்தியத்தினை** வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் காணப்பட்ட **பெருங்கற்காலப் பண்பாட்டு விழுமியங்கள்** ஊடாக காணமுடிவது. **ஆனைக்கோட்டை முத்திரை** மோதிரம், கந்தரோடையில் கிடைத்த **சானைக்கல் அம்மி** (பன்றி வடிவம்) **செப்புச்சூலம், நாகவடிவ செம்புக்காப்புக்கள், நாகமோதிரங்கள், நாகவடிவம் பொறிக்கப்பட்ட வெள்ளியினாலான அச்சுக்குத்தப்பட்ட நாணயங்கள்** முதலானவை பெருங்கற்கால நாகர் வம்சத்து **அரசியல் மைய** உருவாக்கத்தினை வெளிப்படுத்தும் சாதனங்களாகக் கொள்ளமுடிவது.

ஈ) **எள்ளன்குளமும் உடுப்பிட்டிப் பிராந்தியமும்** கொண்டிருக்கும் பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய கைத்தொழில் வளமும் நெற்பயிர்ச்செய்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபும். **எல்லாளன்குளம் என்ற பெயரே மருவி, இன்று எள்ளங்குளமாக வழக்கிலிருந்து வருவது** நோக்கத்தக்கதாயுள்ளமை. ஏராளமான **கீச்சுக்கிட்டம்** *(Iron Slag)* எள்ளங்குளத்தில் (**கொல்லன் பனையடியில்**) கிடைத்து வருவது. **இரும்பினாலான உலோகப்** பொருட்களின் உற்பத்திக்கும் **கருஞ்சூளை மட்பாண்டத்துக்கும்** உடுப்பிட்டி இற்றைவரை சிறந்த ஸ்தானமாக விளங்கிக்கொண்டிருப்பது. **வடமறவர் ஆட்சிப்புலத்தலைவன் - எல்லாளன். அனுராதபுரத்தில் 44 ஆண்டுகள் அரசாட்சி.** வடவாரியர்கோன் - **யாழ்ப்பிரமதத்தன் குறுந்தொகையிலுள்ள பாடல்கள் சிலவற்றை யாத்தவன் - வடமராட்சியிலுள்ள 'ஆரியவளவு' பிரமதத்தனின் மையம் என அடையாளம் காணல்.**

உ) **மண்டலாய்**, அம்பன், தாழையடி, நாகர்கோவில் உள்ளிட்ட வடமராட்சி - கிழக்குப் பிராந்தியத்திலுள்ள **பெருங்கற்கால நாகர்குல மரபுப் படிமங்களும், தென்கிழக்காசியத் தொடர்புகளும்.** மலேசியா - **யாவா நாகமரபுத்** தொடர்புகள், பெருங்கற்காலத்திய கணபதி வழிபாட்டு மரபு இந்தோனேசியா - யாவாவிலிருந்து வடமராட்சி கிழக்குப் பிராந்தியத்திற்குப் பரவல்.
உதாரணம் : **'மண்டலாய்' பிள்ளையார், 'துளாயிற்' பிள்ளையார், தில்லை அம்பலப்பிள்ளையார்** போன்றன மோதகப் பிள்ளையாராக *(Rice – cake)* வருகைதரல்.

மேற்படி ஈழத்திலுள்ள **பெருங்கற்கால நாகர் மரபுப்** பண்பாட்டுத் தளத்திற்குரிய **ஐந்து** தனித்துவமான பிராந்தியங்களையும் ஈழத்தமிழர் வாழ்வுப் பகைப்புலத்தினூடே முகிழ்ந்த பண்பாட்டு மையங்களாகவும், காலத்தால் முற்பட்ட ஈழத்து நாகர் வம்சத்தினரின் **அரசியல் - வாணிபக் களஞ்சியங்களாகவும்** தொல்லியற் சான்றுகளின் அடிப்படையில் அடையாளம் காணமுடிந்துள்ளது. அவ்வகையில் **ஈழநாகர் வம்சப் பண்பாட்டு வாழ்வுப் பகைப்புலத்தின்** பிராந்திய எல்லைகளையும் கால வரையறைகளையும் அடையாளம் காட்டி நிற்கும் தொல்லியற் தடயங்களை நோக்குவதன் மூலம் அப்பண்பாட்டுக்குரிய மக்களின் புராதன வாழ்விடங்களின் **"புதிய எல்லைகளை'** வரையறை செய்து கொள்ளமுடியும்.

## கதிர்காமக் குன்றுகள் உள்ளிட்ட இலங்கையின் தென்கிழக்குப் பிராந்தியம்

வடஇலங்கையில் **கந்தரோடை** என்ற பழம்பெரும் பெருங்கற் காலக் குடியிருப்பு **ஆழமாக ஆராயப்படாத** ஒரு நிலையில் இன்றும் இருப்பது போன்றே இலங்கையின் தென்கிழக்குப் பிராந்தியத்திலுள்ள திஸம'ரகாமம், கதிர்காமம் உள்ளிட்ட பெருங்கற்காலக் குடியிருப்புக்களும் **ஆழமாக** ஆராயப்படாமல் கைவிடப் பட்டுள்ளமையைக் காணலாம். இம்மையங்களில் 1884ஆம் ஆண்டில் **பாக்கர்** *(H.Parker)* என்பவர் தொல்லியல் மேலாய்வுகளை நடாத்தியிருந்தார். கதிர்காமத்தில் அவர் அகழ்வு ரீதியான பரீட்சார்த்த ஆய்வுமுறையொன்றினையும் மேற்கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வகழ்வின்போது மேற்பரப்பிலிருந்து 18ஆவது அடி ஆழப்பரப்பிலிருந்து கறுப்பு - சிவப்பு வர்ண மட்பாண்டங்களை (*BRW*) மீட்டெடுத்துள்ளார். அம்மட்பாண்டங்களுடன் வீட்டுப் பாவனைக்குரிய பல்வேறு வகைப்பட்ட பொருட்களையும் அம்மண்படையிலிருந்த மீட்டெடுத்துள்ளார். இம் மையத்திலிருந்து மீட்டெடுக்கப்பட்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களில் பிராமி வரிவடிவங்கள் வரையப்பட்டிருந்தன என்று செய்தியையும் பாக்கரே குறிப்பிட்டுள்ளார். வீட்டுப் பாவனைக்குரிய பொருட்களுடன் உற்பத்திப் பாவனைக்குரிய உலோகப் பொருட்களும் *Spear Head etc.*) பாக்கரினால் மீட்டெடுக்கப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. திஸம'ரகாமத்திற்கு சற்று அண்மித்தான திவுல்வேவ (விளாங்குளம்) என்ற இடத்தில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் மேற்கொண்ட ஆய்வின்போது அவருக்கு **வேல்சின்னம்** (*Spear Head*) போன்றவற்றுடன் **உழுகொழு** (*Plough Coulter*) உம் கிடைத்துள்ளமை பற்றி **சிரான் தெரணியாகல** குறிப்பிட்டுள்ளமையும் இங்கு நோக்கத்தக்கது.

இப்பின்னணியிலிருந்து திஸம'ரகாமம் உள்ளிட்ட கதிர்காமக் குன்றுப் பிரதேசங்கள் கிறிஸ்துவிற்கு முற்பட்ட ஐந்தாம், நான்காம் நூற்றாண்டுகளுக்கு முன்னரில் இருந்தே பெருங்கற்காலப் பயிர்ச்செய்கைக்குரிய விளைநிலமாகவும், வாணிபத்தளமாகவும் விளங்கி வந்துள்ளது என்பது தெளிவாகின்றது. 'கித்துள்கொட' விலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட **குரக்கன்** (ராக்கி) தானியத்தின் வாணிபத்தொடர்பு, உற்பத்திமுறை முதலியன திஸம'ரகாமம், கதிர்காமக் குன்றுப் பரப்பிலிருந்தே தொழிற்பட்டிருக்கவேண்டும் என்பதும் இங்கு புலனாகின்றது. **'ராக்கியை'** (குரக்கனை) உற்பத்தி செய்தவர்கள் ராக்கிஸர்கள் / ராக்ஸஸர்கள் என்று **அக்காலப் பண்பாட்டுப் பகைப்புலத்தில்** அழைக்கப்பட்டிருந்தனர் என்பதும் தெளிவாகின்றது. மீன் பிடிப்பவர்கள் 'மீனவர்' என அழைக்கப்பட்டமை போன்றே 'ராக்ஸஸர்கள்' என்று குரக்கனை உழுது பயிரிட்ட உற்பத்தியாளர்களும் தனிக்குழுவாக அழைக்கப்பட்டிருக்க முடியும். இதேபோன்றே **'நெல்'** தானியத்தை உற்பத்தி செய்தவர்கள் இப்பண்பாட்டுக் சூழலில் **'நாகர்கள்'** என அழைக்கப்பட்டிருக்கக்கூடும். கிழக்கிலங்கையில் **'போடியார்கள்'** எனக் குறிப்பிடப்படும் இன்றைய விவசாயப் பெருங்குடி மக்கள் **'நாகர்'** வம்சத்தினரே என்பதனையும் நினைவிற் கொள்ளவேண்டும்.

**போல் ஈ. பீரிஸ்** என்பவர் 1904 ஆண்டு கதிர்காமப் பரப்பில் மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வின் விளைவாக அச்சுக்குத்தப்பட்ட நாணயங்கள், பாண்டியன் பெருவழுதி நாணயங்கள், ரோம நாணயங்கள், லக்ஷ்மி நாணயங்கள் போன்றவற்றை மீட்டெடுத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மிகவும் அண்மைக் காலங்களில் சேவையர் சேயோன் என்பவர் கதிர்காமப் பரப்பில் மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வுகளின்போது கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முற்பட்டகால திராவிடப் பண்பாட்டினை உறுதிப்படுத்தக்கூடியதும் வலிமைப்படுத்தக்கூடியதுமான தொல்லியல் சான்றுகளைக் கண்டெடுத்துள்ளார். அகில இலங்கையின் நாணயவியற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்தின் தலைவராக விளங்கும் சேயோன் கதிர்காமப் பரப்பிலிருந்து சங்ககால வேப்பம்பழ நாணயங்கள், நெல்லிக்கனி நாணயங்கள், லக்ஷ்மி நாணயங்கள், கார்ணேலியன் மணி வகைகள், சங்கு வளையல்கள் போன்றவற்றைச் சேகரித்துள்ளார்.

கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முற்பட்ட காலத்தில் கதிர்காமத்தினை தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த மஜிமகாராசா வழிவந்த பத்துச் சகோதரர்களின் ஆட்சி பற்றிய தகவல்களை **பிராமிக் கல்வெட்டுக்களிலிருந்து** பரணவிதான எடுத்துக்காட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். பாண்டிய நிர்வாக முறையில் பின்பற்றப்பட்டிருந்த **'பஞ்சவர் ஆட்சி மரபு'** போன்று, கதிர்காமத்தில் **'பதின்மர் ஆட்சி மரபு'** நீடித்து நிலைத்திருந்தமை அங்கு நிலவிய திராவிடப் பண்பாட்டிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இவ்வரசர்கள் மலேசியா, யாவா ஆகிய தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து படையுதவிகளையும் பெற்றிருந்தார்கள் என்பதனையும் இங்கிருந்து பெற்றுக்கொண்ட பிராமிச் சாசனங்களில் பொறிக்கப்பட்டுள்ளது. **"ஜாவஹநாயர்"** என இடம்பெறும் ஒரு பதமானது கதிர்காம அரசிருக்கையில் மலேசியாவிலிருந்து தருவிக்கப்பட்ட **'படைத்தளபதியை'க்** குறிப்பதாக பரணவிதான கருதுகின்றார். **ஜாவா** நாகர் பண்பாட்டினுடைய **ஒரு பிரதான மையம்** என்பதும் குறிப்படத்தக்கது.

**பூர்வீக மலாயாவிலிருந்து** தருவிக்கப்பட்ட அவ்வாறான **படைத்தளபதிகள்** பெரும்பாலும் **பூர்வீக திராவிடர்களாகவே** விளங்கினர் என்பதனை **மலாயாவின் சரித்திரம்** என்ற நூலின் வாயிலாக உறுதிப்படுத்தப்படுகின்றது. இவர்களே பின்னர் துட்டகாமணி மன்னன் **மகாகமையிலிருந்து** (ரோகணத்தின் தலைநகர்) **அநுராதபுர ஆட்சியாளனாக** விளங்கிய **எல்லாளன்** மீது போர் புரிவதற்கும் உதவியை வழங்கியிருந்த தமிழ்த் தளபதிகளாக (மகாவம்சம் குறிப்பிடுவது போல்) தொழிற்பட்டிருந்தமையையும் காணமுடிகிறது. இப்போராட்டத்தின்போது துட்டகாமணி **வெள்ளி லோகத்திலான பெரியவேல்** *(Great Spear in Silver)* ஒன்றினையும் படைகளின் முன்னே எடுத்துச் சென்றிருந்தான் என மகாவம்சம் குறிப்பிடுவதிலிருந்து பெருங்கற்காலப் பண்பாட்டுச் செல்வாக்கு **ஆக்ககால அரசியற் போரில்** செலுத்தியிருந்த தாக்கத்தினையும் உணர்ந்துகொள்ள முடிகின்றது. கந்தபுராணத்தில் வரும் **சூரபத்மன்** (சூரக்குடி - ஓர் இனக்குழு பரதவர்?) என்பவனுக்கும் **முருகவேளுக்கும்** (வேளிர் குலத்தலைவன்) இடையே நிகழ்ந்த **கதிர்காமப் போரினை** ஒத்தவகையிலேயே அநுராதபுரத்தில் **துட்டகாமணிக்கும் எல்லாள மஹாராஜாவுக்கும்**மிடையே போர் நிகழந்தது என்பதனை **மகாவம்சம்** துல்லியமாக எடுத்துக்காட்டி நிற்கின்றது. பெருங்கற்காலச் சமூக - பொருளாதார விழுமியங்களை உள்ளடக்கிக் காணப்பட்ட இவ்விரு சமூக, மதப்பிரிவினரும் **'வேல்'** ஒன்றையே தமது **'சக்திமிக்க'** போர்க்கருவியாகப் பயன்படுத்தியிருந்தமையையும் காணமுடிகிறது. அவ்வகையில் கந்தபுராணக் காலக் கதை வடிவமொன்றினைப் பெருங்கற்கால மையமொன்றில் நிகழ்ந்த நிகழ்வுகளுடன் ஒப்பிட்டு ஆராயமுடிவது என்பது எதிர்கால ஆய்வாளருக்குக் கிடைக்கும் **புதியதோர் ஆய்வுக்கருவாக** அமையும் என்பதில் சந்தேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழமுடியாது. **அவ்வழியே தென்னிலங்கையில் பழந்தமிழரின் கந்தபுராணக் கலாசாரத்தின் பண்பாட்டுக் கட்டுமாணப் பணியின் புதிய எல்லைகளை அடையாளம் கண்டுகொள்ளவும் முடியும்.** ஈழத்தில் காலத்தால் முற்பட்ட பழந்தமிழ் செய்யுட்களைக் கொண்ட கல்வெட்டுப் பொறிப்புக்கள் தென்னிலங்கையினல் செறிந்து காணப்படுவதற்குரிய அடிப்படையும் இதுவேயாகும்.

## பூநகரி தொடங்கி பொன்பரப்பி வரையான முத்து வியாபார மார்க்கமும், பெருங்கற் பண்பாட்டுக் கடல் முகப்புத்தளங்களும் :

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குப் தெற்கே மண்ணித்தலை - பூநகரிப் பிராந்தியத்திலிருந்து தென்மேற்குக் கரையோரமாகப் புத்தளத்திலுள்ள பொன்பரப்பி வரையுமுள்ள தொடர்ச்சியான நிலப்பரப்பில் பெருங்கற்காலக் குடியிருப்புப் பிராந்தியங்களும், ஈமக்காடுகளும் காணப்படுவது ஆய்வுகள் மூலம் புலப்படுத்தப் பட்டுள்ளன. இங்கு குறுணிக் கற்கால மண்படையடுக்குகளிலிருந்து பெருங்கற்காலப் பண்பாட்டு வாழ்க்கைப்புலம் பரிணாமமடைந்து வளர்ச்சி பெற்றிருந்த முறைமையை அகழ்வாய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. பூநகரி - மண்ணித்தலைப் பிராந்தியத்தில் பெருமளவிலான கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள் நாணயங்கள், கார்ணேலியன் மணி வகைகள், வளையல்கள், சிறப்பாக சங்கு, கண்ணாடி வளையல்கள் போன்றன கலாநிதி ரகுபதி, கலாநிதி புஷ்பரட்ணம் ஆகிய தொல்லியல் ஆய்வாளர்களால் தொல்லியல் மேலாய்வுகளின்போது பெருமளவில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. குறுணிக் கற்கால மண்படையடுக்குகளிலிருந்து தொடர்ச்சியான வகையில் பண்பாட்டு வளர்ச்சி ஏற்பட்ட ஒரு பிராந்தியமாகக் காணப்படும் மண்ணித்தலை - பூநகரிப் பிராந்தியமானது தீபகற்ப யாழ்ப்பாணக் குடாநாட்டின் நாகரிக வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றியுள்ளது என்பதனை எவருமே மறுக்கமுடியாது. வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பரப்பிலிருந்து ஒல்லாந்தர் காலம் வரைக்கும் இடையீடின்றி, தொடர்ச்சியான வகையில் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிப நடவடிக்கைகளைத் தன்னகத்தே கையகப்படுத்தியிருந்த தனித்துவமான மையமாக மண்ணித்தலை - பூநகரிப் பிராந்தியம் காணப்பட்டிருந்தது. அச்சுக் குத்தப்பட்ட நாணயங்கள் முதல் டச்சு நாணயங்கள் வரைக்கும், சுதேச மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் தொடங்கி, வெளிநாட்டு பேரரசர்களுடைய நாணயங்கள் வரையில் பெரும் எண்ணிக்கையான நாணயங்களை கலாநிதி புஷ்பரட்ணம் இப்பரந்தமையத்திலிருந்து சேகரித்துள்ளார் என்பதனைக் காணும்போது இலங்கையின் பிரதான நிலப்பரப்பிற்கும், குடாநாட்டிற்குமிடையே கலாசார, வாணிப பரிமாற்றங்களுக்கான பின்புலமாக அப்பிராந்தியம் விளங்கி வந்தமையை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும். எவ்வாறு மத்தியதரைக் கடலினுள் கிரீட்டன் தீவானது எகிப்திய - மத்தியாசிய அறிவியல், நாகரிக, பண்பாட்டம்சங்களை உள்வாங்கி பண்டைய கிரேக்கத்திற்கு வழங்கியதோ அதனையொத்த வகையில், மண்ணித்தலை பூநகரிப் பிராந்தியமும் இத்தீவின் அரசியல், சமய - பண்பாட்டுக் கட்டுமான வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளது என்பதனைக் காணமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூநகரி என்ற பெயர்கூட பூநாகர் என்ற வம்சத்தோற்றப்பெயரிலிருந்தே உருவாகி யிருந்தமையைக் காணலாம்.**

**தொடர்ச்சியான வகையில் ஆதித்திராவிடர் வாழ்ந்துவந்த மையம் என்ற வகையிலும், சமுத்திரவியல் வழிவந்த பண்பாட்டு வாழ்வுப்புலத்தினை உருவாக்கியதன் அடிப்படையிலும் தனியோரினத்தினது பண்பாட்டெச்சங்களை கால ஒழுங்கில் தன்னகத்தே கொண்டுள்ளதென்ற வகையிலும் மண்ணித்தலை பூநகரிப் பரப்பு வரலாற்று முக்கியத்துவம் பெறுகின்றது.**

நாகர் வம்சத்தின் இருதய பூமியாகக் காணப்பட்ட இப்பிராந்தியத்திலிருந்தே ஈழத்துப் பூதன்தேவனார் **"ஈழவூரிலிருந்து"** கல்வி - புலமை செல்வாக்கு மிகுந்த பிரதிநிதியாகத் தமிழகம் சென்று **மதுரைத் தமிழ்ச் சங்கத்தினை** அலங்கரித்திருந்தார் என்பதனை முதன்முதலாக கலாநிதி புஷ்பரட்ணம் எடுத்துக்காட்டியுள்ளமை மீண்டும் இங்கு நினைவுகூரத்தக்கது.

மத்தியகாலத்தில் பூநகரியிலிருந்து மலர்களும் இலுப்பை எண்ணெயும் சேகரிக்கப்பட்டு **இலுப்பைக் கடவையூடாக** மாந்தைத் துறைமுகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் அங்கிருந்து **தஞ்சாவூரில் உள்ள பெருங்கோயிலுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட** நிகழ்வுகளையும் நாம் வரலாற்றில் காண்கின்றோம். அவ்வகையில் மாந்தைத் துறைமுகச் சூழலும் பூநகரி - மண்ணித்தலைப் பிராந்தியங்களுடன் இணைந்த வகையில் பழந்தமிழர் மரபினை **நாகர் இனத்துடன்** இணைத்த வகையில் வளர்ச்சிபெற்றுச் சென்றிருந்தமையைக் காணமுடிகிறது.

துறையும், தோணியும், பரதவர் குலமும், மீன் செல்வமும் இணைந்த வகையில் பெருங்கற்காலப் பண்பாட்டு வாழ்வுமுறைகளிலிருந்து முகிழ்ந்த பழந்தமிழர் பாரம்பரியத்தினை மிகத் துல்லியமாகக் காட்டி நிற்கின்ற இப்பரப்பே தமிழ்ப்பிராமி வரிவடிவங்களை யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் கந்தரோடைக்கும், வெளியே தமிழகத்திற்கும், செங்கடல் மார்க்கத்திலமைந்த வர்த்தக மையங்களுக்கும் வழங்கியிருந்த நிகழ்வினை எதிர்கால அகழ்வாய்வுகள் எடுத்துக்காட்டும் என்பதில் சந்தேகம் எழமுடியாது. கந்தரோடையிலுள்ள மையமொன்றிலிருந்து (உச்சாப்பனை) அகழப்பட்ட குழியில் காணப்பட்ட என்பினாலான கத்தி போன்ற கருவியில் தீட்டப்பட்டிருந்த எருத்தின் உருவமானது மத்தியதரைக் கடலில் அமைந்துள்ள கிரீட்டன் தீவிலுள்ள நோஸஸ் (*Knossos*) என்ற நகரில் வரையப்பட்ட எருத்தின் தோற்றத்தினை ஒத்துள்ளது. எனவே மண்ணித்தலையுள்ளிட்ட பூநகரிப் பிராந்தியத்தின் வெளிநாட்டுத் தொடர்புகள் கி.மு. 1500 ஆண்டுகளிலிருந்தே ஆரம்பித்துவிட்டிருந்தமையை உறுதிப்படுத்திக்கொள்ள முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய காலத்தால் முற்பட்ட தொடர்புகளை பூநகரியிலிருந்து தெற்குக் கரையோரமாக புத்தளத்திலுள்ள பொன்பரப்பி வரைக்கும் உள்ள பெருங்கற்கால குடியிருப்புக்களுடன் ஏற்படுத்தித் தந்த வாணிபச் சரக்கு என்னவென்றால் அது மன்னாரில் விளைந்த **கடல் முத்தேயாகும்.** மன்னாரில் உள்ள அரிப்பு என்ற துறையே முத்துக் குளித்தலுக்கு வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டு இற்றைவரைக்கும் முக்கியத்துவம் பெற்ற மையமாக இருந்துவருவதனைக் காணலாம். சிந்துவெளி நாகரிக மக்கள் மேற்கொண்ட வாணிப நடவடிக்கைகளின் ஓரங்கமாக மாந்தைத்துறைமுகப் பரப்பில் இருந்து முத்து ஏற்றுமதி செய்யப்பட்டது. தென்மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் காணப்படும் புராதன **முத்துக்கவசம்** மன்னாரிலிருந்து கொண்டு செல்லப்பட்ட முத்துக்களாலேயே உருவாக்கப்பட்டது என்பதும் வெள்ளிடைமலை. தமிழகத்திலுள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள **ஆவரம்பிட்டி** என்ற மையத்திலிருந்து பரமசிவம் என்பவரால் அகழ்ந்தெடுக்கப்பட்ட ஏராளமான மணிக்குவியல்களுடன் கடல் முத்தும் காணப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. இத்தகைய பின்னணியைக்கொண்டு நோக்கும்பொழுது மண்ணித்தலை - பூநகரித் தொடர்பரப்பிலிருந்து புத்தளத்திலுள்ள பொன்பரப்பி வரைக்குமான கரையோரநாகர் குடியிருப்புக்கள் புராதன சமுத்திரவியல் பண்பாட்டினை உள்வாங்கிய நிலையில் நாகரிகக் கட்டுமானத்தினை உருவாக்கியிருந்தன என்பதனை உணர முடிகிறது. அத்தகைய ஒரு தனித்துவமான **பூர்வீக திராவிடநாகரின்** ஈமக்காட்டுத் தொகுதியாக இன்று காணப்படுவது **04 ஏக்கர் பரப்பிலுள்ள** புத்தளத்திலுள்ள **பொன்பரப்பி என்ற பரந்த தாழிக்காடாகும்.**

புத்தளம் - மன்னார் பிரதான வீதியின் 21வது மைல் எல்லையில் கடற்கரையிலிருந்து கிழக்காக 4வது மைலில் பொன்பரப்பி அல்லது பொம்பரிப்பு என்ற பெருங்கற்காலத் தாழிக்காடு அமைந்துள்ளது. கடலிலிருந்து மிகவும் சுலபமாக தோணி மூலம் இப்பரப்பினைச் சென்றடைய முடியும் என **விமலாபெக்லி என்ற பென்சில்வேனிய பல்கலைக்கழக ஆய்வாளர்** குறிப்பிட்டிருப்பது இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. இங்கு ஈழத்தாழிகள் புதைத்து வைக்கப்பட்டுள்ள நிலப்பரப்பு சுமார் நான்கு ஏக்கராகும். இந்த நான்கு ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள 8000 ஈமத்தாழிகளுக்குள்ளும் சுமார் 10,000 - 12,000 மக்களைப் புதைத்து வைத்துள்ளனர் பெருங்கற்கால மாந்தர் என விமலா பெக்ஸி அட்டவணைப்படுத்துவது புராதன மக்கட்பரப்பியற் பண்பாட்டடிப்படையிலான முக்கியத்துவத்தினைப் பெறுகின்றது. இத்தாழிக்காட்டிற்குரிய மக்கள் வசிப்பிடங்கள் இம் மையத்திலிருந்து சற்று கிழக்குத் திசையில் அமைந்து காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. வள்ளி / வல்லி விகாரை என்றதொரு வழிபாட்டு மையம் உருவேல (லி?) என்ற அப்பெருங்கற்கால மக்களின் வாழ்விடத்தில் கி.பி.முதலாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டிருந்த செய்தியை **மகாவம்சம்** தருவதும் இங்கு நோக்கத்தக்கது. **(வள்ளி அல்லது வல்லி என்ற பெயரில் பௌத்த வழிபாட்டு மையம் உருவேலி அல்லது உருவேல என்ற திராவிடக் குடியிருப்பில் அமைந்திருந்த தன்மையைப் பார்க்கும்போது, 18ஆம் 19ஆம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூற்றாண்டுகளுக்கு பின்னரிலிருந்தே புத்தளம், நீர்கொழும்பு வாழ் தமிழ் மக்கள் தமது பெயரையும் மதத்தினையும் மொழியையும் படிப்படியாக திராவிட மரபிலிருந்து நீக்கிக்கொண்ட நிகழ்வுடன் ஒப்பிட்டு நோக்கமுடிகிறது).**

1920ஆம் ஆண்டிலிருந்தே பொன்பரப்பு மையத்தில் ஆய்வுகள் தொடங்கப் பெற்றிருந்தன. புறோகியர் (Brohier – 1929) என்பவரே பொன்பரப்பில் தொல்லியல் மேலாய்வுகளை முதன்முதலாக மேற்கொண்டவராவார். திஸமஹாரகாமத்தில் பாக்கர் (Parker) கண்டுபிடித்தமையையொத்து, இங்கும் புறோகியர் பெருமளவிலான சட்டி, உண்கலன்கள், (Plates/Bowels) உட்கவிந்த மட்கலசங்கள் போன்றனவற்றைக் கண்டுபிடித்தார். மேலும் சுடுமண் வளையக் கிணறு, சங்குக்காப்புகள், மிருகங்களின் எலும்புகள் போன்றனவற்றை கண்டெடுத்தார். விமலா பெக்லி 1981இல் இங்கு அகழ்வு செய்து பெருமளவிலான தாழிகளை வெளிக்கொணர்ந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. சிரான் தெரணியாகல என்பவரும் இங்கு அகழ்வுகளை நடாத்தி, பெற்றுக்கொண்ட மட்பாண்ட வகைகளை அநுராதபுரத்தில் **கெடிகே** என்ற மையத்திலிருந்து பெற்றுக்கொள்ளப் பட்டனவற்றுடன் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். **சிரான் தெரணியாகல தனது மேலாய்வின்போது பொம்பரிப்பில் சங்குவளையல் செய்த தொழிற்சாலை ஒன்றினையும் கண்டுகொண்டமை குறிப்பிடத்தக்கது.**

தமிழ்நாட்டில் தாமிரபரணியாற்றின் முகத்துவாரத்தில் அமைந்து காணப்பட்ட புகழ்பெற்ற **ஆதிச்சநல்லூர்** இடுகாட்டிற்கு சமாந்தரமாகவே இலங்கையில் புத்தளத்தில் **பொன்பரிப்பு இடுகாடு** அமைந்து காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் இவ்விரு பெருங்கற்காலப் பண்பாட்டு குடிமக்கள் தமக்கிடையே **கடற்கலம் செலுத்தி,** பண்பாட்டு உறவுகளை பரிமாற்றம் செய்து கொண்டிருப்பர் என்பதில் சந்தேகம் எழமுடியாது. ஆதிச்ச நல்லூரில் கிடைத்த செம்பினாலான தாய்த்தெய்வத்தின் காலவரையறையை தொல்லியலாளர் கி.மு. 8ஆம் நூற்றாண்டு என வகுத்துள்ளனர். அக்கால வரையறையையே புத்தளத்திலுள்ள பொன்பரிப்புக்குரிய கால எல்லையாக இலங்கைத் தொல்லியலாளர்களும் கொள்வதனைக் காணலாம். எனவே பூநகரி - மண்ணித்தலை பண்பாட்டுகளமானது இலங்கையின் மேற்கு கரையோரமாக நீண்டு சென்று புத்தளத்திலுள்ள பொன்பரிப்பில் சங்கமமாவதனைக் காண்கின்றோம். இத்தகையவொரு ஆதித்திராவிடநாகரது பண்பாட்டுப் பகைப்புலம் கி.பி. 16ஆம் நூற்றாண்டு வரைக்கும் நல்லூர் ஆரியச்சக்கரவர்த்திகளின் மேலாண்மையின் கீழ் முத்து வியாபார வர்த்தக ஏகபோகத்தினை அனுபவித்துவந்தது, பின்னர் அத்தனித்துவத்தினை அந்நியர் வருகையைத் தொடர்ந்து (1616இலிருந்து) இழக்க வேண்டியிருந்தது என்பதனையும் வரலாற்றுக்காலச் சம்பவங்கள் தெளிவுபடுத்தியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருவழுதியாற்றுப் பள்ளத்தாக்கில் பெருங்கற்காலப் படிமங்கள் :

தென்னாசிய நாகரிக வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியிருந்த சம்பவமானது சிந்து மாகாணத்திலுள்ள லார்க்கான மாவட்டத்தில் **பௌத்த ஸ்தூபி** ஒன்றின் **சிதலங்களை** அகழ்ந்து வெளிப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொண்டபோது ஏற்பட்டதாகும்.. அதாவது சிந்துநதி நாகரிகக் கண்டுபிடிப்பிற்கு அடிப்படையாக விளங்கிய கட்டிடச் சிதைவாக விளங்கியதே அப்பௌத்த ஸ்தூபியாக அமைந்தது. இதேபோன்று கந்தரோடையில் மேற்பரப்பில் காணப்பட்ட பௌத்த கலாசார அழிபாடுகளின் எச்சங்களே **வழுக்கையாற்றுப் பரப்பில் உள்ள வண்டல்மண் படிவுகளுக்குள் மறைந்திருந்த பெருங்கற்காலத் திராவிடக் கலாசாரத்தை வெளிக்கொணர உதவியிருந்ததென்றால் அதில் சந்தேகம் எழமுடியாது.** போல் ஈ பீரிஸ் என்பவரே முதன்முதலாக வழுக்கையாற்றுப் பரப்பிலுள்ள தொல்லியல் எச்சங்களை நாடித்தேடி தனது ஆய்வு முயற்சியை கந்தரோடை தொடர்பாக ஆரம்பித்து வைத்தவராகக் காணப்படுகின்றார். **1971ஆம் ஆண்டில் பென்சில்வேனியப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விமலா பெக்லி 'விளாமரத்தடியில்' ஒரு பரீட்சார்த்த அகழ்வுக்குழி ஒன்றினைத் தோண்டி, விஞ்ஞானபூர்வமாக முதன்முதலில் பெருங்கற்கால மண்படையடுக்குகளை இனம்கண்டு கொண்டார். அவர் அவ்விளாமரத்தடிக் குழியிலிருந்தே செம்பினாலான முச்சூலமொன்றையும் அகழ்ந்தெடுத்தமை குறிப்பிடத்தக்கது.**

கலாநிதி ரகுபதியின் தொல்லியல் மேலாய்வே கந்தரோடையில் காணப்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டின் சிறப்புக்களை இனங்காண உதவியது எனலாம். வழுக்கியாற்றுப் பள்ளத்தாக்கின் மீதான தொல்லியல் மேலாய்வின்போது ஆனைக்கோட்டையிலுள்ள **கரையாம்பிட்டி ஈடுகாட்டு மையம்** அடையாளம் காணப்பட்டு அகழ்வாய்வுக்குட்படுத்தப்பட்டது. **(Rescue Excavation)** 1980ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இவ்வகழ்வாய்வினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினர் கா.இந்திரபாலாவின் தலைமையில் மேற்கொண்டிருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் விளைவாக பெருங்கற்கால மண்படையடுக்குகளிலிருந்து இரு மனித எலும்புக்கூடுகளும், உணவெச்சங்களும், பண்பாட்டுச் சான்றுகளும் சேகரிக்கப்பட்டன. அவற்றுள் ஓர் எலும்புக்கூட்டின் தலைப்பாகத்திற்கு அண்மித்த வகையில் கறுப்பு-சிவப்பு மண்பாண்டச் சட்டி ஒன்றுக்குள் முத்திரை மோதிரம் ஒன்று வைக்கப்பட்டிருந்தமையை அடையாளம் காணமுடிந்தது. ஆண் எலும்புக்கூட்டுக்குரிய தலைப்பாகத்திலேயே இச் செம்பினாலான முத்திரை மோதிரம் காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது அதேபோன்று பெண் எலும்புக்கூட்டுக்குரிய தலைப்பாகத்திலும் ஏதாவது தடயங்கள் இருந்திருக்க வேண்டும். ஆய்வின்போது அத்தடயத்தினை மீட்பதற்கு எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. **(பிற்காலத்தில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இக்கட்டுரையாசிரியர் அத்தடயத்தினை மீட்பதற்கு பல தடவைகளில் முயற்சித்திருந்தும் அது கைகூடவில்லை).**

ஆனைக்கோட்டையில் மீட்டெடுக்கப்பட்ட செம்பினாலான முத்திரையில் காணப்பட்ட **ஈரின வரிவடிவம்** தொடர்பாக கா.இந்திரபாலா, பொ.இரகுபதி மைசூர் கல்வெட்டியல் நிபுணர் ரமேஷ் என்போர் பலதரப்பட்ட கருத்துக்களை வெளியிட்டிருந்தபோதிலும், பொதுவாக அம்முத்திரையிலுள்ள வாசகத்தினை **தமிழ்ப்பிராமி ஒலியன்களின் அடிப்படையில் வரும் "கோவேதம்"** என்பதனை ஏற்றுள்ளனர். அவ்வகையில் இலங்கையின் பெருங்கற்காலப் பண்பாட்டு மண்படையடுக்குகளில் இருந்து கிடைத்த **முதலாவது தமிழ்ப் பிராமி வாசகம்** இதுவென்று குறிப்பிடமுடியும். அத்தகையவொரு சிறப்பினை வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கும் அதனோடு இணைந்திருந்த பெருங்கற்காலக் குடியிருப்புக்களும் பெற்றிருந்தன. கந்தரோடை **அக்கோவேதம்** என்ற அரச பதத்திற்குரிய பின்புலமாக விளங்கி வந்திருந்தது என்பதிலும் எவ்வித ஐயமும் எழமுடியாது. ஏனெனில் மகாவம்சம் **நாகதீபத்தில் இருநாக அரசர்கள் தத்தமது அரசிறமையை நிர்ணயம் செய்வதற்காக போரிட்டிருந்தனர்** என்ற செய்தியையும் தருவதிலிருந்து அதனை உறுதிசெய்து கொள்ளமுடிகிறது.

வழுக்கியாற்றுப் பள்ளத்தாக்கில் மிகவும் அண்மைக் காலத்தில் எமக்குக் கிடைத்த தொல்லியற் கருவூலமாக **சாணைக்கல் அம்மியும் குழவியும்**, திராவிடப் பண்பாட்டு ரீதியாக வரலாற்று முக்கியத்துவம் பெற்றதாகக் காணப்படுகின்றது. அதாவது பெருங்கற்கால மிருக வடிவங்களுள் ஒன்றான **பன்றியின்** உருவவியலை அடிப்படையாகக் கொண்ட **இச்சாணைக்கல் அம்மியானது** நான்கு கால்களைக் கொண்டும் ஒரு விளிம்பில் வரைபு ஒன்றினையும் கொண்டும் **முச்சூலக் குறியீடு** ஒன்றினைக்கொண்டும் காணப்படுவது ஆதித்திராவிடப் பண்பாட்டின் அடிப்படை மூலத்தினை எமக்குக் கோடிட்டுக் காட்டுகின்றது. சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகமொன்றில் பயிலப்பட்ட வரைபு முறையொன்று, மிக நீண்ட பிரதேசங்களையும், காலத்தினையும் கடந்து வந்து வழுக்கியாற்றுப் பள்ளத்தாக்கிலுள்ள கந்தரோடையில் உள்ள **"கற்பொக்கணை"** என்ற மையத்தில் புதைந்திருந்த சாணைக்கல் அம்மியில் பதியப்பட்டிருந்தமையே ஆதித்திராவிட பண்பாட்டு மூலமொன்றின் சிறந்த வெளிப்பாடாக அமைந்தது எனலாம். நிலைக்குத்தாக நோக்கும்போது **படகு ஒன்று பாய்மரத்துடன்** காணப்படும் தோற்றத்தினையும், பக்கவாட்டாக நோக்கும்போது **மீன்தலை** ஒன்றின் தோற்றத்தினையும் கொண்டு காணப்படும் இவ்வரைபானது சிந்துவெளி முத்திரைகளில் பெருமளவுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளவையாகக் காணப்படுகிறது.

வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் கந்தரோடை என்ற மையமானது ஆற்றின் இரு புறங்களிலும் சமத்துவமான முறையில் கட்டிட, மற்றும் பண்பாட்டு நிறுவன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகுகளைக் கொண்டு வளர்ச்சி பெற்றிருந்தமையை தொல்லியல் மேலாய்வுகளின் போது அவதானிக்கமுடிந்தது. **ரோமானிய வாணிபக்கிடங்கு** ஒன்று வழுக்கை யாற்றுக்கும், தற்போதைய உடுவில் குளத்திற்கும் இடையே காணப்பட்டிருந்தது என்பதற்கான சான்றுகள் அண்மையில் கிடைத்துள்ளன. புராதன **தோணித்துறை** ஒன்றினை **"திரும்புதுறை"** என்ற பரப்பு கொண்டிருந்தது. இப்பிராந்தியம் தற்போதைய உடுவில் குளத்தின் ஒருமுனையைக் குறிப்பிட்டு நின்றதெனலாம். **புதைந்துபோன மரத்தோணியின்** பல பாகங்கள் இங்கிருந்து மீட்கப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

**உரோம வியாபாரிகளினுடைய நாணயங்கள்** பெருமளவிற்கு வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கிற்குக் கிழக்குப் புறமாகவே சிதறிக் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இக்கட்டுரையாசிரியருக்கு **ரோமத்தங்க நாணயம்** உட்பட பல ரோம நாணயங்கள் தமிழ்க் கந்தையா வித்தியாசாலைக்கு அருகில் உள்ள புராதன காணியின் ஆலயச் சுற்றாடலில் கிடைத்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ***(இப்பரப்பானது சுதேச வைத்திய பாரம்பரியத் தளமாக மிக நீண்ட காலமாக விளங்கி வந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது)***

வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கிற்கு மேற்குப்புறமாக மாசியப்பிட்டி பொதுச் சந்தைக்கு அருகாமையில் மிகப் புராதனமான **சிவன்கோயில்** ஒன்றின் அழிபாடுகள் காணப்படுகின்றன. ***(இங்கே ரோம வாணிபக்கிடங்கொன்று நிலத்தினுள் புதைந்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது)*** அருகே அங்கண்ணம்மைக் கடவை (அங்கணாவைக்கடவை) கண்ணகியம்மன் ஆலயம் அமைந்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### எள்ளங்குளமும் (எல்லாளன் குளமும்) உடுப்பிட்டிப் பிராந்தியமும்

இதுவரையில் ஆராயப்படாத தனித்துவமான ஒரு பெருங்கற்காலப் பண்பாட்டுத் தளமாக விளங்கிவருவதே எள்ளங்குளம் என அழைக்கப்படும் **எல்லாளன் குளமும்** அதனைச் சேர்ந்த **கொல்லன் பனையடிக் கிராமமும்**, அதனோடு இணைந்த **கருஞ்சூளை மட்பாண்ட உற்பத்தித் தொழில் மையமுமாக** விளங்குவதைக் காணலாம். எள்ளங்குளமானது உடுப்பிட்டி - வல்வை வீதிக்கும் பொலிகண்டி - நவிண்டில் வீதிக்கும் இடைப்பட்ட பரப்பில் அமைந்துள்ளது. **ராஜாத்திவெட்டை** என அழைக்கப்படும் புராதன மையமொன்றும் எள்ளங்குளத்திற்கு அருகில் **கொல்லன் பனையடி** கிராமத்தினையடுத்து அமைந்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது. எள்ளங்குளம் என்ற பெயர் குளத்துக்கு உரியதாக நின்று பின்னர் **இடுகாட்டுப் பெயராகி** பின்னர் இக்கிராமத்துப் பெயராகவும் வளர்ச்சி அடைந்தமையைக் காண்கின்றோம். புராதன சமாதி மையங்களைத் தன்னகத்தே கொண்ட **எள்ளங்குளக் கிராமத்தில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புராதன தாழி ஒன்றும், கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்களும், புராதன கீச்சுக்கிட்டங்களும் கிடைத்துள்ளமை அதன் பூர்வீகத் தன்மையை ருசுப்படுத்தும் சான்றுகளாகும். நாகர் மரபொன்று எள்ளங்குளக்கிராமத்தினுள் தோற்றம்பெற்று வளர்ச்சி பெற்றிருந்தமையை அச்சான்றுகள் உறுதிப்படுத்தியுள்ளன.**

புராதன 'டச்சுறோட்' ஒன்றினால் பொலிகண்டிக் கடற்கரையையும் **வல்லை - சூரியவெளி** நெற்பரப்பினையும் இணைத்துள்ள இக்கிராமமானது அநுராதபுரத்தில் கி.முற்பட்ட சகாப்தத்தில் 44 வருடங்கள் ஆட்சி புரிந்த எல்லாளன் என்ற மன்னனின் **சொந்தப் பிராந்தியம்** என்று குறிப்பிடுவதில் தவறேதும் இருக்கமுடியாது. வடமறவர்க்குத் தலைவனான எல்லாளனின் அரசவம்சமொன்று உடுப்பிட்டியை (ராஜாத்தி வெட்டையை) மையப்படுத்தி வாழ்ந்திருந்தது என்பதனை, பிற்பட்ட காலம் வரைக்கும் தொடர்ந்து வந்த "உடுப்பிட்டி தனக்காரக் குடும்பக் கட்டுமானம்" எமக்குச் சிறப்பான சான்றாக எடுத்துக் காட்டுகின்றது. சூரியவெளி வயற்பரப்பினை (வல்லை வயற்பரப்பினை) 'முதுசொமாகக் கொண்டு' வளாச்சியுற்ற அத்தனக்காரக் குடும்ப அங்கத்தினருடைய நாமாவழி இற்றைக்கும் **'சூரியர்'** என்ற அடைமொழி கொண்டு வளர்ந்து வருவதனையும் காண்கின்றோம். இந்த உடுப்பிட்டி மணியகாரர் தலைமுறையின் முன்னோடிகளே **நாகர்வம்சத்தொடர்பான ராஜவம்சத்திற்குரியவர்கள்** என்பதனையும், **அவ்வம்சம் எல்லாளன் மஹாராஜாவின் வம்சமே என்பதனையும் உறுதிப்படுத்துவதற்கு இன்னும் அதிக நாட்கள் எடுக்காது என்பதனையும் நாம் உணரவேண்டும்.**

பெருங்கற்காலப் பண்பாட்டின் தொழிற் தேர்ச்சியாக அமைந்த இரும்பு உலோகத் தொழில் வளமானது உடுப்பிட்டியில் தனித்துவமான வகையில் செல்வாக்குப் பெற்றுவருவதனைக் காண்கின்றோம். புராதன இரும்பு உலோகக் கைத்தொழிலுக்கான மிகப் பழமையான மண்படைகளினூடான (கொல்லன் பனையடியில்) **கீச்சுக்கிட்டங்கள்** அதிகளவில் இக்கட்டுரையாசிரியரால் சேகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தொழிற் தேர்ச்சியானது இற்றை வரைக்கும் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வந்துள்ளதோடு. கூட்டுறவு முறைக்குள் அத்தொழில் வளம் கையகப்படுத்தப்பட்டு நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய, வருவாயை ஈட்டித்தரும் கைத்தொழிலாகவும் மாற்றம் பெற்றுள்ளது. **அவ்வழியே வடமராட்சி வேளாண்சமூகத்தினருக்குத் தேவையாக இருக்கும் சீவுகத்திகள், வெட்டுக்கத்திகள், சத்தகக்கத்திகள், கொக்கைச் சத்தகக்கத்திகள், அரிவாள், உழவார அலகுகள், மீன்வெட்டுக்கத்திகள், பாளைக்கத்திகள், பொம்புப்பிடிக் கத்திகள், குத்தூசி வகைகள், மண்வெட்டி அலகுகள், பிக்கான், கொந்தாலி, அலவாங்கு** வகைகள் என்பன போன்ற நானாவித இரும்பினாலான உலோகப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்கூடமாக மாற்றமடைந்து, வளர்ச்சி கண்டிருப்பதனைக் காணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்கற்காலப் பண்பாட்டுத் தளத்திலிருந்து டச்சுக்காரர் பண்பாட்டுத்தளம் வரைக்கும் தொடர்ச்சியான வகையில் பண்பாட்டுப் படிமங்களைத் தன்னகத்தே உள்வாங்கிய ஒரு பிராந்தியமாக உப்பாறு - வல்லை - சூரியவெளியிலிருந்து நேர் வடக்காக இமையாணன் உடுப்பிட்டியூடாக பொலிகண்டி - கங்கைகொண்டான் கிராமம் வரைக்கும் உள்ள பரப்பு விளங்குகின்றது என்பதனை இக்கட்டுரையாசிரியரின் தொல்லியல் மேலாய்வுகளின் விளைவாக உறுதிப்படுத்திக்கொள்ளமுடிந்தது. தனித்துவமான பண்பாட்டுப் படைகளை இனங்காட்டத்தக்க வகையிலான மட்பாண்டங்களை இந்தப்பரப்பில் சேகரிக்கவும் முடிந்தது. எள்ளங்குளத்துடன் தொடர்பு பட்ட தென்புலமாக உள்ள **'குளங்கரை' என்னும் கிராமத்து** உற்பத்தி, வாழ்க்கை, பண்பாட்டு நடைமுறைகள் யாவும் பெருங்கற்கால மக்களின் பழக்கவழக்கங்களையே ஒத்துள்ளது. **"வெள்ளெலிபிடித்தல்" "உடும்பு பிடித்தல்", முயல் பிடித்தல்,** போன்ற பழக்க வழக்கங்கள் இற்றைவரைக்கும் **குளங்கரைக் கிராமத்தில்** நிலவிவருவதனையும் காணமுடிகிறது. எனவே வடமராட்சிப் பரப்பில் எள்ளங்குளம் -உடுப்பிட்டிப் பிராந்தியமானது இன்னும் அங்கு பெருற்கற்கால கிராமிய பண்பாட்டு விழுமியங்கள் முற்றிலும் மறைந்துவிடாத ஒரு நிலையில், ஆதித்திராவிட விவசாய வேளாண்மக்களின் குடியிருப்பாகத் திகழ்ந்துவருவதை இற்றைவரைக்கும் காணமுடிகிறது.

## அம்பன், குடத்தனை, நாகர்கோயில் உள்ளிட்ட வடமராட்சிக் கிழக்குப் பிராந்தியமும் ஆதித் திராவிடநாகர் குடியிருப்புக்களும்

இற்றைவரைக்கும் **"நாகர்பூமி"** எனத் தம் வாழ்வுப்புலத்தினை அழைத்துவரும் வடமராட்சி கிழக்குப் பிராந்திய மக்கள் குடாநாட்டின் எஞ்சிய பரப்பில் வாழும் மக்கட் தொகுதியிலிருந்து தம்மை **தனித்துவப்படுத்திய** வகையில் வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொண்டுவருவதனைக் காணலாம். மிகவும் இறுக்கமான பாரம்பரியக் கொள்கைகளை தமது வாழ்வுப்புலத்தில் கடைப்பிடித்து வருவதோடு மட்டுமல்லாது, **தமது கலாசார வெளிப்பாடுகளைக்கூட மாற்றுவதற்கு முனையாது தமது ஜீவனோபாயத்தினை நடாத்திவரும் வடமராட்சி கிழக்குப் பிராந்திய மக்களே பெருங்கற்காலப் பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படையாகத் தொடர்ந்து கடைப்பிடித்து வருபவர்களாகக் காணப்படுகின்றனர்.** அவ்வாறான ஒரு நிலைக்கு இப்பிராந்தியத்தின் இயற்கையமைப்பு, மண்வளம், நன்னீர்வளம், கடல்வளம், தென்கிழக்காசிய வாணிபக்கடல் வழிமார்க்கங்களை தழுவியநிலை போன்ற இன்னோரன்ன காரணிகளே வழிவகுத்து நின்றன எனலாம்.

அண்மைக் காலங்களில் நாகர்கோயிற் பரப்பிலுள்ள **கருமன்பிட்டிப் பரப்பிலிருந்தும் கௌத்தன் துறைமுகப்** பரப்பிலிருந்தும் மீட்டெடுக்கப்பட்ட பெருங்கற்கால மட்கலசங்களும், கறுப்பு-சிவப்பு மட்பாண்ட ஓடுகளும், அச்சுக்குத்தப்பட்ட நாணயங்களும், ஓலை ஏடுகளும், புராதன மட்பாண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதைவுகளும் மண்ணினாலும் செம்பினாலான புராதன அகல் விளக்குகளும், இத்தகைய ஒரு தொன்மைவாய்ந்த பிராந்தியத்தின் பண்பாட்டுப் படிமங்களை தெளிவாக வெளிப்படுத்துவனவாக உள்ளன. கருமன்பிட்டிப் பரப்பிலிருந்து ஆசிரியர் கனகராசாவினால் சேகரிக்கப்பட்ட பல கெண்டிமுனையுள்ள (ஏழுமுனைகள்) பெருங்கற்கால மட்கலசம் ஒன்று மூடியுடன் கிடைத்திருப்பது மிக முக்கியத்துவம் வாய்ந்த தொல்லியல் சான்றாகவுள்ளது. இப்பல கெண்டிமுனை உள்ள கலசமானது *(Multo – Spouted Vessal)* பெருங்கற்காலச் சவஅடக்கமுறையின் சடங்காசார முறைகளுக்காக, சிறப்பாக தூபமிடுவதற்கான ஒரு கலசமாக பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறான கலசங்களை சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகப் பரப்பில் காண முடிந்ததையும் இங்கு நினைவுகூரத்தக்கது. அங்கு பல கண்களையுடைய *(Perforeted Vessals)* மட்கலசங்களின் பாவனையானது தூபவழிபாட்டு முறை இருந்தமையை உறுதிப்படுத்தி நிற்கின்றது. அவ்வாறான ஒரு வழிபாட்டுமுறை நாகர்கோயிற் பரப்பில் வாழ்ந்த பெருங்கற் பண்பாட்டு மக்களால் பின்பற்றப்பட்டிருந்தது என்பதனைக் காணும்போது வடமராட்சி கிழக்குப் பிராந்தியம் தனித்துவமான பண்பாட்டுப் பகைப்புலத்தினைக் கொண்டு அமைந்தமையை உறுதிப்படுத்திக்கொள்ள முடிகிறது.

**அம்பன், குடத்தனை, குடாரப்பு** போன்ற கிராமக் குடியிருப்புகள் தென்கிழக்காசிய வாணிபத் தொடர்புகளினூடே உள்வாங்கிய பண்பாட்டு மூலங்களைத் தம்மகத்தே கொண்டு விளங்குகின்றன. சிறப்பாக **அம்பன்** என்ற கிராமம் போர்த்துக்கீசரது பொருளாதார பண்பாட்டு நடவடிக்கைகளுக்குட்பட்ட வகையில் கி.பி. 17ஆம் நூற்றாண்டில் மலேசியாவில் உள்ள **அம்பன்** என்ற குடியேற்றப் பிரதேசத்துடன் இணைப்பு நடவடிக்கைகள் பலவற்றுடன் தொடர்புபடுத்தப் பட்டிருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. போர்த்துக்கேய - ஒல்லாந்த நாணயங்கள் ஏராளமாக இக்கிராமத்தில் கிடைப்பதும் நோக்கத்தக்கது. இக்கிராமத்திலுள்ள மாட்டு வண்டில்களுக்கெல்லாம் போர்த்துக்கேய - ஒல்லாந்த நாணயங்களைப் பயன்படுத்தி அலங்கார வேலைகளை ஏற்படுத்தியுள்ளமையை இன்றும் காணலாம். இவ்வாறான பண்பாட்டு வெளிப்பாட்டுக்குரிய சிறப்பான காரணி தென்கிழக்காசிய நாடுகளுடன் இப்பிராந்தியம் கொண்டிருந்த வாணிப பண்பாட்டுத் தொடர்புகளேயாகும். வரலாற்றுப் புகழ்பெற்ற நாகர்கோயிலில் வருடாவருடம் கொண்டாடப்படும் கப்பற்திருவிழாவும் இப்பண்பாட்டு பரிமாற்றத்தினையே வெளிப்படுத்தி நிற்கின்றதெனலாம்.

நாகர்கோயிலிலிருந்து வடக்கேயுள்ள **கெளத்தன்துறையானது** பலதரப்பட்ட தொல்லியல் மூலங்களை வெளிப்படுத்தியுள்ள ஒரு மையம் என்பதும் குறிப்பிடத்தக்கது. மிகவும் அண்மைக்காலத்தில் அத்துறைப்பரப்பில் கிணறு ஒன்றினை அமைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டபோது அங்கு சோழர்காலப் பரப்பிற்குரிய புராதன கிணறு ஒன்று கிணறு தோண்டும்போது கண்டுபிடிக்கப் பட்டது. கிணற்றுக்குள் வந்த அந்த கிணறு **சுட்ட செங்கட்டிகளினால்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது (வல்லிபுரத்திற்கண்மையில் **ஆனைவிழுந்தான் சந்திக்கு அண்மித்ததாக கிழக்காக உள்ள மணற்பரப்பில் புராதன கிணறு ஒன்றினது சுடுமண் வளையங்களை** இக்கட்டுரையாசிரியர் கண்டுபிடித்திருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது) எனவே பெருங்கற்காலப் பரப்பில் இங்கு வாழ்ந்த வேளாண் சமூகத்தினர் தமது நெற்பயிர்ச்செய்கைத் தொழிலுக்கு தேவையான நீர்த்தேவையை **கொட்டுக்கிணறுகள் வாயிலாகவே** பெற்று பூர்த்தி செய்திருந்தனர் என்பதும் தெளிவாகின்றது. இன்றைய நிலையில் வடமராட்சி கிழக்குப் பிராந்திய மக்கள் **'துரவு'களை** அமைத்து அவற்றிலிருந்து பாசனத்திற்கான நீர்வளத்தினைப் பெற்றுக்கொள்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பிராந்தியத்தில் எங்கும் நன்னீர் ஊற்றுக்களே பரந்திருப்பதனால் புராதன காலக்குடியிருப்புக்கள் மிகவும் நெருக்கமாகக் காணப்பட்டிருக்கவேண்டும். **'சிங்கை நாகர்'** இப்பின்னணியிலேயே வளர்ச்சிபெற்று இப்பிராந்தியத்தில் செல்வாக்குச் செலுத்தியவர்களாக விளங்கியிருக்கவேண்டும்.

இங்கு மண்டலாய் பிள்ளையார், துளாயிற் பிள்ளையார், தில்லையம்பலப் பிள்ளையார் எனப் புராதன கோயில்கள் பலவுண்டு. **மண்டலாய்** என்பது இந்தோனேசியாவிலுள்ள பிரதானமானதொரு பௌத்த மையம் என்பது தெளிவு. மண்டலகிரியான நித்திய விநோதபுரம் (கந்தளாய்) திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் ஒரு பண்பாட்டு மையமாகும். 'துளாய்' அல்லது 'துளாயில்' என்ற மையம் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தை மருவிய வகையில் பருத்தித்துறைக்கு மேற்குப்புறமாக காணப்படும் ஒரு பழமையான மையமாகும். தில்லையம்பலப் பிள்ளையார் என்ற ஆலயம் கரவெட்டி கிழக்கில், வரணிக்கு மேற்குத்திசையில் வயல் நிலங்களின் நடுவே காணப்படுகின்றது. இம்மூன்று கோயில்களும் மிகப்பழமை மிக்கனவாக நெல்லுற்பத்தி வயல்களுக்கு நடுவே அமைந்து காணப்படுபவையாகக் காணப்படுகின்றன. இவை நெல்லுற்பத்திப் பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்புடையவையாகக் காணப்படுகின்றன. தென்கிழக்காசியாவிலேயே காலத்தால் முற்பட்ட நெற்பயிர்ச் செய்கைமுறை ஆரம்பிக்கப்பட்டிருந்தது என்பதனை தற்கால அகழ்வாராய்ச்சி முடிபுகள் நிரூபணம் செய்கின்றன. எனவே **மண்டலாய் பிள்ளையார்,** கோவிலின் அமைவுகூட அத்தகைய ஒரு நெல் உற்பத்திப் பண்பாட்டுடன் இணைக்கப்பட்ட வகையில் வடமராட்சி கிழக்குப் பிராந்தியத்திற்கும், தென்கிழக்காசியாவிற்கும் இடையே இருந்த உறவினால் வருகைதந்த ஒரு பண்பாட்டு விழுமியமாக அமைந்திருக்கவேண்டும். தில்லையம்பலப் பிள்ளையார் வழிபாடும் அத்தகையதே (அண்மையில் பழைய முறிகண்டிப் பிள்ளையார் கோயிலுக்குக் கிழக்காக உள்ள சுமார் ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் வட்டவடிவமான ஒழுங்கில் குத்துக்கற்கள் (பத்துப் பத்தாக) நிலத்தினுள் புதைக்கப்பட்டிருப்பதும், கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள் அதிகளவில் சிதறிக் காணப்படுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள செய்தி எமக்குக் கிடைத்துள்ளநிலையில் வடமராட்சி கிழக்குப் பிராந்தியத்திலுள்ள அப்புராதன பிள்ளையார் ஆலயங்கள் யாவும் பெருற்கற்காலப் பண்பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்படையடுக்குகளிலிருந்து தோற்றம் பெற்று வளர்ச்சி பெற்றிருந்தன என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளமுடிகிறது. அவ்வழியே தென்கிழக்காசிய வடமராட்சி கிழக்குப் பிராந்தியத்துடனான பண்பாட்டுத் தொடர்புகளையும் இனங்காணமுடிகிறது. கி.பி. நான்காம் நூற்றாண்டளவில் பெருங்கற் பண்பாடும் பௌத்தமும் தென்கிழக்காசிய நாடுகளில் வேரூன்றியிருந்தமையை இந்தியத் தொல்லியலாளர் சுட்டிக்காட்டுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மணிமேகலை என்ற தமிழ்க்காப்பியம் பெருங்கற்பண்பாட்டினையும், பௌத்தத்தினையும் **சுமாத்திரா - யாவா** ஆகிய தீவுகளை மையமாகக் கொண்டு இணைத்து தனித்துவமான பண்பாட்டுக் காப்பியமாக வளர்ச்சி பெற்றிருந்தமையை நாம் மறந்துவிடக்கூடாது. **அவ்வழியே மணிமேகலை காப்பியத்திற்கும் வடமராட்சி கிழக்குப் பிராந்தியத்திலுள்ள பெருமணற்றொடர்களுக்கும் இடையே பாரிய தொடர்புகள் இருந்துள்ளமையினையும், ஆபுத்திரன் கதையில் வரும் மணிபல்லவம் இப்பிராந்தியமே என்பதனையும் நாம் அடையாளம் கண்டுகொள்ள முடியும்.**

## புதிய எல்லைகளைக் காட்டும் சாசனமூலங்கள்

### 1. ஆனைக்கோட்டை தமிழ் பிராமி முத்திரைச் சாசனம்

1980இல் ஆனைக்கோட்டையில் உள்ள கரையாம்பிட்டி ஈமச்சாலையில் மேற்கொண்ட அகழ்வாய்வின் பெறுபேறாக இத்தமிழ்ப் பிராமி முத்திரைச் சாசனம் மீட்கப்பட்டது. திராவிடப் பண்பாட்டுக் குறிகாட்டியான கறுப்பு - சிவப்பு மட்கலமொன்றினுள் பாதுகாக்கப்பட்டிருந்த இம்முத்திரை செம்பினாலான ஒரு மோதிரமாகும். இரண்டு வரிகளில் எழுத்துக்களின் பொறிப்பினைக் கொண்டிருக்கும் இம்முத்திரைச் சாசனம் கீழ்வரியில் கோவேதம் / கோவேதம் என்ற வாசகத்தினைக் கொண்டிருக்கின்றது. கி.பி. முதலாம் நூற்றாண்டிற்கும் முற்பட்ட காலப் பகுதிக்குரிய இவ்வரிவடிவமானது ஈழத்தமிழர் பயன்படுத்தியிருந்த பழந்தமிழ் வழக்கினை ஐயத்திற்கிடமின்றி எமக்கு நிரூபித்துள்ளது. தென்னிந்திய திராவிட - பெருங்கற்காலப் பண்பாட்டுப் பரப்பில் கிடைத்த ஒரேயொரு செம்புச்சாசனம் இது என்பதனை எவருமே இதுவரையில் மறுத்துரைக்கவில்லை. அவ்வகையில் ஈழத்தமிழர் பண்பாட்டுப் பரப்பில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட சகாப்தத்தில் **கோன் (Kingship )** முறையொன்று வளர்ச்சி பெற்றுவிட்டிருந்தமையை **ஆனைக்கோட்டை முத்திரைச் சாசனம்** உறுதிப்படுத்தி நிற்கின்றது. அவ்வகையில் ஈழத்தமிழரின் வரலாற்றுத் தொன்மையை மிகத் தெளிவாகக் காட்டிய முதலாவது தொல்லியற் சான்றும் இதுவெனலாம்.

### 2. பூநகரி 'வேளிர்' தமிழ்ப் பிராமிச் சாசனம்

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு தென்மேற்கேயுள்ள பூநகரியும் அதனுடன் இணைந்த நிலப்பரப்புக்களும் வரலாற்றுக்கு முற்பட்ட - பிற்பட்ட தொல்லியற் தடயங்களை நிறையவே கொண்டிருக்கின்றன. அவ்வகையில் குடாநாட்டிற்கு வெளியே தமிழ்ப் பிராமிச்சாசன வழக்குமுறை மக்கள் வாழ்வில் பங்கெடுத்திருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையை பூநகரியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட **தமிழ்ப் பிராமி மட்பாண்ட சாசனங்கள்** திட்டவட்டமாகவே உறுதிப்படுத்தியுள்ளன. அவற்றுள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குவது **'வேளிர்'** என்ற குலப்பெயர் பொறிக்கப்பட்டு கிடைத்த ஒரு மட்பாண்ட சாசனமாகும். ஈழத்தினதும் தென்னிந்திய தொல்லியலாளரதும் கவனத்தினை ஒருங்கே ஈர்த்த இச்சாசனமானது **சங்ககால வாழ்க்கை முறையை ஒத்த பண்பாடும் குலமுறையும் ஈழத்தின் வடபகுதியில் இருந்தது** என்பதனைத் திட்டவட்டமாகவே உறுதிப்படுத்தியுள்ளது.

சங்ககால இலக்கியங்களில் **வேளீர் மரபு** பற்றிய பல அரிய வரலாற்று செய்திகளை நாம் காண்கின்றோம். **சிற்றரச மரபு** ஒன்று வேளீர் குலமக்களிடம் காணப்பட்டிருந்த தன்மையை அச்சான்றுகள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன. எனவே இப்பின்னணியில் **பூநகரி வேளீர் தமிழ்ப்பிராமி மட்பாண்ட சாசனத்தையும்** அதன் வரலாற்று முக்கியத்துவத்தையும் நோக்கும்பொழுது **கி.பி. முதலாம் நூற்றாண்டளவில் பூநகரியில் கோன்மை முறையைத் தழுவிய அரச குடும்பமொன்று ஆட்சி புரிந்திருக்க வேண்டுமென்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.** இதனை மேலும் அங்கிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சங்ககால நாணயங்களும் உறுதிப்படுத்தி நிற்கின்றன. பூநகரியில் பெருங்கற்பண்பாட்டு தடயங்களும் அவ்வாறான ஒரு கோன்மைமுறையை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

### 3. கந்தரோடையில் கிடைத்த 'ஆபதி' மட்பாண்டச் சாசனம்

மிகவும் அண்மைக் காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தொல்லியற்சான்று என்ற வகையில் கந்தரோடை **"ஆபதி"** மட்பாண்டத் தமிழ்ப் பிராமிச்சாசனம் ஈழத்தமிழர் வரலாற்றிற்கு மேலும் உதவுவதாக உள்ளது. கறுப்பு - சிவப்பு மட்கலத்தில் பொறிக்கப்பட்ட இச்சாசனம் தொடர்ச்சியானதாகப் பொறிக்கப்பட்டிருந்தும் எமக்கு "ஆபதி எ…" என மட்டுமேயுள்ள வாசகம் மாத்திரம் கிடைத்துள்ளது. தமிழ்ப்பிராமி வாசகத்தினைக் கொண்டுள்ள இச்சாசனம் கி.பி. 1ஆம் நூற்றாண்டிற்கும் முற்பட்டது என்பதனை அதன் வரிவடிவ முறைமையிலிருந்து கண்டுகொள்ள முடிகிறது.

பழந்தமிழ் வழக்கில் 'ஆ' என்பது பசுவினையும், 'பதி' என்பது தலைவனையும் குறித்து நின்றமையால் **"ஆபதி'** என்பது பசுக்களின் தலைவன் என்ற பொருளில் கொள்ள முடியும். அவ்வாறாயின் அதுவும் **'கோன்மை'** தொடர்பாகவே சங்ககால வாழ்வு மரபில் கையாளப்பட்டிருந்த தன்மையை சங்க இலக்கியங்கள் வாயிலாகக் கண்டுகொள்ள முடிகிறது. **ஆநிரை கவர்தல் - ஆநிரை மீட்டல் என்பன சங்ககாலத்து அரச முறையோடு தொடர்புபட்டதாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.** பசுக்களைச் செல்வமாக உடையவனே அரசன் என்பது இதனாற் பெறப்படும். அவ்வகையில் குடாநாட்டுப் பரப்பினுள் கந்தரோடையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட **'ஆபதி'** என்ற தமிழ்ப்பிராமிச் சாசனமானது ஈழத்தமிழர் வரலாற்றின் கோன்மையை எடுத்துக்காட்டியுள்ளது. வரலாற்று இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடப்படாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்செய்தியை, கந்தரோடை தமிழ்ப்பிராமி மட்பாண்டச் சாசனம் தருவதிலிருந்து அம்மக்கட் கூட்டத்தின் தொன்மையான பண்பாட்டு எல்லையை, கிறிஸ்தவ சகாப்த காலத்திற்கும் முற்பட்ட நூற்றாண்டுகளுக்கு எடுத்துச்செல்ல முடிகின்றது.

## முடிவுரை

மேலே கூறப்பட்டவற்றைத் தொகுத்து நோக்கும்போது பின்வரும் விடயங்கள் எமது அறிவிற்கு தெளிவாகின்றன. அதாவது ஈழத்தமிழர் பண்பாட்டுப் பகைப்புலமானது தென்னிந்தியத் தமிழகப் பண்பாட்டுப் பகைப்புலத்துடனான தொடர்புகளையும், சமாந்தரமான உறவுகளையும் காலாதிகாலமாகக் கொண்டிருந்திருப்பினும் ஈழத்துக்கெனத் தனித்துவமான வெளிப்பாட்டினை தமிழகத்திலிருந்தும் சிறப்புக்கூறாக வேறுபடுத்திய நிலையில் தாங்கிக் கொண்டிருப்பதனை இப்போது காணமுடிகிறது. தற்காலநிலையில் தமிழ்மொழி வழக்காறானது யாழ்ப்பாணத்தில் அதன் தனித்துவத்தினையும் இலக்கிய வழமைகளையும் இலக்கணச் செழுமைகளையும் கொண்டு எவ்வாறு தமிழகமொழிப் பயன்பாட்டின் விழுமியங்களிலிருந்து தனித்துவப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றதோ அவ்வாறே புராதன ஈழத்தமிழர் பண்பாட்டுப் பரப்பும் தனித்துவமான அரசியல் சமூக, பொருளாதார கட்டமைவுகளுடன் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தென்கிழக்கிலங்கையின் கடற்கரையோரப் பிராந்தியம், வடமேற்கு - வடகிழக் கிழங்கையின் கடற்கரையோரப் பிராந்தியங்கள் என்பன காலத்தால் முற்பட்ட ஈழத்தமிழரின் பண்பாட்டு மண்படையடுக்குகளைக் கொண்டிருப்பதனையே அகழ்வாய்வின் முடிபுகள் தெளிவாக்கியுள்ளன. காலத்தின் போக்கில் - வளர்ச்சியில் ஏற்பட்ட பண்பாட்டு கட்டுமானங்களின் சேர்க்கையினாலும், கலப்பினாலும், இடப்பெயர்ச்சியினாலுமே ஈழத்தமிழரின் வரலாற்றுகாலக் குடியிருப்புகள் நகர்த்தப்பட்டு மாற்றங்களுக்கு உட்படுத்துவதற்குரிய அடிப்படைக் காரணியாயிற்று.

இந்நிலையில் ஈழத்தின் அடிப்படைப் பண்பாட்டுப் பரப்பு **ஆதித்திராவிடநாகர் மரபில் உருவான பெருங்கற்காலச் சமூகத்தினரின் அலகுகளினால்** பரவப்பட்டிருந்த (*Pavement*) வகையினையே பிற்காலத்தில் அதற்கு மேல் பிறிதொரு மொழி, சமய பண்பாட்டுப பிரிவினரால் அடுக்கப்பட்ட பண்பாட்டு மேற்கட்டுமான அலகுகளில் 'ஆரியம் அல்லாத' கலைவடிவங்களும் குறியீடுகளும் இலச்சினைகளும் மரபுக்குறிகளும் இடம்பெறுவதற்கும் தவிர்க்கமுடியாதபடி பிற பண்பாட்டு விழுமியங்களை ஏற்றுக்கொள்வதற்குமான தவிர்க்கமுடியாத சூழல் காணப்பட்டிருந்தது எனலாம். பௌத்த மதத்தினை எடுத்துக்கொண்டாற்கூட இலங்கையில் **'சிங்கள'** என்ற இனத்துவ **'அடையாள அலகு'** என்ற முறையை மீறி **பூர்வீக திராவிடநாகர் மதக்குழுவினரின்** தவிர்க்கமுடியாத அரவணைப்பினை உள்வாங்கவேண்டியிருந்த சூழ்நிலையையும் காண்கின்றோம். இதுவே இலங்கையில் பௌத்தம் என்பது **"அரசியல் அலகுகளினால் மட்டும்"** வலுப்படுத்தப்பட்டமைக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவனோபாய ஊடகங்களின் தொடர்பினின்றும் நீங்கி அம்மதம் சாதாரண பொதுமக்களின் வழிபாட்டு முறைகளினின்றும் தனிமைப்படுத்தப்பட்டமைக்கும் காரணமாயிற்று. இதனாலேயே தென்னிலங்கை வாழ் பாமர சிங்கள மக்களின் வாழ்வில் **'இந்துமதம் ஒரு குடும்ப மதமாக"** கி.பி. 16ஆம் நூற்றாண்டு வரைக்குமாவது முக்கியத்துவம் பெற்று விளங்கக் காரணமாயிற்று. அவ்வழியே ஈழத்தமிழரின் ஆதித்திராவிடப் பண்பாட்டுக் கட்டுமானப் பரப்பின் புதிய எல்லைகளையும் கால வரம்பினையும் **நாகர் மரபோடு** நிரற்படுத்திக்கொள்ள முடிகிறது. அவ்வாறான நிரற்படுத்தலுக்கு உதவுவதாகவே ஈழத்தில் கிடைத்த திராவிடப் பிராமிச் சாசனங்களும், ஈழத்துத் **திராவிட அரச குலங்களால்** வெளியிட்டு வைக்கப்பெற்ற **நாக, உரக, சிங்க நாணயங்களும் முத்திரைகள், உருவம் பொறிக்கப்பட்ட ரத்தின மணிகள் (கந்தரோடை) மட்பாண்ட முத்திரைகள்** போன்றனவும் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகளின் பெறுபேறாக எமக்குக் கிட்டியுள்ளன. **அவையே ஈழத்தமிழரின் பண்பாட்டுப்பரப்பின் புதிய எல்லைகளின் மூலங்களுமாகும்.** அவ்வழியே ஈழத்தமிழரின் பண்பாட்டுக் கட்டுமானப்பரப்பின் புதிய எல்லைகளையும் காலவரம்பினையும் நிரற்படுத்திக் கொள்ள முடிகின்றது. அத்தகைய நிரற்படுத்தலுக்கு உதவியாகவே ஈழத்தில் கிடைத்த புராதன தமிழ்ப்பிராமிச் சாசனங்களும் ஈழத்து ஆதித்திராவிட அரச குலங்களால் வெளியிடப்பெற்று வைக்கப்பட்ட முத்திரைகள், நாணயங்கள் ரத்தின மணிகள் போன்றனவும் கிடைத்துள்ளமையை அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வின் பெறுபேறுகள் தெளிவுபடுத்தியுள்ளன.

## இவ்வாய்வுக்குப் பயன்படுத்திய நூல்கள்


1. ***Ancient Ceylon**, Vol – 3, 4, 8, 5, Dept. of Archaelogy, Colombo.*
2. கிருஷ்ணராசா, செ - **தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டு தொன்மையும்**, *1998*, யாழ்ப்பாணம்.
3. புஸ்பரட்ணம், ப - **தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு**, 2000, சென்னை.
4. *Sitrampalam. S.K. – 'The Form Demeda of the Sri Lankan Brahmi Inscriptions. A Historical Assessment', **The Sri Lankan Journal of South Asian Studies** (New Series) No-6, 1996, University of Jaffna.*
5. *Pusparatnam, P & Sankaran. K.R – An Interpretation of the Term in Sri Lankan Brahmi Inscriptions as Revealed in Trade Relation. Between Sri Lanka and Tamil Nadu, **The Sri Lanka Journal of South Asian Studies**, (New Series) Vol.6, 1996/99, University of Jaffna.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி இலக்கியப் பாரம்பரியம் சில அவதானிப்புகள்

கலாநிதி செ. யோகராசா
கிழக்குப் பல்கலைக்கழகம்

## 1. மரபுவழி இலக்கியம் :

### 1.1 செய்யுள் இலக்கியப் பாரம்பரியம்

முதலில், வடமராட்சிப் பிரதேசம் சார்ந்த பாரம்பரியமான செய்யுள் இலக்கிய முயற்சிகள் என்று சிந்திக்கின்றபோது இப்பிரதேசத்தில் செய்யுளியற்றிய - செய்யுளியற்றுகின்ற - புலவர்கள் பலருள்ளமை கண்கூடு. இவர்கள் பெரும்பாலும் தலங்கள் மீதும் ஓரளவு பிரபுக்கள், வள்ளல்கள் மீதும் பிரபந்தங்களும் தனிப்பாடல்களும் பாடிவந்துள்ளனர். உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர் (1852 - 1910) நா. கதிரைவேற்பிள்ளை (புலோலி 1884 - 1904), வல்வை ச. வைத்தியலிங்கம்பிள்ளை (1843 - 1900), ச. பொன்னம்பல உபாத்தியாயர் (கரவை 1831 - 1931), முத்துக்குமாரசாமிக் குருக்கள் (பருத்தித்துறை 1853 - 1936), பொ. கார்த்திகேசுப் பண்டிதர் (கரவை), சி. தாமோதரம்பிள்ளை (வதிரி 1863 - 1921), திரு. க. சிற்றம்பலம் உபாத்தியாயர், சைவப்புலவர் வல்லிபுரம், பண்டிதர் க. சின்னத்தம்பி, திரு. க. கணபதிப்பிள்ளை, அல்வையூர் மு. செல்லையா, பண்டிதர் ஆ. தங்கவேல், பண்டிதர் க. வீரகத்தி (கவீ), மன்னவன் கந்தப்பு, பிள்ளைக்கவி வ. சிவராசசிங்கம் என நீண்டதொரு பட்டியலுள்ளன.

மேற்கூறியோருள் முதன்மையானவராக உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவருள்ளார். அதிக பிரபந்தங்கள் இயற்றிய இவர் 19ம் நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ்ந்த மீனாட்சி சுந்தரம்பிள்ளைக்கு நிகரானவராகத் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளையில் மேற்குறிப்பிட்டோருள் பிற்காலத்திற்குரிய சிலரது செய்யுள்கள் கவிதைக்குரிய பண்புகள் பெற்றுள்ளமை கவனத்திற்குரியது. எடுத்துக்காட்டாக 'கவீ', மன்னவன் கந்தப்பு, பிள்ளைக்கவி வ. சிவராசசிங்கம் முதலானோர் பக்திச்சுவை நனிசொட்ட பாடியவர்கள் என்பதில் தவறில்லை.

அதுமட்டுமன்றி, முற்குறிப்பிட்டோர் சிலரது கவிதைகளில் முற்போக்கான சிந்தனைகளும் சமூகப் பார்வையும் இடம்பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக 'கவீ'யின் கவிதைகளுள்ளன.

எ - டு : "எந்தமொழி அகராதியிலும் - கேவலம்
ஏழை எனும் வார்த்தை ஒழியட்டுமே"

"நாலு பத்து மனிதர் கையில
நாட்டுவளம் குவிந்திடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீலம் அற்ற ஆட்சி நீதி
சின்னபின்னம் ஆக்குவோம்"

"கற்றல் அறியா மூளை பிறர்முன்
கையைக் கட்டி நிற்குது
கற்கும் மூளை தொட்டதெல்லாம்
கைமேல் பலன் காணுது
இந்தவழியில் உனது வாழ்வின்
இருட்டும் நிலவும் இருக்குது
சொந்தமாகச் சிந்தனை செய்
சொர்க்கவாசல் காணலாம்"

## 1.2 சரமகவிப் பாரம்பரியம் :

சரமகவி பாடுகின்ற பாரம்பரியம் நடைமுறையில் 'வாய்பாட்டு' முறைக்குள் வந்துவிட்டதாயினும் விதிவிலக்காக, கவிதைப் பண்புடைய சரமகவிகள் பாடுவோருமுள்ளனர். இவ்விதத்தில் கிருஷ்ணாழ்வார் விதந்துரைக்கப்பட வேண்டியவர்.

எ - டு : முற்றத்து மண், சோறாய் மூன்றூமல்(க்) காய் அடுப்பாய்
பற்றியபா வட்டையிலை பாற்கறியாய் பெற்றவித்துச்
சாப்பிடவா அப்பா சமைத்தஉண வாறுதென்று
கூப்பிடுவ(து) ஆரைஇனிக் கூறு!

## 1.3 மேடைப்பாடல் பாரம்பரியம் :

குறிப்பாக, கூத்துக்களின்போது கூத்துக்களோடு தொடர்புபடாதனவாய், இடைவேளைகளின்போது பாடப்படுகின்ற பாடல்கள் சில சந்தர்ப்பங்களில் சமூகச் சீர்திருத்த நோக்குடையனவாக வெளிப்படுவதுண்டு.

அதேவேளையில் கூத்துப் பாடல்களியற்றுவோர், சமூக உணர்வுடையோராக இருப்பின் சமூக நோக்குடன் சமகாலப் பிரச்சினைகளைப் பாடுவதுமுண்டு.

மேற்கூறிய இருபோக்குகளுடைய பாடல்கள் எழுதியோருக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளவரும் முற்குறிப்பிட்ட கிருஷ்ணாழ்வாரே.

பவளக்கொடி நாடகத்தில் அன்னார் பறையறைவோனாக வந்து பாடிய பாடலின் ஒரு பகுதி இது;

நாயும்ந ரியும்பி டுங்காமல் - பிணம்
நாற்றம்எ டுத்தும ணக்காமல்
அங்கம்நீ றாக்குவது நாங்களோ - வீணில்
அதிகாரம் செய்வது நீங்களோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. நவீன இலக்கிய வளர்ச்சி

### 2.1 நவீன கவிதை ஊற்றுக்கள் :

உள்ளடக்க ரீதியில் சமகால உணர்வும் எடுத்துரை முறையில் மரபின் ஆதிக்கமும் (எ - டு : செய்யுட் பாங்கு; பிரபந்த வடிவம்; 'வாய்பாட்டு' முறை) கொண்டனவே இவ்வேளை நவீன கவிதை ஊற்றுக்களாகக் கருதப்படுகின்றன.

வல்வெட்டி குமாரசுவாமி முதலியார் (1791 - 1874) இயற்றிய கோதாரி நோய் பற்றிய பாடல்கள் சமூக அவலம் பற்றி சமூக உணர்வுடன் வெளிப்பட்டுள்ளது.

ஈழகேசரிக் காலக் கவிஞர்களாக அல்வையூர் மு. செல்லையா, யாழ்ப்பாணன் ஆகியோரின் ஆக்கங்களில் தேசிய உணர்வு, காலணித்துவ எதிர்ப்பு, சமூக நோக்கு, மனிதாபிமான உணர்வு முதலியன பெருமளவு இடம்பெற்றுள்ளன.

### 2.2 நவீன கவிதை வளர்ச்சி :

நாற்பதுகளின் (1940) பிற்பகுதியில் நவீன கவிதை தோற்றம்பெற்ற பின்னர் - பிரக்ஞைபூர்வமாக அம் முயற்சி கால்கொண்ட பின்னர் - ஐம்பதுகளளவிலே (1950) அது மொழி உணர்ச்சிக் கவிதையாக முகிழ்ப்புற்ற சூழலில் முன்னோடிக் கவிதைகளுளொருவரானார் க. சச்சிதானந்தன் (பருத்தித்துறை). பாரதிதாசன் என்றும் நாமக்கல் இராமலிங்கம்பிள்ளையென்றும் பலர் குழம்புமளவிற்கு சிறந்த கவிதையொன்றின் சிருஷ்டி கர்த்தாவாகவும் அவருள்ளார். அக் கவிதையின் ஒரு பகுதி பின்வருமாறு.

"சாவினிலும் தமிழ்படித்துச் சாகவேண்டும் - என்றன்
சாம்பல் தமிழ் மணந்துவேக வேண்டும்
........................................."

மேலுள்ள பகுதியை அடியொற்றி ராஜபாரதி, யுவன் ஆகியோரும் கவிதை புனைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (விளக்கத்திற்கு, பார்க்க : மல்லிகை, ஜனவரி 2005) கரவைக்கிழார் இப்போக்கின் பிற்கால வாரிசு எனலாம்.

அறுபதுகளளவிலே முற்போக்குக் கவிதை முகிழ்த்தவேளையில் அதன் முன்னோடிகளுளொருவரானவர் பசுபதி. வர்க்கம், தொழிலாளர், சுரண்டல், சாதிமை, புரட்சி முதலான உள்ளடக்கங்கள், முற்போக்கு முன்னோடிக் கவிஞர்களான கே. கணேஷ் அ. ந. கந்தசாமி ஆகியோரைவிட இவரூடாகவே ஈழத்தில் முதன்முதலாக முதன்மை பெற்றுள்ளமை கவனத்திற்குரியது. சாதிக்கொடுமை என்ற தலைப்பிலான சுபத்திரனின் பிரசித்தமான கவிதையின் ஆரம்பம், பின்வருமாறு:

"சாதியெனும் கொடுமையினால் தமிழர் கூட்டம்
சஞ்சலத்தில் வீழ்ந்ததடா சகதி யாகி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியிலே ஒருசாதி இருந்த தென்பர்
அந்தநெறி இந்நாளில் காண வில்லை
.............................................."

எழுபதுகளளவிலே புதுக்கவிதையின் வரவு, வெள்ளமெனப் பெருக்கெடுத்த சூழலில் 'நவீன கவிதை' யின் ஆதிக்கம் (அதாவது, தெளிவாகக் கூறின் பாரதி வழிவந்த 'நவீன கவிதை') வீழ்ச்சி எய்தியது. இதன்பின் வந்தோர் பலரும் புதுக்கவிதையாளரே.

எனினும், தொண்ணூறுகளிலே (1990) வெளிப்பட்ட 'ஈழமோகம்' இவ்வழி முக்கியமானதொருவராகின்றார். சரிநிகரில் அவரது கவிதைகள் இடம்பெறுகின்றன. வெண்பா வடிவில் அங்கதம் விரவ வெளிப்பட்டன அவை. ஓரிரு வேளைகளில் 'வெண்பா' இலக்கணம் தளர்ச்சி கண்டதும் அது கவிதை சட்டத்திற்குக் குந்தகம் தரவில்லை.

எ - டு :

"எல்லாம் சரிதானே இனியென்ன சந்திரிகா
நல்லாள் வந்துவிட்டாள் நமையாள - பொல்லார்
பொய்த்தொலைய பூமியெலாம் பூப்பூக்கும்; புளுகேறி
நாய்வாலும் நிமிர்ந்து எழும்"

நூலுருப் பெரும்பாலும் ஒரு காலத்தோடு சாய்ந்துவிட்ட நிலையிலுள்ளதுமான அவ்வப்போது நவீன கவிதையெழுதி வெளியில் தெரியாதுள்ள அல்லைச் சுந்தரன் கருசனயோகன், கீழ்க்கரவை பொன்னையன், ச. திரவியம், வதிரி ரவீந்திரன், திக்கவயல் கண. மகேஸ்வரன், ச. முருகானந்தன் எனப் பலருள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 2.3 புதுக்கவிதை வளர்ச்சி :

வசனநடைக்கு அண்மித்துள்ள வித்தியாசமான எடுத்துரைப்பு முறையுடன் புதுக்கவிதை எழுதிப் பலரையும் ஈர்த்தவர்களுள் நட்சத்திரன் செவ்விந்தியன் விதந்துரைக்கப்பட வேண்டியவர். போர்க்கால, போராட்டச் சூழலில் இளந்தலைமுறை எதிர்நோக்கிய இடர்கள், ஏமாற்றங்கள், முரண்கள் முதலானவற்றை வசனநடைக்கு அண்மித்த எடுத்துரைப்பு முறையில் வெளிப்படுத்திய இக் கவிஞர் தற்போது தமது புகலிட அனுபவங்களை வெளிப்படுத்துவதில் முன்நிற்கின்றார்.

சமகால அனுபவங்களை புதிய அதிர்ச்சியூட்டும் படிமம், புதுமையான சொற்சேர்க்கை, காட்சிப்படுத்தல், நுண்மையான சித்திரிப்பு ஊடாக வெளிப்படுத்தி வருபவர் துவாரகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ - டு :

**ஒரு மரணம் சகுனம் பார்க்கிறது**

"நடந்து செல்லும்
படுத்திருக்கும்
வீதிகளின்
பதுங்கி
கலகலப்பான
தம் நீண்ட
உறவு
தம் கடமை
எல்லோரையும்
வெடித்து
ஒரு வெடி
காத்
பெரு
சந்தி
ஒழுங்
பாலங்
பதுங்
தன்
பிணம்
எங்கும்
............."

செறிவும், மௌனமும், நளினமும், எளிமையும், ஆழமும் கொண்ட சொற்கள் சொற்றொடர்களூடாக சமகால அவலங்களைப் பதிவுசெய்து வருபவர் சுதர்சன்.

உ - ம் :

**காத்திருப்பு**

"நேற்றுப் போலில்லை
அந்தத்தெரு
கிளுவை மர இலைகள்
உடைத்துப்போடும்
நிலா ஒளி
அதன்மேல்
பிய்ந்து
அசையும் மெல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித நிழல்
கிடுகு வேலியின்
சரசரப்பு
'சர்' என்று சொரியும்
கறையானின் மண்
அவளுக்கு
ஆட்காட்டிக் குருவிகளாய்
மகனுக்காய்
மண்சட்டியில்
அவித்த
மரவள்ளிக் கிழங்கொடு
இந்த இரவிலும்
வழமைபோல்
ச்ச்ச்
பல்லி மட்டும் சொல்லியது
'இனி
படைக்க வேண்டியதுதான்"

சமகாலத்தில் பெண்கள் அனுபவிக்கின்ற வெவ்வேறுபட்ட அவலங்களை பல்வேறு கோணங்களில் வெளிப்படுத்துகின்ற கவிதைகளும் இவரால் எழுதப்பட்டுள்ளன,

அசாதாரணமான வார்த்தைகளில் மிக இயல்பான முறையில் உள்ளார்ந்த ஓசையுடன் சமகால வாழ்வின் வெவ்வேறு கோலங்களையும் எடுத்துரைப்பவர் இராஜேஸ்கண்ணன். ஓரளவு இத்தகைய இயல்புகள் கொண்டனவே யாத்திரீகனின் கவிதைகளும்.

விஷ்ணு, சமகால அவலங்களை ஏனையவர்களிலிருந்து ஏதோ விதங்களிலே வேறுபட்ட விதங்களில் தன் பார்வையூடாக வெளிப்படுத்தி வருபவர்.

சமகால அவலங்களையும் நிகழ்வுகளையும் 'கைக்கூ'வில் திறம்பட பதிவுசெய்பவர் இ. சு. முரளிதரன் :
எ - டு :

○ உழுது மகிழ்ந்தது இராணுவம்
துயிலுமில்ல வாசகம்
'இவர்கள் விதைக்கப்பட்டவர்கள்'

○ தெரு மணலில்
சப்பாத்துக் காலடிகள்
எவரை இழந்ததோ கிராமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 'நாய் குரைக்கும் இரவு
திடுக்கிடும் தென்னங்குருத்துகள்
விடியலில் தோரணமா?

- காற்றே வீசாதே
பூமர நிழலில்
அகதிகளின் கஞ்சிப் பானை

நவீன காவியங்கள் எழுதிய மூத்த தலைமுறையினரில் கண. மகேஸ்வரனும் ('மலரும் வாழ்வு' - ஆஸ்பத்திரி அனுபவங்கள்) இளைய தலைமுறையினரில் இ. சு. முரளிதரனும் ('நளதமயந்தி' - புதுக்கவிதை வடிவத்தில்) ஆர் முரளீஸ்வரனும் (ஓயாத அலைகள்) கவனத்திற்குரியவர்களாகின்றனர்.

அதிகமெழுதாவிடினும் கவனிக்கப்படவேண்டிய புதிய தலைமுறையினரில் அஜந்தகுமார், கருணைரவி, சந்திரகாந்தா முருகானந்தன், இராகவன், நா. யோகேந்திரநாதன் முதலானோர் முக்கியமானவர்கள்.

நூலுருவில் தந்தாலும் தனித்துவம் கோரி நிற்கின்ற புதிய தலைமுறையினருள் பொலிகையூர் சு. க. சிந்துதாசன், அகியோபி, பெரிய ஐங்கரன் முதலானோர் அடங்குகின்றனர்.

## 3. சிறுகதை வளர்ச்சி :

ஈழத்திலே சிறுகதை தோற்றம் கண்ட வேளையிலேயே வடமராட்சி எழுத்தாளரான ஆனந்தனும் (மொழி உணர்ச்சிக் கவிஞர் சச்சிதானந்தன்) சமூகப் பிரச்சினைகள் கொண்ட சிறுகதைகள் எழுதியுள்ளமை அண்மைக்காலத்திலேயே அறியப்பட்டுள்ளது.

இவ்வாறே நாற்பதுகளின் (1940) மறுமலர்ச்சிக்குழு எழுத்தாளருள் ஒருவராக கு. பெரியதம்பி (புலோலி) என்பார் காணப்பட்டமையும் அண்மையில் அறியப்பட்டுள்ளது. 'மறுமலர்ச்சி' இதழில் அதிக சிறுகதை எழுதியவர் இவரே. யதார்த்தம், கூர்மையான அவதானிப்பு, செறிவு முதலான பண்புகளை இவரது சிறுகதைகள் பெற்றிருந்தன.

அறுபதுகளளவிலே ஈழத்தில் முற்போக்கு எழுத்தாளர் குழாம் முகிழ்த்தபோது தெணியான், ஈழத்து சோமு முதலானோர் வடமராட்சியிலிருந்து வெளிப்பட்டு அதே ஆரம்பகால போர்க்குணத்துடன் தொடர்ந்தும் எழுதிவந்துள்ளனர்.

வடமராட்சியின் கிராமிய மண் மணத்தை வெளியுலகிற்கு எட்டவைத்தவருள் செ. கதிர்காமநாதன் சிறப்பிடம் வகிக்கின்றார். கரணவாயில் முதலில் விழுந்த இவரது பார்வை இறுதியில் வியட்னாம் தெருவரைக்கும் எட்டிச் சென்றமை குறிப்பிடற்பாலது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநாயசமான, இயல்பான, உயிர்ப்பான, அன்றாட சாதாரண அனுபவங்களை நுட்பமாகப் பதிவுசெய்கின்ற குந்தவையும் அறுபதுகளில் (1960) எழுத ஆரம்பித்தவரே. அண்மைக்கால இடப்பெயர்வுக் கதைகள் வரை இவரது எழுத்தாற்றல் மங்காமை கவனத்திற்குரியதாகிறது. சிதம்பரபத்தினியும் இக்காலத்தில் எழுத ஆரம்பித்தவரே.

எழுபதுகளில் எழுத ஆரம்பித்த நந்தினி சேவியர் கலாபூர்வமாகவும் விமர்சன நோக்குடனும் எழுதுகின்ற முற்போக்கு எழுத்தாளர் என்ற சிறப்புக்குரியவராகின்றார். முன்பே எழுதத் தொடங்கிவிட்ட என். கே. ரகுநாதனும் இத்தகையவரே.

இக்காலப்பகுதியில் எழுத முற்பட்ட ஆனந்தமயில் மீனவர் வாழ்வு, குடும்பம், காதல் முதலாகப் பல்வேறு விடயங்களையும் உன்னதமான கவித்துவ நடையிலே, எள்ளல் விரவ, 'தான் கலந்து' எழுதுகின்ற ஆற்றலுடையவர். அத்தகைய ஒன்றிப்பினை வாசகரிடமும் ஏற்படுத்தும் ஆற்றல் கொண்டனவே இவரது படைப்புகள்.

புலோலியூர் சதாசிவம், வடமராட்சிக் கிராமியம், கொழும்பு நகரம், மலையகம் முதலான களங்களைக் கொண்ட; வடமராட்சிப் பேச்சுமொழி, சிங்கள, முஸ்லீம் மக்களது பேச்சுமொழி, மலையக தொழிலாளர் பேச்சுமொழி உயிர்ப்புடன் வெளிவருகின்ற சிறுகதைகள் பலவற்றை எழுதியவராகின்றார்.

புலோலியூர் செ. கந்தசாமி பெண்களது இன்னல்கள் பற்றி அதிகமெழுதியவர் என்ற விதத்தில் முக்கியமானவர்.

எண்பதுகளில் சிறுகதை எழுதியவர்களுள் தமது கலாபூர்வமான எடுத்துரைப்பு முறை, மொழி ஆளுமை காரணமாக சமகாலப் பிரச்சினைகளை எழுதி, பலரது கவனத்தையும் ஈர்ந்தவர் ரஞ்சகுமார். போராட்டம், இளைஞர்கள், இயக்கங்களுக்குச் செல்லுதல் முதலான விடயங்கள் அவரது சிறுகதைப் பொருளாகின.

புலோலியூர் இரத்தினவேலோன் தான் கண்டவற்றையும் அனுபவம் பெற்றவற்றையும் சுவையாகக் கூறவல்லவர். முன்னரெழுதத் தொடங்கிய கண. மகேஸ்வரனது சிறுகதைகளும் இத்தகையனவே.

தவிர நவம், த. கலாமணி, ந. பார்த்திபன், வல்வை அனந்தராஜ், ச. முருகானந்தன், ராஜ ஸ்ரீகாந்தன், புலோலியூர் தம்பையா முதலானோரும் கவனிக்கப்படவேண்டிய எழுத்தாளர்களே.

சந்திரா தனபாலசிங்கம், சிவயோகமலர் ஜெயக்குமார், புகலிட எழுத்தாளர்கள் வரிசையில் லதா முதலானோரும் அத்தகையவர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகலிட எழுத்தாளர்களுள் கே. எஸ். துரை கவனத்திற்குரியவர். மற்றைய புகலிட எழுத்தாளர்கள் தொடாத விடயங்கள் (எ - டு : புகலிடத் தமிழரது வீண் ஆடம்பரம், போலி ஆசாரங்கள்) இவரால் அணுகப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்து எழுத்தாளர்கள் பலர் பின் நவீனத்துவப் பாணியில் எழுத முற்பட்ட சூழலில் வடக்கில் அவ்வாறான சிறுகதைகள் எழுத முற்பட்டவரென்ற விதத்தில் முக்கிய கவனிப்பிற்குரிய இளந் தலைமுறை எழுத்தாளர் ச. இராகவனாவார்.

அண்மைக்கால பெண் எழுத்தாளர்களுள் நம்பிக்கை தருபவர்களாக சந்திரகாந்தா, முருகானந்தன், கார்த்திகா பாலசுந்தரம் முதலானோருள்ளனர்.

## 4. நாவல் வளர்ச்சி

எழுபதுகளளவில் 'வீரகேசரி' வெளியீடுகளூடாகத் தன்னை வெளிப்படுத்திய பொ. பத்மநாதன் வடமராட்சி சார்ந்தவரே. இவரது நாவல்கள் குடும்ப, உளவியல்சார் பிரச்சினைகள் (யாத்திரை, புயலுக்குப் பின்), வறுமை (பொன்னம்மாவின் பிள்ளைகள்) முதலியன சார்ந்திருப்பினும் உணர்ச்சித் தீவிரத்துடன் வெளிப்பட்டு இவரது எழுத்தாற்றலை முடக்கிவிட்டன.

இக்காலப்பகுதியில் தெணியான் எழுதிய நாவலும் (விடிவை நோக்கி), பின்னரெழுதிய குறு நாவல்கள் பலவும் சாதிப் பிரச்சினையை வெவ்வேறு கோணங்களில் சித்திரிப்பவை. எனினும், நிலப்பிரபுத்துவத்தின் சரிவை, சிறந்த பாத்திரவார்ப்புடன் வெளிப்படுத்தும் 'மரக்கொக்கு', குடும்ப உறவுச் சிக்கல்களை உளவியல் நோக்கில் அணுகும் 'காத்திருப்பு', அன்பிற்காக ஏங்கும் மனிதனொருவன் பற்றிய 'கானலில் மான்' ஆகியன இவரது கலாபூர்வமான படைப்புகளாகும். வைத்தியசாலையில் நிகழும் ஊழல்களை வெளிப்படுத்தும் 'கழுகுகள்' தமிழ் நாட்டில் வெளிவந்த நாவலாகும். பிராமணக் குடும்பத்தின் நசிவை வெளிப்படுத்தும் 'பொற்சிறையில் வாடும் புனிதர்கள்' நாவலும் கலாபூர்வமான படைப்பே.

நா. சோமகாந்தனின் 'விடிவெள்ளி பூத்தது' நாவலும் அத்தகைய உள்ளடக்கம் கொண்டதே. (இவரெழுதிய ஏனைய இரு நாவல்களும் பார்வைக்கு எட்டவில்லை)

புகலிட எழுத்தாளர்களுள் கே. எஸ். துரை எழுதிய 'சுயம்வரம்' டென்மார்க் தமிழ் இளைஞனொருவனது வாழ்க்கையைச் சுருக்கமாகவும் வடமராட்சிக் கிராமமொன்றின் 'போராட்ட வாழ்வை மண் மணத்துடன் விரிவாகவும் வெளிப்படுத்துகின்றது. போராட்டத்தில் மகனைப் பறிகொடுத்த தாயின் மனக்குமுறலை 'ஒரு பூ' நுட்பமாக வெளிப்படுத்துகின்றது. இரண்டுமே கலாபூர்வமான சிருஷ்டிகளாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுபதுகளில் அறிமுகமான எழுத்தாளரான ஏ. ரி. நித்தியகீர்த்தியின் 'மீட்டாத வீணை'யும் ஓரளவு மண்வாசனை கமழ்கின்றதும் சீதனப் பிரச்சினையை முதன்மைப்படுத்துவதுமான படைப்பாகும்.

புலோலியூர் சதாசிவம் எழுதிய நாவல்களுள் 'மூட்டத்தினுள்ளே' மலையகப் பின்னணியில் எழுந்ததென்ற விதத்தில் குறிப்பிடத்தக்கது.

அதிக நாவல்களெழுதி வருபவராயிருப்பினும் மேலோட்டமான பார்வை காரணமாக கவனத்திற்குள்ளாகாத எழுத்தாளராகவுள்ளார் சோ. ராமேஸ்வரன்.

நெல்லை க. பேரன் எழுதிய 'வளைவுகளும் நேர்கோடுகளும்' சாதாரண படைப்பெனினும், குறுநாவலான 'விமானங்கள் மீண்டும் வரும்' மத்திய கிழக்கு இளைஞன் ஒருவனின் வாழ்வினை முதன்முதலாக சித்திரிப்பதால் முக்கியம் பெறுகின்றது.

ச. முருகானந்தன் எழுதிய நாவல்களும் வல்வை அனந்தராஜ் எழுதியவையும் பார்வைக்கு கிடைக்காதவை.

ஈழத்தில் வரலாற்று நாவலை முதன்முதலாக எழுதிய பெண் எழுத்தாளர் என்ற விதத்தில் திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார் முக்கியம் பெறுபவராகின்றார். அடிமையின் காதலி (1999) என்ற அந்நாவல் தினகரனில் தொடர்கதையாக வெளிவந்துள்ளது.

நந்தினி சேவியர் சிறுகதைத் துறையிலீட்டிய வெற்றியை தனது நாவல்களூடாக ஈட்டிக் கொண்டவராவென்பது (ஈழநாடு பத்திரிகை நாவல் போட்டி - பரிசு நாவலும்; பேராதனை தமிழ்ச் சங்க பரிசுக் குறுநாவலும்) அவை மறு வாசிப்பிற்குள்ளாகின்றபோதே தெரியவரும்.

## 5. மதிப்பீடு :

கிடைத்தவற்றினடியாக, ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சி நோக்கில் வடமராட்சி இலக்கிய கர்த்தாக்கள் பெறுகின்ற இடம் பற்றி குறிப்பிட்ட எழுத்தாளரன்றி பொதுவான ஈழத்தின் நவீன இலக்கிய வளர்ச்சி நிறைவெய்தாது என்ற அடிப்படையில் பின்வரும் விடயங்களைக் குறிப்பிடலாம்.

**5.1** மரபுவழி இலக்கிய கர்த்தாக்கள் உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் தொடக்கம் பலருளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5.2** நவீன இலக்கிய கர்த்தாக்களுள் நவீன கவிதை எழுதியோர் என்ற விதத்தில் சச்சிதானந்தன், பசுபதி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். நவீன கவிதை ஊற்றுகள் எனப் பலருள்ளனர். (எ - டு : அல்வையூர் மு. செல்லையா, யாழ்ப்பாணன்) புதிய தலைமுறையினருள் நட்சத்திரன் செவ்விந்தியன், துவாரகன், சுதர்சன், இராஜேஸ்கண்ணன் முதலியோர்.

**5.3** அவ்விதத்தில் சிறுகதை எழுத்தாளர்களுள், ஆனந்தன், கு. பெரியதம்பி, செ. கதிர்காமநாதன், என். கே. ரகுநாதன், நந்தினி சேவியர், குந்தவை, ஆனந்தமயில், ரஞ்சகுமார், தெணியான், கே. எஸ். துரை, புலோலியூர் சதாசிவம் முதலானோரைக் குறிப்பிடலாம்.

**5.4** நாவலாசிரியர்களுள் தெணியான், கே. எஸ். துரை, ஈழத்துச் சோமு முதலானோர் அத்தகையோராகின்றனர்.

**5.5** மேற்கூறிய (5.2, 5.3, 5.4) படைப்பாளர்களோடு மேலும் சில படைப்பாளர் விரிவான ஆய்வில் இடம்பெறக்கூடும். எவ்வாறாயினும் இதன் பொருள் ஏனைய படைப்பாளர்கள் முக்கியம் குறைந்தவர்கள் என்பதன்று.

## 6. பின்னிணைப்பு

**6.1** இக்கட்டுரை முழுமையானதன்று. ஒருபுறம் இப்பிரதேச எழுத்தாளர் பற்றிய விரிவான பட்டியல்களெதுவுமில்லை; நூல்கள் பலவும் உடனடியாகப் பெறக்கூடியனவுமன்று. மறுபுறம் விமர்சனம், இதழியல், புனை கதை சாராத இலக்கியங்கள், சிறுவர் பாடல் மொழி பெயர்ப்பு இலக்கியம் முதலான துறைகள் இவ் ஆய்வில் உள்ளடக்கப்படவுமில்லை.

**6.2** பல எழுத்தாளர்கள், கவிஞர்கள் விடுபட்டுள்ளனரென்பது மனங்கொள்ளப்பட வேண்டியது. இவ்வேளை நினைவுக்கு வருகின்ற கவிஞர்களுள் சிவலிங்கராஜா, சிதம்பரபத்தினி, கீழ்க்கரவை குலசேகரன், ஆனந்தமயில், ச. முருகானந்தன், நா. யோகேந்திரநாதன், இராகவன், அஜந்தகுமார், சின்னராஜா, நெல்லை க.பேரன், சிவயோகமலர் ஆகியோரும் சிறுகதை எழுத்தாளர்களுள் நா. யோகேந்திரநாதன், அஜந்தகுமார், நட்சத்திரன், செவ்விந்தியன், விக்னேஸ்வரன், உடுவை தில்லை நடராசா, வன்னியகுலம், பவானந்தன், தயாரூபன் ஆகியோரும் சேர்க்கப்படுவதற்குரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது எமது HNB நெல்லியடி கிளைக்கு
தூர நாடுகளில் இருந்து உடனடியாக
பணம் அனுப்ப HNB மணிகிராம் சேவை




- வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பணம் மணிகிராம் மூலம் இலகுவாகவும் விரைவாகவும் HNB ஊடாக உங்கள் கைகளில்.
- HNB நெல்லியடிக் கிளையில் சிரமம் எதுவும் இல்லாமல் மிகவும் இலாபகரமாகப் பணத்தினை பரிமாறிக் கொள்ளலாம்.
- பாதுகாப்புடன் கூடிய உயர் கணனி தொழில்நுட்பம், நடைபெறும் கொடுக்கல் வாங்கல்கள் உரியவரை சென்றடைவதை உறுதிப்படுத்துகிறது.
- உலகம் பூராவும் உள்ள மணிகிராம் பிரதிநிதிகள் ஊடாக பணத்தினை அனுப்பலாம்.
- வெளிநாடுகளில் இருந்து பணத்தினை பரிமாறிக் கொள்ள இலகுவான நம்பகமான ஒரே வழி - HNB மணிகிராம்.

# ஹற்றன் நஷனல் வங்கியின் தங்கநகை அடகு சேவை



உங்கள் அவசர பணத்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக
தனித்துவமான பல அனுகூலங்களுடன்



- ஒரு பவுணுக்கு அதிகூடிய கடன் தொகை
- உங்கள் நகைகளுக்கு சேதம் ஏற்படாத வகையில் தரக்கணிப்பீட்டு முறை
- அதிகுறைந்த மாதாந்த வட்டிவீதம்
- நாளாந்த வட்டிக்கணிப்பீட்டு முறை
- பகுதிக்கொடுப்பனவு செய்யும் வாய்ப்பு
- இவற்றுடன் உங்களுக்கு நட்புடன் சேவை வழங்க காத்திருக்கும் உத்தியோகத்தர்கள்



HNB உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியின் மொழி வழக்காறுகள்

கலாநிதி சுபதினி ரமேஷ்
மொழியியல் ஆங்கிலத்துறை

## 1.1 அறிமுகம்

இலங்கையில் யாழ்ப்பாணக் குடாநாடு எனச் சிறப்பாகக் கூறப்படும் பிரதேசத்தில் தனித்தன்மை வாய்ந்ததாக அமைவது வடமராட்சிப் பிரதேசமாகும் எனில் அது மிகையாகாது. இந்த 'வடமராட்சி' என்ற பதம் குறிக்கப்படும் பிரதேசங்களில் சமூக - பண்பாட்டுக் கோலங்களோடு மொழியும் மிகச் சிறப்பு வாய்ந்ததாக அமைகின்றது. அப்பிரதேசத்தின் பெயராகிய வடமராட்சி என்பதை தொண்டை நாட்டின் வட பாகத்திலிருந்து வந்தவர்கள் குடிகொண்ட பகுதி வடமராட்சி எனப்பட்டதென்றும், அம்மக்கள் வழங்கின மொழி வடுகெனப்படுவதாகிய தெலுங்கு என்றும் துணிந்துரை கூறியுள்ளனர். (வேலுப்பிள்ளை க. யாழ்ப்பாண வைபவ கௌமுகி : 1918)

மேலும் யாழ்ப்பாண வைபவகௌமுகியில் கிழக்கு நாட்டிலே ஆதியில் குடிகொண்ட மக்கள் திராவிட மக்கள் என்றும், அவர்கள் மிராசி என்ற பதத்தை தமது குடியிருப்புகளுக்கு வழங்கியமையால் அதன் வடபாகம் வடமிராசி என்றும், தென்பாகம் தென்மிராசி என்றும் வழங்கினதாகக் கொள்வர். காலப்போக்கில் வடமிராச்சி தென்மிராச்சி என இப்பெயர்கள் திரிந்து வடமிராட்சி, தென்மிராட்சி என விளங்கலாயின. இதுவே பின்னர் வடமராட்சி என்ற பெயர் மாற்றம் பெற்று வழங்கலாயிற்று என்கிறார்கள். (கிருஷ்ணராஜா செ. : திருவுடையாள் : 2007)

இலங்கைத் தமிழ் பல கிளைமொழி வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும் யாழ்பபாணத் தமிழ் தராதரமானதும், பல சிறப்பியல்புகளைக் கொண்டதும் என அறிஞர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் இலங்கையிலுள்ள ஏனைய கிளைமொழிகளிலிருந்தும் இது வேறுபடுவதற்குக் காரணம், தனக்கேயுரிய விசேட பண்புகளையும், புதுமைகளையும் கொண்டிருப்பதாகும். இங்கு பேசப்படும் தமிழானது இடத்திற்கு இடம், சமுதாயத்திற்குச் சமுதாயம் வேறுபட்டாலும் பேச்சுத்தமிழைப் பொறுத்தவரை இக் கிளைமொழி வேறுபாடுகள் பிரதேசத்திற்குப் பிரதேசம் கூட வேறுபட்டு வழங்குவதை அவற்றின் கூறுகள் எமக்குப் புலப்படுத்துகின்றன. அவ்வகையில், வடமராட்சிப் பிரதேசத்தில் காணப்படும் மொழி வழக்காறுகளைப் பற்றி ஆய்வுசெய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 1.2 மொழி வழக்கு

மொழி ஒரு முதன்மையான செய்திப் பரிமாற்றச் சாதனமாக இருந்தாலும் மொழியினை நாம் தனித்துப் பார்க்கமுடியாது. ஏனெனில் மொழி மனிதனின் உள்மனதோடு எப்பொழுதுமே ஒன்றிச் செல்கிறது, செயல்படுகிறது என்பதாலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி மனிதனின் உள்ளக் கிடக்கையைப் பேச்சு வடிவில் வெளிக்கொணர்ந்து அவனது எண்ணங்களை, உணர்ச்சிகளை, கொள்கைகளை, கோட்பாடுகளை வெளிப்படுத்துகிறது. (கருணாகரன், சமுதாய மொழியியல் : 1975) எனக் கூறப்படுகிறது.

ஒரு பிரதேசத்தை மனதில் வைத்து இலக்கியம் எழுதப்படும்போது அப்பிரதேசத்தின் மொழி வழக்குகள் அவ்விலக்கிய உரையாடல்களில் காணப்படுவது இன்றியமையாததாகும். இவற்றைப் படிப்பதன் மூலம் பிரதேச மொழி வழக்குகளை ஏனைய பிரதேச மக்களும் அறிந்துகொள்ளும் ஆற்றலையும், புரிந்துகொள்ளும் மனோபக்குவத்தையும் பெற்றுவிடுகின்றனர். அதுமட்டுமல்லாமல் மக்களின் வாழ்க்கை முறைகளிற் காணப்படும் பிரதேச வேறுபாடுகள் கூட மொழி வழக்குகளில் பிரதிபலிப்பதை நாம் அவதானிக்கலாம். அவ்வகையில் வடமராட்சிப் பிரதேச மொழி வழக்காறுகளை பல நிலைகளில் ஆராயவேண்டிய தேவை இங்கு ஏற்படுகிறது.

மனிதனது பரிணாம வளர்ச்சியிலே, அவனது முதலாவது கருத்துப் பரிமாற்ற ஊடகமான சைகையை அடுத்து மொழி என்ற வகையில் முதன்மை பெறுவது பேச்சுமொழியே. தான் கருதிய எண்ணங்கள் யாவற்றையும் வெளியே புலப்படுத்துவதற்கு மனிதன் வரிவடிவத்தைக் கைக்கொள்ளத் தொடங்கினான். எனவே மனித எண்ணங்களைப் பிரதிபலிப்பதற்கு பேச்சுவழக்கிற்கு அடுத்தபடியாகவே எழுத்து வழக்கு அமைந்து காணப்படுகிறது. இலக்கண நூலார் பலரும், சங்ககாலந்தொட்டு எழுத்து மொழிக்கே இலக்கணம் வகுத்துவந்துள்ளனர். பேச்சுமொழி எவ்வாறமைதல் வேண்டுமென யாருமே இலக்கணம் செய்ததில்லை. ஏனெனில் படிக்காத பாமரனது பேச்சுமொழியிலும் பச்சைக் குழந்தையின் பேச்சுமொழியிலுங் கூட அடிப்படை மொழி இலக்கணம் அமைந்து கிடக்கிறது. ஆகவே எழுத்துமொழிக்கு மட்டுமன்றிப் பேச்சுமொழிக்கும் இலக்கணம் உண்டு என்பதையும், அவ்விலக்கணமும் தொன்றுதொட்டு வரும் பேச்சுவழக்கை அடிப்படையாகக் கொண்டே அமைந்தது என்பதையும் மொழியியலாளர் அடித்துரைக்கின்றனர்.

## 1.3 சொல் நிலை

வடமராட்சி மொழி வழக்குகளை இங்கு சொல்நிலையில் பார்க்கும்போது பாவனை முறைச் சொற்கள், உறவுமுறைச் சொற்கள், உணவு வகைச் சொற்கள், ஆடை ஆபரணச் சொற்கள், விளையாட்டுச் சொற்கள், நம்பிக்கைகள், வழிபாடுகள், சடங்குச் சொற்கள், சிலேடைகள், பழமொழிகள் எனப் பலவாறாகப் பாகுபடுத்தலாம். இப்பிரதேசத்தில் உதித்த பலர் தம்மறிவிற்கேற்ப தாம் வாழ்ந்த காலத்தில் சமூகத்திற்குச் செய்த அர்ப்பணிப்புகள் பலவாகும். இவற்றுள் இலக்கியரீதியாக நூல்களை இயற்றியவர்களும், வாய்மொழி இலக்கியங்களாகவும் பல வகையில் மொழியை ஊடகமாக்கி தம் வாழ்வை வளம்படுத்தியுள்ளார்கள். அவ்வகையில் மிகவும் குறிப்பிடத்தக்கவர்களாக அமைபவர்கள் பேராசிரியர் கணபதிப்பிள்ளை, உடுப்பிட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசம்புப்புலவர், பண்டிதர் வீரகத்தி தொடங்கி செ. கதிர்காமநாதன், புலோலியூர் சதாசிவம், தெணியான் முதல் பேராசிரியர் சிவலிங்கராஜா வரையான ஒரு பாரம்பரியம் தொடர்ந்துகொண்டே வருகிறது. இவர்கள் தங்கள் ஆக்கங்களில் வடமராட்சி பிரதேச சிறப்பு மொழி வழக்குகளைக் கையாண்டு வந்துள்ளமை, வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தின் கிராமிய வாழ்க்கை வெளிப்படுத்தும் மொழிக்கூறுகளைக் குறிப்பாக வடமராட்சிப் பிரதேச மொழி வழக்கில் காணலாம். பேராசிரியர் சுசீந்திரராஜா (1990 : 90) அவர்கள் தமிழ்மொழி சார்ந்து எழுதிய பல மொழியியல் கட்டுரைகளில் மொழியின் தனித்துவமிக்க சிறப்புக்கூறுகளை குறிப்பிடும்போது, பல கிளைமொழிகள் அவ்வப் பிரதேச மொழிக்கூறுகளை தெளிவாகப் புலப்படுத்துகின்றன என்கிறார். உதாரணமாக பின்வரும் பந்தியைப் பார்க்கும்போது,

> "என்னடி? அக்காத்தைப் பிள்ளை எங்களின்ரை சோமு சக்கட்டையே! செக்கலுக்கை கோக்காலிக்கு மேலை கிடந்து சக்குக் கட்டின புளுக்கொடியலை உமலோடை காவிக்கொண்டு சாமம் சாமமாய்ச் சந்தைக்கு வெளிக்கிட்டான். அங்கை போய் அதை வித்துப்போட்டு வித்த காசுக்கெணை நீத்துப்பெட்டியும் பறளையும், சருவமும், குடுவையும் ஒரு சத்தகமும் வேண்டிவந்தான். சந்தையாலை வந்த உடனும் படபடத்துக்கொண்டு அடுப்புக்கை கிடந்த சாம்பலை அள்ளிப்போட்டு பானையை வைச்சுக் குந்திலை கிடந்த காவோலையை முறிச்சு எரிச்சான். எப்பன் நேரத்தாலை காச்சின சோத்தைச் சம்பலோடை விழுங்கினான். திண்ட சட்டியைக் கழுவ எண்டு போகேக்கை தடுக்குத் தடக்கிச் சிதறுவான் பொத்தெண்டு விழுந்துபோனான். பக்கத்திலை குஞ்சுக்கு வைச்ச முட்டையெல்லாம் குஞ்சுக்கடகத்தோடை சரிஞ்சு விழுந்து உடைஞ்சு போச்சு. நான் அந்தக் கோதாரி விழுவானை என்ன செய்ய?"

மேற்கூறியவற்றுள் காணப்படும் ஒவ்வொரு சொற்களுள் பிரதேசத்தில் மக்களின் உரையாடலின்போது வழங்கப்படுபவை. இது சமூக மொழியியல் கூறுகளை புலப்படுத்துவனவாக அமைகின்றன. இது போன்றே மொழியின் வெவ்வேறு கூறுகளையும் அவை வழங்கும் ஒவ்வொரு அம்சங்களிலுமிருந்து அறிந்துகொள்ளமுடியும்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களின் பல ஆக்கங்கள் வடமராட்சிப் பிரதேசத்தின் தனிப்பண்புகளை, மொழியின் சிறப்புக் கூறுகளை, சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களை வெளிக்கொணர்ந்துள்ளமை ஒப்புநோக்கத்தக்கது. சிறப்பாகத் தனது நாடகங்கள் (நானாடகம், இரு நாடகம்) கட்டுரைகள், நாவல்கள், மொழிபெயர்ப்புகள், கவிதைகள் மூலமாகத் தமது ஆற்றலைப் புலப்படுத்தியவர். நெடுங்கவிதைகள் பாடுவதிலும் மிகவும் வல்லவராகத் திகழ்ந்தார் என்பதற்கு "தூவுதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரே" (1962) என்னும் நூலும் காதலியாற்றுப் படையும் (1940) மிகச் சிறந்த சான்றுகள் ஆகின்றன. பொதுவாகவே வடமராட்சி பிரதேசத்தின் கல்விப் பாரம்பரியம் பெரும்பாலும் பரம்பரைச் சொத்தாகவே காணப்படுகின்றது. இப்பகுதியில் 19ம் நூற்றாண்டு வரை பெரும் புலமை பெற்று விளங்கியவர்களின் பட்டியலையும், வரலாற்றையும் பார்க்கும்போது இந்த உண்மை புலனாகும்.

சாதாரண பேச்சு வழக்கிலும், உரையாடலிலும் இலக்கணச் சுத்தமான பல சொற்களை கையாளுவதை இப்பிரதேசத்தில் அவதானிக்கலாம். சிலர் செந்தமிழ் பாரம்பரியம் மிக்கவர்களாகக் காணப்படுவதையும், அவர்கள் தூயதமிழ் சொற்களைக் குறிப்பிடும்போது மக்களை "பிள்ளைகாள்" என அழைப்பதையும் நோக்கலாம். அதுமட்டுமல்லாமல் இப்பிரதேசத்தில் கற்றவர்கள் அதிகமாக வாழ்ந்தமையால் அவர்களின் பேச்சுக்களில் சிலேடையாகப் பேசும் பண்பும் காணப்படுவதுண்டு. குறிப்பாக கந்த முருகேசனார், மன்னவன் கந்தப்பு, பண்டிதர் வீரகத்தி போன்றோர் அந்தந்த சந்தர்ப்பத்திற்கேற்ப சிலேடைகளைப் பிரயோகிப்பதையும், பழமொழிகளைக் கையாளுவதையும் காணலாம். இப் பழமொழிகள் வடமராட்சிப் பிரதேசத்துக்கே உரிய தனித்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. இவை பற்றிய விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும். அல்லாமல் வடமராட்சிக்குள்ளே கிராமங்களுக்குக் கிராமம் வேறுபாடான சொற்பிரயோகங்கள் கையாளப்படுவதையும் காணலாம். ஒலியமைப்பிலும், உருபன் நிலையிலும் அவை வேறுபட்டவையாகக் காணப்படுகின்றன. நல்ல தமிழ்ச் சொற்கள் நாகரிகம் கலவாத தாழ்த்தப்பட்டோர் எனக் கருதப்படுகின்ற மக்களிடையே அதிகமாகக் காணப்படுவதைக் காணலாம். (சிவலிங்கராஜா, 1984)

## 1.4 உறவுப்பெயர்களில் மொழி வழக்கு

சமுதாயத்தில் மக்கள் தமக்குள் உறவுகொள்ளும் முறைக்கேற்ப உறவுப் பெயர்களும், அவற்றின் எண்ணிக்கையும், பொருளும், அமைப்பும் கூட பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபடக் காணலாம். ஒரு மொழி பேசுவோர் மத்தியிலும் உறவுப்பெயர்கள் பலவாறு வேறுபடுவதுண்டு. இவ்வாறு வேறுபடினும் சில இயல்புகளில் தனி ஒப்புமை இருப்பதும் உண்டு. இவ் வேறுபாடு பொதுவாகப் பண்பாட்டு வேறுபாட்டினாற் தோன்றுகிறது எனலாம். ஒப்புமைக்குக் காரணம் அம்மொழி பேசுவோரிடமுள்ள ஒருமைப்பாடாகலாம். உதாரணமாக உடுப்பிட்டி பிரதேசத்தை எடுத்தால் அங்கு வழக்கிலிருக்கும் 'எடா', எடி போன்ற சொற்கள், ஆண்பால் பெண்பாலை மாற்றி அழைக்கப் பயன்படுகிறது. அதாவது ஆண்பாலைச் சார்ந்தாரை 'எடி' எனவும், பெண்பாலினரை 'எடா' எனவும் அழைக்கின்றனர். ஆனால் இப்பிரயோகம் கரவெட்டிப் பிரதேசத்தில் மழலைப் பருவத்தினரிடம் மட்டும் அதாவது பெரியோர்களால் குழந்தைகளிடம் மட்டுமே கையாளப்படுகிறது. இது ஒரு மொழி பேசுவோராக இருந்தாலும் பிரதேசத்திற்குப் பிரதேசம் காணப்படும் மொழிவழக்குக்கு வேறுபாடுகளை புலப்படுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் உறவுமுறையை புலப்படுத்தும் சொற்களின் சிறப்பை கீழே காணலாம்.

அப்பன் - கொப்பன்
ஐயா - கொய்யா
அப்பு - கொப்பு
அப்பாச்சி - கொப்பாச்சி
அப்பர் - கொப்பர்
அப்பா - கொப்பா
ஆச்சி, ஆத்தை - கோத்தை
அம்மாத்தை - கொம்மாத்தை
அம்மா - கொம்மா
அண்ணன் - கொண்ணன்
அண்ணா - கொண்ணா
அக்கா - கொக்கா
அம்மான் - கொம்மான்
அத்தான் - கொத்தான்
அண்ணி - கொண்ணி

மேலே உள்ளவற்றில் உயிர் எழுத்தில் தொடங்கும் அனைத்து உறவுப் பெயர்களும் முன்னிலை வழக்கமைப்பைப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக,

அப்பா - உன் அப்பா - கொப்பா
அம்மான் - உன் அம்மான் - கொம்மான்

இவ்வாறே ஏனையவற்றையும் நோக்கலாம். மேற்கூறிய சொற்கள் யாழ்ப்பாணச் சமூகத்தினர்க்கே பொதுவானவையாகக் கூறப்பட்டாலும், வடமராட்சிக்கு என்று சிறப்பாக வழங்குபவையாகவும் அமைகின்றன. எனினும் காலப்போக்கில் சமூக மாற்றம், வெளி உலகத் தொடர்பு, பிறமொழிக்கல்வி முதலான பல்வேறு காரணிகளாலும் சில வழக்கொழிந்து போவதைக் காணலாம்.

இன்னொரு வகையில் தாயினுடைய தாயை பெத்தாச்சி, அம்மாச்சி, பெத்தாத்தை, பேத்தி போன்ற சொற்களால் அழைப்பது பெரு வழக்காக இருப்பதை வடமராட்சிப் பிரதேசத்தில் காணலாம். அக்காலத்தில் சமூக அமைப்பில் பெண் கல்வி முக்கியம் பெறாவிட்டாலும், மரபுவழிக் கல்வியில் புலமைபெற்ற பெண் பரம்பரையை முதன்முறையாக வடமராட்சிப் பிரதேசத்திலேயே காணமுடிகின்றது. புலோலி, வ. கணபதிப்பிள்ளையவர்களின் சகோதரியாகிய பார்பதி அம்மையார் குறித்த ஒரு குடும்பத்தின் இரு பெண்கள் மதுரைத் தமிழ்ப் பண்டிதர் பரீட்சையில் சித்தியெய்தியமைக்குக் காரணமாக இருந்தமையால் அவரை 'பாறாச்சி' என மரியாதை வழக்கில் அழைத்தமையை இங்கு நோக்கலாம். முதிர்ப் பெண்டிர் ஆக விளங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களை 'ஆச்சி' விகுதி சேர்த்து அழைப்பது இப்பகுதியின் வழக்கமாகும். மேலே குறிப்பிட்ட பெத்தாச்சி, அப்பாச்சி என உறவுமுறைப் பெண்பாற் சொற்களும், பெரியப்பு, சீனியப்பு, குஞ்சியப்பு, ஆசையப்பு, பெரியையா, குஞ்சியையா, சீனியையா, ஆசையையா, சீனியம்மான், மூத்தம்மான், பெரியம்மான், ஆசை அம்மான், குஞ்சியம்மான் போன்ற ஆண்பால் உறவுமுறைச் சொற்களும் இப்பகுதியின் மொழி வழக்காறுகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாக அமைகின்றன.

இவ்வாறான உறவுமுறைப் பெயர்களைவிட அரியாத்தை, பூதாத்தை, வேதாத்தை போன்ற பெண்பால் இடுகுறிப்புப் பெயர்களையும், அரியாத்தை வளவு, பூதாத்தை வளவு என்ற பெண்களின் பெயராக வளவுகளின் பெயர்கள் வழங்குவதையும் காணலாம். இப் பெயர்கள் வடமராட்சியின் சில பகுதிகளுக்கும், வன்னிப் பிரதேசங்களுக்கும் உள்ள உறவின் காரணமாக எழுந்ததோ என எண்ணத்தோன்றுகிறது. இவை போன்றே சிலம்பன், சிலம்பியாவளவு, பூதன்/ பூதர்வளவு, பூதறாப்பிட்டி (ஓதறாப்பிட்டி) போன்ற பெயர்களையும் ஆண்களின் பெயர்களோடு சேர்த்து வழங்குவதையும் காணலாம். இத்தகைய பெயர்கள் கிராமங்களில் கல்வியறிவு மிகக்குறைந்த மக்களிடம், குறிப்பாகச் சில சாதி மக்கள் பேச்சில் வழங்கக் காணலாம். அவை மட்டுமன்றி இப் பெயர்கள் இழிவழக்கு என்னும் பொருள்பட்டு வழக்கொழிந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## 1.5 இலக்கிய வளம்

வடமராட்சிப் பிரதேசக் கல்விப் பாரம்பரிய வரலாற்றை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது அது ஓர் உயர்ந்த இடத்தில் வைத்துப் பார்க்கவேண்டிய தேவை ஏற்படுகிறது. (சிவலிங்கராஜா, 1984) இங்கு பலர் ஒரு கட்டுக்கோப்பான பாடசாலைக் கல்விக்குள்ளால் வந்தவர்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது. அதனால் அவர்கள் தங்களின் கல்வியின் செல்வாக்கைக் கொண்டு பட்டப்பெயர்கள் முதல் பாவனைப் பெயர்கள் வரை கையாண்ட மொழிவழக்குகள் சொல்லுந் தரமன்று. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக, சிரித்திரன் பத்திரிகையைக் குறிப்பிடலாம். திரு. சிவஞானசுந்தரம் அவர்களை ஆசிரியராகக் கொண்ட இப் பத்திரிகை வடமராட்சிப் பிரதேசத்திற்குரிய சிறந்த மொழிவழக்காறுகளைப் புலப்படுத்தியதில் முக்கிய பங்காற்றியுள்ளது. தனியே நகைச்சுவையினூடாக வெளிப்பட்ட பல அம்சங்கள் பின்னர் சிறுகதை, நாவல், கவிதை, புதுக்கவிதை, கேள்வி பதில் நகைச்சுவைத் துணுக்குகளினூடாக வெளிப்படுத்தப்பட்டு வடமராட்சிப் பிரதேசத்திற்கு ஒரு முத்திரை பதித்தமை இங்கு ஈண்டு நோக்கத்தக்கது. இதற்கு ஒரு சிறந்த உதாரணமாக தினகரன் பத்திரிகையில் திரு. சிவஞானசுந்தரம் அவர்கள் தினமும் வெளியிட்ட 'சவாரித்தம்பர்' என்னும் கருத்தோவியம் நகைச்சுவையோடு சமூகச் சீர்திருத்தத்தையும், வடமராட்சியின் பழக்கவழக்கங்களையும் மொழிநடையையும் வெளிக்கொணர்ந்தது. இவர் கையாண்ட மூடல், குட்டான், பனங்கழி, சவுக்கம், பெட்டகம், சத்தகம், சதிலுப்புப்பு, சாவார், சின்னமேளம், தைலாப்பெட்டி முதலிய சொற்கள் வடமராட்சியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்காட்டுவன. இவை மட்டுமல்லாமல் மள்ளாக்கொட்டை, போக்கணம், அயத்து, இணல், பூழல், வெள்ளண, பீலிப்பட்டை, பச்சடி, கையில், பொட்டழி, சிலுவல், நாறல் போன்ற பல்லாயிரக்கணக்கான சொற்களும், சொற் பிரயோகங்களும் வடமராட்சியின் இலக்கிய வளத்தினைக் கணிசமானளவு பிரதிபலிக்கின்றமை வியப்புடையது.

## 1.6 உணவுமுறைச் சொற்கள்

வடமராட்சிப் பிரதேச உணவுப் பழக்கவழக்கங்களிலே குறிப்பிடத்தக்க தனித்தன்மைகள் இருந்தன. இவற்றைக் குறிப்பிடும் சொற்களின் மூலம் அப்பிரதேச வழக்காறுகள் மொழியின் ஊடாகப் புலப்படும் பாங்கை பேராசிரியர் கணபதிப்பிள்ளையவர்கள் கூறிச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக, இப்பகுதியில் வழங்கப்படும் அப்பம் என்னும் சொல்லை வெள்ளை அப்பம், பாலப்பம் எனக் குறிப்பிட்டாலும் இதனைத் தயாரிப்பதற்கு பாவிக்கப்படும் பனங்கள்ளினைக் கொண்டு வெள்ளை அப்பத்தை 'புளிச்சப்பம்' எனக் குறிப்பிட்டுள்ளமையை இங்கு நோக்கலாம். இச் சொற்பிரயோகம் அதிகமாக வடமராட்சி பிரதேச மக்களிடையே மட்டுமே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இன்று 'பருத்தித்துறை வடை' என்று உலகமெல்லாம் பேசப்படும் வடைக்கு இப்பிரதேசத்தில் வழங்கிய பெயர் 'கள்ளுவடை' என்பதாகும். அதாவது கள்ளு, சாராயம் குடிக்கும்போது சுவைப்பதற்கு பயன்படுத்தப்பட்டமையால் இது அப்பெயர் பெற்றிருந்தது. ஆனால் காலப்போக்கில் இது பிரதேசத்தின் பெயரையும் சேர்த்து 'பருத்தித்துறை வடை' எனவும், தட்டை வடை என ஏனைய பிரதேசத்தாரும் அழைக்கும் வகையாக மாறிவிட்டது. மேலும் பனங்காய்ப் பணியாரம், எள்ளுப்பா, பாணிப்பிணாட்டு, தடுக்கு, புழுக்கொடியல், மீன்முறி, ஒடியல் போன்றவை சிறப்பு வழக்குச் சொற்களாக வடமராட்சிப் பேச்சு வழக்கில் காணப்படுகின்றன.

## 1.7 உடை, ஆடை அணிகலச் சொற்கள்

உணவுப்பழக்கங்கள் போன்று உடைகள், ஆடை அணிகள், விளையாட்டுக்கள், வழிபாடுகள், சடங்குகள், நம்பிக்கைகளும் மொழியினூடாகப் புலப்படுத்தப்படுகின்றன. காதலியாற்றுப்படையில் பேராசிரியர் பின்வருமாறு சொல்லிச் சென்றுள்ளார்.

கந்தை உடையினர்
குறுக்குக் கட்டினர்
சிந்திடு வேர்வையர்
அசைந்த நடையினர் (பாடல் 760 : காதலியாற்றுப்படை)

எனப் பெண்களின் உடை பற்றியும், ஆண்களின் உடை பற்றிக் குறிப்பிடுகையில்

மெய்யதி வழக்குற மேலுடை அணிந்து
கையதி லதற்கிணைக் கருங்குடைபிடித்துத்
தலையுது தண்ணிற் தலைப்பாத் தாங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாடல்களில் 'தலைப்பா', 'குறுக்குக்கட்டு' போன்ற சொற்பிரயோகங்கள் பிரதேச வழக்காறுகளுக்குச் சான்றாகின்றன. மேலும் அணிகலன்களின் பெயர்களைப் பின்வரும் பாடல்மூலம் குறிப்பிடுகையில்,

நன்னாட் பார்த்துப் பொன்னை உருக்கி
மணவினைக் கென்றே வரைந்திடு தணியும்
அட்டியல், பதக்கம், பிலாக்கு, மூக்குத்தி
பூரானட்டியல், கீச்சுக்கல் அட்டியல்
கடுகுமணிக் கொலிசு கவுத்தோர் காதுப்பூ
வாளி சிமிக்கி வளையல் தோடு
பட்டணங்காப்பு பீலிக்காப்பு
பாதசரமொடு சங்கிலி சிலம்பு
தூங்கு கடுக்கண் நட்டுவக் காலி
அரும்பு மணிமுரு கொள்ளைப் பூவும்
ஒட்டினை மொழிபெறு நுதலணி
அரை நாண் கயிறொடு அரை மூடி சலங்கை

(பாடல் 490 காதலியாற்றுப்படை)

என்பவற்றில் பல இன்று பயன்பாட்டில் இல்லையென்றே குறிப்பிடலாம். ஆனால் ஒரு காலகட்டத்திலே இந்த அணிகலன்கள் பயன்பாட்டில் இருந்தன என்பதை பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் வாய்மொழியூடாக அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

## 1.8 விளையாட்டுச் சொற்கள்

விளையாட்டுச் சொற்களைப் பார்க்கும்போது அவை வடமராட்சிப் பிரதேசத்திற்குரியவையெனக் குறிப்பிடுதல் பொருந்தாவிட்டாலும் சில விளையாட்டுச் சொற்களைக் குறிப்பாக கிந்தியடித்தல், கிட்டியடித்தல், சிற்றில் அமைத்து சிறுசோறு அட்டு விளையாடுதல், தென்னங்குரும்பையில் சிறுதேர் உருட்டுதல், பட்டமேற்றுதலை கொடி ஏற்றுதல் என்றும் பல்வேறு வகையாக விளையாட்டுக்களை அழைப்பர். மேலும் சில விளையாட்டுக்களைப் பின்வரும் பாடலின்மூலம் வெளிப்படுத்துகின்றமையைக் கீழே காணலாம்.

"தரைமேற் கோடு தயவுடன் கீறித்
தாயக்கட்டை தாவி எறிந்தும்
சோகி யெடுத்துச் சோணாலு பாணா
லேன்றே யுறுக்கி யெறிந்து தானுருட்டியும்
பந்தயம் பேசிப் பலபேரிருந்து
நாயும் புலியும் நலிவிலா தாடியும்
சீட்டைக் கையில் நீட்டி விரித்துப்
பல்வகை யாட்டம் ஒல்வகை ஆடியும் (பாடல் 110 : காதலியாற்றுப்படை)

போன்றவை சான்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.9 சமயச் சடங்குகள், நம்பிக்கைகள் சார்ந்த சொற்கள்

இவை மட்டுமல்லாமல் சமயச் சடங்குகள், நம்பிக்கைகளுடன் கூடிய பல வழிபாட்டுச் சொற்களும் வடமராட்சிப் பிரதேச மொழி வழக்குகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகக் காணப்படுகின்றன. இவை யாவும் மேலும் மேலும் ஆராய்வுக்குட்பட வேண்டிய விடயங்களாகும். கோவில்களில் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றும்போது காவடி எடுக்கும் நடைமுறை இருந்து வருகிறது. காவடி வகைகளைப் பற்றிய சொற்களைப் பார்க்கும்போது 'தூக்குக்காவடி', 'பறவைக் காவடி', 'ஆட்டக் காவடி' என வெவ்வேறு பெயரிட்டு அழைக்கும் வழக்கங்களையும், மேலும் பேய், பிசாசு போன்றவற்றில் நம்பிக்கை வைத்திருக்கும் வடமராட்சி மக்கள் 'முனி' என்பதிலும் நம்பிக்கை கொண்டு, அதற்குப் பயப்படுபவர்களாகவும் காணப்படுகிறார்கள். இம் முனி என்பதுடன் ஊர்ப்பெயரை அடையாகக் கொண்டு கோட்டைமுனி, புறாப்பொறுக்கி முனி என வழங்கும் வழக்கம் அங்கு இருந்தது.

வடமராட்சிப் பிரதேச மொழி வழக்குகளுள் குறிப்பிடத்தக்க இடம்பிடிப்பவை திட்டுக்கள். சிறப்பாகக் கிராமப் பகுதிகளிலே வயது வந்தவர்கள் இளையோரைத் திட்டும்போது பிரயோகிக்கப்படும் சொற்களோ, தொடர்களோ மிகவும் சுவாரஸ்யமானவையாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக 'கோதாரி' என்ற சொல் கொலரா என்ற நோயைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், நோய் வந்தவர்கள் இறப்புக்கு ஆளாகின்றமையால், அந்நோயின் பெயரைக் கொண்டே கோபமாகப் பேசும் வழக்கம் இங்கு காணப்படுகின்றது.

கோதாரி விழுவானே/ விழுவாளே
கோதாரியிலை போவானே / கோவாளே

இன்னொரு வகையில்

அறுவானே/ ளே
புரியனைத் தின்னி/ பெண்டிலைத் தின்னி

இங்கு 'தின்னி' என்ற சொல் இறப்பை, மரணத்தைச் சுட்டுவனவாக இருக்கின்றது. இங்கு 'தின்னி' இருபாலாருக்கும் பொதுவானதாகக் கொள்ளப்படும் வழக்கமாகும். மேலும் பிள்ளைகளைத் திட்டும்போது 'கடுவனைத் தின்னி' என ஆண்பாலையும், 'பிள்ளையைத் தின்னி' எனப் பெண்பாலிலும் குறிப்பிடுதல் இங்கு நோக்கத்தக்கது. இங்கு திட்டுக்கள் பால் விகுதி பெற்று அமைவதைக் காணலாம்.

துலைஞ்சு போவானே / ளே
குறுக்காலை போவானே / ளே
பாடையிலை போவானே / ளே
பத்தி எரிவானே / ளே

இவை யாவும் சந்தர்ப்பத்திற்கேற்ப காரணங்களை அடிப்படையாகக் கொண்டு பேசப்படும் மொழி வழக்குகளாக அமைகின்றன. எனவே மேற்கூறிய வழக்குகள் யாவும் நாட்டார் வழக்காறியலூடாகச் சமூகவியலாளர்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆய்வாக அமையவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.10 நாடகம் சார்ந்த சொற்கள்

நடைமுறையில் இலக்கிய வழக்கைவிட பேச்சு வழக்குகள் செல்வாக்கு மிகுந்து சென்றுள்ளமையை பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நானாடகம் (1940), இரு நாடகம் (1952) போன்றவற்றில் தெளிவாகக் காணலாம். ஆரம்பகாலங்களில் நகைச்சுவையாக மட்டும் பயன்படுத்தப்பட்ட பேச்சு வழக்கு முறையானது காலப்போக்கில் அதனுடைய பயன்பாடு புலப்படும் வகையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பிரதேச மண்வாசனை ஊட்டவல்ல ஆற்றல் பேச்சு வழக்கிற்கே உண்டென்பது அனுபவபூர்வமாக உணரப்பட்ட ஒன்றாகும். ஈழத்து நாடகங்களிலே பிரதேச பேச்சுத் தமிழைப் பயன்படுத்தவேண்டும் என்ற முயற்சியின் முன்னோடியாக விளங்கியவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆவார். சில சொற்களை எடுத்துக் காட்டாக இங்கு நோக்கலாம்.

| | | |
|---|---|---|
| காத்தாலை | மோனை | பறைவளி |
| என்ரை | நாம்மானை | தலைக்கறுப்பு |
| இங்கினை | நயிந்தை | தரவளி |
| இஞ்சை | நாச்சியார் | |
| இஞ்சாரும் | மினைக்கேடு | |
| | வெடத்துக்கை | |

மேலும் தொடர்நிலையில் பார்க்கும்போது

கதையோடைகதை
அம்மாவெட்டை
ஓட்டமும் பாட்டமும்
நாயமாக்கிடக்கு
குழந்தைகுஞ்சு
பெண்புரசுகள் எனவும்

ஊர்ப்பெயர்களை அடைகொடுத்து ஆட்பெயர்களைக் குறிப்பிடும்போது,
மடத்தடிப் பிரக்கிறாசியார்
பொழுதுமுளைச்சான் பொன்னுத்துரை
வாக்குச் சாத்திரி
கொடுப்புச்சப்பி சண்முகம்
பனைவெட்டி ஆழ்வார் எனவும்
மொழி வழக்குகள் கையாளப்படுவதை இங்கு காணலாம்.

இன்னொருவகையில் இவர் கையாண்ட மொழிநடையில் ஆங்கிலச் சொற்கள் தமிழ் மயப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டமையையும் நோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவர் (*driver*)
கோச்சு (*coach*)
வசு (*bus*)
சுப்பிறயங்கோடு (*supreme court*)
என பட்டியல் நீண்டுகொண்டு போவதைக் காணலாம்.

இம்மொழி வழக்காறுகள் யாழ்ப்பாணக் கிளைமொழிக்குள் வழங்கப்படினும், சிறப்பாக வடமராட்சிப் பிரதேசக் கூறுகளாக அமைவதைக் காணலாம்.

## 1.11 முடிவுரை

வடமராட்சிப் பிரதேசத்தில் தோன்றிய கல்விப் பாரம்பரியத்தின் பயன்தரு முயற்சிகளாக மேற்கொள்ளப்பட்ட இம் மொழிசார் ஆய்வுகள் இத்துடன் நின்றுவிடவில்லை. இலக்கியம், நாடகம், மருத்துவம், கல்வி முதலான பல்வேறு துறைகளில் இப்பிரதேசத்தின் ஆளுமை வெளிப்படுத்தப்பட்டுள்ளமையை இப்பிரதேசத்தில் தோன்றிய புலவர்கள் முதல் இன்றைய அறிஞர்கள் வரை, அவர்களின் நூல்கள், வாய்மொழி இலக்கியங்கள், கவிதைகள், அகராதிகள் போன்ற நீண்டதோர் பாரம்பரியம் சான்றாக அமைகின்றன. மேலே தரப்பட்ட ஆய்வுகள் ஓரளவுக்குத்தான் இக்கட்டுரையின் நோக்கத்தை பூர்த்தி செய்கின்றன. இவ்வாய்வு மேலும் விரிவடையுமானால் வடமராட்சியின் கல்விப் பாரம்பரியம், இலக்கிய வளம் யாவும் இப்பிரதேசத்தின் மொழி வழக்காறுகளை இன்னும் வளப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

## உசாத்துணை நூல்கள்


| | | | |
|---|---|---|---|
| 1. | கணபதிப்பிள்ளை. க | (1950) | காதலியாற்றுப்படை, திருமகள் அச்சகம், சுன்னாகம் |
| 2. | ............................ | (1940) | நானாடகம் |
| 3. | ............................ | (1952) | இரு நாடகம் |
| 4. | சண்முகதாஸ். அ | (1976) | நமது மொழியின் இயல்புகள், பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை நினைவுப் பேருரை - 2, மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பளை. |
| 5. | சண்முகதாஸ். அ மனோன்மணி. ச. | (1984) | தமிழர் திருமண நடைமுறைகள், முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம். |
| 6. | சிவலிங்கராசா. எஸ் | (1984) | வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும், இலக்கிய வளமும், வடமராடசி கல்வி வட்டம், பருத்தித்துறை. |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. ............................ (2003) யாழ்ப்பாணத்து வாழ்வியற் கோலங்கள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு

8. வன்னியகுலம். சி (1986) ஈழத்துப் புனைகதைகளிற் பேச்சு வழக்கு, முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம்.

9. வேலுப்பிள்ளை. க. (1918) யாழ்ப்பாண வைபவ கௌமுகி, ஜயஸ்ரீ சாரதா பீடேந்திரசாலை, வயாவிளான்.

10. Sanmugadas. A (1974) Some aspects of the Tamil spoken in Sri Lanka, Proceedings of the Tamil IV[th] International Tamil Conference/ Seminar, Vol II.

11. ............................ (2001) Papers on Tamil Linguistics, Literature and culture (ed) Dr. S. Sivalingarajah, Prof Sanmugadas Sixty first Birthday Commemoration Volume.

12. Steiner, George (1971) Linguistics and Literature Linguistics at Large, Victor Gellanez Ltd, London.

13. Subathini. S, Ratnamalar. R and Balasubramaniam. R (1998) "Studies in Sri Lankan Tamil Linguistics and Culture", Professor Swaminathan Suseendrarajah Sixty Fifty Birthday Commemoration Volume.

## பின்னிணைப்பு

வடமராட்சிப் பிரதேசத்தில் வழங்கப்படும் சில சிறப்புச் சொற்கள் இங்கு பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| மாராயம் | சங்கதி |
| ஏப்பை | தாவாரம் |
| சாவல் | இவடம் |
| கப்பு | அரக்கு |
| உங்கினை | உத்தரிப்பு |
| கிட்டடி | அப்பிராணி |
| உண்ணானை | உறுவா |
| வெள்ளண | கலாதி |
| அங்கினை | கண்டாயம் |
| சிலமன் | ஏழையெளியது |
| மெய்யே | சித்தாரிப்பு |
| இஞ்சார் | தெண்டிச்சு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலுவட்டையார்
பெடிச்சி / பெட்டை
பெடியன்
பங்கை
அறளை
எப்பன்
இக்கணம்
மெத்த
சாய்
சுணக்கம்
சொல்வளி பறைவளி
அளக்கென்ன நடையென்ன
தண்ணிவென்னி
புறுபுறுப்பு
உதாரது
யாடு (கிளித்தட்டு)
தொளவாரம்
வாரப்பாடு
தீயல் (அவியல்)
கொந்தல்
சாடையாய்
சோலி
பஞ்சி
பிறத்தி
புலுடா
புசத்தல்
ஒறுப்பு
முடை
கொள்ளை
பாறு
கலாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச அபிவிருத்தியும் சமூகமட்ட அமைப்புகளும்

**திரு. சி. கேதீஸ்வரன்** BBA (Hons)
அபிவிருத்தி உதவியாளர்,
பிரதேச செயலகம்,
கரவெட்டி.

உலகில் அனைத்து மக்களும், நாடுகளும் தமது வாழ்க்கை நலன்களை மேம்படுத்திக்கொள்ளவே முனைகின்றன. தனிநபர் ஒவ்வொருவரதும் சமூக, பொருளாதார, கலாசாரத்துறை சார்ந்த வளர்ச்சியினையே அபிவிருத்தி என்பர். இது வளர்ச்சியுடன் தொடர்புபட்ட ஓர் எண்ணக்கருவாகும். அதாவது ஒரு வகையான சாதகமான மாற்றத்தினை குறிக்கும். பிரதேசங்களிலுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதனூடாக பிரதேச மட்டத்தில் சமூக, பொருளாதார, கலாசாரத் துறைகளில் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்தமுடியும்.

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பிரதேச அபிவிருத்தியானது நிதி வழங்குநர்களின் கொள்கைகளில் தங்கியிருக்கின்றது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். அதாவது உலகில் அபிவிருத்தித் திட்டங்களிற்கு நிதி வழங்கும் பாரிய நிறுவனங்களாக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன காணப்படுகின்றன. இவை உருவாக்கப்பட்ட காலத்தில் இருந்து இன்றுவரை வளர்முக நாடுகளின் பிரதேச அபிவிருத்தித் திட்டங்களிற்கு தேவையான நிதியினை நன்கொடைகளாகவும், நீண்டகால சலுகைக் கடன் திட்டங்களின் கீழும் வழங்கிவருகின்றன. அதாவது உலக வங்கியானது 1949ம் ஆண்டும், ஆசிய அபிவிருத்தி வங்கியானது 1966ம் ஆண்டும் உருவாக்கப்பட்டது. அன்று தொடக்கம் இன்றுவரை அபிவிருத்தித்திட்டங்களிற்கு தேவையான நிதியினை வழங்கிவந்தாலும் இவர்களின் ஆரம்பகால நிதி வழங்கல் கொள்கைக்கும் தற்கால நிதி வழங்கல் கொள்கைக்குமிடையே பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதாவது ஆரம்பகாலங்களில் அபிவிருத்தித் திட்டங்களிற்கு தேவையான நிதியானது நிதி வழங்குநர்களால் நேரடியாகவோ அல்லது அரச அலுவலகங்களினூடாகவோ ஒப்பந்தகாரர்கள் அடையாளம் காணப்பட்டு திட்டங்களை நிறைவேற்றும் முறையே காணப்பட்டது. இவ்வாறான திட்ட நிறைவேற்றல் கொள்கைகளில் பாரிய தவறுகள் காணப்பட்டதனை பிற்காலத்தில் இவர்கள் அடையாளம் கண்டார்கள். அதாவது பிரதேசங்களிற்கு பொருத்தமில்லாத சில திட்டங்கள் நிறைவேற்றப்பட்டமை, பிரதேச வளங்கள் சரியாக பயன்படுத்தப்படாமை, பொருத்தமில்லாத இடங்களில் அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டமை போன்ற காரணங்களினால் இவற்றின் பயன்களை மக்கள் முழுமையாக அனுபவிக்கமுடியாத சூழ்நிலை காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்போன்ற காரணங்களினால் இவர்கள் தற்பொழுது நிதி வழங்கும் கொள்கையிலே மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளார்கள். அதாவது பிரதேச மக்களிடம் இருந்து வரும் அபிவிருத்தித் திட்டங்களிற்கு நிதியீட்டம் செய்தல் என்பதாகும். கிராம மக்களினாலே தங்களுடைய கிராமத்துக்கு தேவையான அபிவிருத்தித் திட்டங்கள் அடையாளப்படுத்தப்பட்டு, அவற்றிற்குரிய இடங்களும் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களினாலேயே திட்டங்கள் நிறைவேற்றப்படல்வேண்டும் என்பதாகும். அதாவது மக்கள் பங்கேற்புடனான வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல் ஆகும். தற்போதய எமது அரசாங்கத்தின் மஹிந்த சிந்தனைத் திட்டமும் இம்முறையினையே அடிப்படையாக கொண்டதாக காணப்படுகின்றது. இவற்றின்மூலம் நிதி வழங்கும் நிறுவனங்கள் எதனை எதிர்கொள்கின்றார்கள்? மக்கள் எதனை எதிர்பார்க்கின்றார்கள்? இவ்விரு பகுதியினரின் நோக்கங்களிற்கிடையிலான இடைவெளியினை எவ்வாறு இல்லாது செய்யலாம் என்பன பற்றி ஆய்வுசெய்தல் முக்கியத்துவம் பெறுகின்றது.

## நிதி வழங்குனர்கள்

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் அபிவிருத்திக்கு நிதி வழங்கும் நிதி வழங்குநர்களாக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி என்பனவற்றுடன் அமெரிக்கா, ஜேர்மனி, சீனா, இந்தியா, யப்பான், பிரித்தானியா போன்ற நாடுகளையும் குறிப்பிடலாம். இவர்கள் எமது நாட்டின் பிரதேச அபிவிருத்திக்கு தேவையான நிதியினை நன்கொடைகளாகவும், நீண்டகால சலுகைக் கடன்களாகவும் வழங்கிவருகின்றார்கள். இந்நிதியானது உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கும், வாழ்வாதாரத் திட்டங்களை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

## நிதி வழங்குநர்களின் நோக்கம்

முகாமைத்துவக் கருத்துக்களின்படி நோக்கம் என்பது SMART ஆக இருக்கவேண்டும் எனக் கூறப்படுகின்றது. அதாவது,

*S - Specific* - குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதாக இருக்கவேண்டும்
*M - Measurable* - அளவிடக்கூடியதாக இருக்கவேண்டும்
*A - Attainable* - அடையக்கூடியதாக இருக்கவேண்டும்
*R - Realist* - உண்மையானதாக இருக்கவேண்டும்
*T - Time frame* - குறிப்பிட்ட காலத்தினை கொண்டதாக இருக்கவேண்டும்
எனவும் கூறப்படுகின்றது.

நிதி வழங்குனர்களின் நோக்கம் என்பதனை எடுத்துநோக்குவோமாயின் போரினாலும் இயற்கை அழிவுகளாலும் பாதிக்கப்பட்ட எமது மக்கள் தாமாகவே தமது வாழ்க்கைத்தரத்தினை முன்னேற்றவேண்டும். மக்கள் தொடர்ந்தும் நிவாரண உதவிகளையோ அல்லது அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்த்து வாழ்க்கை நடத்தாது உற்பத்தித்திறனை அதிகரிக்கக்கூடிய வகையில் தொழில்துறைகளை தெரிவுசெய்யவேண்டும். தமது கிராமங்களில் உள்ள வளங்களை சரிவரப் பயன்படுத்தி நிலைபேறான அபிவிருத்தியை பிரதேச மட்டங்களில் காணவேண்டும் என்பதே நிதி வழங்குநர்களின் நோக்கமாகும்.

இதற்காகவே பங்கேற்புடனான கிராமிய ஆய்வு (PRA), பங்கேற்புடனான தேவைக் கணிப்பீடு (PNA) என்பன மேற்கொள்ளப்படுகின்றது. இதன்மூலம் கிராமத்தில் உள்ள மக்களில் அதிகளவானோர் என்ன தேவையினை திட்டங்களை விரும்புகின்றார்களோ அதுவே கிராமத்துக்கு முக்கியமான வேலைத்திட்டம் ஆகும். இதனூடாக கிராமத்தில் வேலைவாய்ப்பை உருவாக்கி உற்பத்தித்திறனை பெருக்கமுடியும். இதனூடாக பிரதேச மட்டங்களில் நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்தமுடியும் என்ற எதிர்பார்க்கையிலேயே நிதியினை வழங்குகின்றார்கள்.

## சமூகமட்ட அமைப்புகள்

மக்களினூடாக செயற்படுத்தப்படுகின்ற திட்டங்களை ஆரம்பிக்கும்பொழுது அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகள் முக்கியத்துவம் பெறுகின்றது. இவ்வாறான அமைப்புகளை சமூகமட்ட அமைப்புகள் என அழைக்கப்படுகின்றது. கிராம அபிவிருத்திச் சங்கம் (RDS), மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் (WRDS), கமக்கார அமைப்புகள் (FO), விளையாட்டு கழகங்கள், சனசமூக நிலையங்கள் என்பன முக்கியமான அமைப்புகளாகும். இவ்வமைப்புகளே மக்கள் சார்பான பல தீர்மானங்களை நிறைவேற்றுவதிலும், திட்டங்களை செயற்படுத்துவதிலும் முக்கியமான பகுதியினராவார். எனவே மக்களினுடைய நோக்கம் என்பதனை விட இவ்வமைப்புகளினுடைய நோக்கம் என்பது முக்கியத்துவம் பெறுகின்றது.

## சமூகமட்ட அமைப்புகளின் நோக்கம்

நிதி வழங்குநர்களின் நோக்கம் நிறைவுபெற வேண்டுமாயின் சமூகமட்ட அமைப்புகளின் நோக்கம் முக்கியத்துவம் பெறுகின்றது. கிராமங்களில் பங்கேற்புடனான தேவை கணிப்பீடுகளின்போது திட்டங்களை முன்னுரிமைப்படுத்துகையில் அத்திட்டமானது ஒரு உற்பத்தித்திறன் சார்ந்ததாக இருக்கவேண்டும். அதாவது செயற்படுத்துகின்ற திட்டமானது கிராம மட்டங்களில் உள்ள வளங்களை பயன்படுத்தி வேலைவாய்ப்புகளை உருவாக்கி அதன்மூலம் கிடைக்கும் இலாபம் மீண்டும் மீண்டும் கிராமத்தில் முதலிடப்பட்டு அந்நிதியானது பெருக்கப்படவேண்டும். இதன்மூலம் மக்கள் எதிர்காலத்தில் தமது வாழ்வாதாரத்தினை தாமே கட்டியெழுப்புவதன் மூலம் சமூக, பொருளாதார, கலாசாரத்துறை சார்ந்த வளர்ச்சியினை ஏற்படுத்தி பிரதேச மட்டங்களில் அபிவிருத்தியினை அடையவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக தென்னைமர வளம் உள்ள ஒரு கிராமத்திலே தென்னந்தும்பு எடுத்து கயிறு திரிக்கும் ஒரு சிறிய தொழில் முயற்சியை உருவாக்குவோமாயின் அக்கிராமத்தில் பலர் நேரடியாக வேலைவாய்ப்பை பெறுவார்கள். மறைமுகமாகவும் பல நன்மைகள் இருக்கின்றன. அதாவது தென்னைமரச் செய்கையாளர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள். தென்னந்தோட்டங்களில் பலர் வேலைவாய்ப்பை பெறுவார்கள். மற்றும் முடிவுப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதில் பலர் வேலைவாய்ப்பை பெறுவார்கள். இவ்வாறு சுழலும் நிதியானது தொடர்ச்சியாக அக்கிராமத்திலே பயன்படுத்த பயன்படுத்த கிராமத்தின் நிதிவளம் பெருகி மக்களின் வாழ்க்கைத்தரமும் உயர்வடையும்.

ஆனால் நடைமுறையில் சமூகமட்ட அமைப்புகளும், மக்களும் PRA, PNA போன்ற ஆய்வுகளின்போது தமக்குரிய திட்டங்களை முன்னுரிமைப்படுத்துகையில் மிகவும் குறுகிய நோக்கத்துடன் சிந்தித்து தமது தேவைகளை முன்னுரிமைப்படுத்துவதனை போன்ற கட்டட வேலைகளையே அதிகமாக முன்னுரிமைப்படுத்துவார்கள். திட்டகாலம் முடிந்ததன் பின்னர் இவை பயன்படுத்தபடாது மூடிக் கிடப்பதையும் அவதானிக்கமுடியும். எனவே இவற்றிற்கு பயன்படுத்தப்படும் நிதியானது கிராமங்களில் உற்பத்தித்திறனை ஏற்படுத்தாது முடக்கப்பட்டிருக்கும் நிலையே காணப்படுகின்றது.

## சமூகமட்ட அமைப்புகளின் தெரிவு

தற்போதய அபிவிருத்திக் கொள்கைகளின்படி பிரதேச அபிவிருத்தியில் சமூகமட்ட அமைப்புகளின் பங்களிப்பு முக்கியத்துவம் பெறுவதனால் மக்கள் இவ்வமைப்புகளை தெரிவுசெய்யும் பொழுது பொறுப்புடன் செயற்படவேண்டும். கிராமத்தின்மீது அக்கறை கொண்டவர்களாகவும், பொதுநலன் கொண்டவர்களாகவும், நல்ல தலைமைத்துவ ஆற்றல் கொண்டவர்களாகவும் தெரிவுசெய்ய வேண்டும். இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட அமைப்புகள் முற்றுமுழுதாக கிராமத்தின் நிலைபேறான அபிவிருத்தி என்பதனை தமது இலக்காக கொண்டு செயற்படவேண்டும். ஆனால் இன்று பல சமூகமட்ட அமைப்புகள் தமது சுய இலாபத்தினை கருத்தில்கொண்டு ஒப்பந்த வேலைகளை பெற்றுக்கொள்வதில் காட்டுகின்ற ஆர்வம் பிரதேச அபிவிருத்தியில் காட்டுவதில்லை என்பது கவலையளிக்கும் விடயமாகவுள்ளது.

## நோக்க இடைவெளி

நிதி வழங்குநர்களின் நோக்கத்திற்கும் சமூகமட்ட அமைப்புகளின் நோக்கத்திற்குமிடையே முரண்பாடு காணப்படுகின்றது. அதாவது சமூகமட்ட அமைப்புகள் குறுகிய பார்வையுடனும், சுயநலத்துடனும் அபிவிருத்தித் திட்டங்களை அணுகுகின்றார்கள். இதனால் நிதி வழங்குநர்கள் எதிர்பார்க்கும் பிரதேசத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைபேறான அபிவிருத்தியென்பது எட்டாக்கனியாகவே செல்கின்றது. எனவே இந்த நோக்க இடைவெளியை இல்லாது செய்வதே அரச, அரச சார்பற்ற அலுவலர்களின் பாரிய சவாலாகவுள்ளது.

## சமூகமட்ட அமைப்புகளின் தலைமைத்துவம்

மக்கள் பங்கேற்புடனான திட்டங்களை நிறைவேற்றுகின்ற சமூகமட்ட அமைப்புகளின் தலைமைத்துவம் என்பது முக்கியத்துவம் பெறுகின்றது. ஒரு கருமத்தினை ஒருவர் எவ்வாறு ஆற்றவிரும்புகிறாரோ அதேபோல் ஏனையோரையும் தொழிற்படவைக்கும் ஒரு கருமமே தலைமைத்துவம் என வரையறுக்கப்படும். இத்தலைவர்கள் தாம் விரும்பியவாறு ஏனையோரை இயங்கவைக்கும் நேர்கணியத் தலைமைத்துவத்தினையும், ஏனையோர் விரும்பியவாறுதான் நடாத்துகின்ற எதிர்கணியத் தலைமைத்துவத்தினையும் பின்பற்றமுடியும் என்றாலும் நடைமுறையில் நேர்கணியத் தலைமைத்துவம் பெரிதும் விரும்பப்படுகின்றது.

தலைமைத்துவமானது ஒருவர் கொண்டிருக்கும் வலுவினால் தீர்மானிக்கப்படும் உதவியாளர்களை விட தலைவர் கூடிய வலுவினை கொண்டிருப்பதனால் அவர் ஏனையோர் மீது செல்வாக்கினை செலுத்திவிட முடியும். இச் செல்வாக்கு ஏனையோரின் நடத்தையிலே விரும்பிய மாற்றங்களை கொண்டுவர வகைசெய்யும்.

நல்ல தலைவரின் பண்புகளாக பின்வருவனவற்றினை கூறலாம்.

1. தலைவர் எப்பொழுதும் மானிடத்திறன் கொண்டவராக இருத்தல்வேண்டும். அதாவது அவர் எத்தகைய முடிவை எடுக்கும்போதும் மற்றவர் நிலைக்குள்ளாகும் பண்பைக் கொண்டிருப்பார்.
2. தலைவர் தொழில்நுட்பத்திறன் கொண்டவராக இருத்தல்வேண்டும். இதன்படி அவருக்கு தெரியாத வேலையென அந்நிறுவனத்தில் இருக்கமுடியாது.
3. தலைவர் எப்பொழுதும் நோக்க உணர்வுடன் பணியாற்றுதல் வேண்டும். எக்காரணம்கொண்டும் அவர் அமைப்பின் நோக்கத்தில் இருந்து விலகிச்செல்லுதல் ஆகாது.
4. ஒரு தலைவர் தொடர்பாடல் திறன் கொண்டவராக இருத்தல்வேண்டும். இதன்படி வழங்கப்பட்ட செய்தி பயனுள்ளதாக அமைய என்றுமே பின்னூட்டியை பின்பற்றிவருதல் வேண்டும்.
5. ஒரு தலைவர் பக்கச் சார்பின்மையை என்றுமே கடைப்பிடித்தல் நடுநிலையாளன் என்ற பண்பையும் கொண்டுவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. தலைவர் எப்பொழுதும் விமர்சனங்களை ஏற்கும் பண்பு கொண்டவராக இருத்தல் வேண்டும். இதன்படி அவரது தவறுகள் உணரப்படுவதும், திருத்தப்படுவதும் சாத்தியமாகும்.
7. தலைவர் எப்பொழுதும் தீர்மானமெடுக்கும் திறனைக் கொண்டிருக்க வேண்டும். இது ஜனநாயகமுறையில் ஏனையோரின் ஆலோசனையை பெற்று தீர்மானமெடுப்பதனை குறிக்கும்.
8. பொறுப்புகளையும், ஆபத்துக்களையும் ஏற்கின்ற மனோநிலையைத் தலைவர் கொண்டிருக்கவேண்டும்.
9. பிறர் தன்னை உதாரணம் காட்டி பின்பற்றக்கூடியவாறு நடத்தல் வேண்டும்.

## யப்பானிய முகாமைத்துவம் (Japanes Management)

சமூகமட்டத் தலைவர்களிற்கு யப்பானிய முகாமைத்துவம் பற்றி எடுத்து விளக்குவது பொருத்தமானதாக அமையும். ஏனெனில் இன்றைய உலகில் பிரபல்யம் பெற்றுவரும் ஒரு முகாமைத்துவமாக இது கருதப்படுகின்றது. அதாவது மேலைத்தேய நாடுகளான இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் பின்பற்றப்படு முகாமைத்துவ கோட்பாடுகளைவிட யப்பானிய முகாமைத்துவம் பல விசேட பண்புகளை கொண்டதாக அமைந்துள்ளது. இரண்டாம் உலக மகா யுத்தத்தில் பெருமளவு அழிவைச் சந்தித்த யப்பான் இன்று வளர்ச்சியடைந்த நாடுகளிற்கு நிகரான பொருளாதாரத்தினை கொண்டிருப்பதற்கு காரணம் அது கடைப்பிடித்துவரும் முகாமைத்துவ கோட்பாடுகளே ஆகும். யப்பானிய நிறுவனங்கள் புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்தி உற்பத்தியை அதிகரிப்பதற்கும் அதனூடே உலக சந்தையில் பிரதான ஏற்றுமதியாளராக திகழ்வதற்கும் யப்பானிய முகாமைத்துவம் பெரிதும் உதவியுள்ளது. இதன் காரணமாகவே அமெரிக்கா கூட யப்பானிய முகாமைத்துவத்தில் சில கோட்பாடுகளை கடைப்பிடிக்க தயாராகவுள்ளது. பின்வரும் 07 சிறப்பியல்புகள் யாப்பானிய முகாமைத்துவத்தில் உள்ளடக்கப்படுகின்றன.

### 1. கூட்டுத் தீர்மானமெடுத்தல் :

இது நிறுவனமொன்றின் அல்லது அமைப்பொன்றின் தீர்மானத்தினை எடுப்பதில் பலரைப் பங்குகொள்ளவைக்கும் முறையாகும். யப்பானிய முகாமைத்துவத்தில் இதனை "றிங்கி முறைமை" (Ringi system) என கொள்வர். இந்தமுறையிலே தீர்மானத்தினை நடைமுறைப்படுத்த பொறுப்பானவர்கள் பலர் சந்தித்து தமது கருத்துக்களை தெரிவிப்பதன்மூலம் பொருத்தமான தீர்மானம் ஒன்றினை எடுப்பர்.

இதன்படி நிறுவனங்களிலே இடைத்தரமட்ட முகாமையாளர் தீர்மானங்களை உருவாக்கி மேல்மட்டத்தவருக்கு அனுப்பிவைக்கும் கடமையைக் கொண்டிருப்பர். இம்முறையிலே காலதாமதமான தீர்மானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறக்கூடும் என்றாலும் எடுக்கப்படும் தீர்மானம் தவறுகளின்றி பலரது கருத்துக்களிற்கு மதிப்பளிப்பதாக அமைந்திருக்கும்.

**2. ஊழியர் நலனில் அக்கறை காட்டுதல் :**

இது ஊழியர்களின் தனிப்பட்ட நலனில் முகாமை அக்கறை காட்டவேண்டும் என்ற கோட்பாட்டை குறிப்பதாகும். இதன்படி ஊழியர்களின் வீட்டுவசதி, அவர்களின் போக்குவரத்து வசதி, பிள்ளைகளின் கல்வி வசதி போன்றவற்றில் நிறுவனமே அக்கறை காட்டும். இதனால் ஊழியர்களின் தனிப்பட்ட பிரச்சனைகளை தீர்த்துவைப்பதன்ஊடே அவர்களிடமிருந்து முழு ஒத்துழைப்பையும் பெறமுடியும் என்பதில் யப்பானிய முகாமைத்துவம் அக்கறை கொண்டிருக்கும். இதனூடாகவே முதலில் வேலையும் பின்னர் குடும்பமும் என்ற கொள்கையை ஊழியர்கள் கடைப்பிடிக்க முடிவாகின்றது.

**3. தரச் சுற்றுகள் (Quality Circle) :**

இது உற்பத்திப் பொருளின் தரத்தினை தொடர்ச்சியாக உயர்த்துவதற்கென கையாளப்படும் நடவடிக்கையாகும். இதன்படி நிறுவனத்தின் ஊழியர்கள் நாளாந்தம் வேலை நேரத்தின் பின்னர் சந்தித்து தரத்தினை உயர்த்துவதற்கான ஆலோசனைகளை வழங்குவர். இதனூடாகவே உற்பத்திப் பொருளின் தரம் தொடர்ச்சியாக உயர்ந்துவிடுவதுடன் உற்பத்தியின் வேகமும் இலாப உழைப்பும் நிறுவனங்களில் உயர்வடையும்.

**4. பதவி உயர்வு :**

ஊழியர்களிற்கு வழங்கப்படும் பதவியுயர்வு திறமையில் மட்டும் தங்கியிருக்காது அவர்களின் விசுவாசத்தினையும் உள்ளடக்கியிருக்கவேண்டும் என கூறப்படுகின்றது. அத்துடன் இப்பதவியுயர்வுகள் தனியே விரைவுத்தன்மையை கொண்டிருக்காது அனுபவத்தினை பெறும் வகையில் ஆறுதலாகவே வழங்கப்படவேண்டும் என யப்பானிய முகாமைத்துவம் கூறுகின்றது. இதன்படி விசுவாசம் கொண்ட ஒருவர் குறித்த நிறுவனத்திலே பதவியுயர்வை பெறுவர் என்றும் அதனூடாக அவரிடம் அர்ப்பணிப்பு மனப்பான்மை இருக்கமுடியும் என்றும் கருதப்படுகின்றது.

**5. செலவு குறைப்பு தந்திரோபாயம் (Cost reduction strategy)**

இது உற்பத்திச் செலவுகளை குறைப்பதற்கான தந்திரோபாயங்களை யப்பானிய முகாமை அறிமுகப்படுத்துகின்றது என்பதாகும். இதனையே *"Just in time" (JIT)* தந்திரோபாயம் எனக் கொள்வர். இத் தந்திரோபாயத்தின்படி எப்பொழுது முடிவுப் பொருட்களிற்கான கட்டளை பெறப்பட்டுள்ளதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது அது உற்பத்தி செய்து வழங்கப்படும் என்பதாகும். அதேபோல் எப்பொழுது மூலப்பொருள் தேவையோ அப்பொழுது அம் மூலப்பொருள் கிடைக்க வகை செய்யப்படும். இதனால் களஞ்சியத்தில் பொருட்களை சேமிக்கும் பிரச்சினையும் மூலதனத்தினை முடக்கும் பிரச்சினையும் இல்லாமல் செய்யப்பட்டு செலவுகள் இழிவுபடுத்தப்படும்.

**6. கூட்டுப் பொறுப்பு (Collective Responsibility) :**

இது ஒரு கருமத்தினை நிறைவேற்றுவது சம்பந்தமாக பலர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற நிலையை வலியுறுத்துவதாகும். இதனூடாக ஒவ்வொருவரும் ஒரு கருமத்தினை நிறைவேற்றுவதில் அக்கறையுடன் தொழிற்படவேண்டுமென்பது யப்பானிய முகாமைத்துவத்தின் கருத்தாகும்.

**7. ஆயுட்கால வேலைவாய்ப்பு (Life time Employment) :**

இது ஒருவர் இறக்கும்வரை வேலைகளை வழங்கவேண்டுமென்ற ஒரு வகை கோட்பாடு ஆகும். இதற்கமைய இளைப்பாறும் வயதெல்லையை யப்பானிய முகாமையும் வரையறுத்துக்கொள்ளவில்லை. ஒருவருடைய அனுபவம் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அவசியமென்று கருதப்படுவதனாலே யப்பானிய நிறுவனங்கள் தனது ஊழியர் எவரையும் இளைப்பாறும்படி கட்டாயப்படுத்துவதில்லை.

எனவே மேலே கூறப்பட்ட யப்பானிய முகாமைத்துவத்தில் உள்ள 7 விடயங்களையும் எந்தவொரு நிறுவனங்களோ அல்லது அமைப்புகளோ பின்பற்றி அவற்றின் நன்மைகளை அனுபவிக்கமுடியும். மேலும் மக்கள் பங்கேற்புடனான அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுகின்ற சமூகமட்ட அமைப்புகள் மேற்படி விடயங்களை சரியாக கையாள்வதன்மூலம் பிரதேச அபிவிருத்திக்கென ஒதுக்கப்படும் நிதியை பயனுள்ளதாக பயன்படுத்தி நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்தமுடியும்.

**பங்கேற்றல்**

பங்கேற்பு என்பது மக்களை பங்காளர்களாகவும், எல்லோரையும் சமமானவர்களாகவும் அபிவிருத்தியில் உள்வாங்கும் ஒரு முறையாகும். இதனடிப்படையில் மக்கள் அபிவிருத்தியின் சிக்கல் தன்மைகளை அடையாளம் காணுதலும் பின்பு அவற்றினை நீக்குவதற்கான திட்டங்களை திட்டமிடுதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் மதிப்பிடுதல் என்பனவற்றில் ஈடுபடுத்துதலாகும்.

பங்கேற்பு என்பது பொதுவான குறிக்கோளை அடைவதை நோக்கமாக கொண்ட ஒட்டுமொத்தமான நிலையான செயற்பாடுகளை குறிக்கும். விசேடமாக அபிவிருத்தியின் நன்மைகளை கொண்டதாக அமையும் இலக்கு குழுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியின் நடவடிக்கைகளால் வரும் பயன்களை பகிரக்கூடிய நிலையை நோக்கி நகர்த்தலாகும். பங்கேற்பு என்பதன்கீழ் பங்களிப்பு, நிறுவகப்படுத்தல், சக்தியுள்ளவர்களாக்குதல் என்பவை உள்ளடங்குகின்றன.

பங்களிப்பு என்பது கிராமங்களில் நடைபெறுகின்ற அபிவிருத்தித்திட்டங்களில் மக்கள் தங்களுடைய மனிதவலு, ஏனைய வளங்களை வழங்குவதை குறிக்கின்றது. இவற்றினை அவர்கள் வழங்குவதனால் எதிர்காலத்தில் அத்திட்டங்களை பயன்படுத்தும்போது அவை தங்களுடையது என்ற நிலைப்பாட்டினை எடுக்க ஏதுவாகின்றது. இதனால் பராமரிப்பு நல்ல முறையில் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நிறுவகப்படுத்தல் என்பது மக்களை குழுக்களாக வகுத்தல், கூட்டுறவு நடவடிக்கைகளில் ஈடுபடச்செய்தல் என்பவற்றினைக் குறிக்கும். அதாவது மக்களினுடைய நோக்கம், கொள்கை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்களிற்கு பொருத்தமானவர்களை இணைத்து சிறு குழுக்களை உருவாக்குவதன் மூலம் மக்களிடம் தலைமைத்துவப் பண்பினை உருவாக்கமுடியும்.

சக்தியுள்ளவர்களாக்குதல் என்பது நிறுவகப்படுத்தலின்கீழ் உருவாக்கப்பட்ட சிறு குழுக்களை வைத்து சுழற்சி முறைக்கடன், சிறுகடன் திட்டங்களை செயற்படுத்துவதும் மற்றும் அவர்களிடையே சேமிப்பு பழக்கத்தினை உருவாக்குவதையும் குறிக்கின்றது. இதன்மூலம் அவர்கள் நிதி, கடன்கள் என்பனவற்றில் சுய முகாமைத்துவத்தினை உருவாக்கமுடிகின்றது.

## சமூக வலுவூட்டல் (Community mobilization)

நிதி வழங்குநர்களின் நோக்கத்திற்கும் சமூகமட்ட அமைப்புகளின் நோக்கத்திற்குமிடையேயுள்ள இடைவெளியானது சமூகவலுவூட்டல் செயற்பாட்டின்மூலம் இல்லாது செய்யப்படல்வேண்டும். சமூக வலுவூட்டல் என்பது ஓர் வலுவற்ற சமூகத்தினை வலுவுள்ள சமூகமாக மாற்றுவதனைக் குறிக்கும். வலுவற்ற சமூகம் என்பது தமது தேவைகள், உரிமைகள், கடமைகள் என்பனவற்றினை அடையாளம் காணமுடியாமலும் அவற்றினை பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகள் தெரியாமலும் இருக்கின்ற ஒரு சமூகத்தினையே குறிக்கும். எனவே சமூக வலுவூட்டல் என்பது குறித்த இலக்கினை அடைவதற்கு மக்கள் பங்கேற்பைத் தூண்டும் செயற்பாடு எனவும் கொள்ளலாம். இது சமூகத்துடன் தொடர்புடைய தீர்மானங்களை மேற்கொள்வோர், கொள்கை வகுப்பாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், கல்விமான்கள், சமயக்குழுக்கள், தனியார் துறை, பொதுமக்கள் மற்றும் தனி நபர் போன்ற எல்லாப் பிரிவினரையும் உள்ளடக்கியதாக அமையும். இது ஒரு உரையாடல், சமரசப்பேச்சு, மக்களுடைய தேவைகளை கருத்தில்கொண்டு மேற்கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிணைந்து பூர்த்திசெய்தல் போன்றவற்றை கொண்ட செயன்முறையாகும். எனவேதான் இன்று அரச சார்பற்ற நிறுவனங்களிலும் மற்றும் திட்ட அலுவலங்களிலும் சமூக வலுவூட்டாளர்கள் அல்லது சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்கள் என்ற பதவி முக்கியத்துவம் பெறுகின்றது. நிதி வழங்குநர்களும் சமூக வலுவூட்டல் என்கின்ற செயற்பாட்டிற்கு அதிகளவான நிதியினை செலவுசெய்கின்ற நிலைப்பாடும் காணப்படுகின்றது.

**சமூக வலுவூட்டலுக்குரிய துளிகள்**

மக்களிடம் செல்லுங்கள்
அவர்களுடன் வாழுங்கள்
அவர்களிடம் இருந்து கற்றுக்கொள்ளுங்கள்
அவர்களிடம் அன்பு செலுத்துங்கள்.

அவர்களிற்கு தெரிந்தவற்றுடன் ஆரம்பியுங்கள்
அவர்களிடம் உள்ளவற்றை கொண்டு கட்டியெழுப்புங்கள்
ஆனால் நல்ல தலைவர்களுடன்

குறிப்பிட்ட வேலை முடிந்ததும்
மக்கள் சொல்வார்கள்
"நாங்களாகவே இதை செய்துமுடித்தோம்" என்று

**சமூக வலுவூட்டலின் நோக்கம்**

1. மக்களிடம் மறைந்துள்ள ஆற்றல்களை உணரச்செய்தல்
2. மக்கள் தங்கள் வளங்களை நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி பயன்படுத்தத் தூண்டுதல்.
3. சுய ஆற்றலையும் செயற்றிறனையும் வளர்த்தல்.
4. நல்லாட்சியினை மேம்படுத்துதல் (*Enhancing good governance*)
5. உள்ளூர் சந்தைப்பொருளாதாரத்தில் இணைய உதவுதல்.

போன்றன சமூக வலுவூட்டலின் பிரதான நோக்கங்களாகும். இதன்மூலம் நிதி வழங்குநர்களின் நோக்கத்துக்கும், சமூக மட்ட அமைப்புகளினது நோக்கத்திற்கும் இடையேயுள்ள இடைவெளியை இல்லாது செய்யலாம். இவற்றிற்கென விசேடமாக நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களே சமூக வலுவூட்டாளர்கள் (*community mobilizers*) என அழைக்கப்படுகின்றார்கள். இவர்கள் அர்ப்பணிப்பு மனப்பான்மையுடனும் பொறுப்புணர்வுடனும் சேவையாற்றுவார்களேயாயின் சமூக மட்ட அமைப்புகளின் நோக்கம் சரியான பாதையில் செல்வதனை உறுதிப்படுத்தமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக வலுவூட்டாளரின் பங்கு

நிதி வழங்குநர்களின் நிதியானது பயன்படுத்தப்படுகின்ற திட்டகாலத்தில் சமூக வலுவூட்டாளர்களின் பங்கு பின்வரும் வகைகளில் முக்கியத்துவம் பெறுகின்றது.

**1. இணைப்பாளராக செயற்படல் :**

சமூக வலுவூட்டாளர் திட்டகாலத்தில் திட்ட கிராமங்களில் ஒரு இணைப்பாளராக பல்வேறு பங்குகளை ஏற்கவேண்டியுள்ளது. திட்டத்தின் பார்வையில் இவரே கிராமத்தவர்களையும், ஆர்வக் குழுவையும் (stake holders) இணைக்கின்றவர். திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் பங்காளிகளிற்கிடையில் நல்ல உறவை ஏற்படுத்துவதும் மேம்படுத்துவதும் முக்கியமாகும்.

**2. நெறிப்படுத்துனராக செயற்படல் :**

நெறிப்படுத்துனர் என்றவகையில் விவேகமுள்ள பங்கினை திட்டகாலத்தில் வகிக்கவேண்டும். அதாவது தான் செய்வதல்ல மக்கள் தங்கள் இலக்கை திட்டமிட்டபடி அடைய நெறிப்படுத்தவேண்டும்.

**3. வலுப்படுத்துனராக செயற்படல் :**

திட்டமிடல், நடைமுறைப்படுத்துதல், கண்காணிப்பு செய்தல், விழிப்புணர்வூட்டல் போன்ற நடவடிக்கைகளில் மக்களை ஈடுபடுத்துதல், நடத்தை மற்றும் மனநிலை மாற்றங்களை ஏற்படுத்துதல் மற்றும் நேர் சிந்தனையை (positive Attitude) உருவாக்குதல் போன்ற கருமங்களை செயற்படுத்துதல்.

**4. சமூக தொடர்பாளராக செயற்படல் :**

அரச, தனியார், அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூகங்கள் என்பனவற்றிற் கிடையிலான சமூக வலைப்பின்னலை ஏற்படுத்துவதும் மேம்படுத்துவதும் மிக முக்கிய பங்காகும்.

**5. பரிந்துரைத்தல் :**

முகாமைத்துவத்திற்கு தேவையான தகவல்களை வழங்குவதன்மூலம் கொள்கை மாற்றங்களை ஏற்படுத்துவதும் வளங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதும் சமூக வலுவூட்டுனரின் ஒரு பங்காகும்.

எனவே பிரதேச மட்டங்களில் உள்ள சமூக மட்ட அமைப்புகள் நிதி வழங்குனர்களின் நிதியினைப் பயன்படுத்தி தமது பிரதேசத்திற்கு பொருத்தமான அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்குவதன்மூலம் பிரதேச அபிவிருத்தியை உருவாக்கமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சிப் பிரதேசச் சிறுகதை எழுத்தாளர்கள் - ஒரு சுருக்க அறிமுகம்

***தெணியான்***

தமிழிற் சிறுகதை இலக்கியம் தோன்றி ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலம் கடந்துவிட்டது. தமிழ்ச் சிறுகதையின் பிதாமகர் வ. வே.சு. ஐயர் என்று குறிப்பிடுவது இலக்கிய வரலாறாகிப் போயிற்று. ஐயரின் 'குளத்தங்கரை அரச மரம்' (1915 - 1918) தமிழிற் தோன்றிய முதற் சிறுகதையெனக் கொள்ளப்படுகின்றது. ஆனால் சிறுகதை என்னும் புதிய இலக்கியத்தைத் தமிழுக்கு அறிமுகஞ் செய்தவர் சுப்பிரமணிய பாரதியார் என்றே குறிப்பிடப்படவேண்டும். பாரதியார் எழுதிய "ராஜபுத்திர கன்னிகையின் சரித்திரம்" என்னும் சிறுகதை 1905 இல் வெளிவந்திருக்கின்றது. இதுவே தமிழில் வெளிவந்த முதற் சிறுகதை. சிறுகதைக்குரிய உருவ நேர்த்தி சிறப்பாகப் பாரதியாரின் சிறுகதையில் அமையாத காரணத்தினால், ஐயரின் "குளத்தங்கரை அரசமரம்" தமிழின் முதற் சிறுகதையென ஏற்றுக்கொள்ளப்படவேண்டியதாயிற்று. பாரதியார், ஐயர் இருவரையும் தொடர்ந்து சிறுகதைத் துறைக்கு வந்தவர் அ. மாதவையா ஆவார். இவர்கள் மூவரும் தமிழ்ச் சிறுகதையின் ஆரம்ப காலப் படைப்பாளிகள். இவர்களைத் தொடர்ந்து தமிழில் சிறுகதை இலக்கியத்தைச் செழுமைப்படுத்தி உன்னத நிலைக்கு இட்டுச் சென்றவர்கள் புதுமைப்பித்தன், கு. ப.ரா., மௌனி ஆகிய மூவரும் எனலாம்.

தமிழ்நாட்டு எழுத்தாளர்களுக்கு முன்னோடியாக ஈழத்தவரான ஆனால்ட் சதாசிவம்பிள்ளை சிறுகதைகளை எழுதினார் என்று சொல்லப்படுகின்றது. ஈழத்தின் முதலாவது தமிழ்ப் பத்திரிகையான 'உதயதாரகை'யின் ஆசிரியராக 1860 இல் இவர் விளங்கினார். இக்காலகட்டத்தில் 'உதயதாரகை'யில் இவர் எழுதிய சிறுகதைகள் 'நன்னெறிக் கதாசங்கிரகம்' என்னும் தொகுதியாக வெளிவந்திருக்கின்றது. இவரைத் தொடர்ந்து பண்டிதர் சந்தியாகோ சந்திரவர்ணம்பிள்ளை, தம்பி முத்துப்பிள்ளை, ஐதுருஸ் லெப்பை மரைக்கார் ஆகிய ஈழத்தவர்கள் சிறுகதைகளைப் படைத்தார்கள்.

நவீன இலக்கிய வடிவங்களான சிறுகதை, நாவல் என்பன தமிழுக்குப் புதுவகை இலக்கியப் படைப்புகளாக அறிமுகமாயின. ஆங்கில மொழிப் பரிச்சயமும் புதுமை நாட்டமும் கொண்ட சிலர் சிறுகதை என்னும் இலக்கியத்தினை ஆங்கிலமொழி மூலம் கற்று, அதனைத் தமிழுக்கு அறிமுகஞ் செய்தனர். அத்தகைய முன்னோடி எழுத்தாளர்களாக ஈழத்தவர்களுள் இலங்கையர்கோன், சம்பந்தன், சி. வைத்திலிங்கம் ஆகியோர் கொள்ளப்பட்டுவருகின்றார்கள். இவர்களது ஆரம்பகாலப் படைப்புகள் தமிழகத்துச் சஞ்சிகைகளிலேயே வெளிவந்தன. இவர்களது அக்காலச் சிறுகதைகள் ஈழத்தவர்கள் எழுதியதால் ஈழத்துச் சிறுகதைகளெனப் பெரும்பாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்பெற்றனவே அல்லாது, ஈழத்துச் சிறுகதைகள் என்று கொள்ளத்தகுந்த கதாம்சங்களை அப்படைப்பில் வெளிப்படுத்தவில்லை.

ஈழத்து மண்வாசனையுடன் ஈழத்து மக்கள் வாழ்வினைச் சித்திரிக்கும் சிறுகதைகள் யாழ்ப்பாணத்தில் இருந்து **1930** ஜூன் **22** முதல் வெளிவர ஆரம்பித்த 'ஈழகேசரி'யிலே **1933** தொடக்கம் வெளிவர ஆரம்பித்தன. 'ஈழகேசரி' இல் ஈழத்தின் பல பாகங்களில் இருந்தும் எழுத்தாளர்கள் பலர் சிறுகதைகளை எழுதினார்கள்.

பிரதேசம் சார்ந்த நிலையில் வடமராட்சியைச் சேர்ந்த எழுத்தாளர்கள் சிலரும் 'ஈழகேசரி' இல் சிறுகதைகள் எழுதலாயினர். பிரதேச இலக்கியம் அல்லது வட்டார இலக்கியம் என்பது தமிழ் இலக்கியத்தின் ஒருவகைப்பாடாக இன்று கருதப்படுகின்றது. ஒரு பிரதேசத்தின் அல்லது வட்டாரத்தின் மக்கள் வாழ்வு, தொழில், சமூக உறவுகள், பேச்சுவழக்கு, வழிபாடு, சடங்குகள், கலைகள், மரபுகள் என்பன அப்பிரதேசம் அல்லது வட்டாரம் சார்ந்த இலக்கியங்களுக்கூடாக வெளிப்படுவதனைக் காணலாம். ஈழத்தில் நாவல் இலக்கியமே பிரதேச இலக்கியமென வகுத்து இனங்காணப்படுகின்றது. சிறுகதை இலக்கியமும் அவ்வாறு பகுத்து இனங்காணப்படலாம். தமிழகத்தில் ராஜநாராயணனின் சிறுகதைகள் வட்டார இலக்கியங்களாக அங்கீகரிக்கப்படுகின்றன.

இந்தவகையில் வடமராட்சியைச் சேர்ந்த சிறுகதை எழுத்தாளர்களை வகைப்படுத்தி அறிமுகஞ்செய்து வைப்பது இக்கட்டுரையின் அடிப்படை நோக்கமாகும். இவர்கள் வடமராட்சியின் மண்வாசனையுடன் சிறுகதை இலக்கியம் படைத்தவர்கள் எனலாம்.

வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த சிறுகதைப் படைப்பாளிகளின் முன்னோடி எழுத்தாளர்களாக ஆனந்தன் (பண்டிதர் க. சச்சிதானந்தன்), கு. பெரியதம்பி, சில்வரம்புலி (சைவப்புலவர் சி. வல்லிபுரம்) ஆகிய மூவரையும் கொள்ளலாம். ஆனந்தன், சில்வரம்புலி ஆகிய இருவரும் 'ஈழகேசரி'யிலும், கு. பெரியதம்பி 'மறுமலர்ச்சி'யிலும் சிறுகதைகளை எழுதினர்.

ஆனந்தன் (பண்டிதர் க. சச்சிதானந்தன்) தந்தைவழியில் பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்தவர். மாணவப் பருவத்தில் சிலகாலம் தும்பளையில் வாழ்ந்தவர். நாட்டுநிலைமை காரணமாகப் பிறந்த இடமான காங்கேசன்துறை மாவிட்டபுரத்தில் இருந்து இடம்பெயர்ந்துவந்து தும்பளையில் வாழ்ந்துவந்தவர். இவர் **1938 - 1944** வரை பத்துச் சிறுகதைகள் ஈழகேசரியில் எழுதி இருக்கின்றார். அதன்பின்னர் இவரது கவனம் கவிதையின் பக்கம் திரும்பலாயிற்று. இவர் எழுதிய "தண்ணீர்த் தாகம்" **(1939)** என்னும் சிறுகதை பற்றி யாழ்ப்பாணச் சமூகத்தின் சாதியக் கொடுமையை முதன்முதல் கருப்பொருளாக்கி மக்கள்முன் தூக்கிவைத்தார் அவர் எனச் செங்கைஆழியான் விதந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகின்றார். ஆனால் இக்கருத்து மறுபரிசீலனைக்கு உள்ளாக்கப்படவேண்டிய ஒன்று. யாழ்ப்பாணச் சாதியம் பிராமணிய ஆதிக்கமன்று. பிராமணிய ஆதிக்கத்தை ஆக்கிரோசமாக எதிர்த்து அக்காலத்திற் செயற்பட்ட ஈ. வே. ராமசாமிப் பெரியாரின் பாதிப்பினால் ஆனந்தன் அச்சிறுகதையை எழுதி இருக்கவேண்டும் என்பது ஏற்புடைய கருத்தாக அமையுமெனலாம். எவ்வாறாயினும் வர்ணப்பாகுபாட்டுக்கெதிரான ஒரு சிறுகதையை எழுதி இருக்கும் ஆனந்தன் பாராட்டுக்கு உரியவர்தான்.

பருத்தித்துறை புலோலியிற் பிறந்த கு. பெரியதம்பி மறுமலர்ச்சிப் பண்ணையில் வளர்ந்தவர். மொத்தம் ஏழு சிறுகதைகளை எழுதி இருக்கும் இவர், 1946 - 1948 வரையுள்ள காலத்துள் மறுமலர்ச்சியில் ஆறு சிறுகதைகளை எழுதியுள்ளார்.

சில்வரம்புலி (சைவப்புலவர் சி. வல்லிபுரம்) கரவெட்டி, வதிரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 'தெளிவு' என்னும் ஒரு சிறுகதை மாத்திரம் இரு ஈழகேசரி இதழ்களில் தொடர்ச்சியாக வெளிவந்திருக்கின்றது. ஆலயப் பிரவேசத்தை மையப் பொருளாகக் கொண்ட இச் சிறுகதை அக்காலத்தில் (1947) எழுதப்பெற்ற சாதியம் பற்றிய சிறுகதை என்ற வகையில் தனி முக்கியத்துவம் பெறுகின்றது.

வடமராட்சியின் முன்னோடி எழுத்தாளர்கள் மூவரையும் தொடர்ந்து ஐம்பதுகளில் சிறுகதைத்துறைக்கு வந்தவர்கள் என். கே. ரகுநாதன், ஈழத்துச்சோமு (என். சோமகாந்தன்), கே. வி. நடராஜன், புலோலியூர் க. தம்பையா ஆகிய நால்வரும் ஆவர். பருத்தித்துறை, புலோலியில் (வராத்துப்பளை) பிறந்த என். கே. ரகுநாதன் முற்போக்கு இலக்கியம் எழுச்சிபெற்று விளங்கிய காலத்தில் சிறுகதை எழுத ஆர்மபித்தவர்களுள் முக்கியமான ஒருவர். அக்காலத்தில் கலை அழகுடன் சிறுகதைகளைப் படைத்தவரெனப் பாராட்டப்பெற்றவர். சாதியக் கொடுமைக்கு எதிராக நையாண்டி இழையோடச் சிறுகதைகளைப் படைத்தவர். "நிலவிலே பேசுவோம்" இவரது சிறுகதைத் தொகுதி, பின்னர் "தசமங்கலம்" என்னும் தொகுதியொன்றும் வெளிவந்திருக்கின்றது.

இக் காலகட்டத்தில் சிறுகதைகள் படைக்கத் தொடங்கிய இன்னொரு எழுத்தாளர் கே. வி. நடராஜன். உடுப்பிட்டி, வல்வெட்டியில் பிறந்த இவர், யாழ்ப்பாணத்தாரின் அந்தரங்கமான பகுதிகளை மிக நுட்பமாகச் சித்திரிக்கும் சிறுகதைகளைப் படைத்துள்ளார். 'யாழ்ப்பாணக் கதைகள்' இவரது சிறுகதைத் தொகுதி. இத் தொகுதியில் இடம்பெற்ற சிறுகதைகளையும் வேறு சில சிறுகதைகளையும் உள்ளடக்கி "வேலி" என்னும் தொகுப்பு ஒன்று பின்னர் வெளிவந்திருக்கின்றது. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் நெருக்கமான உறவுபூண்டு செயற்பட்டவர் ஈழத்துச் சோமு என்னும் என். சோமகாந்தன் ஆவார். கரணவாயில் பிறந்த இவர் வடமராட்சி மக்களின் வாழ்வையும் பேச்சு வழக்கையும் தமது சிறுகதைகளில் மிகச் சிறப்பாகப் பதிவு செய்தவராவார். இவரது சிறுகதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்கிய ஒரு தொகுப்பு 'ஆகுதி' ஆக வெளிவந்திருக்கிறது. புலோலியூர் க. தம்பையா ஐம்பதுகளின் இறுதிப்பகுதியில் சிறுகதை எழுத ஆரம்பித்தவர். உள்மனப் போராட்டங்களைத் தமது சிறுகதைகளில் சிறப்பாகச் சித்திரித்த இவரது சிறுகதைகளை உள்ளடக்கி "அழியும் கோலங்கள்" என்னும் நூலொன்று வெளிவந்திருக்கின்றது. அல்வாயூர் கவிஞர் மு. செல்லையா கவிதை, நகைச்சுவைக் கட்டுரை எழுதுவதிற் கொண்டிருந்த ஈடுபாடு சிறுகதை ஆக்கத்தில் கொண்டாரில்லை. ஆயினும் 'ஈழநாடு' பத்திரிகையில் இரண்டொரு சிறுகதைகள் இவர் எழுதி இருக்கின்றார்.

அறுபதுகளின் ஆரம்பத்தில் தமது மிக இளமைக் காலத்தில் சிறுகதை எழுத ஆரம்பித்தவர் புலோலியூர் க. சதாசிவம். இவர் புலோலியில் பிறந்து, மலையகத்தில் பணிபுரிந்தமையால் வடமராட்சி மக்கள் வாழ்வையும், மலையக மக்கள் வாழ்வையும் சிறுகதை இலக்கியங்களாகப் படைத்தார். 'யுகப் பிரவேசம்', 'ஓர் அடிமையின் விலங்கு அறுகிறது', 'ஒருநாட் போர்', 'புதிய பரிமாணம்' ஆகிய நான்கும் இவரது சிறுகதைகளின் தொகுப்பாக வெளிவந்திருக்கின்றன.

அறுபதுகளில் தாய்மொழிக் கல்விமூலம் பல்கலைக்கழகக் கல்வியைப் பெற்றவர்களுள் சிலர் மிகுந்த ஈடுபாட்டுடன் சிறுகதைகள் எழுதுவதற்கு ஆரம்பித்தனர். அவர்களுள் வடமராட்சியைச் சேர்ந்த செ. கதிர்காமநாதன், குந்தவை (இரா. சடாச்சரதேவி) ஆகிய இருவரும் அடங்குவர்.

ஈழத்துச் சிறுகதைப் படைப்பாளிகளில் மிக முக்கியமானவர்களுள் ஒருவர் கரவெட்டியைச் சேர்ந்த செ. கதிர்காமநாதன். முற்போக்குச் சிந்தனையாளரான இவர், அடித்தள மக்களின் வாழ்வினை கலை நேர்த்தியுடன் சிறுகதைகளாகச் சிருஷ்டித்து வெற்றிகண்டவர். 'கொட்டும்பனி' இவரது சிறுகதைகள் சிலவற்றின் தொகுப்பாகும். பெண் படைப்பாளிகளுள் குந்தவை குறிப்பிட்டுச் சொல்லத்தகுந்த ஒருவர். மனித சமுதாயத்தைத் துல்லியாக நோக்கி, தமது படைப்புகளில் சித்திரிக்கும் ஆற்றல் வாய்ந்தவர். 'யோகம் பிறக்கிறது' என்பது இவரது சிறுகதைத் தொகுப்பு.

பல்கலைக்கழகத்தில் இருந்து புதியவர்கள் சிலர் எழுத முற்பட்ட சமகாலத்தில், பல்கலைக்கழகத்துக்கு வெளியே இருந்தும் சிலர் எழுத ஆரம்பித்தனர். அவர்களுள் தெணியானும் (கந்தையா நடேசு) ஒருவர். பொலிகண்டியில் பிறந்த இவர், முற்போக்கு எழுத்தாளர் அணியைச் சேர்ந்தவர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளைச் செயலாளராகச் செயற்பட்டவர். சாதியக் கொடுமை தீரும்வரை அதற்கெதிராக இலக்கியத்தைப் பயன்படுத்தவேண்டும் என்னும் நோக்கத்துடன் இன்றுவரை எழுதிக்கொண்டிருப்பவர். இவர் 70/ 80 காலத்தில் எழுத ஆரம்பித்தவரென, செங்கைஆழியானின் "ஈழத்து சிறுகதை வரலாறு" என்னும் நூலில் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. "சொத்து", "மாத்துவேட்டி", "இன்னொரு புதிய கோணம்" ஆகிய மூன்று சிறுகதைத் தொகுதிகள் நூல்களாக வெளிவந்திருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாழ்வாணன்" என்னும் புனைபெயரில் எழுதிவந்த எஸ். சண்முகநாதன் வதிரியில் வாழ்ந்தவர். யாழ். இலக்கிய வட்டச் செயலாளராக அக்கறையுடன் செயற்பட்டார். இவரது சிறுகதைகள் 'அமரத்துவம்' என்னும் தொகுதியாக வெளிவந்திருக்கின்றது.

வடமராட்சியில் வாழ்ந்த பலர் அறுபதுகளில் சிறுகதை எழுதுவதற்கு ஆரம்பித்தார்கள். நெல்லை க. பேரன் (க. பேரம்பலம்), க. நவம் (க. நவரத்தினம்), உடுவை தில்லை நடராசா, நந்தினி சேவியர், குப்பிளான் ஐ. சண்முகன், த. கலாமணி, ராஜ ஸ்ரீகாந்தன், ஆனந்தமயில், செ. கந்தசாமி ஆகியோர் குறிப்பிடத்தகுந்தவர்கள்.

நெல்லை க. பேரன் சிறுகதைத்துறையில் ஓயாது உழைத்தவர். பல சிறுகதைகளைத் தொடர்ந்து எழுதிவந்திருக்கும் ஒருவர். இவரது தேர்ந்தெடுத்த சிறுகதைகள் "பட்டதாரி நெசவுக்குப் போகின்றாள்", "சத்தியங்கள்" என்னும் தொகுதிகளாக வெளிவந்திருக்கின்றன. இவர் கரவெட்டி நெல்லியடியிற் பிறந்தவர் என்பதால், தமது புனைபெயருடன் 'நெல்லை'யை இணைத்துக் கொண்டுள்ளார். குப்பிளானிற் பிறந்த சண்முகம், திருமணத்தின் பின்னர் கரணவாய் தெற்கினைத் தமது வதிவிடமாகக் கொண்டுள்ளார். சிறுகதைகளில் அழகியல் அம்சத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இவரின், "கோடுகளும் கோலங்களும்", "உதிரிகளும்..." என்னும் சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன. க. நவம் (க. நவரத்தினம்) பொலிகண்டி, தெணியகத்தில் பிறந்தவர். மாணவப் பருவத்தில் சிறுகதை எழுத ஆரம்பித்த இவர், குறைந்த தொகையான சிறுகதைகளையே எழுதியுள்ளார். அவற்றுள் கனதியான சிறுகதைகளைத் தொகுத்து "உள்ளும் புறமும்" என்னும் தொகுதியாக வெளியிட்டுள்ளார். சமூக விமர்சனங்களாக விளங்கும் சிறுகதைகளைப் படைத்துள்ள உடுவை தில்லைநடராஜா, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது சிறுகதைத் தொகுப்பு 'நிர்வாணம்' என்னும் பெயரில் வெளிவந்துள்ளது. கரவெட்டி வதிரியில் பிறந்த ராஜ ஸ்ரீகாந்தன் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் நெருக்கமாகச் செயற்பட்டவர். ஆங்கிலத்தில் இருந்து அழகு சுப்பிரமணியத்தின் சிறுகதைகளைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்தவர். இவர் படைத்த சிறுகதைகளின் தொகுப்பு "காலச்சாரளம்" ஆகும். மொழிபெயர்ப்புக் கதைகள் "நீதியின் மகன்" தொகுப்பாக வெளிவந்துள்ளது.

நந்தினி சேவியர் அதிகம் எழுதாத ஒரு சிறுகதை எழுத்தாளர். தொகையில் குறைந்த சிறுகதைகளை எழுதியபோதும் ஆழ்ந்த சமூக நோக்குடன் எழுதுகின்ற ஒருவர். இடதுசாரிக் கருத்தினைப் பின்பற்றும் இவர் "அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்" என்னும் சிறுகதைத் தொகுப்பினை வெளியீடு செய்துள்ளார். த. கலாமணி பல்கலைக்கழக மாணவனாக இருந்த காலத்திலேயே சிறுகதை எழுதுவதற்கு ஆரம்பித்தவர். சித்திரிப்புத் திறன் கொண்ட ஒரு படைப்பாளி. அவ்வப்போது எழுதினாலும் தொடர்ந்து எழுதிக்கொண்டிருப்பவர். அல்வாயைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த இவரின் சிறுகதைப் படைப்புகள், "நாட்கள், கணங்கள், நமது வாழ்க்கைகள்" என்னும் தொகுப்பாக வெளிவந்திருக்கின்றது. புலோலியூரைத் தமது பெயரோடு இணைத்துக்கொண்டுள்ள எழுத்தாளர் செ. கந்தசாமி. இவரும் அதிக தொகையான சிறுகதைகளை எழுதிவராதுவிடினும், "மெல்லத் தமிழ் இனி..." என்னும் ஒரு தொகுதியினைத் தமது நூலாகத் தந்துள்ளார். ஆனந்தமயில் அண்மைக் காலத்தில் எழுத்துலகத்தில் இருந்து ஒதுங்கிக்கொண்டுவிட்ட ஒருவர். தரமான சிறுகதைப் படைப்பாளி. "ஓர் எழுதுவினையனின் டயறி" என்பது இவரது சிறுகதைகள் அடங்கிய ஒரு தொகுப்பு நூலாகும்.

இவர்களது சமகாலத்தில் வடமராட்சி மண்ணில் தோன்றிய இன்னும் சில எழுத்தாளர்கள் இப்பகுதியில் இருந்து எழுதிவந்திருக்கின்றார்கள். இவர்களுள், குறிப்பிடத்தகுந்தவர்கள் அனந்தராஜ், சி. வன்னியகுலம், கண. மகேஸ்வரன், மு. அநாதரட்சகன், செந்தாரகை, பாமா ராஜகோபால், பா. ரத்தினசபாபதி ஐயர், கீழ்க்கரவை பொன்னையன், கி. பவானந்தன், க. சின்னராஜன் ஆகியோராவர்.

இவர்களைத் தொடர்ந்து குறிப்பிடத்தகுந்த எழுத்தாளர்களாக ச. முருகானந்தன், புலோலியூர் ஆ. இரத்தினவேலோன், ரஞ்சகுமார், சந்திரா தியாகராஜா, ந. பார்த்திபன், இரா. இராஜேஸ்கண்ணன், பொன். சுகந்தன், நா. ஆனந்தராணி ஆகியோர் விளங்குகின்றனர்.

ச. முருகானந்தன் தான் வாழ்ந்த பிரதேச மக்களின் வாழ்வினைச் சிறுகதை இலக்கியத்தில் சிறப்பாகக் கொண்டுவருவதற்கு முயலும் எழுத்தாளர். கரவெட்டியில் பிறந்த இவர் பெருமளவு சிறுகதைகள் எழுதி இருக்கின்றார். இவரது சிறுகதை நூல்களாக "தரைமீன்கள்", "மீன் குஞ்சுகள்", "இது எங்கள் தேசம்", "இனி வானம் வசப்படும்", "ஒரு மணமகனைத் தேடி" ஆகிய ஐந்து நூல்கள் வெளிவந்திருக்கின்றன. ஆ. இரத்தினவேலோன் புலோலியில் பிறந்த இன்னொரு எழுத்தாளர். குறைவாக அதேசமயம் நிறைவாக எழுதவேண்டுமென்னும் நோக்கத்துடன் அவ்வப்போது சிறுகதைகள் எழுதிவருகின்ற ஒருவர். இவரது சிறுகதைகள், "அறிமுக விழா", "புதிய பயணம்", "விடியட்டும் பார்ப்போம்" என்னும் நூல்களாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. கரவெட்டியில் பிறந்த ரஞ்சகுமார் பெயர் சுட்டிப் பெருமையாகப் பேசப்படுகின்ற நல்ல படைப்பாளி. மிகக்குறைவான தொகையிலான சிறுகதைகளை எழுதியிருப்பினும் "மோகவாசல்" என்னும் குறிப்பிடத்தகுந்த தொகுதி ஒன்றினை வெளியிட்டுள்ளார். கரவெட்டியில் பிறந்த இன்னொரு சிறுகதை ஆசிரியர் ந. பார்த்திபன். ஆரம்பகாலத்தில் பல சிறுகதைகளை எழுதியவர். இவரது தொகுதி 'மனத்தூறல்' ஆக வெளிவந்திருக்கின்றது. பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட சந்திரா தியாகராஜா குறிப்பிடத் தகுந்த பெண் எழுத்தாளராக விளங்கியவர். "நிழல்கள்" என்ற பெயரில் இவரது சிறுகதைகள் தொகுதியாக வெளிவந்திருக்கின்றது. எதிர்கால நம்பிக்கைக்குரிய ஒரு படைப்பாளியாக விளங்குகின்றவர் இரா. இராஜேஸ்கண்ணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதிரியில் பிறந்தவர். ஆழ்ந்த சமூக நோக்குடன் வாழ்வினைப் பதிவுசெய்து வருகின்றவர். "முதிசொமாக..." சிறுகதைத் தொகுப்பினை வெளியீடு செய்துள்ளார். பொலிகண்டியில் பிறந்த பொான். சுகந்தன் ஆர்வத்துடன் சமூக விடயங்களை எழுதிவரும் ஒருவர். "வெளிச்சம் தேடும் விளக்குகள்" என்ற இவரது சிறுகதைத் தொகுதி வெளிவந்திருக்கின்றது.

சிறுகதை எழுதும் முயற்சியில் ஈடுபட்டவர்களாக வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த மேலும் சிலரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். சிவயோகமலர் ஜெயக்குமார், எம். கே. முருகானந்தன், இராகவன், ஆனந்தராணி, அஜந்தகுமார், ந. ஆதவன், பி. கிருஷ்ணானந்தன், ஜெகராசசிங்கம், க. ஞானசீலன், சி. உதயகுமார், மு. நவநீதன், க. தர்மதேவன் என புதியவர்களின் பெயர்கள் இன்னும் விரிந்து செல்லக்கூடும். எனது கவனத்துக்குவந்த இவர்களின் பெயர்களை இங்கு பதிவுசெய்துள்ளதுடன் சிறுகதைத் தொகுப்புகள் வெளியிட்டுள்ளோரின் அறிமுகம் இங்குமங்குமாக சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது. வடமராட்சி மண்ணிற் பிறந்து - வாழ்ந்து - சிறுகதை இலக்கிய ஈடுபாடு கொண்டவர்களான ஐம்பது படைப்பாளிகள் வரை பெயர்களை இங்கு சுட்டிக்காட்ட முடிந்துள்ளது. இவர்களுட் சிலர் காலமாகிவிட்டார்கள். வேறுசிலர் சிறுகதை எழுதும் நாட்டமற்றவர்களாக இப்பொழுது காணப்படுகின்றார்கள். இன்னும் சிலர் ஆரம்ப எழுத்தாளர்களாக இருக்கின்றார்கள். ஆயினும் இவர்கள் அனைவரும் வடமராட்சி மண்ணின் மைந்தர்கள் என்றவகையில் கவனத்துக்குரியவர்கள் எனலாம்.

ஆதாரம் :

1) செங்கை ஆழியான் - ஈழத்துச் சிறுகதை வரலாறு
2) செங்கை ஆழியான் - ஈழகேசரிக் கதைகள்
3) செங்கை ஆழியான் - மறுமலர்ச்சிக் கதைகள்
4) பண்டிதர் க. சச்சிதானந்தன் நினைவோடை - ஆனந்தத்தேன்
5) ஜீவநதி - சிறுகதைச் சிறப்பு மலர்
6) ஆ. இரத்தினவேலோன் - புலோலியூர் சொல்லும் கதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி பிரதேச சுகாதார சேவைகள் ஓர் அபிவிருத்திக்கனவு

**வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன்**
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்

## அறிமுகம்

இலங்கையின் சுகாதாரத்துறை வரலாற்றை எடுத்துநோக்கினால் யாழ்ப்பாண மாவட்டத்தில் சுகாதார சேவைகள் மிகச் சிறந்த நிலையில் இருந்துவந்துள்ளன. குறிப்பாக 60ம், 70ம் ஆண்டு காலப்பகுதிகளில் கொழும்பு, கண்டி மாவட்டங்களுக்கு அடுத்தபடியாக யாழ் மாவட்டம் சுகாதார சேவைகளில் முன்னின்றது. சுகநலக் குறிகாட்டிகளில் யாழ் மாவட்டம் தேசிய மட்டத்தைவிட உயர்நிலையை அடைந்திருந்தது. புகழ்பூத்த பல மருத்துவ நிபுணர்கள் இங்கு தமது சேவைகளை வழங்கியிருந்தனர்.

ஆனால் 80ஆம் ஆண்டுகளின் பின்னர் வடக்கு கிழக்கில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக இங்கு சுகாதாரத்துறை பலத்த பின்னடைவை சந்தித்தது. யுத்த சூழல் காரணமாக மருத்துவ பணியாளர்களின் குறிப்பாக மருத்துவ நிபுணர்களின் வெளியேற்றம் இப்பின்னடைவிற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது. இதைவிட மருத்துவ நிலையங்களின் உட்கட்டுமானங்களின் சேதங்கள், உடைமைகளின் இழப்புக்கள் சேதங்கள், சுகாதாரத்துறையை மேலும் நலிவடைய வைத்தன. இதனால் இன்று யாழ் மாவட்டம் சுகாதார சேவைகளில் நாட்டின் தென்பகுதியிலுள்ள மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் பின்தங்கிய நிலையிலுள்ளது. யுத்தத்தினால் சின்னாபின்னமான சுகாதார சேவைகளை மீளக் கட்டியெழுப்பி தென்பகுதி மாவட்டங்களுடன் ஒப்பிடக்கூடிய நிலைக்கு கொண்டுவருவதே எம்முன்னுள்ள தலையாய கடமை. அந்த இலக்கே எங்கள் அபிவிருத்திக்கனவு.

யாழ்ப்பாண மாவட்டத்தின் சுகாதார சேவைகள் மேம்பாடு பற்றி எம்மிடம் ஓர் தெளிவான நோக்கு உண்டு. அதன் ஓர் அங்கமான வடமராட்சி பிரதேச சுகாதார சேவைகளின் அபிவிருத்தி பற்றிய திட்டம் இம் மலருக்காக முன்வைக்கப்படுகின்றது.

அரச சுகாதார சேவைகள் அடிப்படையில் இரு பிரிவுகளாக பிரிக்கப்படும்.

1. மேலைத்தேய மருத்துவ சேவை (Western medicine)
2. சுதேச மருத்துவ சேவை (Indigenous medicine)

## மேலைத்தேய மருத்துவ சேவை

இதுவும் அடிப்படையில் இரு பெரும் பிரிவுகளாக வகுக்கப்படும்.

1. நோய் சிகிச்சை சேவைகள் (Curative care service)
2. நோய் தடுப்பு சேவைகள் (Preventive care services)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நோய் சிகிச்சை சேவைகள்

வடமராட்சி பிரதேசத்தில் இப்பிரிவில் பின்வரும் வைத்தியசாலைகள் காணப்படுகின்றன.

1. ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை *(Base Hospital, Point Pdero)*
2. பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை *(Divisional Hospital, Valvettithurai)*
3. பிரதேச வைத்தியசாலை, மருதங்கேணி *(Divisional Hospital, Maruthankerny)*
4. பிரதேச வைத்தியசாலை, கரவெட்டி *(Divisional Hospital, Karaveddy)*
5. பிரதேச வைத்தியசாலை, அம்பன் *(Divisional Hospital, Ampan)*
6. ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு பருத்தித்துறை *(Primary Medical Care Unit, Point Pedro)*
7. ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு முள்ளியான் *(Primary Medical Care Unit, Mulliyan)*

இவற்றில் முள்ளியான் வைத்தியசாலை முற்றாக சேதமடைந்து தற்போது இயங்கவில்லை.

இவ் வைத்தியசாலை ஒவ்வொன்றினதும் தற்போதய நிலை பற்றியும் அவற்றின் எதிர்கால அபிவிருத்தி பற்றியும் விபரமாக எடுத்துநோக்குவோம்.

## ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை (மந்திகை)

### அறிமுகம்

யாழ் மாவட்டத்தில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அடுத்தபடியாக இரண்டாவது பாரிய வைத்தியசாலையாக விளங்குகின்றது. 60ம், 70ம் ஆண்டுகளில் இவ் வைத்தியசாலையின் சேவைகள் சிறப்பாக மேலோங்கி இருந்தன. இங்கு பல வைத்திய நிபுணர்கள் பணியாற்றியிருந்தனர். வைத்திய அதிகாரிகளின் உள்ளக பயிற்சிநெறி *(Internship)* நிலையமாகவும், உதவி மருத்துவ அதிகாரிகளின் *(AMO)* பயிற்சி நிலையமாகவும் திகழ்ந்தது. ஆனால் 80ம் ஆண்டுகளின் பின்னர் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையால் மருத்துவ நிபுணர்களும், மருத்துவ அதிகாரிகளும் குடாநாட்டை விட்டு வெளியேறியதால் இவ் வைத்தியசாலையின் சேவைகள் பலத்த பின்னடைவைச் சந்தித்தன. தற்போது இவ்வைத்தியசாலையின் சேவைகளை மேம்படுத்தி பழைய நிலைக்கு கொண்டுவர முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

### மருத்துவ ஆளணி

இவ் வைத்தியசாலையின் முக்கிய சில மருத்துவ ஆளணியினரின் தற்போதைய நிலை கீழே தரப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தொ.இல. | மருத்துவ ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | தற்போதைய நிலை | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| 01 | மருத்துவ நிபுணர்கள் | 15 | _ | 15 |
| 02 | மருத்துவ அதிகாரிகள் | 50 | 09 | 41 |
| 03 | பதிவு மருத்துவ அதிகாரிகள் | 02 | 03 | _ |
| 04 | பல் வைத்தியர்கள் | 06 | 01 | 05 |
| 05 | தாதிய உத்தியோகத்தர்கள் | 156 | 32 | 124 |
| 06 | மருத்துவ மாதுக்கள் | 18 | 06 | 12 |
| 07 | ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்கள் | 08 | 01 | 07 |
| 08 | மருந்தாளர்கள் | 10 | 03 | 07 |
| 09 | X - கதிர்ப்படப் பிடிப்பாளர்கள் | 04 | 01 | 03 |
| 10 | ECG பதிவாளர்கள் | 02 | _ | 02 |
| 11 | பௌதீக சிகிச்சையாளர் | 02 | 01 | 01 |
| 12 | பரிசாரகர்கள் | 103 | 84 | 19 |
| 13 | சாதாரண தொழிலாளர்கள் | 49 | 16 | 33 |
| 14 | சுத்திகரிப்பு தொழிலாளர்கள் | 46 | 12 | 34 |

மேலே தரப்பட்ட அட்டவணையிலிருந்து இவ் வைத்தியசாலையில் நிலவும் மோசமான மருத்துவ ஆளணிப் பற்றாக்குறையை (குறிப்பாக மருத்துவ அதிகாரிகள் தரத்திலும், துணை மருத்துவ அதிகாரிகள் தரத்திலும்) அறிந்துகொள்ளலாம். இதுவே இவ் வைத்தியசாலையின் சேவையை மேம்படுத்துவதில் முக்கிய தடைக்கல்லாக உள்ளது. எனினும் இவ்வெற்றிடங்களை விரைவில் நிரப்ப முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதுவரை ஓர் தற்காலிக ஏற்பாடாக பின்வரும் வைத்தய நிபுணர்கள் யாழ் போதனா வைத்தியசாலையிலிருந்து வருகைதந்து தரிசிப்பு சிகிச்சை நிலையங்களை (Visiting Clinics) நடாத்தி சேவைகளை வழங்கி வருகின்றனர்.

1. பொது வைத்திய நிபுணர்
2. கண் வைத்திய நிபுணர்
3. புற்றுநோய் வைத்திய நிபுணர்
4. உளநல வைத்திய நிபுணர்
5. காசநோய் தடுப்பு வைத்திய அதிகாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இன்னோர் முயற்சியாக MSF நிறுவனத்தைச் சேர்ந்த பின்வரும் வைத்திய நிபுணர்கள் இங்கு தங்கியிருந்து முழுநேர சேவைகளை வழங்கிவருகின்றனர்.

1. மகப்பேற்று வைத்திய நிபுணர்
2. சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர்
3. அவசர சிகிச்சை வைத்திய நிபுணர்

இவ் வைத்தியசாலையின் சேவைகளை மேம்படுத்த MSF நிறுவனம் நீண்ட காலமாக தனது சிறந்த பங்களிப்பை வழங்கிவருகின்றது.

தற்போது இயங்கும் பிரிவுகள்

1. வெளிநோயாளர் பிரிவு *(Out patient Department)*
2. சிகிச்சை நிலையங்கள் *(Clinics)*
3. அவசர சிகிச்சை பிரிவு *(Emergency Unit)*
4. விடுதிகள் *(Wards)*
   - மருத்துவ விடுதிகள் (ஆண்/ பெண்) *(Male/ Female Medical ward)*
   - சத்திர சிகிச்சை விடுதிகள் (ஆண்/ பெண்) *Male / Female Surgical ward)*
   - மகப்பேற்று விடுதி *(Maternity ward)*
   - சிறுவர் விடுதி *(Children ward)*
   - பெண் நோயியல் விடுதி *(Gyneacological ward)*
   - உளநல விடுதி (ஆண்/ பெண்) *(Male / Female Mental healty ward)*
5. சத்திர சிகிச்சைக்கூடம் *(Operation Theatre)*
6. பற்சிகிச்சைப் பிரிவு *(Dental Unit)*
7. இரத்த வங்கி *(Blood bank)*
8. *X* - கதிர்ப்படப்பிரிவு *(X - ray unit)*
9. ஆய்வுகூடம் *(Lab)*
10. பௌதீக சிகிச்சை பிரிவு *(Physiotherapy Unit)*
11. *ECG* பதிவு பிரிவு *(ECG recording room)*
12. ஸ்கான் பிரிவு *(Ultrasound scan unit)*

## உட்கட்டமைப்பு வசதிகள் (Infrastructure facilities)

### a) கட்டிடங்கள்

இவ் வைத்தியசாலையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ஓர் பாரிய திட்டம் *(Master plan)* தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை தயாரிக்கும்போது பின்வரும் விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டன.

1. இவ் வைத்தியசாலையின் நிலப்பரப்பு இரு முக்கிய வலயங்களாக பிரிக்கப்படும்.
   i) தங்கு விடுதிகட்கான வலயம்
   ii) ஏனைய வைத்தியசாலை கட்டிடங்களுக்கான வலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிடப்படும் சகல கட்டிடங்களும் இதனை அனுசரித்தே கட்டப்பட வேண்டும்.

2. நோயாளர்களின் நலன்கருதி ஒரு குறிப்பிட்ட சேவைக்காக கட்டப்படும் கட்டிடத் தொகுதிக்குள் ஒரே கூரையின் கீழ் சகல சேவைகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக : கிளினிக் வரும் நோயாளர்களுக்கு பரிசோதனை அறை, ஆய்வுகூடம், மருந்தகம் யாவும் ஒரே கட்டிடத்தில் அமையவேண்டும்.

மேற்படி விடயங்களை கருத்திற்கொண்டு தயாரிக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் பின்வருமாறு கட்டிடங்கள் அமைக்கப்படும்.

## 1) வெளிநோயாளர் பிரிவு கட்டிடம் (OPD block)

தற்போதுள்ள இருமாடி வெளி நோயாளர் கட்டிடம் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்படவேண்டும்.

## 2) சிகிச்சை நிலைய கட்டிடம் (Clinic block)

வைத்தியசாலையில் நடைபெறும் பல்வேறு வகையான சிகிச்சை நிலையங்களும் ஒரே நேரத்தில் சமாந்தரமாக இயங்கவேண்டும். கிளினிக் நோயாளர்கட்கான ஆய்வுகூடம், மருந்தகம் யாவும் இக்கட்டிடத்திற்குள் இயங்கவேண்டும். ஆனால் தற்போது அமைக்கப்பட்டுள்ள கிளினிக் கட்டிடம் இத்தேவையை நிறைவேற்ற போதுமானதல்ல. எனவே மூன்று மாடிகளைக் கொண்ட நன்கு திட்டமிடப்பட்ட புதிய கிளினிக் கட்டிடத்தொகுதி அமைக்கப்பட வேண்டும். தற்போதுள்ள கிளினிக் கட்டிடம் இயன் மருத்துவ பிரிவு *(Physiotherapy Unit)* போன்ற பிறிதோர் தேவைக்கு பயன்படுத்தப்படலாம்.

## 3) விடுதிகள் (Wards)

### i) உளநல விடுதிகள் *(Mental health wards)*

தற்போது ஆண், பெண் உளநல விடுதிகள் இயங்கும் கட்டிடங்கள் 150 வருடங்கள் பழமை வாய்ந்தவை. மீள சீர்செய்ய முடியாத நிலையிலுள்ள இவற்றிற்கு பதிலாக புதிய இருமாடிகளைக் கொண்ட உளநல விடுதிக்கான வரைபடம், மதிப்பீடு யாவும் தயாரிக்கப்பட்டுள்ளன. போதிய நிதி கிடைத்ததும் முன்னுரிமை அடிப்படையில் இவ்விடுதி அமைக்கப்படவேண்டும்.

### ii) மருத்துவ விடுதித் தொகுதி *(Medical ward block)*

தற்போதுள்ள வெளிநோயாளர் பிரிவு கட்டிடத்திற்கு சமாந்தரமாக மூன்று கட்டிடத் தொகுதிகள் அமைக்கப்படவேண்டும். அதில் முதலாவது கட்டிடம் மருத்துவ விடுதித் தொகுதி. இது பின்வரும் பிரிவுகளைக் கொண்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) ஆண்கள் மருத்துவ விடுதிகள் *(02 No)*
2) பெண்கள் மருத்துவ விடுதிகள் *(02 No)*
3) சிறுவர் விடுதிகள் *(02 No)*
4) மருத்துவ தீவிர சிகிச்சை பிரிவு *(Medical Intensive care Unit)*
5) ஆய்வுகூடம் *(Laboratory)*
6) *ECG Room*
7) ஸ்கானிங் அறை *(Scanning room)*
8) தொற்றுநோயாளரை தனிமைப்படுத்தும் அறைகள் *(Isolation rooms)*
9) வயிற்றோட்ட விடுதி *(Diarrhoea ward)*

iii) சத்திர சிகிச்சை விடுதித் தொகுதி *(Surgical ward block)*

மூன்று மாடிகளைக் கொண்ட இக்கட்டிடத்தொகுதி பின்வரும் பிரிவுகளைக் கொண்டிருக்கவேண்டும்.

1) ஆண்கள் சத்திர சிகிச்சை விடுதிகள் *(02 No)*
2) பெண்கள் சத்திர சிகிச்சை விடுதிகள் *(02 No)*
3) சத்திர சிகிச்சைக்கூடம் *(Operation Theatre)*
4) சத்திர சிகிச்சை தீவிர சிகிச்சை பிரிவு *(Surgical Intensive care Unit)*
5) ஸ்கானிங் அறை *(Scanning room)*
6) கண் சிகிச்சை விடுதி *(Eye ward)*
7) காது, தொண்டை, மூக்கு சிகிச்சை விடுதி *(ENT ward)*

iv) மகப்பேற்று விடுதித் தொகுதி *(Maternity ward block)*

மூன்று மாடிகளைக் கொண்ட இக்கட்டிடத் தொகுதி பின்வரும் பிரிவுகளைக் கொண்டிருக்கவேண்டும்.

1) மகப்பேற்று விடுதிகள் *(02 No)*
2) பிரசவ விடுதிகள் *(02 No)*
3) பெண் நோயியல் விடுதிகள் *(02 No)*
4) சத்திர சிகிச்சைக் கூடம்
5) ஸ்கானிங் அறை
6) முதிரா குழந்தைகட்கான சிகிச்சை பிரிவு *(Premature baby unit)*
7) மருத்துவ நூலகம்
8) கேட்போர் கூடம் *(Auditorium)*

v) களஞ்சியம் *(Stores)*

**மருந்துக் களஞ்சியம் *(Drugs stores)***

சகல வசதிகளையும் கொண்ட மருந்துக் களஞ்சியம் தற்போது நிர்மாணிக்கப் பட்டு வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொதுக் களஞ்சியம் (General Stores)**

போதிய இட வசதி கொண்ட பொதுக் களஞ்சியம் அமைக்கப்பட வேண்டும்.

vi) *சமையற் கூடம்/ பிரேத அறை/ சலவையகம்*

நவீன வசதிகளுடன் கூடிய போதிய இடவசதி கொண்ட சமையலறை, பிரேத அறை, சலவையகம் புதிதாக நிர்மாணிக்கப்படவேண்டும்.

vii) தங்கு விடுதிகள் *(Residential quarters)*

பின்வரும் தங்கு விடுதிகள் மாடிக்கட்டிடங்களாக அமைக்கப்பட வேண்டும்.

1) வைத்திய நிபுணர்களுக்கான விடுதி
   இரு மாடிகளைக் கொண்ட விடுதி தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.
2) வைத்தியர்கட்கான விடுதி
   இருபது அறைகளைக் கொண்ட இருமாடி அமைக்கப்படவேண்டும்.
3) தாதியர் விடுதி
4) துணை மருத்துவ விடுதி

b) **நீர் விநியோகம்**

இவ் வைத்தியசாலையின் நீர் விநியோகத் தொகுதி பூரணமாக புனரமைக்கப்பட்டுள்ளது. எனினும் எதிர்காலத்தில் அமையவிருக்கும் புதிய கட்டிடங்களின் தேவைக்கேற்ப மேலும் விஸ்தரிக்கப்படவேண்டும்.

c) **மலக்கழிவு முகாமைத்துவம்**

தற்போது சகல விடுதிகளிலிருந்தும் செல்லும் மலக்கழிவுகள் மத்திய நிலையமொன்றில் *(Central sewerage plant)* சுத்திகரிக்கப்பட்டு முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. எனினும் இது எதிர்காலத்தில் தேவைக்கேற்ப மேலும் நவீன முறையில் புனரமைக்கப்படவேண்டும்.

d) **திண்மக் கழிவு முகாமைத்துவம்**

தற்போது திண்மக் கழிவுகள் கிருமித் தொற்றுக்களின் அடிப்படையில் வெவ்வேறாக தரம் பிரிக்கப்படுகின்றன. கிருமித் தொற்றுடைய கழிவுகள் *Incinerator* மூலம் எரியூட்டப்படுகின்றன. சாதாரண கழிவுகள் வழமையான முறையில் அகற்றப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

e) **உள்ளக தொலைத் தொடர்பாடல் வசதிகள்**

தற்போது உள்ளக தொலைத்தொடர்பாடல் வசதிகள் உள்ளன. இவை எதிர்காலத்தில் தேவைக்கேற்ப மேலும் விஸ்தரிக்கப்படவேண்டும்.

f) **மின் விநியோகம்**

தற்போது இங்கு மின்வெட்டு நேரங்களில் மின்சாரத்தை வழங்க மூன்று மின் பிறப்பாக்கிகள் *(80 KV, 60 KV, 40 KV)* உள்ளன. எதிர்காலத்தில் மேலும் வலு கூடிய மின் பிறப்பாக்கிகள் தேவைப்படும்.

g) **நோயாளர் போக்குவரத்து**

இங்கு நோயாளரை ஏற்றிச்செல்ல இரு அம்புலன்ஸ் வண்டிகள் சேவையில் உள்ளன. இதில் பணிபுரியும் ஊழியர்கட்கு விசேட அவசர சிகிச்சை முதலுதவி பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இவ் அம்புலன்ஸ்களிற்கு தேவையான முதலுதவி மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை**

| தொ.இல. | மருத்துவ ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | தற்போதைய நிலை | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| 01 | மருத்துவ நிபுணர்கள் | 03 | 01 (Re-emp) | 03 |
| 02 | பதிவு மருத்துவ அதிகாரிகள் | 02 | 02 (Re-emp) | 02 |
| 03 | பல் வைத்தியர்கள் | 01 | - | 01 |
| 04 | தாதிய உத்தியோகத்தர்கள் | 15 | 04 | 11 |
| 05 | மருத்துவ மாதுக்கள் | 04 | 02 | 02 |
| 06 | ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்கள் | 01 | _ | 01 |
| 07 | மருந்தாளர்கள் | 02 | _ | 02 |
| 08 | பரிசாரகர்கள் | 21 | 21 | _ |
| 09 | சாதாரண தொழிலாளர்கள் | 14 | 02 | 12 |
| 10 | சுத்திகரிப்பு தொழிலாளர்கள் | 16 | 12 | 04 |

இவ் வைத்தியசாலையிலும் நிலவும் மோசமான ஆளணிப் பற்றாக்குறையினால் சேவைகளை திறம்பட வழங்க முடியாதுள்ளது. இது நிவர்த்தி செய்யப்பட்டால் நிச்சயம் இதன் சேவைகளை மேம்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உட்கட்டமைப்பு அபிவிருத்தி**

இவ் வைத்தியசாலை சுனாமி மீள் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் அவுஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதியுதவியுடன் புனரமைக்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பை மேம்படுத்த 30 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் பின்வரும் கட்டிடங்கள் புனரமைக்கப்படுகின்றன.

1. வெளிநோயாளர் பிரிவு
2. பெண்கள் விடுதி
3. ஆண்கள் விடுதி
4. தாதியர் தங்கு விடுதி
5. அவசர சிகிச்சை பிரிவு
6. மகப்பேற்று விடுதி
7. சமையலறை

பின்வரும் கட்டிடங்கள் புதிதாக அமைக்கப்படுகின்றன.

1. வைத்தியர் தங்கு விடுதி
2. மருந்தகக் களஞ்சியம்

மேலும் இத்திட்டத்தின் கீழ் அவுஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கத்தினால் பின்வரும் பொருட்களும் அன்பளிப்பும் செய்யப்பட்டுள்ளன.

1. புதிய மின்பிறப்பாக்கி (30 kV)
2. மருத்துவ உபகரணங்கள்
3. மருத்துவ தளபாடங்கள்
4. அலுவலக உபகரணங்கள்

எனவே இத்திட்டம் பூரணமாக நிறைவேறும்போது இவ் வைத்தியசாலையின் பெரும்பாலான உட்கட்டமைப்பு தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

மேலும் இங்கு நவீன வசதிகளைக் கொண்ட பின்வரும் பிரிவுகள் அமைக்கப்பட வேண்டும்.

1. சத்திர சிகிச்சை கூடம்
2. நவீன ஆய்வுகூடம்

இவ் வைத்தியசாலையின் சூழல் மிக அழகாகவும், சிறப்பாகவும் பராமரிக்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. இது ஏனைய வைத்தியசாலைகட்கு முன்மாதிரியாக இவ் விடயத்தில் திகழ்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச வைத்தியசாலை, மருதங்கேணி

வடமராட்சி பிரதேசத்தின் மூன்றாவது பெரிய வைத்தியசாலையாக இது திகழ்கின்றது. கடந்த காலங்களில் யுத்த சூழ்நிலையால் முற்றாக சேதமான இவ் வைத்தியசாலை 2004ம் ஆண்டு முற்றாக மீள் நிர்மாணிக்கப்பட்டது. ஆயினும் தற்போதைய யுத்த சூழலால் இவ் வைத்தியசாலை இடம்பெயர்ந்து தற்காலிகமாக கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கிவந்தது.

பிரதேச வைத்தியசாலை என்ற அடிப்படையில் இங்கு பின்வரும் கட்டிடங்கள் அமைக்கப்படவேண்டும்.

1. வெளிநோயாளர் பிரிவு
2. மகப்பேற்று விடுதி
3. ஆண்கள் விடுதி
4. பெண்கள் விடுதி
5. வைத்தியர் தங்கு விடுதி
6. மருத்துவர் மாது விடுதி
7. துணை மருத்துவர் விடுதி
8. சிற்றூழியர் விடுதி
9. சமையற்கூடம்/ பிரேத அறை
10. அன்புலன்ஸ் தரிப்பிடம்

இவ் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ், தொலைபேசி வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

## பிரதேச வைத்தியசாலை, கரவெட்டி

கரவெட்டிப் பிரதேச செயலக பிரிவிலுள்ள ஒரேஒரு அரசினர் வைத்தியசாலை இதுவாகும். இவ் வைத்தியசாலை தற்போது இயங்கிவரும் காணியும், கட்டிடமும் இவ் வைத்தியசாலையின் எதிர்கால அபிவிருத்திக்கு போதுமானவையல்ல. எனவே போதிய விஸ்தீரனமுள்ள புதிய காணி பெறப்பட்டு புதிய வைத்தியசாலைக்கான இருமாடி வெளிநோயாளர் பிரிவுக் கட்டிடம் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றது.

பிரதேச வைத்தியசாலை என்ற அடிப்படையில் இங்கு பின்வரும் கட்டிடங்கள் அமைக்கப்பட வேண்டும்,

1. வெளிநோயாளர் பிரிவு
2. மகப்பேற்று விடுதி
3. ஆண்கள் விடுதி
4. பெண்கள் விடுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. சமையற்கூடம்
6. பிரேத அறை
7. அன்புலன்ஸ் தரிப்பிடம்
8. வைத்திய அதிகாரி தங்குவிடுதி
9. மருத்துவமாது தங்கு விடுதி

இவ் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி வழங்கப்பட்டு தொலைபேசி வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## பிரதேச வைத்தியசாலை, அம்பன்

இவ் வைத்தியசாலை கடந்த கால யுத்த சூழலில் முற்றாக சேதமானது. 2004ம் ஆண்டில் இவ் வைத்தியசாலையை மீள் புனரமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும் இப்பிரதேசத்தில் நிலவிய யுத்த சூழ்நிலையால் இம்முயற்சிகள் இடைநடுவில் கைவிடப்பட்டன.

பிரதேச வைத்தியசாலை என்ற அடிப்படையில் இங்கு பின்வரும் கட்டிடங்கள் அமைக்கப்படவேண்டும்.

1. வெளி நோயாளர் பிரிவு
2. மகப்பேற்று விடுதி
3. ஆண்கள் விடுதி
4. பெண்கள் விடுதி
5. சமையற்கூடம்
6. பிரேத அறை
7. அம்புலன்ஸ் தரிப்பிடம்
8. வைத்திய அதிகாரி தங்குவிடுதி
9. மருத்துவமாது தங்குவிடுதி

இவ் வைத்தியசாலைக்கும் அம்புலன்ஸ், தொலைபேசி வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

## ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு, பருத்தித்துறை

இவ் வைத்தியசாலைக்கு காணி பெறப்பட்டு அண்மையில் புதிய இரு மாடிக் கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு வெளிநோயாளர் பிரிவும், கிளினிக்குகளும் இடம்பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு, முள்ளியான்

இவ் வைத்தியசாலை வடமராட்சி கிழக்கின் மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் அமைந்திருந்தது. யுத்த சூழலால் முற்றாக சேதமடைந்துள்ளது. இது மீள கட்டியெழுப்பப்பட வேண்டும்.

## புதிய வைத்தியசாலைகள்

தற்போது யாழ் மாவட்டத்தில் மருத்துவர்கட்கு மிக மோசமான பற்றாக்குறை நிலவுகின்றது. இதனால் தற்போது உள்ள 38 வைத்தியசாலைகளையும் சீராக இயங்க வைப்பதே பெரும் பிரச்சினையாகவுள்ளது. எனவே மருத்துவர் பற்றாக்குறை தீரும்வரை எந்தவொரு இடத்திலும் புதிய வைத்தியசாலைகளை அமைப்பதில்லையென கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. எனினும் மருத்துவர்கட்கான பற்றாக்குறை தீர்ந்ததும் புதிய வைத்தியசாலைகள் அமைப்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

| தொ. இ. | விபரம் | ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை | பிரதேச வைத்தியசாலை வல்வெட்டித் துறை | பிரதேச வைத்தியசாலை கரவெட்டி | ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|
| 1 | உள்ளக கட்டில்களின் தொகை | 264 | 80 | 10 | _ |
| 2 | நாளொன்றுக் கான சராசரி வெளிநோயாளர் கள் தொகை | 278 | 189 | 196 | 122 |
| 3 | மொத்த உள்ளக அனுமதிகள் (admissions / Year) | 10058 | 2468 | 83 | _ |
| 4 | நாளொன்றுக்கான சராசரி உள்ளக அனுமதிகள் | 27.5 | 6.7 | 0.4 | _ |
| 5 | மொத்த பிரசவங்கள் (வருடம்) | 726 | 113 | 14 | _ |
| 6 | மாதாந்த சராசரி பிரசவங்கள் | 60 | 09 | 01 | _ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோய் தடுப்பு சேவைகள்

வடமராட்சி பிரதேசத்தில் நோய் தடுப்பு சேவைகளை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை (MOH Office) ஒருங்கிணைத்து வருகின்றது. ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிற்கும் தனித்தனியாக சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் அமைப்பதற்கான அங்கீகாரம் ஏற்கனவே சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது. ஆயினும் பல்வேறு வளப்பற்றாக்குறைகள் காரணமாக இவை மூன்றும் தற்போது ஒன்றாகவே இயங்குகின்றன. எதிர்காலத்தில் போதிய வளங்கள் கிடைத்ததும் இவை பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி என தனித்தனி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளாக இயங்கும்.

## உள்ளக பிரிவுகள்

நிர்வாக, செயற்பாட்டு காரணங்கட்காக ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளாக பிரிக்கப்படும். ஒவ்வொரு பொது சுகாதார பரிசோதகர் பிரிவிற்கும் ஓர் பொது சுகாதார பரிசோதகர் பொறுப்பாக இருப்பார்.

ஒவ்வொரு பொது சுகாதார பரிசோதகர் பிரிவும் சராசரியாக 2 - 3 குடும்பநல மருத்துவ மாது பிரிவாக பிரிக்கப்படும். இதற்கு ஒரு குடும்பநல மருத்துவமாது பொறுப்பாக இருப்பார். ஒவ்வொரு குடும்பநல மருத்துவ மாது பிரிவிலும் 1 - 2 கிராம சேவையாளர் பிரிவுகள் காணப்படும்.

### பிரதேச செயலக ரீதியான பொது சுகாதார பிரிவுகளின், குடும்பநல மருத்துவ மாது பிரிவுகளின் பரம்பல்

| பிரதேச செயலக பிரிவு | பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளின் எண்ணிக்கை | குடும்பநல மருத்துவ மாது பிரிவுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பருத்தித்துறை | 06 | 15 |
| கரவெட்டி | 05 | 14 |
| மருதங்கேணி | 03 | 06 |

இப் பிரிவுகள் சனத்தொகையை அடிப்படையாக வைத்தே நிர்ணயிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவ ஆளணி நிலை - சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு - பருத்தித்துறை

| தொ.இ | மருத்துவ ஆளணி வகை | அங்கீகரிக்கப் பட்ட ஆளணி | தற்போதைய நிலை | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| 01 | சுகாதார வைத்திய அதிகாரி | 03 | - | 03 |
| 02 | பொது சுகாதார பரிசோதகர் | 13 | 13 | - |
| 03 | குடும்பநல மருத்துவமாது | 44 | 23 | 21 |

குடும்பநல மருத்துவ மாதுகளிற்கு பற்றாக்குறை உள்ளது. இதனை நிவர்த்தி செய்து இவ்வெற்றிடங்களை நிரப்ப முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதுவரை ஓர் தற்காலிக ஏற்பாடாக வெற்றிடமாக உள்ள பகுதிகளில் பயிற்றப்பட்ட சுகாதார தொண்டர்கள் குடும்பநல மருத்துவ மாதுக்களின் சில பணிகளை செய்துவருகின்றனர்.

## உட்கட்டமைப்பு வசதி (கட்டிடங்கள்)

### 1. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை (MOH Office)

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பருத்தித்துறைக்கு ஓர் புதிய கட்டிடம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இதேபோன்று ஏனைய இரு பிரிவுகளும் தனியாக செயற்பட தொடங்கும்போது கரவெட்டி, மருதங்கேணி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் அமைக்கப்பட வேண்டும்.

## சிகிச்சை நிலைய கட்டிடங்கள் (Health Centres)

தற்போது இப்பிரிவில் 26 நிலையங்களில் கர்ப்பவதிகட்கும், குழந்தைகட்கும் சிகிச்சை நிலையங்கள் (கிளினிக்) நடாத்தப்பட்டு வருகின்றன. இதனை சீராக நடாத்துவதற்கு உரிய கட்டிட வசதி அவசியம். தற்போது பின்வரும் இடங்களில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பருத்தித்துறைக்கு சொந்தமான நிரந்தர சிகிச்சை நிலைய கட்டிடங்கள் (Health centres) அமைக்கப்பட்டுள்ளன.

1. வியாபாரிமூலை
2. திக்கம்
3. கற்கோவளம்
4. மணற்காடு
5. தும்பளை
6. குடத்தனை
7. கொற்றாவத்தை
8. உடுத்துறை
9. மாமுனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய இடங்களில் பொது அமைப்புக்களுக்குச் சொந்தமான பொதுக் கட்டிடங்களிலேயே சிகிச்சை நிலையங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் இந்த இடங்களில் எமது நிரந்தரக் கட்டிடங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது அமைக்கப்படும் சிகிச்சை நிலைய கட்டிடங்களில் மருத்துவமாதின் தங்குவிடுதியும் இணைந்து அமைக்கப்படுகின்றது. எனவே, அவர் கிராமத்தில் மக்கள் மத்தியில் தங்கியிருந்து 24 மணி நேரமும் தாய், சேய் நலம் சம்பந்தமான அவசர சேவைகளை வழங்கமுடியும்.

## தாய்/ சேய் நலம் பற்றிய சில சுகநல குறிகாட்டிகள் - சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, பருத்தித்துறை - 2008

| குறிகாட்டி | சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பருத்தித்துறை |
|---|---|
| தாய் மரண வீதம் / 100,000 LB | 92.4 |
| சிசு மரண வீதம் /1000 LB | 21.2 |
| பிறப்பு நிறை குறைவு வீதம் (%) | 8.7 |
| 0 - 1 வயதில் நிறை குறைவான பிள்ளைகளின் வீதம் (%) | 3.4 |
| 1 - 2 வயதில் நிறை குறைவான பிள்ளைகளின் வீதம் (%) | 22.3 |
| 2 - 5 வயதில் குறைவான பிள்ளைகளின் வீதம் (%) | 10.6 |

## தொற்றுநோய்களின் பரம்பல் - சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பருத்தித்துறை

### கிடைக்கப்பெற்ற தொற்றுநோய் அறிவித்தல்கள் (Notifications 2004 - 2008)

| தொ.இல | தொற்றுநோய் | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 |
|---|---|---|---|---|---|---|
| 1 | நெருப்புக்காய்ச்சல் | 179 | 69 | 22 | 46 | 14 |
| 2 | செங்கமாரி (யு) | 25 | 18 | 27 | 08 | 04 |
| 3 | வயிற்றுளைவு | 08 | 13 | 32 | 16 | 03 |
| 4 | காசநோய் | - | - | - | 52 | 71 |
| 5 | விலங்கு விசர் நோய் | 04 | 02 | 02 | - | - |
| 6 | மலேரியா | 05 | 04 | - | - | - |
| 7 | டெங்கு | 05 | 15 | 13 | 19 | 01 |
| 8 | ஏற்பு வலி | 01 | 01 | - | - | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது சுகாதார பரிசோதகர் பிரிவு ரீதியான மலசல கூடம் உள்ள வீடுகளின் மதிப்பீடு - சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, பருத்தித்துறை - 2008

| தொ.இல | பொது சுகாதார பரிசோதகர் பிரிவு | வீடுகளின் எண்ணிக்கை வீடுகளின் தொகை | மலசலகூடம் உடைய | வீதம் |
|---|---|---|---|---|
| 01 | அம்பன் | 804 | 342 | 42.5% |
| 02 | துன்னாலை | 2,213 | 1,352 | 61.1% |
| 03 | நெல்லியடி | 2,697 | 2,008 | 74.5% |
| 04 | புலோலி | 1,695 | 1,399 | 82.5% |
| 05 | அல்வாய் 1 | 1,095 | 812 | 74.2% |
| 06 | அல்வாய் 2 | 1,614 | 1,218 | 75.5% |
| 07 | உடுப்பிட்டி | 2,342 | 1,640 | 70.0% |
| 08 | கரணவாய் | 2,097 | 1,415 | 67.5% |
| 09 | வல்வெட்டித்துறை | 1,996 | 1,371 | 68.7% |
| 10 | பருத்தித்துறை 1 | 1,136 | 1,025 | 90.5% |
| 11 | பருத்தித்துறை 2 | 1,614 | 1,218 | 75.5% |
| 12 | தொண்டமனாறு | 1,034 | 637 | 61.6% |

## சுதேச மருத்துவதுறை

### நோய் சிகிச்சைப் பிரிவு

சித்த மருத்துவ சேவைகளை வழங்க வடமராட்சி பிரதேசத்தில் மூன்று சுதேச வைத்தியசாலைகள் சுகாதாரத் திணைக்களத்தின்கீழ் இயங்கிவருகின்றன.

1. பருத்தித்துறை ஆயுர்வேத மருந்தகம்
2. கரவெட்டி ஆயுர்வேத மருந்தகம்
3. தம்பசிட்டி ஆயுர்வேத மாவட்ட வைத்தியசாலை

இவற்றில் தம்பசிட்டியில் தற்போது வெளிநோயாளர் பிரிவுடன் மட்டும் இயங்கும் ஆயுர்வேத வைத்தியசாலையை உள்ளக விடுதிகளுடன் கூடிய மாவட்ட வைத்தியசாலையாக அமைக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. கரவெட்டி ஆயுர்வேத மத்திய மருந்தகத்தில் தற்போது சித்த மருத்துவத்திற்கான மருந்துகள் தயாரிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நோய் தடுப்பு பிரிவு**

சித்த மருத்துவ சேவைகளின் நோய் தடுப்பு சேவைகளை முன்னெடுக்கும் நோக்கில் அண்மையில் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிற்கும் ஒவ்வொரு வைத்திய அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் சுகநல மேம்பாடு சம்பந்தமான செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளனர்.

சுகாதாரத் திணைக்களத்தின் சுதேச மருத்துவ நிலையங்கட்கு மேலதிகமாக வடமராட்சி பிரதேசத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் பின்வரும் இலவச ஆயுர்வேத மருத்துவ நிலையங்கள் இயங்கிவருகின்றன.

1. வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை, உடுப்பிட்டி
2. வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை, கட்டைவேலி
3. வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.
4. பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி

**முடிவுரை**

வடமராட்சி பிரதேசத்தின் சுகாதார சேவைகளை மேம்படுத்த ஓர் தெளிவான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதில் பல அபிவிருத்திப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏனையவை காலத்திற்கு காலம் கிடைக்கும் நிதி மூலங்கள் மூலம் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படும். உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு பௌதீக வளங்கள் வழங்கப்படுவதுடன் இதற்கு சமாந்தரமாக மருத்துவ ஆளணிப்பற்றாக்குறையை தீர்க்க முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவை யாவும் கைகூடிவரும்போது இப்பிரதேசத்தின் சுகாதார சேவைகளை ஓர் சிறந்த நிலைக்கு உயர்த்தமுடியுமென்பது எமது அசையாத நம்பிக்கை. **இதுவே எங்கள் அபிவிருத்திக் கனவு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MOH Point Pedro Area by PHM Ranges






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கி – நெல்லியடி கிளையின் சனிக்கிழமை வங்கிச் சேவை

அன்புடையீர் !

இலங்கை வங்கி, நெல்லியடி கிளை ஏப்ரல் 11ம் திகதியிலிருந்து சனிக் கிழமைகளிலும் உங்கள் நலன் கருதி கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள் வதற்காகவும், தங்க நகை அடகு கடன் சேவைக்காகவும் திறந்திருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

பிரதி சனிக்கிழமை தோறும் காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 1.00 மணிவரை வங்கி சேவையை மேற்கொள்ள முடியும்.

அனைத்து வாடிக்கையாளர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"சேவைகடந்த நேசமுடன் உறவுகள்"

முகாமையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியாளும் வேளாண்மையும்

*கலாநிதி கு. மிகுந்தன்*
தலைவர், விவசாய உயிரியல் துறை,
விவசாய பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

வடமராட்சிக்கும் வேளாண்மைக்கும் பெயரளவிலல்லாது செயலளவில் ஒற்றுமையுண்டு. அந்தளவிற்கு பெருமைப்பட்டுக்கொள்ளும் மக்கள் வாழும் பூமியிது. இடரிலும் சரி தளர்விலும் சரி சலசலப்புக்கு இஞ்சியளவிலும் அஞ்சியதில்லை. அசையாது நின்று தமது தனித்துவத்தன்மையை வெளிக்கொண்டவர்களிவர்கள். திருவுடையாளின் கனவும் அது போலவன்றோ. உடையவரின் மனங் கோணாது தன் கருமமாற்றும் சிறப்பே தனி. காரியமே கண்ணாகியிருக்குமிவர்கள் கருமத்திலும் சிறப்பாகி வெளிக்கொணரும் கனதியான மலரிது. அதுவும் வடமராட்சிக்குரிய சிறப்புகளில் ஒன்று. கருமமதைப் போலவே பூமி இளகியபோதும் சுருண்டு வரண்டு இறுகியபோதும் வேளாண்மையை என்றுமே கைவிட்டதில்லை. மாறாக வடமராட்சியன்னையும் கைவிட வைத்ததுவுமில்லை. வானம் பொய்த்தாலும் வாழ்ந்து சரித்திரம் எழுதிய மண் இது.

## உழைப்புக்கு உதாரணமாகவும் உரமாகவும்...

தச்சன்தோப்புக் கிழவியின் பெருமை இதற்கொரு உதாரணமானாலும் வடமராட்சியென்றவுடன் எப்பொழுதும் பெருமைப்படுமளவிற்கு ஏற்றதொரு சமாச்சாரமாயும் இருக்கின்றது. இந்தத் தள்ளாத வயதிலும் உடல்நோயினால் நொய்ந்து விட்ட நேரத்திலும் உள்ளமதில் தளராத வீராப்புக் கொண்டு அடிவாய்க்காலிலும் அத்துளுவிலும் மொட்டைக்கறுப்பனும் மொறுங்கனுமாக உள்ளூரினத்தில் நெல்லெறிந்து ஒரு புல்லு பிடுங்கியதுடன் சிக்கனமாய் மானியத்தில் தந்த ஒரு அந்தர் உரமுமெறிந்து தனக்கும் கூடுவிட்டுச் சென்ற தன் குஞ்சுகளுக்கும் அதற்கும் மேலாக அதன் பெயர் சொல்லும் சந்ததிக்குமாய் வெள்ளருவி வெட்டி படரெடுத்து அதிலே புடஞ்செய்து காயவைத்து அந்த வருஷத்திற்கு உண்பதற்கும் அடுத்த வருஷத்திற்கான விதை நெல்லாகவுமாய் வைத்திருக்கும் பாங்கு எங்கு யாருக்கு வரும்? வடமராட்சி மண்ணுக்கும் மண்ணாள்பவருக்கும் உரிய இலட்சணம் இதுவன்றோ!.

## சந்ததி இழப்பின் தாக்கம்

வயதானவர்களை ஊர்பார்க்க, அவர்தம் நிலபுலன்களைப் பார்க்க ஊரிலே விட்டுவிட்டு இளசுகளெல்லாம் குடும்பமாய் பறவையிலேறி வெளிநாடு சென்றுவிட இந்தத் தள்ளாத வயதிலும் உதவிக்குத் துணையின்றி வேளாண்மை செய்து சீவிக்கும் பரிதாப நிலை ஏனிங்கு வந்தது. அடுத்த சந்ததியெல்லாம் வெளிநாட்டிலே முடங்கிவிட இங்குள்ள வயது முதிர்ந்த உறவுகள் எல்லாம் அல்லல்பட்டு அலைக்கழிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநாதைகளாகி கொஞ்சக்காலம் போக இருந்ததொரு தொப்புள்கொடி உறவும் அறுந்து விடுமாப் போன்றதொரு நிலைமை இனிவரப் போகிறது. வேளாண்மை செய்ய இங்கே யார் இருக்கப் போகிறார்கள்? இங்கே இருக்க முடியவில்லையென்று தினந்தினம் ஓடிக்கொண்டே இருக்கிறார்கள்? வேடிக்கையென்னவென்றால் அங்கேயும் போய் கலவரம் செய்து நிம்மதியைத் தொலைத்து விட்டிருக்கிறார்கள். எது இருந்தாலும் சொந்த மண் போல வருமா? சொந்த மண்ணில் தானே அந்த உயிரின் நாதம் தெரியும். ஆனால் புலம்பெயர்ந்த நம் இனிவரும் சந்ததிக்கு உழைத்தெடுத்த காசைத்தவிர சொந்த மண்ணின் அருமை என்றும் தெரியவே வாய்ப்பில்லை. ஆனாலும் நம்மூரின் வளர்ச்சிக்கும் கட்டுமாண பணிகளுக்காகவும் காசு சேர்த்து உதவிடும் நல்ல உள்ளமதை மறந்துவிடவும் முடியாது.

நல்ல காலம் ஒன்று வந்தால் வடமராட்சியில் விளையும் பயிர்களெல்லாம் நம் உறவுகள் புலம்பெயர்ந்திருக்கும் நாடுகளிலெல்லாம் விற்பதற்கான சந்தை வாய்ப்பை நிச்சயம் பெற்றுத்தரும். அங்கே நம் உறவுகளை இணைத்திடும் உறவுப் பாலமாக வேளாண்மை விளைபொருட்கள் நிச்சயமாக இருக்கும். அந்த இனியகாலத்தின் வருகையை காத்திருக்கும் வரை இங்கே வேளாண்மை செத்துவிடாது பாதுகாக்க வேண்டும். இந்த மண்ணும் அழிந்துவிடாது பயிர்செய்யவேண்டும்.

## துலா மிதித்து வேளாண்மை செய்த காலம்

பயிர்ச்செய்கையில் தனித்துவத் தன்மையை காட்டிநின்ற மண் இது. மனித வலுவை முழுமையாகப் பயன்படுத்திய பயிர்ச்செய்கை இது. மழைகாலத்தில் நெற்பயிரினால் நிறைந்திருக்கும் வயல்களிலெல்லாம் சிறுபோகம் வந்தவுடன் திடீரென கொம்பு முளைத்திருப்பது போல நீண்டிருக்கும் துலாக்களால் நிறைந்திருக்கும். முன்னைய காலங்களில் பனை மரத்தில் துலா அரிந்து நிமிர்த்தி அதை மிதித்து பட்டை கட்டி வெங்காயத்திற்கும் மிளகாய்க்கும்தண்ணீர் இறைத்த காலத்திலும் சரி, சூத்திரக் கிணற்றில் ஏர்கட்டி சுற்றியிழுத்த காலம் மாறி பின் இயந்திரம் வைத்து இழுத்திறைத்த காலத்திலும் சரி வேளாண்மை வளங்குன்றாது வளர்ந்திருக்கின்றதென்பது இம் மக்களுக்குரிய கைங்கரியமேயன்றி வேறில்லை. பாரம்பரிய முறைகளில் ஊறிப்போயிருந்த இம் மக்களின் வாழ்க்கையில் தொழில்நுட்பங்கள் அவ்வப்போது உட்புகுந்து தலைகாட்டும் போதெல்லாம் அவற்றை காலத்தின் தேவையறிந்து முன்னின்று விரைந்து உள்வாங்கிடினும் பாரம்பரிய விழுமியங்களை மறந்து விடாதிருக்கின்ற வாழ்வுக்கு ஆதாரமாயிருப்பதென்பது மனதுக்கு இன்றும் இதம் தரும் விடயமாகும். இந்த நினைப்பை புலம்பெயர்ந்த நாடுகளுக்கு வாழ்வு தேடிச் சென்றவர்கள் அவ்வப்போது மீட்டிப் பார்ப்பதுண்டு. பிறருக்கு கூறிப் பெருமைப்படுவதுமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கை வேளாண்மை

இயற்கையுடன் வாழுகின்ற காலம் எக்காலமென்றாலும் அது பொற்காலம். இயற்கையை மாற்றியமைக்கும் போதெல்லாம் அவ்வழி புதுவழியென்றாலும் நாமெல்லோரும் நம் சந்ததிக்கு இடரேற்படுத்துகின்ற உணர்வுதான் மேலோங்கியிருக்கிறது. செயற்கையின் ஆதிக்கம் புல்லுருவி போல ஊடறுத்து வேளாண்மையின் அனைத்து செயற்பாடுகளிலும் உட்புகுந்திருப்பினும் காலத்தின் கட்டாயத்திற்கு இயைந்து செயலாற்றவும் மாற்று வழிகளைப் புதுப்பொலிவுடன் பயன்படுத்தவும் எங்களூர் வேளாண்மை கற்றுக்கொண்டிருக்கின்றது காலத்திற்கேற்ற மாற்றம் எனலாம். காலையிலே துயிலெழும்பும் குயிலினோசை இப்போதெல்லாம் கேட்பதேயில்லை. அங்குமிங்குமாக ஓய்வின்றி கூவிச் செல்லும் செல்களினோசையில் கேட்குந்திறன் குறைந்ததாலென்னவோ குயிலினோசை இப்போதெல்லாம் கேட்பதேயில்லை. என்றாலும் செல்களின் அதிர்வினால் குயில்களின் பெருக்கம் குறைந்துவிட்டது தான் காரணம் என்கின்றனர் பலர். நம்மவர் படும் இடர்பாடுகளைப் பார்த்து குயில் கூவமறந்துமிருக்கலாம் அல்லவா?

இன்னும் ஆழ்ந்து பார்த்தால் செண்பகப் பறவையின் எண்ணிக்கையும் அருகிவருகின்றது. பீடைகளைக் களைந்தெறிவதற்கே உருவெடுத்த நம் நாட்டுப் பறவையிது. இம் மண்ணிற்கும் செண்பகத்திற்கும் வரலாற்றுத் தொடர்புண்டு. பூச்சியைப் புழுவைக் கொத்தித் தின்று வயலில் காவல் காக்கும் காவலாளியிது. பொன் விளைந்த வயலெல்லாம் காலம் தப்பித்தவறியதால் விளைய மறந்தாலும் செண்பகம் போன்ற கிராமத்துப் பறவைகளெல்லாம் நகரத்திற்கு படையெடுத்திருக்கின்றன. இது இயற்கையிலேற்பட்ட தாக்கமென்றாலும் இவற்றின் பாதிப்பு நாளடைவில் பூதாகாரமாக உருவெடுக்கும்போது தான் நாம் வாழுகின்ற சூழல் கட்டமைப்பின் இழப்பின் தன்மை புரியத் தலைப்படும். வேளாண்மை செய்யும் இளஞ் சந்ததியும் வருவாய்க்காகவும் சொகுசு வேலை தேடியும் நகருக்குப் புறப்பட்டதால் வேளாண்மை செய்வதற்கு இப்போதிருக்கின்ற வயதானவர்கள் போக வேலைக்கு ஆளின்றி விளைநிலமனைத்திலும் தரிசு தான் மிஞ்சப் போகின்றது. கூலிவேலைக்கு கூலிக்காரர்களைத் தேடி மாரடிக்கின்ற காலம் மிக விரைவில் வரவிருக்கின்றது.

இயந்திரத்தினுதவி இதிலே மிகவும் பயன்படும். உழுவதிலே, நீரிறைப்பதிலே பசளை போடுவதிலே அறுவடை செய்வதிலே என அனைத்து வேலைகளுக்கும் அதிக கூலி கொடுத்தும் வேலையாளைத் தேட வேண்டிய நிலை வரும். அந்நேரத்தில் இயந்திரத்தின் உதவி மிகப் பக்கபலமாக இருக்கும். தொழிநுட்பங்களைப் புகுத்தும்போது கூலியாள் அதிகம் தேவைப்படாதவையாகப் பார்த்து உட்புகுத்தல் நல்லது. நீர்ப்பாச்சலில் சொட்டு நீர்ப்பாசனம், தூவல் நீர்ப்பாசனம் என்பவற்றை அதிகமாக பயன்படுத்தல் நல்லது. வெறுமனே இவற்றைப்பற்றி இனியும் விளக்கங்கள் கொடுத்துக் கொண்டிருந்து எதுவும் நடக்கப் போவதில்லை. இவ்வகை நீர்ப்பாசன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதிகளை ஒவ்வொரு விவசாயியும் ஏற்படுத்திக் கொள்ள உதவியும் செய்தால் இவற்றின் நன்மைகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**சேதன விவசாயம்**

சேதன விவசாயம் எமக்கொரு ஊக்கியாகும். அது தான் எமது வாழ்வாதாரமாகும். இயற்கையுடன் பின்னிப் பிணைந்து செய்யும் விவசாயமிது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் சனத்தொகை கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக பெருகவேயில்லை. கணிசமான அளவு குறைந்திருக்கின்றது. இடம்பெயர்ந்து போய்க் கொண்டிருப்பதால் இந்த நிலையில் இருக்கின்ற அதீத விளைச்சல் பயிரினங்களே போதுமானதாக இருக்கின்றது. இருக்கும் சனத்தொகைக்கு இங்கே உற்பத்தியாகும் அளவே போதுமானது. ஆனால் திட்டமிடப்பட்ட விவசாயமாயிருக்கவேண்டும். விவசாயி நட்டப்படாமலிருக்கும்வரை விவசாயம் தட்டுமுட்டுப்படாமலிருக்கும். இந்நிலையில் அசேதன இரசாயனங்களைப் பற்றி சிந்திப்பதிலும் பார்க்க திட்டமிடலிலிருக்கும் பொறுப்பிலிருப்போர் சேதன விவசாயத்தை எவ்வழியென்றாலும் சற்று மாற்றி தேவைக்கேற்ப பயன்படுத்துவதன்மூலம் சிறந்த விளைச்சலையும் வருவாயையும் தேடிக்கொள்ளலாம். சேதன விவசாயத்தின் மூலமாக சூழல் நஞ்சாவதையும் குடிமக்கள் தேவையற்று நோய்வாய்ப்படுவதனையும் தவிர்க்கலாம். நிலத்தில், நீரில், ஆகாயத்தில் என நஞ்சாக்கல் நடந்தாகிவிட்டது. இனி வருங்காலத்தையாவது அசேதன இரசாயனங்களற்ற விவசாயத்தில் இழுத்துச் சென்று அடுத்த சந்ததியிடம் ஒப்படைக்க வேண்டும்.

**பசுந்தாளாக, பசுந்தாள் இலைப் பசளையாக...**

மண்ணின் வளம் அதிலுள்ள சேதனப் பொருளினளவில் தங்கியிருக்கிறது. சேதனப் பொருளின்றி தாவரத்தின் வளர்ச்சி அபரிமிதமாக இருக்காது. தாவர வேர்களின் வளர்ச்சிக்கும் திரட்சிக்கும் மக்கியுள்ள சேதனப்பொருட்கள் மிகவும் அவசியம். வடமராட்சி மண்ணுக்கும் மண்ணின் மைந்தர்களுக்கும் இந்தத் தத்துவம் நன்றாகவே விளங்கும். அதன் பிரதிபலிப்பாகவே பயிர்ச்செய்கையில் பசுந்தாள் பசளையாகவோ அல்லது பசுந்தாள் இலைப் பசளையாகவோ எப்போதும் இலை குழைகளைத் தாழ்க்கும் வழக்கம் இங்குண்டு. குறிப்பிட்ட தாவரங்களின் இலை குழைகளை பதமாக வெட்டியெடுத்து காயப்போட்டு பின் நிலம் கிளறும்போது அவற்றை வரிசைக்கிரமமாக வைத்து தாழ்த்து ஒரு மாதத்தின்பின் நாற்றுநடும் லாவகம் இம்மண்ணில் நடைபெறுகின்றது. பன்னை, எருக்கலை, பூவரசு, பனை, கிளிறிசிடியா போன்றன பசுந்தாள் இலைப் பசளையாகவும் சணல் மற்றும் அவரைப் பயிர்கள் பசுந்தாள் பசளையாகவும் வெங்காயம், மிளகாய், புகையிலை போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படுகிறது. சேதனப் பசளைகளைத் திறம்பட தேவைகருதி பயன்படுத்தி பயிர்ச்செய்கை செய்யப்படுகின்றது. சேதனப் பசளைகளினளவு மண்ணில் அதிகரிக்கும் போது பயிரின் வேர்த்தொகுதி விசாலமாகின்றது. வேரின் விருத்திக்கு தேவையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்று, ஊட்டச்சத்து மற்றும் நன்மை தரும் நுண்ணங்கிகளின் அளவும் அதிகரிக்கின்றது. பயிரின் வீரியமும் மேம்படுகின்றது. இதனால் தேவையற்ற நோய்த் தாக்கங்களிலிருந்து பயிருக்கு விடுதலை கிடைக்கின்றது. சேதன விவசாயத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்த மக்களிவர்கள். அதற்கு முக்கியத்துவமும் கொடுத்திருக்கின்றார்கள். இந்த பயிர்ச்செய்கை உத்தியை வடமராட்சியிலிருந்து நல்ல செய்தியாக ஏனைய விவசாயிகளுக்கு தெரியப்படுத்தவேண்டும்.

## திட்டமிட்ட விவசாயத்தின் முக்கியத்துவம்

விவசாயி எக்காரணங் கொண்டும் நஷ்டமடையாத விவசாய திட்டமிடல் அவசியம். இருந்த ஒரேயொரு வழியின் கழுத்தும் நெரிக்கப்பட்டு உயிரூசலாடிக் கொண்டிருக்கும் நிலையில் சந்தைப்படுத்தல் என்பது உள்ளூருக்குள்ளேயே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கடனாயெடுத்த பணத்தை முதலாய்ப் போட்ட விவசாயமும் விளைச்சல் நன்றாக வந்தும் அறவிலைக்கு தேடி கெஞ்சி விற்கவேண்டிய துர்ப்பாக்கியமாகி நஷ்டப்பட்டு வேறு வேலை தேடுமளவிற்கு கொண்டுவந்து விட்டிருக்கின்றது. இதனைத்திற்குமான காரணங்களிலொன்றாக திட்டமிடல் இருக்கின்றது. ஒரே நேரத்தில் அனைவரும் ஒரே பயிரை பயிர் செய்வதும் அறுவடையின்போது தமக்கிடையே திடீர்ப் போட்டியை ஏற்படுத்துவதும் இக்காரணங்களில் ஒன்றாகும். இப் போட்டியை அந்தந்த இடத்திலிருக்கின்ற விவசாய கழகங்கள் அனைத்துமிணைந்து தவிர்க்கலாம். அதேநேரத்தில் எந்த விவசாயியும் நஷ்டமடையாதவாறும் வழிசெய்யலாம். விவசாயி நஷ்டமடையும் சந்தர்ப்பங்களில் தாமாகச் சேர்த்த முதலிலிருந்து இழப்பீடும் செய்யலாம். இதற்காக அரச உதவியையே பன்னாட்டு நிறுவனங்களின் திட்ட உதவியையோ எள்ளளவும் நம்பியிருக்கத் தேவையில்லை. விவசாயிகளனைவரும் இணைந்து சிறுகச் சிறுக பணம் போட்டு நிதியமொன்றை உருவாக்கி அதன்மூலம் இம்மாதிரியான இடர்களின்போது உதவிசெய்யலாம். இதனை Cognitive social capital என அழைப்பர். இம் மாதிரியான சுயஉதவி நிதியங்கள் பல நாடுகளில் சிறப்பாக செயற்படுகின்றன. தமிழ்நாட்டின் மதுரை மாவட்டத்தில் உள்ள தேனீ என்னுமிடத்தில் உள்ள குடும்ப பெண்கள் 8000 பேர் இணைந்து "விடியல்" என்ற அமைப்பினை உருவாக்கி தமது தேவைகளனைத்தையும் தமது முதலிலேயே பூர்த்திசெய்து கொள்கிறார்கள். பிறரை எதற்கும் நம்பியிருக்கத் தேவையில்லாதளவிற்கு சிறுகச்சிறுகச் சேமித்த இந்நிதி பல்கிப் பெருகி ஒரு நம்பிக்கை நிதியமாக மாற்றியிருக்கிறார்கள். பெண்களைத் தலைமைத்துவமாக உள்ள குடும்பங்கள் சிறப்பாக வாழ்வதற்கான அடித்தளத்தை இட்டிருக்கின்றார்கள். தம்மைத் தாமே காப்பாற்றிக்கொள்ளக் கூடியதாயிருக்கும் சிறப்பு இது. இதன்மூலம் அறா விலைக்கு நிர்ணயம் செய்யும் இடைத்தரகர்களிடம் தங்களது விளைபொருட்களை சந்தைப்படுத்துவதற்காக வலிந்து சிக்கிக்கொள்ளும் நிலையிலிருந்து விலகி அவர்களிடம் கேள்விகேட்கும் நிலைக்கு தயார்ப்படுத்திக் கொள்ளமுடியும். மொறீசியசு நாட்டிலும் இம்மாதிரியான சுயஉதவி நிதியங்களே சிறப்பாக இயங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சந்தைவாய்ப்பை அதிகரிக்க**

அரும்பாடுபட்டு விளைவித்த பொருட்களெல்லாம் விரும்பிய விலைக்கு விற்கமுடியாமல் அல்லலப்படும் வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைத்தாகவேண்டும். பயிருற்பத்தியில் கிடைத்த விளைபொருட்களின் மூலம் உணவுப் பொருட்களை தயார்செய்யும் சிறு கைத்தொழில் முயற்சிகளை முடிந்தவரை ஊக்குவிக்கவேண்டும். அதற்கொரு நல்ல சந்தைவாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். திடீரென பாதை திறந்து வெளியூர் பொருட்களெல்லாம் தினுசு தினுசாக வந்து உள்ளூர் உற்பத்தியை நலிவுறச் செய்யாது பார்த்துக்கொள்ளவேண்டும். இங்கேயும் திட்டமிடல் மிகவும் அவசியமாகும்.

**வடமராட்சி நாற்றுக்களின் பெறுமதி**

புகையிலை நாற்று என்றாலென்ன நல்ல விதையென்றாலென்ன குடாநாட்டின் அனைத்து விவசாயிகளும் நாடுமிடம் வடமராட்சிதான். அவ்வளவிற்கு வடமராட்சியில் உற்பத்தி செய்யப்படும் விதைக்கும் நாற்றுக்கும் மவுசும் பெறுமதியும் அதிகம். நாற்றுக்கள் அவ்வளவும் வீரியமாகவும் சிறப்பானதாகவும் இருக்குமென அனைத்து விவசாயிகளும் புகழ்ந்து கூறுவார்கள். பயிர்ச்செய்கையில் தனித்துவத் தன்மையைப் பேணுபவர்கள் இவ்வூர் விவசாயிகள். சென்ற போகத்தில் வடமராட்சியில் விளைந்த முருங்கைக்காய்தான் குடாநாடு முழுவதும் பயன்படுத்தப்பட்டன. புதுமையைப் புகுத்தி சிறந்த முருங்கைக்காயை உற்பத்தி செய்தார்கள் இவ்வூர் மக்கள். இதுபோல புகையிலை உற்பத்தியிலும் அதனைப் பதப்படுத்துவதிலும் வடமராட்சிக்கென்றே தனியான பாணி இருக்கின்றது. வெங்காயம் மிளகாய் மட்டுமல்ல ஏனைய பயிர்களிலும் தமது திறமைகளைக் காட்டும் இவ் விவசாயிகள் வரட்சி கண்டு என்றுமே சோர்ந்துபோனதில்லை. அருகே கடலிலிருந்து பெறப்படும் மீன் வளத்திலிருந்து பெறப்படும் புரதத்திற்கு இணையாக பயிர்ச்செய்கையின் மூலமாக தாவர புரதமும் ஈடுசெய்யப்படுகின்றமை சிறப்பானது.

**திண்மக் கழிவுகளை மீள்சுழற்சி செய்து கூட்டெருவாக...**

கூட்டெருவில் சிறந்ததாக வன்னியெரு ஒருகாலத்தில் இருந்தது. கண்டி காங்கேசன்துறை வீதி மூடப்பட்டதுடன் வன்னியுடனான தொடர்பும் வன்னியெருவின் வருகையும் நின்றுவிட்டது. குடாநாட்டிற்கு தேவையான கூட்டெருவுக்கு இருக்கின்ற திண்மக் கழிவுகளை மீள்சுழற்சி செய்துதான் பயன்படுத்த முடியும். வடமராட்சியில் திண்மக் கழிவுகளை பக்குவமாக அகற்றுவதற்கு ஆங்காங்கே வெளிகள் இருந்தாலும் வெறுமனே இக்கழிவுகளை கொட்டுவதனை விட அவற்றை கூட்டெருவாக மாற்றினால் கழிவுகளை பாதுகாப்பாக அகற்றிய மாதிரியுமிருக்கும் அதேநேரத்தில் சிறந்த கூட்டெரு கிடைத்ததாயுமிருக்கும். கூட்டெரு தயாரிப்பதற்கு மண்புழுக்களை பயன்படுத்தலாம். அத்துடன் நன்மைதரும் வினைத்திறனுள்ள நுண்ணங்கிகளையும் (*Effective Micro organisms*) பயன்படுத்தலாம். மண்புழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டெருவின் மூலமாக சிறந்த பலனைப் பெறலாம். தொழில்வாய்ப்புள்ள கூட்டெரு உற்பத்தியை ஊக்குவிக்கவேண்டும். இதன்மூலம் மண்ணின் வளத்தையும் பேணிப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

**பனை தென்னை வளங்களும் பல்பயன்தரும் மரங்களும்...**

வடமராட்சியின் வளங்களுள் பனை முக்கிய பங்கு வகிக்கின்றது. பயன்பாட்டில் தென்னையும் அதிகம் உள்வாங்கப்படுகின்றது. இங்கே பனை தென்னை ஆகிய மரங்கள் அதிகம் பயன்பாட்டிலிருக்கின்ற காரணத்தினால் இவற்றினை விருத்திசெய்ய ஆவன செய்யப்படவேண்டும். பனை தென்னை போன்றவற்றை நடுகை செய்வதற்கு அரச சார்பிலோ, அரச சார்பற்ற நிறுவனங்களின் சார்பிலோ அல்லது பொது தொண்டு நிறுவனங்களினாலோ திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படலாம். வடமராட்சிக்கு தேவையான தேங்காயை உற்பத்தி செய்ய ஆவன செய்தல் சிறப்பானது. பனையின் எண்ணிக்கை குறைந்து செல்வது அவதானிக்கப்பட்டுள்ளது. மர தேவையென்றதும் பனை மரத்தை தறிப்பதுதான் முதல் தெரிவாக இருக்கின்றது. பல்வேறு தேவைகளைக் காரணங்காட்டி தறிக்கப்படும் ஒவ்வொரு மரத்திற்காக மீளவும் ஒரு மரமாவது நடப்பட வேண்டும்.

பல்பயன்தரு மரங்களை நடுகைசெய்து நமக்குத் தேவையான அனைத்தையும் பெற்றுக்கொள்ளமுடியும். வேலிகளை பல்பயன்தரு மரங்களால் நடவுசெய்து உயிர்வேலிகளாக்குங்கள். பொது இடங்களில் மர நடுகையை ஊக்குவிக்க வேண்டும். பழ மரங்களை திட்டமிட்டு நடுகைசெய்யலாம். மாதிரி வேளாண்காடுகளை அமைத்து அதன் தனித்துவத்தன்மையை, பயன்பாட்டை அனைவரும் உணரத்தலைப்பட வேண்டும். மூலிகை மரங்களை ஆங்காங்கே நடவுசெய்து அதன் பயன்பாட்டை பெற வழிசெய்தல் வேண்டும். வடமராட்சியன்னையின் அழகு பொலிவுற அனைத்தும் செய்தல் வேண்டும். இருக்கின்ற மிச்சசொச்ச சந்ததியாவது நலமாக வாழ நல்லதொரு மனை, நல்ல சூழல், குடிக்க நல்ல தண்ணீர், சுவாசிக்க நல்ல காற்று அனைத்தும் வேண்டும்.

கிராம அபிவிருத்தித் திட்டங்களில் இவையனைத்தையும் ஒன்றிணைத்து அனைத்து மக்களும் உணர்வுபூர்வமாக பங்கேற்க ஆவன செய்தல் வேண்டும்.

வரம்பே தலகாணி, வைக்கோலே பஞ்சுமெத்தை,
வெற்றுடம்பே பட்டாடை.... ஓ! அந்த வெள்ளையுள்ளங்களுக்காக
அனைவரும் இணைந்து, அவர்களையும் இணைத்து பாடுபடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி பிரதேச மக்கள் - வாழ்வும் வளமும் குடிப்புள்ளியியல் நோக்கு

**பேராசிரியர் கா. குகபாலன்**

தலைவர், புவியியற்றுறை

யாழ். பல்கலைக்கழகம்

ஒரு பிரதேசத்தின் செழிப்பு நிலைக்கு அப்பிரதேசத்தின் பௌதிக வளங்களுக்கு இணைவான மனித வளமே முக்கியத்துவம் பெறுகின்றது. அதாவது தாம் வாழும் பிரதேசத்தில் காணப்படக்கூடிய பௌதிக வளங்களை தத்தமது ஆற்றலுக்கேற்ப பயன்படுத்தி வெற்றி கண்ட நாடுகளை, பிரதேசங்களை நாம் உலகில் காணக்கூடியதாக இருக்கின்றது. பற்றாக்குறையான வளங்களை மனிதவள ஆற்றலினால் வெற்றிகொள்வது மட்டுமல்லாது மனித வளத்தினை விருத்தி செய்வதன் வாயிலாகவும் பல நாடுகள் முன்னிலையில் நிற்கின்றன. இந்தவகையில் வடமராட்சிப் பிரதேசத்தில் வாழ்ந்துவந்த மக்களின் அயராத முயற்சியின் விளைவாக சமூக, பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சியில் முன்னணியில் திகழ்ந்துவரும் பிரதேசமாகவும் ஏனைய பிரதேசங்களுக்கு முன்னுதாரணமாகவும் இருந்துவருகின்றதென்றால் மறுப்பதற்கில்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டினை வலிகாமம், தென்மராட்சி, தீவகம், வடமராட்சி என நான்கு புவியியற் பிரதேசங்களாக வகைப்படுத்திக் கொள்ளலாம். அவற்றில் ஒப்பீட்டு ரீதியில் வலிகாமம் பிரதேசம் மண்வளம், நீர்வளம் போன்றவற்றில் ஏனைய பிரதேசங்களைவிட சிறப்புடையதாக இருக்கின்றது. ஏனைய பிரதேசங்கள் பௌதிக ரீதியில் அதிக சிறப்புத் தன்மையைக் கொண்டதாக இல்லாதபோதிலும் அங்கு வாழ்ந்துவரும் மக்களின் கடின உழைப்பு, கல்விப் பாரம்பரியம், பௌதிக நிலைக்கேற்ப தமது பொருளாதார முறைமைகளில் ஏற்படுத்திக்கொண்ட மாற்றங்கள் போன்றவற்றினால் நாட்டுக்கே முன்னுதாரணமான பிரதேசங்களாகத் திகழ்கின்றன. அந்தவகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கே பெருமை சேர்க்கக்கூடிய வகையில் பண்பாட்டு முதிர்ச்சியிலும் கல்விப் புலமையிலும் சிறப்புற்ற மனித வளத்தினையும் கொண்ட பிரதேசமாக வடமராட்சிப் பிரதேசம் காணப்படுகின்றது.

வடமராட்சிப் பிரதேசம் நிலவளம் மற்றும் நீர்வளத்தினைப் பொறுத்தவரை முழுமையான செழிப்புத்தன்மை கொண்ட பூமியல்ல. இருந்தபோதிலும் மக்களின் விடாமுயற்சியும் இயற்கையின் அரவணைப்புமே இப்பிரதேச மக்களின் செழிப்புக்கு கட்டியம் கூறுவனவாகவுள்ளன. இத்தகைய பண்புகளைக் கொண்ட வடமராட்சிப் பிரதேசம் 289.0 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டதாக, அதாவது யாழ்ப்பாணக் குடாநாட்டின் மொத்த நிலப்பரப்பில் 27.9 சதவீதத்தினை கொண்டது. யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் ஒரு குடாநாடாக அமைந்து காணப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரதேசம் தொண்டமானாற்றிலிருந்து முள்ளிப்பற்றுவரை குடாநாட்டில் ஏனைய பகுதிகளிலிருந்து சிறிய நீர்ப்பரப்பினால் பிரிக்கப்பட்ட நிலக்கூறாகக் காணப்படுகின்றது.

வடமராட்சிப் பிரதேசத்தின் பௌதிகப் பண்புகளை நோக்கின் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கேயுரித்தான சுண்ணக்கற் படிவுகளை அடித்தளமாகக் கொண்டு உருவான நிலப்பகுதியுடன் தொடர்ச்சியான மணற்படிவுகளால் மூடப்பட்ட வடமராட்சி கிழக்குப் பிரசேதத்தையும் கொண்ட பிரதேசமாகவும் உள்ளது. அத்துடன் கடல்நீர் ஓட்டம், காற்றுக்களின் போக்கு காரணமாக மணற்படிவுகள் படிந்தவண்ணமுள்ளன. வரண்ட பிரதேசத்துக்குரிய காலநிலைப் பண்புகளைக் கொண்டு காணப்படும் இப்பிரதேசத்தின் நீர்வளமானது தரைகீழ் நிரின் செல்வாக்குக்குட்பட்டிருக்கின்றது. இருப்பினும் இப்பிரதேச தரைகீழ் நீர்வளம் கடல் சார்ந்த பிரதேசங்களிலும் உள்ளூரில் சில பகுதிகளிலும் உவர்த்தன்மை கொண்ட நீர்வளமாக இருப்பினும் கணிசமான பகுதிகளில் நன்னீர் வளத்தினையும் காணமுடிகின்றது. எனவே இத்தகைய சாதக, பாதக பௌதிக பண்புகளுடன் இணைந்து வாழ்ந்துவரும் மக்களின் வாழ்வும் வளமும் சிறப்பாகக் காணப்படுவதற்கு அவர்கள் இயற்கையை தமக்கு இசைவாக்கிக் கொண்டு பொருளாதார, சமூக, பண்பாட்டு வளர்ச்சியை முன்னெடுத்துச் சென்றதன் விளைவே என்றால் மிகையாகாது.

வடமராட்சிப் பிரதேசம் நிர்வாக ரீதியாக இரண்டு பிரதேச செயலகப் பிரிவுகளையும் ஒரு உதவி அரசாங்க அதிபர் பிரிவினையும் கொண்டது.

அட்டவணை - *I*

**நிர்வாக அலகுகள் - வடமராட்சிப் பிரதேசம்**

| பிரதேச/ உதவி அரச அதிபர் பிரிவுகள் | பரப்பு (சதுர கி.மீ) | கிராம சேவகர் பிரிவு | கிராம எண்ணிக்கை |
|---|---|---|---|
| வடமராட்சி தென்மேற்கு (கரவெட்டி) | 88.0 | 25 | 176 |
| வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) | 29.0 | 35 | 130 |
| வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) | 179.0 | 18 | 38 |
| மொத்தம் | 296.0 | 88 | 344 |

*Source : Statistical Information 2008 Jaffna District*

## குடித்தொகைப் பண்புகள்

வடமராட்சிப் பிரதேசம் உட்பட யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் தென்னிந்தியாவுக்கும் இடையில் நீண்ட நெடுங்காலமாக நெருக்கமான பிணைப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டு வந்துள்ளதையிட்டு வரலாற்றறிஞர்கள் ஒத்த கருத்துடையவர்களாக இருக்கின்றனர். தென்னிந்தியாவில் பௌதிகப் பண்புகள் பொய்க்கின்ற போதிலும் அரசியல் மாற்றங்கள் நிகழும் காலங்களிலும் யாழ்ப்பாணக் குடாநாடு உட்பட இலங்கையின் வடபிரதேசத்திற்கான இடப்பெயர்வுகள் நிகழ்ந்திருப்பதற்கான சான்றுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவுள்ளது. இவ்விரு பிரதேசங்களுக்குமான இறுக்கமான பிணைப்பில் வடமராட்சிப் பிரதேசம் முன்னிலையில் இருந்துள்ளது. குறிப்பாக சர்வதேச வர்த்தகத்தில் இப்பிரதேச மக்கள் பெரும்பங்கு கொண்டிருந்ததுடன் கலாசாரத் தொடர்புகளையும் இறுக்கப் பற்றியிருந்தனர் எனலாம்.

வடமராட்சிப் பிரதேச மக்கள் வாழ்வியலில் 1981ஆம் ஆண்டு குடித்தொகைக் கணிப்பின் பிரகாரம் 121,411 மக்கள் வாழ்ந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. 2007ஆம் ஆண்டு மாவட்ட செயலக புள்ளிவிபரங்களின்படி 106,179 மக்களாக வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றதையும் சுட்டிக்காட்டியுள்ளது. ஏறத்தாழ 12000 மக்கள் இவ்விடைப்பட்ட காலப்பகுதிகளில் குறைவடைந்துள்ளனர். இதற்குப் பல காரணிகள் உண்டு. குறிப்பாக வடமராட்சி கிழக்கில் 16 கிராம சேவையாளர் பிரிவுகள் அரச கட்டுப்பாடற்ற பிரதேசமாவிருந்தமையாலும் காலத்துக்குக்காலம் நிகழ்ந்த அசாதாரண சூழ்நிலைகளின் விளைவாக வெளியிடப்பெயர்வு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்தமையாலும், குடும்ப அளவு குறுகிச் செல்வதன் காரணமாகவும் குடித்தொகைக்குறைவு ஏற்படுவதற்கு பிரதான காரணிகளாக இருந்துள்ளன எனலாம்.

வடமராட்சிப் பிரதேசத்தின் குடித்தொகை போக்கானது 1871-2007 ஆம் ஆண்டுகளிடையில் பின்வருமாறு காணப்படுகின்றது.

அட்டவணை - II

**குடித்தொகைப் போக்கு 1871 - 2007**

| ஆண்டு | குடித்தொகை | இடைக்கால அதிகரிப்பு | சராசரி வருட வளர்ச்சி வீதம் | இலங்கையின் சராசரி வருட வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|---|
| 1871 | 41978 | —— | —— | —— |
| 1881 | 47663 | 5685 | 0.14 | 1.35 |
| 1901 | 49926 | 2263 | 0.47 | 1.72 |
| 1911 | 52548 | 2622 | 0.53 | 1.42 |
| 1921 | 53258 | 710 | 0.14 | 0.91 |
| 1931 | 54775 | 1517 | 0.28 | 1.68 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 1946 | 71268 | 16493 | 2.0 | 1.52 |
| 1953 | 78923 | 7655 | 1.5 | 2.80 |
| 1963 | 90154 | 11231 | 1.4 | 2.60 |
| 1971 | 101607 | 11453 | 1.6 | 2.20 |
| 1981 | 121413 | 19806 | 1.9 | 1.70 |
| 2002 | 111805 | -9608 | -0.4 | 1.20 |
| 2007 | 106179 | -5626 | -1.1 | 1.10 |

*Source : Census of population 1871 - 1981, Statistical Information - Jaffna District 2008*

குடிக்கணிப்பு மேற்கொள்ளப்பட்ட காலந்தொட்டு 2001ஆம் ஆண்டு வரை இப்பிரதேசத்தின் குடித்தொகை வளர்ச்சிப்போக்கில் சாதகமான பண்பினையே காணமுடிகின்றது. இருப்பினும் யாழ்ப்பாண மாவட்டத்தில் காலத்துக்குக்காலம் நிகழ்ந்துவரும் அசாதாரண சூழ்நிலைகள் மக்களின் வாழ்வியலுக்குப் பெரும் இடையூறாகவிருந்து குறுகிய, நீண்டதூர இடப்பெயர்வுகளையும் ஏற்படுத்தி வருகின்றது. 1995ஆம் ஆண்டு வலிகாமம் இடப்பெயர்வானது வடமராட்சிப் பிரதேசத்திற்கான உள் இடப்பெயர்வினை அதிகரிக்கச் செய்துள்ளது. எவ்வாறெனினும் 2001ஆம் ஆண்டு வரை வடமராட்சிப் பிரதேச மக்கள் தொகையை இழக்கவில்லை. வளர்ச்சிப்போக்கினையே காட்டியுள்ளது. 2001ஆம் ஆண்டின் பின்னர் இப்பிரதேசத்தின் குடித்தொகையில் வீழ்ச்சிப்போக்கினை தெளிவாக அறிய முடிகின்றது.

பொதுவாக வடமராட்சிப் பிரதேசம் மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிடுமிடத்து கல்வி அறிவிலும், அரச தொழில்களிலும் மக்களின் பங்களிப்பு நீண்ட காலமாகவே சிறப்பான இடத்தினை பெற்றிருக்கின்றது. சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து பெருந்தோட்டப் பயிர்ச்சிசெய்கையின் விருத்தி, அரச, தனியார் துறைகளில் தொழில்வாய்ப்பு, சேவைத்தொழில்களில் ஈடுபாடு போன்ற காரணிகளுக்காக தென்னிலங்கைக்கான இடப்பெயர்வு முனைப்புப் பெற்றிருந்தது. இதனைத் தொடர்ந்து மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கான சர்வதேச இடப்பெயர்விலும் கணிசமானோர் பங்கேற்றிருந்தனர். அங்கு அரச, தனியார் துறைகளில் தமது பணியினைத் தொடர்ந்து பொருளீட்டினர். இவர்களில் ஒரு தொகுதியினர் தாயகம் திரும்பியபோதிலும் கணிசமானோர் அந்நாடுகளிலேயே தங்கிவிட்டனர். இத்தகைய உள்நாட்டு மற்றும் சர்வதேச இடப்பெயர்வின் காரணமாகவும், இறப்புக்களுக்கும் பிறப்புக்களுக்குமிடையில் அதிகளவில் வேறுபாடற்ற தன்மையினாலும் 1940கள் வரை குடித்தொகை வளர்ச்சி வீதம் தாழ்ந்த நிலையிலேயே காணப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1940 - 1980கள் வரை வடமராட்சிப் பிரதேசத்திலிருந்து வெளியிடப்பெயர்வு தொடர்ந்தவண்ணமே இருந்துள்ளது. தேசிய ரீதியான வளர்ச்சிப் போக்கோடு ஒப்பிடுமிடத்து இப்பிரதேசத்தின் குடித்தொகை வளர்ச்சிவீதம் குறைவாகவே காணப்பட்டதற்கு வெளியிடப்பெயர்வுதான் பிரதான காரணியாக இருந்துள்ளது. குறிப்பாக இக்காலப்பகுதிகளில் தென்னிலங்கைக்கான இடப்பெயர்வுடன் வன்னிப்பிரதேச குடியேற்றத்திட்டங்களுக்கான இடப்பெயர்வும் இணைந்து செயற்பட்டதன் விளைவாகவே குடித்தொகை வளர்ச்சிவீதம் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் காணப்பட்டிருந்தது எனலாம். இவை தவிர பிறப்பு, இறப்பு வீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி நிலையும் கணிசமான பங்களிப்பினைச் செய்துள்ளது.

1980களின் பின்னர் வடமராட்சி உட்பட தமிழர் வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர் உரிமைப் போராட்டத்தின் வடிவம் மாற்றப்பட்டு ஆயுதப் போராட்டமாக முனைப்புப் பெறவே உள்நாட்டு, மற்றும் சர்வதேச இடப்பெயர்வு உத்வேகம் கொண்டது எனலாம். அத்துடன் மக்கள் காலத்துக்குக்காலம் இடம்பெயர்ந்து வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது மட்டுமல்லாது அகதிமுகாம்களில் தென்னிந்தியாவுக்கும், தென்னிலங்கைக்கும் தூண்டப்பட்ட இடப்பெயர்வினை மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இளைஞர்கள், யுவதிகள் என இளம் பருவத்தினர் சர்வதேசங்களில் புகலிடம் தேடப் புறப்பட்டனர். இந்நிலைக்கு வடமராட்சி மக்களும் விதிவிலக்கானவர்களாக இருக்கவில்லை. குறிப்பாக 1987ஆம் ஆண்டு பெருத்த எடுப்பில் முன்னேறிய அரச படைகளின் "ஒப்பரேசன் லிபரேசன்" என்ற படையெடுப்பினால் வடமராட்சிப் பிரதேச மக்கள் இடம்பெயர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். அதனைத் தொடர்ந்து இந்திய அமைதிப்படைக்கும் புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தின் விளைவாக உடமைகள், சொத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காது உயிரைக் காப்பாற்றும் பொருட்டு பெருமளவிலான வெளியிடப்பெயர்வினை இப்பிரதேச மக்கள் எதிர்கொண்டனர். இவைதவிர கருவளவாக்கச் செயற்பாட்டினை மேற்கொள்ளக்கூடிய இளவயதினரின் வெளியிடப்பெயர்வும், ஆயுதப்போராட்டத்தில் நுழைந்தமை காரணமாகவும் விவாக நிலையிலும், பிறப்புக்களிலும் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியிருப்பதை பல்வேறு ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளன. இத்தகைய பண்புகளின் விளைவாக 1991ஆம் ஆண்டில் வடமராட்சியின் குடித்தொகை 100,000 ஆக வீழ்ச்சியடைந்திருந்தமையை அவதானிக்கமுடிகின்றது.

1995ஆம் ஆண்டு ஒக்ரோபர் 30ஆம் திகதி அரச படைகள் வலிகாமத்தினை தம்வசப்படுத்தும் செயற்பாட்டினை ஆரம்பித்தபோது வலிகாமப் பிரசேத்தில் வாழ்ந்து வந்த மக்களில் 95.0 சதவீதமானோர் இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சி, வன்னிப்பிரதேசம், தென்னிலங்கை மற்றும் வெளிநாடுகள் என தூண்டப்பட்ட இடப்பெயர்வுக்குள்ளானார்கள். இந்த மிகப்பெரிய இடப்பெயர்வு வலிகாமம் பிரதேச மக்களை மட்டுமல்லாது தீவகம், வடமராட்சி, தென்மராட்சிப்பகுதி மக்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைத்த ஒரு மக்கள் இடப்பெயர்வாகக் காணப்பட்டது என்பதே உண்மை நிலையாகும். வடமராட்சிப் பிரதேசத்தில் இருந்தும் மக்கள் இக்காலகட்டத்தில் தவிர்க்கமுடியாத காரணிகளால் இடப்பெயர்வுக்குள்ளானார்கள். குடித்தொகை மதிப்பீட்டின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் 1996ஆம் ஆண்டில் 918000 மக்கள் வாழ்ந்திருக்கவேண்டும். ஆனால் 1997ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் 467000 மக்களே வாழ்ந்துள்ளதாக மாவட்ட செயலக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2007ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தின் குடித்தொகை 559000 ஆகவேயுள்ளது. இந்நிலையில் இம்மாவட்ட மக்கள் இடப்பெயர்வில் வடமராட்சிப் பிரதேசத்திலிருந்தும் வெளியிடப்பெயர்வு மேற்கொள்ளப் பட்டிருப்பதையும் உறுதிப்படுத்தியுள்ளது மட்டுமல்லாது பிரதேச செயலகம் மற்றும் கிராம அதிகாரிகளின் கணிப்பீடுகளும் வெளியிடப்பெயர்வினை உறுதி செய்துள்ளன.

இவைதவிர, வடமராட்சிப் பிரதேசம் உட்பட யாழ்ப்பாண மாவட்டத்தில் 100 பெண்களுக்கு 90.1 ஆண்களே 2007ஆம் ஆண்டில் காணப்பட்டிருந்தனர். வடமராட்சி தெற்கு மேற்கு, வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு பிரதேசங்களில் 100 பெண்களுக்கு முறையே 87.4, 90.4, 95.1 ஆகவே ஆண்கள் காணப்பட்டிருந்தனர். இத்தகைய பால்விகித வேறுபாடு குடிப்புள்ளியியல் மாற்றங்களில் கணிசமான பங்களிப்பினை ஏற்படுத்தக்கூடியது. அத்துடன் 95.0 சதவீதத்திற்கு மேற்பட்ட பிரசவங்கள் வைத்தியசாலைகளில் நிகழ்தல், குடும்பக்கட்டுப்பாடு, குடும்பத் திட்டமிடலினை மேற்கொள்வதில் மக்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு, குடும்ப நல உத்தியோகத்தரின் பங்களிப்பு போன்ற பல காரணிகள் குடும்ப அளவினைக் கட்டுப்படுத்துவதில் அதிக நாட்டம் கொள்ளும் நிலையும் குடித்தொகை வீழ்ச்சிக்குரிய காரணிகளிலொன்றாகவுள்ளது. அதாவது வடமராட்சிப் பிரதேசங்களில் 1990களுக்குப் பின்னரான வயதுப் பிரமிட்டில் 0 - 4, 5 - 9, 10 - 14 வயதிடைப்பட்டவர்களுக்கான வயதுக் கூம்பானது 15 - 19, 20 - 24, 25 - 29 வயதுப் பிரிவினரைவிட ஒடுங்கிச் செல்வதை அதாவது பிறப்பு எண்ணிக்கை படிப்படியாக குறைவடைந்து செல்வதையே சுட்டிக்காட்டுகின்றது.

மேலும் 2002ஆம் ஆண்டு அரசு - விடுதலைப்புலிகளின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து வடமராட்சிப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களில் ஒரு தொகுதியினர் மீண்டும் தமது பிரதேசங்களுக்கு மீள் இடப்பெயர்வினை மேற்கொண்டனர். புரிந்துணர்வு ஒப்பந்தம் செயலிழந்த நிலையில் 2006ஆம் ஆண்டின் பிற்பகுதியில் மீண்டும் இடப்பெயர்வினை மேற்கொண்டவர்களில் கணிசமானோர் மட்டுமல்லாது பாதுகாப்பான நிலையில் வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலையினைக் கொண்டிராதவர்களும் இணைந்து வெயியிடப்பெயர்வினை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது. உதாரணமாக வடமராட்சி வடக்கு, பிரதேச செயலகப் பிரிவிலிருந்து மட்டும் 560 குடும்பங்கள் குடாநாட்டிற்கு வெளியிலான இடப்பெயர்வினை மேற்கொண்டுள்ளனர் என செயலகக் குறிப்பிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியமுடிகின்றது. குறிப்பாக A 9 பாதை மூடும் நிலை உருவாகவே 400 குடும்பங்கள் இப்பிரதேசத்தைவிட்டு இடப்பெயர்வினை மேற்கொண்டுள்ளனர். அத்துடன் சுனாமியால் பாதிக்கப்பட்டு வீட்டுத்திட்டத்திற்குள்வாங்கப்பட்ட 246 குடும்பங்களும் இவர்களுள் அடங்கும் எனவும் அறிக்கைகள் மூலம் தெரியவருகின்றது.

### குடித்தொகைப் பரம்பல்/ அடர்த்தி

வடமராட்சிப் பிரதேசத்தின் குடித்தொகைப் பரம்பலானது பௌதிக, பண்பாட்டுக் காரணிகளின் செல்வாக்குக்குட்பட்டே அமைந்து காணப்படுகின்றது. குறிப்பாக இப்பிரதேசத்தின் குடித்தொகைப் பரம்பல் நீர்வளம், நிலவளம் மற்றும் பொருளாதார வாய்ப்புக்களுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கின்றது.

அட்டவணை - III

**வடமராட்சிப் பிரதேசம் - குடித்தொகை அடர்த்தி**

| நிர்வாகப் பிரிவு | பரப்பளவு (ச.கி.மீ) | குடித்தொகை அடர்த்தி (ச.கி.மீ) | | |
|---|---|---|---|---|
| | | 1981 | 2002 | 2007 |
| வடமராட்சி தெற்கு மேற்கு | 88.0 | 758 | 565 | 526 |
| வடமராட்சி வடக்கு | 29.0 | 1479 | 1598 | 1501 |
| வடமராட்சி கிழக்கு | 179.0 | 75 | 88 | 91 |

*Source : Statistical Information 2008 Jaffna District*

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குள்ளும் அதனை சுற்றியுள்ள அயற் பிரதேசங்களிலுமே வடமராட்சிப் பிரதேசத்தில் வாழ்ந்துவரும் 80.0 சதவீதத்தினர் வாழ்ந்து வருகின்றனர். அதாவது விவசாயம், கடற்தொழில் மற்றும் பொருளாதார வாய்ப்புக்கான பகுதிகளாக இப்பிரதேசங்கள் காணப்படுவதே முக்கிய காரணங்களாக உள்ளன. வடமராட்சி தென்மேற்கு பிரதேசத்தில் கப்பூது, அந்தணன்திடல், கரம்பன் கிராமங்களிலும் துன்னாலை தெற்கில் கலிகை, வேம்படி, யாக்கரு போன்ற கிராமங்களிலும் வடமராட்சி வடக்கில் வல்லியானந்தம், பூதர்மடம், கொடிக்காடு, கற்கோவளம், கொல்லண்டையின் ஒரு பகுதியிலும் குடித்தொகைப் பரம்பல் குறைவாக உள்ளன.

இவை தவிர வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களில் மக்கள் ஐதாக அல்லது ஆங்காங்கே குழுக்கள் குழுக்களாக வாழ்ந்துவரும் நிலையினை அவதானிக்க முடிகின்றது. இப்பிரதேசம் முழுவதும் மணலும் மணல் சார்ந்த பிரதேசமாக இருப்பதனால் மக்கள் குடியிருப்பினை ஏற்படுத்திக் கொள்வதில் பின்னிற்கின்றனர். குறிப்பாக கடற்கரை சார்ந்த பகுதிகளில் மீன்பிடித் தொழிலின் நிமித்தம் தமது வாழ்விடங்களை அமைத்துக் கொண்டுள்ளனர். தற்போது அரச படைகள் விடுதலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களை மீட்டெடுத்ததன் விளைவாக இப்பகுதிகளில் வாழ்ந்துவந்த மக்கள் வன்னிப் பிரதேசத்திற்கும் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும் இடப்பெயர்வினை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் மீளவும் குடியமரச் செல்வதற்கான வழிவகைகளை மேற்கொள்ளாதவிடத்து வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள 13 கிராம சேவையாளர் பிரிவுகள் மக்களற்ற மணற்காடு, குடத்தனை, குடத்தனை கரையூர், பொற்பதி, அம்பன் ஆகிய கிராமங்களில் மிகச்சிறிய எண்ணிக்கையில் வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நகர கிராம குடித்தொகை

2007 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மாவட்டத்தின் குடித்தொகையில் கிராம, நகர குடித்தொகையானது முறையே 79.8, 20.2 சதவீதமாகக் காணப்பட்டிருந்தது. பொதுவாக இலங்கையில் பிரதேசசபைகள் உருவாக்கத்திற்கு முன்னர் மாநகரசபை, நகரசபை, பட்டினசபை எல்லைக்குள் வாழ்பவர்களையே நகர மக்கள் என வகைப்படுத்தப்பட்டது. பிரதேசசபை உருவாக்கத்திற்குப் பின்னர் பட்டினசபை பிரதேசசபையோடு இணைக்கப்படவே இலங்கையில் மாநகரசபை, நகரசபை எல்லைக்குள் வாழ்பவர்களையே நகர மக்களாவர் என தெரிவிக்கப்பட்டு புள்ளிவிபரங்கள் பெறப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் வடமராட்சிப் பிரதேசத்தில் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய இரண்டு நகரசபைக்குள் வாழ்பவர்கள் மட்டுமே நகரவாசிகளாகக் காணப்பட்டனர். இவ்விரு நகரங்களிலும் முறையே 12056, 6617 மக்கள் வாழ்ந்து வருகின்றனர். யாழ்ப்பாண மாவட்டத்தின் மொத்த நகரக் குடித்தொகையில் 3.3 சதவீதத்தினரே இவர்களாவர். இருந்தபோதிலும் நகர, கிராமங்களை வகைப்படுத்துவதில் பல அளவுகோல்கள் காணப்படுகின்ற போதிலும் 75% வீதத்திற்கு மேற்பட்டோர் விவசாயம் சாராத மக்கள் வாழும் பிரதேசமாக இருப்பின் அதனை நகர அந்தஸ்துள்ள பிரதேசமாகக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகின்றது. அந்தவகையில் நெல்லியடி, உடுப்பிட்டி, கரவெட்டி போன்ற பிரதேசங்கள் நகர அந்தஸ்து கொண்ட பிரதேசங்களாக கருதி அங்கு நகரசபைகளை உருவாக்குவதன் மூலம் அப்பிரதேசங்களில் வாழ்ந்துவரும் மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தமுடியும். எனவே இதுவிடயத்தில் அரசும் அரசியல்வாதிகளும் கவனத்தில் கொள்வது காலத்தின் கட்டாயமாகும்.

## சுனாமிப் பேரழிவும் வடமராட்சி மக்களும்

2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ம் திகதி தென்கிழக்கு ஆசியப் பிரதேசங்களில் மக்கள் எதிர்பாராத நிலையில் ஏற்பட்ட சுனாமிப் பேரழிவினால் இப்பிராந்தியத்தில் குறித்த சில நிமிடங்களில் 300,000 மக்களைக் காவுகொண்ட பரிதாப நிகழ்வில் வடமராட்சிப் பிரதேசமும் இணைக்கப்பட்டுவிட்டது. இலங்கையில் 30196 மக்கள் இறப்பினை ஏற்படுத்தியது மட்டுமல்லாது பலரைக் காயப்படுத்தியும் விட்டதுடன் கடல் வளத்தைத் தம்வளமாகக் கொண்டிருந்த கடற்கரையோரப் பிரதேசங்களில் குடியிருப்புக்களை ஏற்படுத்தியிருந்தவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார வாய்ப்புக்கான வளங்கள் சூறையாடப்பட்டுவிட்டது. இந்நிலையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் வடமராட்சி கிழக்கு மற்றும் வடமராட்சி வடக்கு பிரதேசங்களின் கரையோரப் பிரதேசங்களில் வாழ்ந்துவந்த மக்கள் இவ்வனர்த்தங்களுக்கு ஆளாகினர் எனலாம். யாழ்ப்பாண மாவட்டத்தில் 1256 மக்கள் குறித்த சில நிமிடங்களில் இறப்பினைத் தழுவினர். அவர்களில் 789 பேர் வடமராட்சி கிழக்கு பிரதேசத்திலும் 121 பேர் வடமராட்சி வடக்கிலும் சுனாமியின் சீற்றத்திற்கு இரையாகினர்.

அட்டவணை - *IV*

**சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான விபரங்கள் - வடமராட்சிப் பிரதேசம்**

| பாதிப்பின் விபரம் | வடமராட்சி வடக்கு | வடமராட்சி கிழக்கு |
|---|---|---|
| இறப்புக்கள் | 121 | 789 |
| காயமடைந்தோர் | 450 | 1197 |
| அனாதைகளாக்கப்பட்ட சிறுவர்கள் | 43 | 38 |
| முற்றாக அழிந்த வீடுகள் | 3508 | 3532 |
| பகுதியாக சேதமடைந்த வீடுகள் | 2027 | 73 |
| பாதிக்கப்பட்ட குடும்பங்கள் | 8380 | 4251 |
| பாதிக்கப்பட்ட மக்கள் | 28206 | 26563 |

ஆதாரம் : மாவட்ட செயலகம், சுனாமித் தகவல் நிலையம், யாழ்ப்பாணம் - 2007

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலக நாடுகளும் சர்வதேச நிறுவனங்களும் பல்வேறு நலத்திட்டங்களையும் உதவிகளையும் மேற்கொண்டு வருவதன் பயனாக பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வில் துன்பத்திலும் ஓரளவு நிம்மதிப் பெருமூச்சினை விடக்கூடியதாக இருக்கின்றது. குறிப்பாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வீடுகள் நிர்மாணம், பொது மண்டபங்கள், சனசமூக நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், முன்பள்ளிகள், சிறுவர் பூங்காக்கள், மீனவர்களுக்கான நலத்திட்டங்கள், விவசாயிகளுக்கான திட்டங்கள், குடிநீர்த்திட்டங்கள் போன்ற பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவருவதனால் அவர்களது வாழ்வில் மாறுதல்களைக் காணமுடிகின்றது. குறிப்பாக சுனாமிக்கு முன்னரான காலப்பகுதிகளில் நிரந்தரமான குடியிருப்புக்களைப் பெற்றிருக்காத குடும்பங்களும் தற்போது நிரந்தர வீடுகளையும் அடிப்படை வசதிகளையும் பெற்றிருப்பது சிறந்த பெறுபேறாகவே கொள்ளலாம். அதாவது அகதிமுகாம்களிலும் பொதுஇடங்களிலும் வாழ்ந்துவந்த மக்கள் தற்போது தனித்தனியான வீடுகளுடன் வாழ்ந்துவருகின்ற போதிலும் அவர்களது வாழ்வில் ஏற்பட்ட இத்துயரமானது மேற்குறித்த நலத்திட்டங்களின் மூலம் பெறப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வாதாரத்தைவிட அவர்களது வாழ்வில் என்றும் அழிக்கமுடியாத கொடூர நிகழ்வென்றே கூறவேண்டும்.

## முடிவுரை

மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டதும் பொருளாதார சமூக பண்பாட்டியல் அடிப்படையில் சிறந்து விளங்கிவரும் வடமராட்சிப் பிரதேசத்தில் கடந்த கால் நூற்றாண்டு காலமாக பல்வகைப்பட்ட இயற்கை மற்றும் மனித அவலங்களின் விளைவாக மக்களது வெளியேற்றம் மற்றும் இறப்புக்கள் அதிகரித்த பிரதேசமாக காணப்படுகின்றது.

யுத்த சூழ்நிலையின் விளைவாக கடல் வலயச்சட்டம், மீன்பிடிப்பதற்கான தடைகள் போன்றவற்றால் பாதிப்புற்றிருந்த மக்களிடையே சுனாமியின் அகோரத் தாண்டவத்தின் விளைவாக வடமராட்சி வடக்கு கரையோரப் பிரதேசம் வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களில் வாழ்ந்துவந்த மக்களிடையே இறப்புக்கள், உடமைகளை இழத்தல் போன்ற சம்பவங்களினால் மக்கள் மிகப்பெரிய துன்பத்திற்குள்ளானார்கள். இயற்கை அனர்த்தங்கள், மற்றும் மனித செயற்பாடுகளின் விளைவாக மக்கள் வாழ்விடங்கள் பல அழிக்கப்பட்டன. அத்துடன் கணிசமான விவசாய நிலங்கள் பயிரிடப்படாத நிலையிலும், உவர் தன்மையடைந்த நிலையிலும் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களைப் போலவே வடமராட்சிப் பிரதேசத்திலிருந்து பொருளாதார மற்றும் கல்வித்தகைமையும், தொழில்வாய்ப்பும் கொண்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் வெளியிடப்பெயர்வினை மேற்கொண்ட நிலையில் பொருளாதார நிலையில் பின்தங்கியவர்கள் மற்றும் இடைத்தர தொழிலில் ஈடுபாடு கொண்டவர்களே கணிசமான அளவில் இப்பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்றமையைக் காணமுடிகின்றது. அதேவேளை தூண்டப்பட்ட நிலையிலோ அல்லது தன்னிச்சையாகவோ வெளியிடப்பெயர்வினை மேற்கொண்டவர்களில் பெரும்பாலானோர் ஆரம்பத்தில் குடியிருப்பினை ஏற்படுத்திக்கொண்ட பிரதேசங்களில் தற்காலிக குடியிருப்பினை ஏற்படுத்திய போதிலும் காலப்போக்கில் அப்பிரதேசங்களில் தற்காலிக, நிரந்தர இடப்பெயர்வாளராகிய நிலையையும் அவதானிப்பின் மூலம் உணரமுடிகின்றது. எனினும் வன்னிப் பிரதேசத்திற்கான மீள் இடப்பெயர்வினை மேற்கொள்வது பற்றி சிந்திப்பர் எனக்கொள்ளமுடியும். மேலும் வடமராட்சிப் பிரதேசத்தில் வாழ்ந்துவரும் மக்களின் பொருளாதார மேம்பாட்டினை முன்னெடுத்துச்செல்ல வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். கடந்த மூன்று தசாப்த காலமாக பல்வகைப்பட்ட அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்துவந்த மக்களின் வாழ்வாதாரத்தினையும் மனவலிமையையும் உறுதிப்படுத்தும் வகையிலான செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படல் அவசியமாகின்றது. இவ்வாறு மேற்கொள்ளாத பட்சத்தில் ஒரு மௌனமான, அமைதியான மக்கள் வெளியிடப்பெயர்வு தொடர்வதற்கு வாய்ப்பே உண்டு என நம்பலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியின் வாழ்வியலை வகுத்துக்காட்டும் நெடும் பாட்டு - காதலியாற்றுப்படை

*கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்*

## புலவர் அறிமுகமும் ஆற்றுப்படையும்

வடமராட்சியில் பிறந்த பேராசிரியர் கணபதிப்பிள்ளை புலமைத்திறன் வாய்ந்தவர். பருத்தித்துறையில் அவருடைய வாழ்வுச்சூழல் கல்விப் பேற்றைப் பெறுவதற்கு வாய்ப்பாக இருந்தது. **2.7.1903** ஆம் நாள் அவர் தும்பளைக் கிராமத்தில் பிறந்தார். பாரம்பரிய வைத்தியரான க. கந்தசாமிப்பிள்ளையே அவருடைய தந்தையார். இளம் வயதிலே கணபதிப்பிள்ளை ம. முத்துக்குமாரசாமிக் குருக்களிடம் தமிழையும் வடமொழியையும் கற்றவர். முத்துக்குமாரசாமிக் குருக்கள் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரிடம் பயின்றவர். இதனால் கணபதிப்பிள்ளையும் ஒரு புலமை மரபாகத் தோன்றியவரென்பது வெளிப்படையாகின்றது. தனது ஆங்கில மொழிக் கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலே பயின்றார். தமிழ்மொழி, வடமொழி, ஆங்கிலமொழி என மும்மொழிப் புலமைபெற்ற இவருக்குப் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறும் வாய்ப்பும் கிடைத்தது. அங்கு சமஸ்கிருதம், பாளி என்னும் மொழிகளைச் சிறப்பாகப் பயின்றார். அதன்பின்னர் நான்கு ஆண்டு புலமைப்பரிசில் பெற்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் (1931 - 1932) பின்னர் இலண்டன் பல்கலைக்கழக கீழைத்தேய ஆபிரிக்க ஆய்வுப்பள்ளியிலும் (1933 - 1935) பயின்றார். இக்கல்விப் பயிற்சியால் தமிழ்மொழியின் ஆற்றலையும் சிறப்பையும் அவர் நன்கு உணர்ந்துகொண்டார். ஏற்கனவே அவர் தொடர்புற்றிருந்த தமிழ்ப் புலமைப் பாரம்பரியத்தை முன்னெடுத்துச் செல்வதையே தனது வாழ்நாட் பணியாக மேற்கொண்டார். பல்கலைக்கழகத்தில் அவர் பணியாற்றிய காலத்தில் சிங்களம், தெலுங்கு, கன்னடம், மலையாளம், பிரஞ்சு, ஜேர்மன் ஆகிய மொழிகளையும் அறியும் வாய்ப்பைப் பெற்றார். இதனால் மொழி ஆய்வுத்துறையில் அவருக்கு ஈடுபாடு ஏற்பட்டது. தமிழ்ச் சாசனங்கள் பற்றிய ஆய்வினை மேற்கொண்டு கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார்.

சாசனவியலில் அவருக்கிருந்த ஈடுபாடு காரணமாக சாசனங்களை வாசிக்கும் திறனைப் பெற்றிருந்தார். இலங்கைச் சாசனங்களில் தமிழ்ச் சாசனங்கள் சிலவற்றை வாசித்துள்ளார். (கட்டுரையாளர் கணபதிப்பிள்ளையிடம் சாசனவியலைப் பயின்றவர்) இரண்டாம் கஜபாகு காலத்தில் மாங்கனாய்த் தமிழக கல்வெட்டு, நிசங்கமல்லனின் பண்டுவஸ்நுவரத் தமிழ்க் கல்வெட்டு, மொறஹகவெல தூண் கல்வெட்டு ஆகிய மூன்று கல்வெட்டுகளையும் இவர் வாசித்துள்ளதை அறியமுடிகிறது. இவரது வழியில் ஆ. வேலுப்பிள்ளை, கா. இந்திரபாலா என்னும் இருவரும் பின்னர் தமிழ்க் கல்வெட்டாய்வில் ஈடுபட்டனர். மொழி ஆய்வுத்துறையில் இவருடைய வழியில் பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் எம். ஏ. நுஃமான் போன்றோர் ஆய்வுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டனர். இவ்வாறு தமிழ்ப் புலமைப் பாரம்பரியத்தில் நவீன ஆய்வுத்துறைகளில் கணபதிப்பிள்ளை வழிகாட்டியாக இருந்து பின்னைய தலைமுறையையும் உருவாக்கிச் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவருடைய பிறிதொரு முக்கிய ஆய்வுத்துறை ஈழத்துத் தமிழர் வரலாறு, வாழ்வியல், இலக்கியம், பற்றியதாகும்.

அது பற்றிய விருப்புக் காரணமாக அவருடைய ஆக்கங்களில் பல பதிவுகளை மேற்கொண்டுள்ளார். இதனைப் பற்றிய பேராசிரியர் கா. சிவத்தம்பியின் கூற்றை இங்கு இணைத்து நோக்குவது மேலும் தெளிவான விளக்கத்தை நல்கும்.

> "பேராசிரியரின் அடுத்த முக்கிய ஆய்வுத்துறையாக அமைந்தது ஈழத்துத் தமிழர் வரலாறு, வாழ்வியல், இலக்கியம் பற்றிய ஆய்வுகளாகும். இதனை அவரது பிரதான ஆய்வுத்துறை என்று கூறமுடியாது. விருப்புக் காரணமாகவே அவர் இதில் ஈடுபட்டார். ஈழத்துத் தமிழர் வாழ்வியல், வரலாறு பற்றிய தகவல்களைப் பதிவுசெய்து வைத்தலையே தனது பிரதான நோக்காகக் கொண்டிருந்தார். ஈழத்து இலக்கியத்தைப் பொறுத்தவரையில் அதன் வரலாறு தெளிவுபடுத்தப்படவேண்டுமென்பதை விரும்பினார். அதற்கும் மேலே சென்று அந்த இலக்கிய வளம் பெருப்பிக்கப்பட வேண்டுமென்பதில் அவர் அதிக ஆர்வம் காட்டினார்".

எனினும் அவருடைய தமிழர் வாழ்வியலைப் பதிவு செய்யவேண்டும் என்ற எண்ணத்திற்குப் பிறிதொரு காரணமும் உந்துசக்தியாக இருந்துள்ளது. பண்டைய தமிழிலக்கியங்களில் அவர் பெற்றிருந்த பயிற்சி மரபான இலக்கியங்களை ஆக்குவதற்குத் தூண்டியுள்ளது. இலங்கை சுதந்திரம் பெற்றபின்னர் ஏற்பட்ட தேசிய உணர்வலையும் இவருடைய ஆக்கங்கள் புதியதொரு எண்ணக்கருவிலே உருவாக்கம் பெறக் காரணமாயமைந்தது. கவிதை, நாடகம், நாவல், கட்டுரை எனப் பல வடிவங்களிலே ஆக்கங்களை அவர் எழுதியபோது மக்கள் வாழ்வியலையும் உணர்வு நிலையையும் பதிவுசெய்ய வேண்டுமென்பதை ஓர் இலக்காகக் கொண்டார். அதனால் பேச்சு மொழிநடையை இலக்கிய ஆக்கங்களிலே பயன்படுத்தும் புதியதொரு நெறியைத் தோற்றுவித்தார். 'இலங்கை இலக்கியம்' என்ற ஒரு புதிய செல்நெறியைத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே ஒரு சிற்றாறாக இனம்காட்டியவரும் இவரே. பேராசிரியப் பதவியைப் பெற்றபோது இவர் ஆற்றிய தவிசுத் தொடக்கவுரையின் தலைப்பு 'தமிழ்மொழி இலக்கியத்திற்கு இலங்கையின் பங்களிப்பு' *(Ceylon's contribution to Tamil Language and Literature)* என்பதாகும். **1947**ஆம் ஆண்டு பேராசிரியர் பதவி பெற்ற பின்னர் *1948* ஆடி மாதம் *15*ஆம் நாள் இப் பேருரையை அவர் ஆற்றினார். இவ்வுரை பல்கலைக்கழகச் சஞ்சிகையில் ஐப்பசி மாதம் பிரசுரமாகியுள்ளது. *(University of Ceylon Review vol. VI, No. 4)* இக்கட்டுரையில் ஈழத்து அறிஞர்களின் இலக்கியப் பணிகளையும் அவற்றின் செல்நெறிகளையும் பதிவுசெய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய எண்ணம் பேராசிரியர் உள்ளத்தில் ஈழத்தில் செய்யுள் இலக்கியத்தில் மக்கள் வாழ்வியலைப் பதிவு செய்யவேண்டுமென்ற எண்ணத்தையும் மரபான இலக்கியச் செல்நெறியைப் பேணவேண்டும் என்ற உறுதிப்பாட்டையும் ஏற்படுத்தியது. அதுவே செய்யுள்நடையில் ஆக்கங்கள் அமைவதற்குக் காரணமாயிற்று. 'காதலியாற்றுப்படை', 'தூவுதும் மலரே' என இரண்டு செய்யுள் இவரால் பாடப்பெற்றுள்ளது. காதலியாற்றுப்படை பழந்தமிழ் இலக்கிய வடிவமான ஆற்றுப்படை இலக்கியம் பற்றிய ஒரு பரிசோதனை முயற்சியாக அமைந்துள்ளது.

பழந்தமிழ் இலக்கியத்தில் 'ஆற்றுப்படை' என்னும் பெயருடன் ஐந்து நூல்கள் கிடைத்துள்ளன. திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்) என அவை 'பத்துப்பாட்டு' என்னும் தொகுப்பு நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. 'ஆற்றுப்படை'யென்ற சொல்லின் விளக்கத்தை உ.வே.சாமிநாதையர் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> "ஆற்றுப்படையென்பது கூத்தர் முதலியவர்களில் ஒருவர் ஒரு கொடையாளியின்பால் தாம் பெற்ற பெருஞ்செல்வத்தை எதிர்வந்த இரவலர்களுக்கு அறிவுறுத்தி அவரும் அவன்பாற் சென்று தாம் பெற்றவற்றை எல்லாம் பெறுமாறு வழிப்படுத்தல். ஆறு - வழி, படை - படுத்தல். ஒவ்வொருவரும் இங்ஙனம் கூறுதற்கு உரியோராயினும் கூத்தர் முதலியோரே எதிர்வந்த கூத்தர் முதலியவர்களுக்குக் கூறி அவர்களை வழிப்படுத்தியதாகச் செய்யுள் செய்தல் மரபு".

பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் இது பற்றிய சூத்திரம் ஒன்றைப் புறத்திணை இயலில் அமைத்துள்ளது.

> "கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
> ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
> பெற்ற பெருவளம் பெறார்க் கறிவுறீஇச்
> சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்" (சூத்திரம் : 36)

ஆடல் மாந்தரும் பாடற்பாணரும் கருவிப் பொருநரும் இவருட் பெண் பாலாராகிய விறலியும் என்னும் நாற்பாலாரும் தாம் பெற்ற செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி அவரும் ஆண்டுச்சென்று தாம் பெற்றவையெல்லாம் பெறுமாறு கூறிய பகுதி பற்றிக் கூறுவது ஆற்றுப்படையாகும். இவ்வாற்றுப்படுத்தல் பற்றிய செய்தி பதிற்றுப்பத்து, புறநானூறு, புறப்பொருள் வெண்பா மாலை போன்ற நூல்களிலும் பிற்காலத்து நூல்களாகிய கலம்பகங்களிலும் தனிப்பாடல்களிலும் காணப்படுகின்றன.

ஆற்றுப்படைகள் ஆற்றுப்படுத்தப்படுபவர்களுடைய பெயரோடு சார்த்தியே வழங்கப்படும். ஆனால் திருமுருகாற்றுப்படை பாட்டுடைத் தலைவர் பெயரால் வழங்கப்படுகிறது. வீடு பெற்ற ஒருவர் வீடு பெறாதானை ஆற்றுப்படுத்தும் முறையில் திருமுருகாற்றுப்படை பாடப்பட்டுள்ளது. காதலியாற்றுப்படை பழந்தமிழ் இலக்கியத்திற் பேசப்படும் ஆற்றுப்படை இலக்கியத்தை தற்கால வாழ்வியலுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைத்துப் பார்க்கும் முயற்சியாகவே அமைந்துள்ளது. இப்பாடல் காதலன் ஒருவன் தன் தலைவியை ஆற்றுப்படுத்துவதாகப் பாடப்பட்டுள்ளது. 877 அடிகளைக் கொண்டது. யாழ்ப்பாணத்திலிருந்த காதலியைக் காதலன் தன் ஊராகிய பருத்தித்துறைக்குச் செல்ல ஆற்றுப்படுத்துகின்றான். வடமராட்சி பற்றிய புவியியல், வரலாற்றியல், பண்பாட்டியல் என்பவற்றை ஆற்றுப்படை இலக்கிய வடிவிலே அமைத்துப் பாடுவதற்கு ஒரு நோக்கம் இருந்துள்ளது. தன்னுடைய பிறந்த பிரதேசமான பருத்தித்துறையின் சிறப்பையும் சீரையும் பதிவுசெய்ய வேண்டுமென அவர் கருதியதற்கு ஒரு தூண்டுதலும் இருந்திருக்கவேண்டும். இதனைக் காதலியாற்றுப்படையை நுணுகி நோக்கும்போது தெளிவாக அறியமுடியும்.

## பாடலின் நோக்கும் அமைப்பும் :

காதலியாற்றுப்படையின் அமைப்பு நீண்ட பாடல் வடிவமாக உள்ளது. அதன் தொடக்கம் காதலியைக் காதலன் விளித்துப் பாடுவதாக அமைந்துள்ளது. ஆசிரியரின் பழந்தமிழைப் பயின்ற முறைமையை அது காட்டுகிறது. பழந்தமிழ் இலக்கியங்களில் காதலன் காதலியின் அழகைப் புகழ்ந்து கூறி அவளோடு உரையாடும் மரபு அகப்பாடல்களில் பெரு வழக்காயுள்ளது. தலைவன் கூற்றாக அமைந்த பாடல்களில் இப்பண்பு பெரிதும் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாகக் குறுந்தொகைப் பாடல் ஒன்றின் சில அடிகளைக் கீழே தருவது தெளிவுதரும்.

"ஒடுங்கீர் ஓதி ஒண்ணுதற் குறுமகள்
நறுந் தண்ணீரள்....." (பாடல் : 70)

இவ்வடிகள் காதலன் தன் காதலியின் அழகைக் கூறுவதாக உள்ளன. அவளைப் பார்க்கும்போது தலையிலிருந்து நோக்குகிறான். செம்மையாக ஒடுக்கி வாரப்பட்ட ஈரலிப்புடைய நீண்ட தலைமயிரையுடையவள். ஒளி பொருந்திய நெற்றியையுடையவள். இளமைத் தோற்றமுடையவள். நறுமணமும் தண்மையு முடைய மேனியைக் கொண்டவள். இவ்வாறு காதலன் கூறியதைப் பாடலைப் படிப்பவர் மனக்கண்ணிலே கற்பனை செய்து காணமுடியும். தோற்றத்தை மொழியிலே சித்திரிக்கும் புலமைத்திறம் காதலியாற்றுப்படையிலும் காணப்படுகிறது. இதனைப் பாடலின் தொடக்கமாக அமைந்த பாடல்களே மிகத் தெளிவாக விளக்குகின்றன.

"சீர்மிகு மூவாநாட் சிறந்தொளி பரப்பும்
ஏர்பெறு தண்மதி எழிலது போலக்
கதிருடை ஒண்ணுதல் கவினுறு காரிகாய்
காமன் வில்லைக் காய்ந்த புருவமும்
கழிமலர் ஆம்பலைப் பழித்த உன்கண்ணும்
கார்முகில் என்னக் கறுத்த வீரோதியும்
வணங்கு மின் சாயல் வளர் அமை மென்தோள்
சுணங்கு சேர் இளமுலைத் துடியிடை மடவாய்"

(காதலியாற்றுப்படை : 1 - 8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுடைத் தலைவியின் அழகைக் கூறும் ஆசிரியர் அவளுடைய நெற்றி, புருவம், தலை மயிர், தோள், முலை, இடை எனக் கேசாதி பாத வர்ணனை நிலையைக் கடைப்பிடித்துள்ளார். இறைவன் திருவழகைப் பாடும்போது பாதாதிகேச நிலையிலும் மனிதருடைய அழகைப் பாடும்போது கேசாதிபாத நிலையில் பாடவேண்டும் என்ற முறைமை ஒன்றிருந்தது. அதனையே ஆசிரியரும் பின்பற்றிப் 'புலமை மரபு நிலை' பேணியுள்ளார். மூன்றாம் நாள் பிறை போன்ற நெற்றி, நிலை நிலாவின் ஒளியை அதற்கு இணைத்துள்ளார். காமனுடைய வில்லை விட வளைந்த புருவம், ஆம்பல் மலரைவிட அழகான கண்கள், கரிய முகிலைப் போன்ற ஈரலிப்பான நீண்ட கூந்தல். மின்னல் போன்ற மேனி, மென்மையான தோள், தேமல் படர்ந்த இளமையான முலை, துடி போன்ற இடை, காதலியாற்றுப்படை பாடப்பட்ட காலம் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். இக்காலகட்டத்தில் பெண்ணின் தோற்றத்தைப் பாடும் ஆசிரியர் பண்டைய மரபான வர்ணனை முறையில் பாடியுள்ளார் என்றே கருதலாம். ஆனால் இக்காலகட்டத்தில் மேலைத்தேயப் பண்பாட்டின் தாக்கத்தால் பெண்களில் ஆடை அணிகலன்களிலும் தோற்றப் பொலிவிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. இயற்கையான அழகைப் புறக்கணித்துச் செயற்கையான அழகுத் தோற்றத்தைப் பல பெண்கள் விரும்பி தமது தோற்றத்தை மாற்றும் முயற்சிகளில் முனைப்பாகச் செயற்பட்டு வந்தனர். நகரத்துப் பெண்களின் தோற்றத்தைக் கண்டு நாட்டுப்புறப் பெண்கள் உள்ளத்திலும் செயற்கையான அழகுத்தோற்றத்தில் ஈடுபாடு தோன்றலாயிற்று. இக்காலகட்டத்தில் பண்டைய இலக்கியப் பதிவுகளிலுள்ள பெண்மையின் அழகுத்தோற்றத்தை ஆசிரியர் தமது பாடலிலே நினைவுறுத்தி மீள் பதிவொன்றைச் செய்துள்ளார்.

அடுத்துக் காதலன் காதலியிடம் தான் வாழும் ஊரைப் பற்றி விரித்துரைப்பதாகப் பாடல் தொடர்கிறது. பண்டைய இலக்கியங்களில் பாடப்பட்ட ஐவகை நிலத்து வருணனைகளையும் தனது பாடலில் சிறப்புற அமைத்துக்காட்டும் தன்மை ஆசிரியர் புலமை மரபு பேணுவதை வெளிப்படுத்தி நிற்கிறது. குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை என்னும் நிலங்களின் வருணனையைச் சொற்றொடர்கள் கொண்டு பொருத்தமாக இணைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

"குறிஞ்சிசேர் நிலந்தொறும் கோதற வளர்ந்தே
எறிகதர் தாங்கி விளையும் நற்தினையும்..." (14 - 15)

இங்கு மலைநிலத்துப் பயிரான தினை தனது ஊரிலும் விளைவிக்கப்படும் செய்தியைக் காதலன் குறிப்பிடுகிறான். யாழ்ப்பாணத்துப் பண்பாட்டில் தினையும் உணவாகப் பயன்பட்ட காலத்தை இக்குறிப்பின் மூலம் ஆசிரியர் பதிவு செய்ய முனைந்துள்ளார். வாழை, பலா போன்ற மலைச்சாரலில் விளையும் பழங்கள் யாழ்ப்பாணத்திலும் நன்கு விளைவதைக் காட்டியுள்ளார். இவ்விடத்தில் பனம்பழம் பற்றிய செய்தியை அவர் வருமாறு அமைத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்திமாலையிற் தண்ணறவு உண்டு
புந்தி மயங்கிப் பெடையொடு காதலில்
இன்புசேர் கீதம் இசைக்கும் அப்போழ்து
சிந்து காற் காகங் கீழே விழுத்தும்
நற்சுவை அயின்றோர் நீணெடுங்காலம்
பொற்புறும் இளமையொடு இருக்க இயற்றும்
கற்பகத் தாருவின் கண்கவர் கனியும்..." (21 - 27)

பனை நெய்தல் நிலத்துக் கருப்பொருளாகும். ஆசிரியர் காதலன் காதலியைத் தனது ஊருக்கு ஆற்றுப்படுத்தும்போது பனையில் வாழும் பறவைக் காதலர் பற்றிய செய்தியையும் கூறுவதாகப் பாடலை அமைத்துள்ளார். பனையில் வாழும் காகம் மாலை வேளையில் பனங்கள்ளை உண்ணும் காட்சியை அவர் நேரடியாகக் காணும் வாய்ப்புப் பெற்றவர். அதனால் அக்காட்சியைச் சொற் சித்திரமாக வரைந்து காட்டுகிறார். பெடையோடு கள்ளுண்டு மகிழ்வாய் இருக்கும் காகம் இனிமையாகக் கீதம் இசைக்கின்றது. அந்தவேளையில் அதன் கால்கள் கிந்த மரத்திலிருந்த பனங்கனி கீழே விழுகின்றது. அப்பழத்தை எடுத்து உண்போர் நீண்ட காலம் இளமைக் கோலத்தோடு இருக்கலாம் என்றொரு நம்பிக்கையும் வடமராட்சி மக்களிடையே நிலவியிருந்ததை இங்கு குறிப்பிட்டுள்ளமை மனங்கொள்ளத்தக்கது. முன்னோர்களது முதுமொழியான 'காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போல' என்ற தொடரை ஆசிரியர் நயமாகத் தனது பாடலிலே இணைத்துத் தனது நோக்கத்தையும் நிறைவேற்றியுள்ளார்.

நெய்தல் நிலத்து மீன்பிடித் தொழிலையும் முல்லை நிலத்தில் புல் செதுக்கும் மகளிரின் செயற்பாட்டையும் எடுத்துக்காட்டி சங்க காலப் புலவரது கருப்பொருள் மரபுநிலையைத் தமது நெடும்பாட்டிலும் அமைத்துள்ளார். வணிகப் பொருட்களைப் பற்றிய பதிவுகள் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்துக் கடலாடு காதையில் கூறப்பட்டுள்ள செய்திகளை ஒத்திருக்கின்றன. கடற்கரைப் பட்டினமாகிய பருத்தித்துறையின் வணிக வளத்தையும் வாழ்வியலையும் ஆவணப்படுத்துவதற்குப் பண்டைய இலக்கியப் பயிற்சியும் ஆசிரியருக்கு நன்கு உதவியுள்ளது. துறைமுகப் பட்டினம் எப்போது வணிக நிலையில் ஆரவாரமாகத் திகழும். அங்கு வேலை தேடிக் காத்திருக்கும் வறுமையுற்ற தொழிலாளரையும் சுட்டிக்காட்டுகிறார்.

"வாடைக் காற்றால் வளைந்து மெய் கொடுகி
உறை போல் போர்வை உடம்பில் போர்த்து
வாயில் சுங்கான் ஓயாது புகைத்துப்
பசியால் வாடி விதியினை நொந்து
வேலைதேடி வெய்துயிர்ப்பு உற்றுக்
கொக்குப் போல் கோடிய முகத்துடன்
துக்கம் அடைந்து துறைமுகப் பக்கல்
நிற்றல் உற்றவர் நெடுங்கியிருக்கும் கூட்டமும்" (101 - 108)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரி காலத்தில் கடற்றுறைமுகத்தில் வந்து பண்டங்களை இறக்கும் கப்பல்களை எதிர்பார்த்துக் காத்திருக்கும் கூலியாட்களின் கோலம், பசியோடு இருக்கும் துன்பநிலையைக் கொக்குப்போலக் கோடிய முகத்துடன் இருப்பதாகக் கூறுவது ஆசிரியரின் நேரடி அனுபவத்தை உணர்த்துவதாக உள்ளது. வணிக நிலையில் பருத்தித்துறைத் துறைமுகம் பெற்றிருந்த சிறந்த நிலையை அங்கு வாழும் மக்களது வாழ்வியலோடு இணைத்துக் காட்டுவதே ஆசிரியருடைய நோக்கமாக உள்ளது.

அடுத்து பல்வேறு சிறப்பான செயற்பாடுகளையும் நடைமுறைகளையும் நம்பிக்கைகளையும் விளையாட்டுகளையும் பல்வேறு நிலையான மனிதர் உணர்வுகளையும் காதலியாற்றுப்படை விரிவாக எடுத்துக்கூறுகிறது. பருத்தித்துறையை நோக்கிப் போகும்போது நல்லூர், நீர்வேலி, புத்தூர், அச்சுவேலி, வல்லை, புறாப்பொறுக்கி, மந்திகை, வல்லிபுரம், தெருமுடி மடம் எனப் பல இடங்களைக் கடந்து செல்லவேண்டும் எனப் பாடல் அமைந்துள்ளது. இவ்வமைப்பு கால்நடையாகச் செல்லும் ஒருவரை ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது. பண்டைய ஆற்றுப்படை நூல்களில் அமைந்துள்ள நிலப்பாகுபாடு, இயற்கை வளம், வாழ்வியற் கூறுகள் என்பவற்றை இருபதாம் நூற்றாண்டில் ஓர் இலக்கிய வடிவமாக அமைக்க ஆசிரியர் எண்ணியுள்ளார். மேலும் தனது பிறந்த ஊரை இலக்கியத்திலே பதிவுசெய்வதற்கு காதலியாற்றுப்படையைப் பாடியுள்ளார். தன்னைக் காதலனாகப் பாவனை செய்து ஒரு கற்பனைக் காதலியைப் படைத்துப் பாடும் எண்ணம்தான் இந்த ஆற்றுப்படையின் தோற்றத்திற்குக் காரணமெனலாம். காதலியாற்றுப்படை பற்றிய பேராசிரியர் கா. சிவத்தம்பியின் கருத்தும் இத்தகைய எண்ணத்தை உறுதி செய்வதாக உள்ளது.

> "காதலியாற்றுப்படை என்பது பழந்தமிழ் இலக்கியத்திற் பேசப்படும் ஆற்றுப்படை இலக்கிய வடிவத்தின் ஒரு 'புதுக்கிய' அமைப்பு ஆகும். இது பருத்தித்துறையில் வசிக்கும் காதலனிடத்து அவன் காதலியை ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது. இப்பாடலின் முக்கிய அம்சம் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை வரையுள்ள இடங்களின் விவரணமும் பருத்தித்துறை பற்றிய விவரணமுமாகும். இந்த விவரணத்தின் முக்கியத்துவம் அது தரும் வாழ்வியல் தகவல்களேயாகும். இந்நூற்றாண்டின் முற்கூற்றில் யாழ்ப்பாணத்தில் நிலவிய வாழ்க்கை முறை மிகச் சிறப்பாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. அக்கால யாழ்ப்பாண வாழ்க்கை பற்றி அறிவதற்கான மிகச்சிறந்த ஆவணமாக இச்செய்யுள் அமைந்துள்ளது"

காதலியாற்றுப்படையில் பெண்ணை ஆற்றுப்படுத்துவதாகச் செய்யுள் பாடப்பெற்றிருப்பது ஒரு புரட்சியான சிந்தனையாகும். பண்டைய ஆற்றுப்படை நூல்களில் ஆண்களையே ஆற்றுப்படுத்துவதாகப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. காதலன் இருப்பிடத்தைக் காதலி சென்றடையவேண்டும் என்ற கருத்தும் புதுமையானதே. பெண் வீட்டைவிட்டு வெளியே வரவேண்டும். பல பிரதேசங்களுக்கும் நேரே சென்று புதிய விடயங்களையும் வாழ்வியற் கோலங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணவேண்டும் என்ற நோக்கமும் ஆசிரியரிடமிருந்தது. நவீன நாகரிகம், ஆங்கில மொழி மோகம், உத்தியோக வாய்ப்பு என்பவற்றால் பெண்கள் பண்டைய மரபான செயற்பாடுகளிலிருந்து விலகிச்செல்ல விரும்பிய நிலையையும் ஆசிரியர் கண்டார். அதனால் நகரப் பாங்கான யாழ்ப்பாணத்திலிருந்த காதலியை நாட்டுப்புறப்பாங்கான வடமராட்சியிலுள்ள பருத்தித்துறைக்கு ஆற்றுப்படுத்துவதாகப் பாடலைப் பாடியுள்ளார். காரிகாய், மடவாய், வேயமர் தோழி, நேரிழாய் என விளித்துப்பாடும் மரபைப் பின்பற்றியுள்ளார். பண்டைய சமண, பௌத்தர்கள் இலக்கண நூல்களை நூற்பாவிலே அமைத்தபோது இத்தகைய பெண்களை விளிக்கும் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். பல்வேறு இலக்கண நூல்களையும் பயின்றமையால் இவ்வாறு பெண்ணை ஆற்றுப்படுத்தும் பண்புநிலையை உணர்ந்துள்ளார். பெண்களின் வாழ்வியலில் முக்கியமாக இணைந்த கூறுகளைத் தெளிவாக எடுத்துக்காட்ட முற்பட்டுள்ளார். வடமராட்சியின் வாழ்வியலில் பெண்களின் பங்கு எவ்வாறிருந்தது என்பதை நகர்ப்புற பெண் நேரே சென்று அறியவேண்டும் என்ற ஆசையும் ஆசிரியருக்கு இருந்துள்ளது. கிராமிய வாழ்க்கையின் தன்மைகளை நாகரிக வாழ்வியலில் ஈடுபட்டோரும் உணரவேண்டும் என்பதே ஆசிரியர் நோக்கமாகக் கொண்டதை கிராமத்து வாழ்வியலை அவர் வகுத்துக் காட்டியதன் மூலம் நன்குணரமுடிகின்றது.

## 3. வடமராட்சி வாழ்வியலின் வகுப்பு :

வடமராட்சி மக்களின் வாழ்வியல் தனித்துவமானது. பெண்ணே குடும்பத்தில் முக்கியமானவள். திருமணம் முடித்துப் பெண் கணவன் வீட்டிற் சென்று வாழ்வதில்லை. தாய்வீட்டில் வாழும் மரபே இருந்தது. ஆண் திருமணம் செய்த பெண் வீட்டில் போய் 'மருமகனாக' வாழும் மரபு பேணப்பட்டது. இத்தகைய பண்பாட்டுப் பேணலைத் தன் காதலிக்கு உணர்த்தவே காதலியைப் பருத்தித்துறையிலுள்ள தும்பளையென்னும் கிராமத்திற்கு ஆற்றுப்படுத்துகிறான். அங்குள்ள வாழ்வியலை வகுத்துக் காட்டுகிறான். காதலியாற்றுப்படையின் பொருள்நிலையில் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா வருமாறு வகுத்துக் கூறியுள்ளார்.

> "877 அடிகளைக் கொண்ட காதலியாற்றுப்படையிலே ஏறத்தாழ நூறு அடிகளில் வடமராட்சிப் பிரதேசத்துட் செல்லும் வழியின் புவியியல், பொருளியல், பண்பாடு முதலானவற்றைத் தெளிவுறச் சுட்டிய பேராசிரியர் மிகுதி 777 அடிகளிலும் வடமராட்சிப் பிரதேசத்தின் புவியியல், பொருளியல், பண்பாட்டுக்கூறுகள் யாவற்றையும் மிகத் துல்லியமாகத் தொட்டுக்காட்டுகிறார்"

ஒரு பெண்ணுக்கு அளிக்கப்படவேண்டிய பயிற்சிகளை வாழ்வியலினூடாக ஆசிரியர் வகுத்துக் காட்டும் முறைமை சிறப்பாயமைந்துள்ளது. அவற்றை வருமாறு காணலாம்.

1. விளை பொருளும் உணவுப் பண்பாடும்
2. ஆடை அணியும் பயன்பாடும்
3. பொழுதுபோக்கு நிலை
4. வழிபாடும் சடங்கும் நம்பிக்கைகளும்
5. பொதுமையான பண்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணுடைய மனையறம் பேணல் என்னும் பெருங்கடமையைச் செய்வதற்கு அவளுக்கு பண்பாடு பற்றிய அறிவு தேவை. அதனை வழங்குவதற்கு முற்காலத்தில் வாய்மொழி மரபு உதவியது. ஆனால் நவீன காலத்தில் கல்விநிலையம் அறிவு புகட்டப்படும் நிலை ஏற்பட்டபோது வாய்மொழி மரபு வழங்கொழியலாயிற்று. நூல்கள் எழுதப்பட்டுக் கல்வி பயிற்றப்பட்டது. மனையியல் என்ற கற்கைநெறியும் மேற்கொள்ளப்பட்டது. ஒரு பிரதேசத்து வாழ்வியல் நிலையையும் பண்பாட்டையும் அறிவதற்கு நூல்கள் வேண்டப்பட்டன. அத்தேவையை ஆசிரியர் நிறைவேற்றக் காதலியாற்றுப்படையைச் செய்யுள் வடிவிலே இயற்றினார். பண்பாட்டியல் கற்கைநெறி சமூகத்துக்குத் தேவை என்பதுடன் மேலைத்தேயத்தவர் கீழைத்தேயப் பண்பாட்டைப் பற்றியறிவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும்போது இத்தகைய பாடல்கள் பெரிதும் உதவியாக இருக்கும் என எண்ணினார். மேலும் எதிர்காலத் தலைமுறையினர் தமது முன்னோர் வாழ்வியல் முறைமைகளைத் தெளிவாய் உணர்த்துவதற்கும் இத்தகைய நெடும்பாடல் பதிவு தேவையென்பதை மனங்கொண்டுள்ளார். தான் வாழ்ந்த பிரதேசத்து வாழ்வியலை சொற் சித்திரமாக்கி எதிர்காலத் தலைமுறையினருக்கு கையளிக்கும் பணியையும் சிறப்பாக ஆசிரியர் செய்துள்ளார். பெண்ணுக்கான பண்பாட்டுப் பயிற்றலைச் செய்தமை அவரது தனிச் சிறப்பாகும். அவரது செய்திப் பதிவுகளை நுணுக்கமாகப் பார்க்கும்போது இதனை நன்கு உணரமுடிகின்றது.

## 3. 1 விளைபொருளும் உணவுப் பண்பாடும் :

வடமராட்சியின் விளைபொருட்கள் காதலியாற்றுப்படையில் பதிவு செய்யப் பட்டுள்ளன. பாடலின் தொடக்கத்திலேயே தினை, வாழை, பலா, பனம்பழம் என்பவற்றின் விளைவு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. சோறு சமைப்பதற்கு வடமராட்சியில் தினையரிசி பயன்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாகத் தினை மலைப்பிரதேசத்து விளைபொருளாகவே கொள்ளப்பட்டது. ஆனால் ஆசிரியர் தினை வடமராட்சியிலும் விளைபொருளாக இருந்ததைப் பாடலில் பதிவு செய்துள்ளார். நெல்லோடு தினையும் பயிரிடும் நடைமுறை இருந்ததை அவர் எடுத்துரைப்பதற்குப் பிறிதொரு காரணமும் உண்டு. வழிபாட்டு நடைமுறைகளில் சிறப்பாக முருகனுக்குரிய நிவேதனமாகத் தினை பயன்படுத்தப்பட்டுள்ளது. நன்செய்யாக நெல் விளைவிக்கப்பட புன் செய்யாகத் தினைப் பயிர்ச்செய்கையும் நடைபெற்றுள்ளது.

பழங்களில் மாவும், பலாவும், வாழையும் விளைவிக்கப்பட்டாலும் சிறப்பாகப் பனம்பழம் இயற்கையான விளைபொருளாய் விளங்கியது. கற்பகதருவென்று சிறப்பாக அழைக்கப்படும் பனைவளம் வடமராட்சியின் சிறப்பான விளைபொருள் என்பதை ஆசிரியர் கூறுகிறார். ஒரு வருடத் தேவைக்குரிய உணவுப் பொருளைத் தரும் பனை வளம் வடமராட்சியில் பெரிதும் பேணப்பட்டது. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மேலைத்தேயத்தவர் வருகைக்கு முன்னர் பனையின் விளைபொருட்கள் பிரதான உணவாக விளங்கின. ஒடியல், புழுக்கொடியல், பனாட்டு, பாணிப்பனாட்டு, கருப்பநீர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், பனம்பழம் என்பன சிறப்பாக உணவாகப் பயன்பட்டன. பனை மரத்தின் பயன்பாட்டால் குடிசைக் கைத்தொழிலும் வளர்ச்சியடைந்திருந்தது. இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால் மனித வாழ்வியலில் பிறப்புத் தொடக்கம் இறப்பு வரை பனையின் பயன்பாடு இணைந்திருந்தது. படுக்கும் பாய், பெட்டி வகைகள், உணவுக் கலங்கள், விசிறி, தண்ணீர் அள்ளும் பட்டை, தலைப்பாகை, சுத்தம் செய்யும் கருவி, வீட்டுக்கூரை மரம், தூண்கள் எனப் பல்வேறுபட்ட நிலைகளில் பயன்பட்டதை அறியமுடிகின்றது. பனம்பழம் உடல் நலத்திற்குச் சிறந்தது என்ற கருத்தும் நிலவியது. இக்கருத்தைத் தனது பாடலில் ஆசிரியர் விரிவாக எடுத்துக்கூறியுள்ளார். பனம்பழச் சாற்றுடன் சாமை அரிசியின் மாவைக் கலந்து பனங்கட்டியும் சேர்த்து எண்ணெயில் பொரித்து எடுக்கும் நுட்பத்தைப் பாடலில் சித்திரித்துள்ளார்.

உணவுப் பண்பாட்டு நிலையில் வடமராட்சியில் சந்தையில் உணவுப் பண்டங்களை விற்பனை செய்யும் நடைமுறை இருந்துள்ளது. ஆசிரியர் அது பற்றிய விரிவான செய்திகளைப் பாடலிலே இணைத்துள்ளார். புளித்த அப்பம், பனங்காய்ப் பணியாரம், வடை, முறுக்கு, வாய்ப்பன், மோதகம், இட்டலி, பிட்டு, தோசை, இடியப்பம், எள்ளுப்பாகு, பாணிப்பனாட்டு, பனங்கட்டி, சீனிமிட்டாய் என வகைவகையான உணவு வகைகளைப் பாடலிலே குறிப்பிடுமிடத்து அவற்றைப் பக்குவம் செய்யும் பெண்களின் சமையல் திறனையும் விற்பனை செய்யும் பெண்களின் வணிக ஆற்றலையும் வெகு நுட்பமாக உணர்த்தியுள்ளார். பெண்களின் கைவினை நுட்பத்தால் செய்யப்பட்ட பொருட்களையும் குறிப்பிடுகின்றார்.

“அரும் பெறற் பண்ணியம் பலவுமீண்டி
வரிசையாய் விற்கும் வளம் பெறு கடைகளும்
அழகுறு வன்னம் அமைவுறப் போட்டுத்
தொழிலமை வனிதையர் திறமையோ டிழைத்த
பெட்டி பாய் குட்டான் பெயர் பெறு கதிர்ப்பாய்
அடுக்குப் பெட்டியும் அருவிலைமூடலும்
பிட்டவி நீத்துப் பெட்டியும் சுண்டும்
பனையின் குருத்தைப் பதமாய் வார்ந்து
பன்னிறந் தீட்டிய பன்னோலை கொண்டு
கைவல் லிளையர் கருதி யிழைத்த
ஆனைப் பெட்டியும் அழகிய தேரும்
கொட்டைப் பெட்டியும் திலுக்குப் பெட்டியும்” (80 - 91)

வீட்டிலே இருக்கின்ற இளம் பெண்களின் உழைப்பின் திறனால் ஆக்கப்பட்ட கைவினைப் பொருட்கள் வாழ்வியலுக்குப் பயன்பட்ட மாற்றை ஆசிரியர் எடுத்துக் கூறும் அதேவேளையில் மேலைத்தேய எந்திரமுறையால் ஆக்கப்பட்ட பொருட்களால் பெண்களின் திறன் சிதைந்ததையும் நினைக்கத் தூண்டுகிறார். பண்பாட்டு நிலையில் பெண்களால் பேணப்பட்ட கைவினை முறைமையொன்று வடமராட்சியில் இருந்ததைக் காட்ட முயல்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. 2 ஆடையணியும் பயன்பாடும்

ஒரு பிரதேசத்தின் பண்பாட்டில் ஆடையணிகள் இன்றியமையாதவை. அதிலும் பெண்களின் செயற்பாட்டாலும் பேணுகையாலும் பண்பாடு சிதையாமல் பேணப்பட்டு வருவதைக் காதலியாற்றுப்படை தெளிவாகக் காட்டுகிறது. குறிப்பாகக் கோயில் விழாக்களுக்குச் செல்லும்போது ஆடை அணிகளில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. பண்பாட்டுக் கோலத்தை பெண்களின் அலங்காரத்தில் வைத்துக் காட்டுவதை வருமாறு காணலாம்.

"முன்னணி மேளம் முறையே யியம்பப்
பின்னணி தொடர்ந்து பெருமகிழ் வெய்திப்
பலபுதுப் பட்டுடை பாங்குட னுடுத்துத்
தலைமேற் சூரிய சந்திரப் பட்டமும்
சடைமேல் நாகமு நலமுற வணிந்து
நெற்றியி னிட்ட பொட்டு மின்னப்
பற்றிய வேர்வை முத்தது போல
நுதன்மே லரும்ப நிறைமதி தோற்கச்
செம்பஞ் சணிந்த சேவடி மீமிசைச்
செம்பொற் சிலம்புஞ் சீறடிச் சரமும்
நுண்ணிடை பூட்டிய நொய்ம் மேகலையுங்
கதிர்முலை மேவிய கதிர்முத் தாரமும்
அருமணி மாலையும் அசையுறீஇக் கறங்க
பெருவிரல் நோக்கிப் பெயர்ந்திடு பெண்டிரும்"(250 - 263)

பெண்கள் ஆடை அணிகலன்களை அணியும் முறைமையை ஆசிரியர் கூறும்போது அக்காலப் பண்பாட்டுத் தோற்றத்தை நாமும் காண வகை செய்துள்ளார். திருமணத்தின்போது பெண் அணியும் அணிகலன்களையும் பாடலில் வரிசைப்படுத்திக் கூறியுள்ளார். தாலி, அட்டியல், பதக்கம், பிலாக்கு, மூக்குத்தி, பூரானட்டியல், கீச்சிகல்லட்டியல், கடுகுமணி, கொலுசு, காதுப்பூ, வாளி, சிமிக்கி, வளையல், தோடு, பட்டணங்காப்பு, பீலிக்காப்பு, பாதசரம், சங்கிலிச் சிலம்பு, தூங்கு கடுக்கன், நட்டுவக்காலி அரும்புமணி, முருகொன்னைப்பூ, ஒட்டியாணம், நுதலணி எனப் பல்வேறுபட்ட அணிகள் கூறப்பட்டுள்ளன. பெண்ணின் உடல் உறுப்புகளில் இணையும் பொன்னணிகளையும் வெள்ளியணிகளையும் முழுமையாகக் குறிப்பிடும்போது பண்பாட்டு அணிகலன்களைப் பேணும் பாரிய பொறுப்பு பெண்ணிடமே இருந்ததையும் நயமாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

### 3. 3 பொழுதுபோக்கு நிலை

காதலியாற்றுப்படையில் பொழுதுபோக்கு நிலையில் பெண் குழந்தைகளின் விளையாட்டு ஒன்றைச் சிறப்பாக எடுத்துக்கூறுவது குறிப்பிடத்தக்கது. குடும்பநிலையில் தாம் எதிர்காலத்தில் ஆற்றப்போகும் கடமைகளுக்கு எல்லாம் ஒத்திகை பார்ப்பது போல சிறுமியர் பொழுதுபோக்குகின்றனர். அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு வீண்போகாமல் ஒரு பண்பாட்டு வாழ்வியலின் பயிற்சி நிலையாக அமைவதை ஆசிரியர் உணர்ந்திருந்தமையால் அதனை விதந்து பாடுகிறார். மேலைத்தேச நாகரிகத்தால் பொழுதுபோக்கு நிலையில் மாற்றம் ஏற்படும் வேளையில் கிராமப் புறங்களில் பண்பாடு பேணப்பட்டதைக் காட்டுகிறார்.

"சிற்றி லிழைத்துச் சிறு சோ றாக்கிப்
பின்னே வருவதை முன்னே யுணர்வதுபோல்
வண்டலின் மணவினை மகிழ்வோ டாற்றியுஞ்
சிறார்தமை யீன்று சீரொடு வளர்ப்பபோற்
களிமட் பாவை யழகுறச் செய்து
பூவினைச் சூட்டித் துகிலினை யுடுத்திச்
சீராட்டி யோராட்டும் சிறுமிகள்...." (172 - 178)

சிறுமிகளின் பொழுதுபோக்கு விளையாட்டாக அமையாமல் பெற்றோரது வாழ்வியலைப் பற்றிய எண்ணத்தை வெளிப்படுத்தும் செயற்பாடாக அமைந்திருந்தது. திருமணமும் குழந்தைப்பேறும் சமூகத்தின் பண்பாட்டு வளர்ச்சியைக் காட்டும் நிகழ்வுகள். அதில் ஒரு வரையறையும் ஒழுங்கும் இருப்பதைச் சிறுவயதிலே உணரும் ஒரு மனப்பக்குவம் விளையாட்டினூடாக வளர்ச்சி பெறுவதை ஆசிரியர் திறம்பட எடுத்துரைக்கின்றார். ஆண் சிறுவர் கோயில் விழா நடத்துவதைப் பொழுதுபோக்கு நிலையில் விளையாட்டாகச் செய்கின்றனர். பெரியவர்களின் வழிபாட்டு நடைமுறைகளை எதிர்காலத்தில் தாம் செய்யவேண்டும் என்ற உணர்வு அவர்களிடம் ஏற்படுவதை ஆசிரியர் பிறருக்கும் உணர்த்தியுள்ளார். ஆனால் சிறுவருடைய ஏனைய பொழுதுபோக்குநிலைகளையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை. நாவல்மரத்திலேறிப் பழம் பறித்தல், கிந்தியடித்தல், வளையமுருட்டல், கிளித்தட்டுப் பாய்தல், கிட்டியடித்தல், மாங்கொட்டை போடல் போன்றவற்றையும் பதிவுசெய்துள்ளார். இதேபோன்று பெரியவர்கள் பொழுதுபோக்குநிலையில் விளையாடும் தாயம் போடல், சோனாலு, பானாலு பொறுக்கல், நாயும் புலியும், சீட்டாட்டம் என்பவற்றையும் குறிப்பிட்டுள்ளார். பள்ளியில் பயிலும் மாணவர் களவாகத் தோட்டங்களிலே சென்று வெள்ளரிப்பழம், இளநீர், வத்தகப்பழம் போன்றவற்றைத் திருடி உண்டு மகிழ்வதையும் அவர் பாடலிற் பதிவுசெய்யத் தவறவில்லை.

## 3. 4 வழிபாடும் சடங்கும் நம்பிக்கைகளும்

மக்கள் வழிபாட்டு நிலையில் கோவிற் பண்பாடு பற்றிய செய்திகள் காதலியாற்றுப்படையில் விளக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் சிறப்பாக சிவனும், விஷ்ணுவும் வழிபடப்பட்டதை ஆசிரியர் குறிப்பிடுகின்றார். வல்லிபுரக்கோவிலும், பசுபதீஸ்வரர் கோயிலும் ஆசிரியரது வாழ்வியலோடு நெருங்கியிருந்தவையாகும். கொட்டடிக் கணபதி கோயிலும் பசுபதி கோயிலும் அவருடைய உறைவிடத்துக்கு அருகிலே அமைந்திருந்தன. சந்தனப்பொட்டிடும் வழிபாட்டையும் நாமம் நெற்றியில் அணியும் வழிபாட்டையும் ஒருசேரக் கூறுவதன்மூலம் சமயப் பொதுமை மக்களிடையே இருந்ததைச் சுட்டிக்காட்டுகிறார். வடமராட்சியின் சிறப்பான முருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டுத் தலங்களான சந்நிதி, கந்தவனக்கடவை போன்ற கோவில்களின் சிறப்பையும் மக்களின் வழிபாட்டு நடைமுறைகளையும் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். நேர்த்திக் காவடி எடுக்கும்போது பல்வேறு விதமான காவடிகள் இருந்ததையும் குறிப்பிட்டுள்ளார். ஆட்டக்காவடி, முள்மிதியடிக் காவடி என அவற்றின் வேறுபட்ட நிலைகளையும் இணைத்துள்ளார். நெல்லண்டையில் வழிபாட்டு நடைமுறையில் நேர்த்திக்காக ஆடப்படும் கூத்தின் தனிச்சிறப்பையும் பாடலில் விளக்கியுள்ளார்.

மக்கள் மத்தியில் நிலவிய நம்பிக்கைகளில் பேய் பற்றிய நம்பிக்கையைக் குறிப்பிட்டமை கவனிக்கத்தக்கது. கிராமப்புற மக்களிடையே சுடலை பற்றிய ஒரு பய உணர்வு அதிகமாக இருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு வரும் வழியில் வல்லையிலும், புறாப்பொறுக்கியிலும் முனி குடிகொண்டிருப்பதாக மக்கள் நம்பினர். அகாலவேளையில் அவ்வழியே செல்வதைத் தடுத்தனர். புறாப்பொறுக்கி யென்னுமிடத்திலுள்ள பெரிய ஆலமரத்தில் 'வல்லை முனி' உறைவதாகவும் பலர் அதனைக் கண்டதாகவும் துன்புறுத்தப்பட்டதாகவும் இன்றும் கதைகள் கிராமத்தவரிடையே பரிமாறப்படுகின்றன. வல்லைமுனி வரும்போது சங்கிலி இழுபடும் ஒலி கேட்கும். கூ, கூ என்ற சத்தம் குழறலாகக் கேட்கும். இன்னும் கொள்ளிவாற் பேய்களும் வல்லையில் இருப்பதாக அக்கால மக்கள் நம்பினர். இதனை ஆசிரியர் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"சுற்றிய பந்தஞ் சுழற்றிடு மொளிபோல்
நள்ளிரா வேளை நீள்வெளி தோறும்
கொள்ளிவாற் பேய்கள் குழுமி நெருப்புப்
பறிய வாலொடு பாய்ந்து விரவி
ஆர்ப்பொடு களித்தே அலமரு கூத்து
நெஞ்சு துளக்கும் வெந்துய ரிருக்கை
கிளை பல நெருங்கி யிருள்பட வடர்ந்து
மலைபோ லுயர்ந்து விண்ணை யளாவித்
தனிவழிச் செல்வோர் மனது கலக்கும்" *(661 - 669)*

போக்குவரத்து சாதனங்கள் இல்லாத காலத்தில் இரவில் தனியே செல்வோரைக் கொள்ளிவாற் பேய்கள் பயமுறுத்தும் என்ற நம்பிக்கை மிக ஆழமாக மக்களிடையே வேரூன்றியிருப்பதை ஆசிரியர் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார். இவ்வாறு பேயால் பிடிக்கப்பட்டவரை விடுதலை செய்வதற்காகப் பேய்க்குப் பார்த்தல், கழிப்புக் கழித்தல், காய் வெட்டுதல், மடை போடுதல் போன்ற நடைமுறைகள் செயற்படுத்தப்பட்டன.

## 3. 5 பொதுமையான பண்பாடு

வடமராட்சிப் பகுதியின் பொதுவான பண்பாட்டு நிலைக்களன் காதலியாற்றுப்படையில் விளக்கப்பட்டுள்ளன. தொழில்நிலையில் தோட்டச் செய்கையின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. மேலைத்தேயத்தவர் வருகையால் ஆங்கிலக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியும் உத்தியோக மோகமும் மக்களிடையே பரவியபோதும் தோட்டப் பயிர்ச்செய்கை கிராமப்புறங்களில் நடைபெற்றன. பண்பாட்டு நிலையில் தோட்டங்களிலே வைக்கப்பட்டிருந்த வெருளிகளின் தோற்றம் இதனை உணர்த்தியது.

"மந்திகை யென்பேர் மாபதி யடையக்
கத்தரி யடர்ந்து காய்த்திடு வளமுடைத்
தோட்டத் துள்ளே திடமுற நின்று
பூட்டிய வில்லுப் பிடித்த கையினர்
வெள்ளைச் சட்டை மேலே யணிந்து
தலையிற் றொப்பி பொலியப் போட்டுத்
துள்ளுமீசை தோன்று முகத்தின்
நெரித்த புருவத்துருத்த கோபக்
கனலெழு கண்ணிற் குறித்த பார்வையர்
மக்களை வெருட்டும் மரபுடை வீரர்" (710 - 719)

வெருளியின் தோற்றத்துக்கு மரபான ஆடையணியாமல் மேலைத்தேய ஆடைகளை அணிவிப்பது அக்காலத்தில் யாழ்ப்பாண மக்கள் மேலைத்தேய ஆடை அணிந்து செல்வது வெருளித் தோற்றமாகக் கணிக்கப்பட்டதென்பதை ஆசிரியர் நயமாகவே உணர்த்தியுள்ளார். ஆசிரியர் கீழைத்தேய மரபான ஆடையிலே பற்றுக் கொண்டவராக இருந்தமையால் மேலைத்தேய ஆடையைக் கத்தரித்தோட்டத்து வெருளிக்கு அணிவதே தகுந்ததெனக் கூறமுற்படுகிறார் எனலாம். அவரது ஏனைய இலக்கியப் படைப்புகளிலும் மேலைத்தேய ஆடையை அவர் கேலி செய்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பண்பாட்டு நிலையில் மொழியின் பயன்பாட்டின் தன்மையைக் காதலியாற்றுப்படையில் ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ள பழந்தமிழ்ச் சொற்கள் இதற்குச் சான்றாகவுள்ளன. சிலவற்றை எடுத்துக்காட்டாகத் தரலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | தண்பனங்கா | 6. | ஆதுலர்பள்ளி | 11. | காளை எருத்து |
| 2. | தோரணம் | 7. | கோட்டம் | 12. | கங்குல் |
| 3. | புனிற்றா | 8. | குறுக்குக்கட்டு | 13. | மூதாட்டியர் |
| 4. | தருமக்கிணறு | 9. | சீழ்க்கை | 14. | அலமருகூத்து |
| 5. | வணிகரிருக்கை | 10. | நாணயக்கயிறு | 15. | எழால் |

ஊர்களின் சிறப்புப் பற்றிக் குறிப்பிடும்போது சில சிறப்பான தன்மைகளை அவ்வூர்கள் கொண்ருப்பதைச் சில தொடர்களால் விளக்கியுள்ளார்.

"ஈழமண்டலத் திலங்குறு தலையாய்ப்
பல்வளம் மல்கிய பருத்தித் துறையெனும்
பதியெழு வறியாப் பழம்பதி" (544 - 546)

"கோவையென் பெயர்புனை மாசிலாவூர்" (562)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீர்வேலி யென்பதோர் நீள்பதி" (570)

"அச்சுவேலியென் னழகுறு பதி" (591)

"வல்லையென் பாலைவனம்" (617)

"மந்திகை யென்பேர் மாபதி" (710)

பண்டைய இலக்கிய மரபுநிலை நின்று புதிய ஆற்றுப்படை பாடும் ஆசிரியர் தனது மொழியாற்றலைப் பொருத்தமுறப் பயன்படுத்தும் முறைமையை மேலே காட்டிய எடுத்துக்காட்டுகள் நன்கு விளக்குகின்றன. பண்டைய இலக்கியங்கள் பதிவுசெய்த பண்பாட்டு நிலையை நன்கு கற்றறிந்த ஆசிரியர் தானும் தன்காலத்துப் பண்பாட்டு நிலைகளை பாடமுயன்றுள்ளமை தெளிவாகத் தெரிகிறது. வாழ்வியலின் கூறுகளை வகுத்துக் கூறவேண்டும் என்ற விருப்பினால் காதலியாற்றுப்படையை இயற்றியுள்ளார்.

தமிழர் மரபான வாழ்வியல் முறைகள் பற்றிய தெளிவான ஒரு சொற்சித்திரமாகக் காதலியாற்றுப்படையை அவர் பாடியமைக்குரிய காரணத்தை இன்று தேடும்போது சில கருத்துக்கள் வெளிப்படுகின்றன. பேராசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் அரசியல், பொருளாதாரம், சமூக அமைப்பு, பண்பாட்டு நிலை என்பவற்றை ஆய்வுநிலையில் நின்று நோக்கும் வாய்ப்பு ஆசிரியருக்கிருந்தது. வெளிநாட்டுக் கல்விப் பயிற்சியும் பன்மொழிப் புலமையும் இதற்கு உறுதுணையாக இருந்தது. பண்டைய கல்வெட்டு, சாசனங்களை ஆராயும்போது ஏற்பட்ட ஆவணப்படுத்தும் உந்துசக்தியும் அவரை இப்பணியைச் செய்யத் தூண்டின. இதனால் யாழ்ப்பாணத்தவர் வாழ்வியலைப் பகுத்துப் பார்ப்பதற்கு ஆற்றுப்படை என்னும் இலக்கிய மரபை தனது நோக்கத்தை நிறைவேற்ற ஏற்றதாகத் தெரிவுசெய்துகொண்டார். கவிதை எழுதும் திறனையும் நன்கு பயன்படுத்திச் செந்தமிழ் நடையில் காதலியாற்றுப்படையாகத் தந்துள்ளார்.

## 4. எதிர்காலத்துக்கு ஏற்ற நெடும்பாட்டு

காதலியாற்றுப்படை எதிர்காலத்திற்கும் ஏற்ற நெடும்பாட்டு எனும் சிறப்பைப் பெற்றுள்ளது. பண்டைத் தமிழர் ஆற்றுப்படையை இலக்கிய மரபாக வகுத்துக் கொண்டபோது தாம் வாழும் நிலத்து வாழும் வாழ்வியலையும் பண்பாட்டு நிலைகளையும் பதிவுசெய்வதையும் நோக்கமாகக் கொண்டிருந்தனர். இதேபோன்று பேராசிரியர் கணபதிப்பிள்ளையும் காதலியாற்றுப்படையை இயற்றும்போது ஒரு நோக்கத்தைக் கொண்டிருந்தார். சமூகத்திலுள்ள பலரது வாழ்வியலையும் தொகுத்துவைக்க எண்ணம்கொண்டார். கற்றவர், கல்லாதவர், தாழ்த்தப்பட்டவர், உயர்ந்தோர் என்ற வேறுபாடுகளைப் புறந்தள்ளித் தமிழர் பண்பாடு என்ற பரந்த எண்ணத்தைப் பதிவுசெய்ய ஆற்றுப்படை இலக்கிய மரபைப் பயன்படுத்தியுள்ளார். காதலியாற்றுப்படை ஈழத்து நாட்டார் வழக்கியல் பற்றிய புதிய ஆய்வுநெறிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்தளம் அமைத்துக் கொடுத்துள்ளது எனப் பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிடுவார்.

பேராசிரியரிடம் நேரடியாகப் பல்கலைக்கழகத்தில் கற்கின்ற வாய்ப்பும் அவரது ஊரைப் பிறந்த ஊராகப் பெற்றமையும் காதலியாற்றுப்படை காட்டும் வாழ்வியல் அனுபவமாக அமைந்தமையும் இக்கட்டுரையை வரையத் தூண்டின. எதிர்காலத்துத் தலைமுறையினர் காதலியாற்றுப்படையைப் படிப்பதற்கு இக்கட்டுரை ஆற்றுப்படுத்தும். ஆற்றுப்படை இலக்கியத்தின் இலக்கணமாகத் தொல்காப்பியரது நூற்பா எடுத்துக்கூறிய விளக்கத்தை இலகுவாக உணர்வதற்கு நவீன இலக்கிய வடிவமாகக் காதலியாற்றுப்படை திகழ்கிறது. ஆசிரியர் காதலன் காதலியை ஆற்றுப்படுத்துவதாகப் பாடியிருப்பது இளந்தலைமுறையினரின் இலக்கிய ஆர்வத்தை ஏற்படுத்தும் முயற்சியாக உள்ளது. ஆற்றுப்படையைப் படிக்கும்போது பண்டைய இலக்கிய மரபு எவ்வாறு நவீன காலத்திற்குப் பொருந்துகிறது என்பதை நன்கு உணரமுடிகின்றது. பண்டைய தமிழ்ப்புலவர்கள், பாணர் முதலியோர் தாம் பரிசில் பெற்ற முறைமையைப் பிறருக்குக் கூறி அவரையும் பரிசில் பெற ஆற்றுப்படுத்தும் நிலையை தொல்காப்பிய நூற்பா விளக்கிக்காட்டுகிறது. இதேபோன்று பேராசிரியரும் காதலியாற்றுப்படையை இயற்றி ஏனைய பிரதேசங்களின் வாழ்வியலையும் பண்பாட்டையும் பதிவுசெய்யும் பணிக்கு ஆற்றுப்படுத்துகிறார். நெடும்பாடல் வடிவில் பல்வேறு செய்திகளையும் சிறப்புக்களையும் உள்ளடக்கிய பிற பிரதேசங்களைப் பற்றிய ஆற்றுப்படைகள் வெளிவரவேண்டும் என்பதே அவரது இலக்காக இருந்தது.

யாழ்ப்பாணத்துப் பண்பாட்டு வரலாற்றை அறிய விரும்புவோர் காதலியாற்றுப்படையைப் படிக்கவேண்டும். இன்று புலம்பெயர்ந்து வாழும் தமிழரும் அவரது தலைமுறைகளும் 'பதியெழுதலறியாத வாழ்வியல்' ஒன்று இருந்தது என்பதை அறியவேண்டும். இதைவிடப் புலம்பெயர்ந்தபோது பெற்ற வாழ்வியல் அனுபவங்களைப் புதிய ஆற்றுப்படைகளாகப் பாடிப் பதிவு செய்யவேண்டும். இயற்கை வளமும் இனிய சூழலும் பேணப்படுவதற்கு ஆற்றுப்படை மூலமாக ஆசிரியர் ஒரு புதிய கற்கைநெறியை அறிமுகம் செய்துள்ளமை அனைவரையும் இப்பணியில் ஈடுபடத் தூண்டும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரவெட்டி பிரதேச செயலகர் பிரிவில் சிறுதொழில் முயற்சியாண்மை : சில அவதானிப்புகள்

ஆறுமுகம் சுப்பிரமணியம்
சிரேஷ்ட விரிவுரையாளர்
முகாமைத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

## 1.0 அறிமுகம்

பொருளாதாரத்திலும் நிதிமுகாமைத்துவத்திலும் அவற்றுடன் இணைந்த பிற துறைகளிலும் அண்மைக் காலத்தில் அதிக முக்கியத்துவம் பெற்றுவரும் எண்ணக்கருவாக முயற்சியாண்மை என்பது விளங்குகின்றது. குறிப்பாகச் சுட்டுவதாயின் பொருளாதாரங்களில் அபிவிருத்திக்கான ஒரு உபாயமாக முயற்சியாண்மையை இன்று கைக்கொள்கின்றனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சிப் பிரதேசத்தில் பல்வேறு பொருளாதாரச் சிறப்புக்களையும் கொண்டதாக கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு அமைகின்றது. கடல் வளம் தவிர்ந்த பிற வளங்களை அதிகளவு கொண்ட செழிப்பான கணிசமான குடி அடர்த்தியுடைய பிரிவாக கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு உள்ளது. வர்த்தகத்திலும் அதனோடு இணைந்த செயற்பாடுகளிலும் சிறப்பான பாரம்பரியங்களைக் கொண்ட பல கிராமங்கள் இப்பிரிவினுள் அடங்குகின்றன. இக்கட்டுரையானது கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் சிறுதொழில் முயற்சியாண்மையின் தற்போதைய நிலை பற்றியும் அம்முயற்சியாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவர்களுக்கான வாய்ப்புக்கள் பற்றியும் ஆராய்வதனை நோக்கமாகக் கொண்டது.

## 2.0 முயற்சியாண்மை

முயற்சியாண்மை என்பது ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து அதனைக்கொண்டு நடாத்துவதுடன் தொடர்புபட்டதாகும். இவ்வாறு ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து செயற்படுத்துவோரை முயற்சியாளர் (entrepreneur) என்பர். இந்த நடவடிக்கையில் ஈடுபடும்போது முயற்சியாளர்கள் பல்வேறு ஆபத்துக்களையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இவ்வாறு முயற்சியாளரால் ஆரம்பிக்கப்படும் நிறுவனங்கள் பகுதி நேர அடிப்படையில் கொண்டு நடாத்தப்படும் மிகச்சிறிய நிறுவனங்களாகவோ அல்லது பல பேருக்கு வேலைவாய்ப்பை வழங்கக்கூடிய பாரிய நிறுவனங்களாகவோ அமையலாம். இந்நிறுவனங்கள் பெருமளவுக்கு மக்களுக்குத் தேவையான பல்வேறு பொருட்கள் சேவைகளை உற்பத்திசெய்து வழங்குவதை நோக்கமாகக் கொண்டிருக்கும். இந்தவகையில் முயற்சியாளர்கள் தமக்குக்கிடைக்கும் உற்பத்திக் காரணிகளை பயனுறுதிமிக்க வகையிலும் வினைத்திறனான வகையிலும் வெளியீடாக மாற்றுவர். எனவே முயற்சியாளர் என்பவர் தனக்குக் கிடைக்கும் வளங்களைப் புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பெறுமதிமிக்க வழியில் ஒழுங்கமைப்புச்செய்து உற்பத்தி முயற்சியில் ஈடுபடுவார். அதன்போது வெளியீட்டுக்கான முழுப்பொறுப்பும் ஆபத்துக்களும் முயற்சியாளராலேயே ஏற்றுக் கொள்ளப்படும். இதன் பொருட்டு புதிதுபுனையும் திறன் *(innovative)*, ஆக்கத்திறன் *(Creativity)*, ஆபத்துக்களை ஏற்றல், தலைமைத்துவப்பண்பு, சுயாதீனதன்மை, இலக்கை நோக்கிய செயற்திறன், தன்னம்பிக்கை, நேரானமனப்பாங்கு *(Positive thinker)* போன்ற பண்புகள் முயற்சியாளரிடம் காணப்படவேண்டும். *(Stokes 2000)*. இந்த அடிப்படையில் முயற்சியாண்மை என்பதை சுய திருப்தியையும் பண அடிப்படையிலான சன்மானங்களையும் பெறும்பொருட்டு, சமூக மற்றும் நிதி ரீதியான ஆபத்துக்களை ஏற்றுக்கொண்டு தேவையான நேரத்தையும் முயற்சிகளையும் ஈடுபடுத்தி பெறுமதியான ஏதாவது வேறுபட்ட அம்சங்களை உருவாக்குவதற்கான செய்முறை என வரைவிலக்கணப்படுத்தலாம். *(Hisrich,1995)*. இவ்வாறு வெளியீடாக உருவாக்கப்படுபவை சந்தைப்படுத்தப்படுவதற்கேற்ற உற்பத்திப் பொருட்களாகவோ அல்லது சேவைகளாகவோ அமையலாம்.

உதாரணமாக ஒரு சிற்பக் கூடத்தையோ அல்லது வியாபார நிலையத்தையோ ஆரம்பித்து நடாத்துவதும் முயற்சியாண்மைகளே. அவற்றை நடாத்துபவர்களே முயற்சியாளர்கள் ஆவர். சுயாதீன தன்மைக்கான விருப்பம், வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதற்கான ஆர்வம், ஒரு தொழில் தொடர்பான அறிவும் அனுபவமும், நிதிரீதியான ஊக்குவிப்புக்கள், வேலையின்மை அல்லது கீழுமைப்பு போன்ற காரணிகள் ஒரு சராசரி மனிதனை முயற்சியாளனாக மாறத்தூண்டும். இவ்வாறு சராசரி நபர் ஒருவர் முயற்சியாளராக மாறும்பொழுது அவருக்கும் அவர் சார்ந்த சமூகத்துக்கும் நாட்டின் பொருளாதாரத்துக்கும் பல்வேறு நன்மைகள் கிடைக்கும். சுயதொழில் வாய்ப்பு, பிறருக்கு வேலைவாய்ப்பளித்தல், உள்ளூர் வளங்களின் உச்சப் பாவனை, புதிய தொழிகளின் உருவாக்கம், வருமானமீட்டல், புதிய சந்தைகளின் உருவாக்கம், பொருளாதார அபிவிருத்தி போன்ற நன்மைகளை முயற்சியாண்மையினூடாக நாம் அடைந்துகொள்ளலாம்.

## 3.0 கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் முயற்சியாண்மை

இக் கட்டுரையானது கரவெட்டி பிரதேசத்திலுள்ள சிறு தொழில் முயற்சியாண்மை பற்றி ஆராய முற்படுவதனால் அம் முயற்சிகளின் தொழில் ரீதியான பரம்பல்களை முதலில் நோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அட்டவணை 01 : கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் தொழில் முயற்சிகளின் பரம்பல்

| தொழில் முயற்சி | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| தனி வியாபாரமுயற்சி | 703 |
| மரத் தொழிலகம் | 127 |
| அரைக்கும் ஆலை | 29 |
| பாதணி உற்பத்தி நிலையம் | 16 |
| இரும்பு தொழிலகம் | 10 |
| வெதுப்பகம் | 07 |
| உந்துருளி திருத்தகம் | 02 |
| சுருட்டு தொழிலகம் | 02 |
| சலவையகம் | 18 |
| ஈருருளி திருத்தகம் | 32 |
| பொதியிடல் நிலையம் | 01 |
| உணவகம் | 11 |
| வானொலி திருத்தகம் | 02 |
| கல்லுடைக்கும் ஆலை | 01 |

மூலம் :- கரவெட்டி பிரதேச செயலக ஆவணங்கள்

### வரைபு 01 : தொழில் முயற்சிகளின் பரம்பல்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 01 இன் பிரகாரம் நோக்கும்பொழுது கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் அனேக தொழில் முயற்சிகள் தனி வியாபார முயற்சிகளாக இருப்பதைக் காணலாம். இந்நிலையானது பிற பிரதேசங்களிலும் அவதானிக்கப்படக்கூடிய ஒரு அம்சமாகவே உள்ளது. மேலும் இத்தனிவியாபார முயற்சிகளுள் சில்லறை பலசரக்கு வியாபாரம், புடவை வாணிபம், நகை வாணிபம், சிகை அலங்கரிப்பு நிலையங்கள், தொலைத்தொடர்பு நிலையங்கள் போன்றவையும் உள்ளடக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது. இத்தகைய வியாபார அமைப்புகளின் எண்ணிக்கை அதிகரிப்புக்குப் பிரதான காரணம் நெல்லியடி நகரானது கடந்த இரு தசாப்தங்களாக ஒரு சிறந்த வர்த்தக நகரப் பிரதேசமாக மாறிவருவதே ஆகும். உண்மையில் சற்று ஆழமாக நோக்குமிடத்து நெல்லியடி நகருக்கு ஒரு சிறந்த வர்த்தக பின்னணி இருப்பதை அறியலாம். நெல் மற்றும் அரிசி வாணிபத்தில் யாழ்மாவட்டத்தில் நெல்லியடிப் பிரதேசம் கணிசமான பங்காற்றிய ஒரு காலகட்டம் வரலாற்றில் பதிவாகியுள்ளது. அத்துடன் இன்று யாழ்மாவட்டத்தில் முன்னணி வகிக்கும் பல வர்த்தக நிறுவனங்களுக்கான ஆணிவேர் நெல்லியடிப்பிரதேசத்திலேயே உள்ளது. மேலும் நெல்லியடிப் பிரதேசத்தில் கடந்த இரு தலைமுறையினரை நோக்கும்போது ஒரு வர்த்தக தலைமுறை அமைப்பைக்கூட நாம் காணலாம். இவைதவிர வெளிநாட்டு நாணய உள் வரவுகள் காரணமாக மக்களின் கொள்வனவு மற்றும் நுகர்வு நடத்தைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்கள், இப்பிரதேச செயலர் பிரிவில் காணப்படும் கணிசமான குடி அடர்த்தி என்பனவும் வர்த்தக நிறுவனங்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் ஒரு வாய்ப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன எனலாம். இவைதவிர நெல்லியடி நகரின் இடஅமைவும் பாதுகாப்பு ரீதியாகவும் வர்த்தகத்திற்கு சாதகமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தனி வியாபார முயற்சிகளுக்கு அடுத்தபடியாக 127 மரவேலைத் தொழிலக முயற்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை உற்பத்தி முயற்சியின் அடிப்படையில் அமைவதுடன் இவற்றுள் பெரும்பாலான நிறுவனங்கள் கரணவாய் (J/350) கிராமசேவையாளர் பிரிவில் அமைந்துள்ளமையும் நாம் காணலாம். இதற்கு காரணம் மரவேலைத்தொழில் விற்பன்னர்கள் இம்முயற்சிகளைத் தமது இல்லங்களிலேயே அமைத்துள்ளனர். சிலர் இத்தொழில்களில் சிறு எண்ணிக்கையானோரை பணிக்கமர்த்தியுள்ளனர். இத்தொழில்களில் மரஅரிவு, தளபாடங்களின் உற்பத்தி போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன. இவ் உற்பத்திகள் பெருமளவிற்கு எமது பிரதேசத்தின் தேவையைப் பூர்த்திசெய்வதுடன் மிகைகள் பிற பிரதேசங்களுக்கும் வழங்கப்படுகின்றன. தென்இலங்கையில் இருந்து தளபாடங்களின் வருகை தடைப்பட்டு இருப்பது இவர்களுக்கு வாய்ப்பாக இருப்பினும் கூட இவர்கள் தமக்கு தேவையான உள்ளீடுகளைப் (உதாரணம் :- மரங்கள்) பெறுவதில் அதிக சிரமத்தை எதிர்கொள்கின்றனர். மேலும் இவர்களில் பலர் நவீன நுட்பங்களை உள்வாங்கி தமது பணிகளுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தும் அதேவேளை தற்போதைய யாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாநாட்டிற்கான சீரற்ற மின்விநியோகத்தால் இயந்திரப்பாவனையை மேம்படுத்த முடியாதவர்களாக உள்ளனர். இம்முயற்சிகள் பரம்பரை அடிப்படையில் அதிகளவு முன்னெடுக்கப்படுவதும் கவனிக்கத்தக்கது.

இவை தவிர நெல் அரிசி ஆலைகள் மற்றும் அரைக்கும் ஆலைகள் என்பனவும் இப் பிரதேசத்தில் கணிசமாக காணப்படுகின்றது. இவை உற்பத்தி அடிப்படையிலும் சேவை அடிப்படையிலும் இயங்குகின்றன. உற்பத்தி அடிப்படையில் இயங்கிய நெல் அரிசி ஆலைகள் A9 வீதி மூடப்படுவதற்கு முன் சிறப்பான செயலாற்றியதைப் பதிவு செய்துள்ளன. ஆனால் A9 வீதி மூடப்பட்ட பின் வன்னிப்பகுதி மற்றும் தென்இலங்கையில் இருந்து நெல் எடுத்துவரப்படுவது தடைப்பட்டதும் இவை மந்தமான செயலாற்றத்தையே பிரதிபலிக்கின்றன. பல்வேறு காரணங்களால் இத்துறையில் ஈடுபட்ட அனேக அரிசி ஆலை தொழில் முயற்சிகள் மூடப்பட்டுள்ளதுடன் அம்முயற்சிகளிலீடுபட்ட அனேக முயற்சியாளர்கள் புலம் பெயர்ந்துள்ளனர் அல்லது வேறு தொழில் முயற்சிகளுக்குத் தம்மை மாற்றியுள்ளனர். கடந்த இரு தசாப்தங்களில் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவு தொழில் முயற்சிகளில் அவதானிக்கப்பட்ட ஒரு முக்கியமான மாற்றம் இதுவாகும். குறிப்பாக இதை இப்பிரதேசத்துக்கான ஒரு பின்னடைவு எனக் கூடக் குறிப்பிடமுடியும்.

இப்பிரதேசத்தில் சிறப்புப்பெற்ற இன்னுமொரு தொழில் முயற்சி பாதணி உற்பத்தி முயற்சி ஆகும். இங்கு 09 பாதணி உற்பத்தி நிலையங்கள் அல்வாய் தெற்கு (J/379) கிராம சேவையாளர் பிரிவில் இயங்குகின்றன. இது ஒரு கணிசமான தொகை ஆகும். இவையும் கூட சிறிய அளவிலான தொழில் முயற்சிகளாக பெருமளவுக்கு அவர்களது இல்லங்களிலேயே முன்னெடுக்கப்படுகின்றன. ஆயினும் இன்று வெளி நாடுகளிலிருந்தும் தென்னிலங்கையிலிருந்தும் வரவழைக்கப்படும் பாதணிகளுடன் போட்டியிடக் கூடிய வகையில் இங்கு பாதணிகள் தயாரிக்கப்படுவது சிறப்பானதாகும். உண்மையில் இத்தகைய ஆற்றல்மிக்க ஊழியப்படை காணப்படுவது இப்பிரதேசத்துக்கான ஒரு வாய்ப்பாகும். இம்முயற்சிகள்கூட குடும்ப தலைமுறை அடிப்படையில் மேற்கொள்ளப்படுவது கவனிக்கத்தக்கது. இத்துறையை சிறப்பாக வளர்த்தெடுத்தால் போதிய வேலைவாய்ப்பக்களையும் வருமான வாய்ப்புக்களையும் ஏற்படுத்தமுடியும்.

இவைதவிர கணிசமான எண்ணிக்கையான இரும்பு ஒட்டுத் தொழிலகங்களும் கம்மாலைகளும் காணப்படுகின்றன. கட்டிட நிர்மாணங்கள் மற்றும் பிற விடயங்களுக்குத் தேவையான இரும்புப்பொருட்கள் உற்பத்திசெய்து வழங்கப்படுவதுடன் அவை தொடர்பான சேவைகளும் வழங்கப்படுகின்றன. ஆரம்ப காலங்களில் சமூக அடிப்படைகளில் இம்முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டபோதும் தற்போது அந்த வரையறைகள் மீறப்படுவது ஆரோக்கியமானதே. போதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சிகளும் நவீன நுட்பங்களும் உள்வாங்கப்பட வேண்டிய துறையாக இது உள்ளது. அவற்றுக்கு மேலதிகமாக சமூக அடிப்படையில் மேற்கொள்ளப்படும் சிகை அலங்கார நிலையங்கள், சலவையகங்கள் போன்றனவும் ஏனைய பிரதேசங்களைப் போன்று கணிசமாகப் பரம்பியுள்ளதை அவதானிக்கலாம். எமது முந்தைய தலைமுறையினர் மத்தியில் வடமராட்சி பிரதேசத்தில் சிறப்புப்பெற்றிருந்த ஒரு தொழில் முயற்சி சுருட்டு உற்பத்தி முயற்சி ஆகும். ஆயினும் புகையிலை உற்பத்தி வீழ்ச்சி, உற்பத்தி செய்யப்படும் புகையிலை தென்னிலங்கைக்கு அனுப்பப்படல், சுருட்டுப் பாவனையில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன காரணமாக இத்தொழில் முயற்சி இன்று மிகவும் அருகி வருகின்றது. கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் தற்போது 02 முயற்சிகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை தவிர உந்துருளி மற்றும் ஈருருளி திருத்தங்கள், வெதுப்பகங்கள், உணவு நிலையங்கள், புகைப்பிடிப்பாளர், போக்குவரத்து போன்ற தொழில் முயற்சிகளும் இப்பிரதேச செயலர் பிரிவில் கணிசமாக முன்னெடுக்கப்படு கின்றன. மிக அண்மைக்காலங்களில் அதிகளவுக்கு உருவாக்கப்பட்ட முயற்சிகளாக தொலைத்தொடர்பு நிலையங்கள், ஒளிப்படக் கலையகங்கள் போன்றன காணப்படுகின்றன.

இப்பிரதேச செயலர் பிரிவில் அதிகளவிலான தொழில் முயற்சிகள் சமூக அடிப்படையிலோ அல்லது பரம்பரை அடிப்படையிலோ முன்னெடுக்கப்படுகின்ற மரபு ரீதியான தொழில் முயற்சிகளாகக் காணப்படுகின்றன. இவற்றுள் பெரும்பாலானவை மரபுரீதியான உற்பத்தி முறைகள் நுட்பங்களைப் பயன்படுத்துவனவாக உள்ளன. நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக விஸ்தரிப்பு, சந்தை நோக்கிய உற்பத்தி மற்றும் நவீன நுட்பங்களை அறிமுகப்படுத்தல் என்பவற்றில் போதிய ஆர்வம் காட்டப்படவில்லை. அத்துடன் முயற்சியாண்மைக்கு இருக்கவேண்டிய பிரதான பண்புகளான ஆக்கத்திறன் மற்றும் புதிது புனைதல் என்பவையும் சாதாரண மட்டத்திலேயே அவதானிக்கப்பட்டுள்ளன. ஆயினும் அவர்கள் தமது நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கு தற்போது நிதி வசதி என்பது ஒரு பாரிய தடையாக அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் இப்பிரதேசத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வர்த்தக வங்கி, ஹற்றன் நேஷனல் வங்கி, கூட்டுறவு கிராமிய வங்கி, பிற நிதி நிறுவனங்கள் மற்றும் அரச முகவர் அமைப்புக்களால் கணிசமான அளவு நிதி வழங்கல்கள் இம் முயற்சிகளுக்காக வழங்கப்படுகின்றன. இவைதவிர முறை சாராத உள்ளூர் நாணய நடவடிக்கைகள் மூலமாகவும் இவர்கள் நிதிகளைத் திரட்டுவதற்கு போதிய வாய்ப்புக்கள் உள்ளன. எனவே நிச்சயமற்ற சூழலும் போதிய விழிப்புணர்வு இன்மையும், சந்தை பற்றி தூர நோக்கு இன்மையுமே முயற்சியாளர்கள் தமது முயற்சிகளை மேம்படுத்த தடையாகவுள்ள பிரதான காரணிகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் பெரும்பாலானவை சேவை அடிப்படையிலான முயற்சிகளாக உள்ளன. உற்பத்தி அடிப்படையிலான முயற்சிகள் காணப்பட்ட போதும் அவை போதுமானவை அல்ல. அத்துடன் அனேகமான சேவை முயற்சிகள் கூட உரிமையாளரால் மட்டும் நடாத்தப்படுவனவாகவும் ஊழியர்கள் எவரையும் பணிக்கமர்த்தாதவையாகவும் உள்ளன. எனவே முயற்சியாண்மைகளினூடாக வேலைவாய்ப்பை ஏற்படுத்தல் என்ற நோக்கம் இங்கு அடையப்படமுடியாதுள்ளது. அத்துடன் உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடும்போது மட்டுமே எமது பிரதேசத்தின் வளங்கள் வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பும் ஏற்படும்.

இப்பிரதேச சிறுதொழில் முயற்சிகளில் பெண்களின் பங்களிப்பு கணிசமான அளவு அவதானிக்கப்பட்டுள்ளது. இது ஒரு சிறப்பான அம்சமாகும். குறிப்பாக ஆடை உற்பத்தி, விற்பனை நிலையங்கள், தொலைத்தொடர்பு நிலையங்கள், சில்லறை வாணிப நிலையங்கள், அழகு சாதன விற்பனை நிலையங்கள் ஆகிய முயற்சிகள் அதிகளவுக்கு பெண்களால் முன்னெடுக்கப்படுகின்றன. இந்நிலைமை மேலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். உண்மையில் பெண் விடுதலைக்கான ஒரு கருவியாகக்கூட முயற்சியாண்மை பயன்படுத்தப்பட முடியும்.

மேலும் இப்பிரதேச தொழில் முயற்சியாளர்களிடத்தில் முயற்சியாளர் ஒருவருக்குத் தேவையான சிறப்பான குணவியல்புகளாக தன்னம்பிக்கை, சாதனைக்கான அர்ப்பணிப்பு, வாய்ப்புக்களை சரியான முறையில் பயன்படுத்தல் போன்ற அம்சங்களை நாம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. உதாரணமாக இன்று பல்வேறு வாணிப நிலையங்களிலும் கையடக்கத் தொலைபேசிக்கான மீள்நிரப்பல் வசதி (Reload) வழங்கப்படுவதைக் காணலாம். இது வாய்ப்புக்களை தக்கவாறு பயன்படுத்தும் பண்பாகும். அடிப்படையில் இப்பண்புகள் யாழ்ப்பாண மக்கள் அனைவருக்குமுரிய சிறப்பியல்புகளாகும்.

## 4.0 சிபார்சுகள்

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் சிறு தொழில் முயற்சியாண்மைகளை விருத்திசெய்யும் பொருட்டு பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்.

1. அதிகளவு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை ஆரம்பித்தல்.
2. புதிய வகை முயற்சிகளை ஆரம்பித்தல் மற்றும் நவீன நுட்பங்களை பிரயோகித்தல் என்பவற்றில் அக்கறை காட்டல்.
   (உதாரணம் : - ஸ்கிறீன் பிறிண்ரிங்)
3. சிறு தொழில் முயற்சியாளர்களுக்கு நவீன நுட்பங்கள், நிதி முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் போன்ற விடயங்களில் பயிற்சிகளை அளித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. புதிய சந்தை வாய்ப்புக்கள் பற்றிய விழிப்புணர்வை ஊட்டலும் சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தலும்.
5. சிறு தொழில் முயற்சியாளர்களின் புத்தாக்கம் மற்றும் ஆக்கத்திறன் சிந்தனைகளைத் தூண்டக்கூடிய வகையில் ஊக்குவிப்புக்களை வழங்கல்.
6. முயற்சியாளர்களுக்கான நிதி வாய்ப்புக்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
7. வேலைவாய்ப்பை நாடி நிற்கும் இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் முயற்சியாண்மை பற்றிய எண்ணக்கருவை விதைத்தல். இதன்போது புதிய தொழில் முயற்சிகள் ஆரம்பிப்பதன்மூலம் அவர்களுக்கும் சமூகத்துக்கும் நாட்டுக்கும் கிடைக்கும் பயன்களை விளக்கிக்கூற வேண்டும். அத்துடன் முயற்சியாண்மையினூடாக சாதனைகள் படைத்தோரது அனுபவங்களை இளைய சமூகத்தோரிடம் பகிர்வதன்மூலம் இளைஞர்கள் மத்தியில் முயற்சியாண்மை தொடர்பான நம்பிக்கையை கட்டியெழுப்பமுடியும். அத்துடன் எமது பிரதேசத்தில் சிறுதொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு வாய்ப்பான சூழல்களை அவர்களுக்கு அடையாளம் காட்டவேண்டும்.

## 5.0 முடிவுரை

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் பல்வேறு துறைகளிலும் சிறு தொழில் முயற்சிகள் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றன. ஆயினும் சேவைகள் துறைகளிலேயே அதிகம் நாட்டம் காட்டப்படுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இம்முயற்சிகள் பெருமளவுக்கு உரிமையாளர் மட்டும் பங்குபற்றுபவையாகவோ அல்லது மிகக்குறைந்தளவிலான ஊழியர்கள் பங்குபற்றுபவையாகவோ உள்ளன. இவை விரிந்த சந்தைப்படுத்தல் நோக்கமுடையனவாகவும் அமையவில்லை. இருப்பினும் பல சிறு தொழில் முயற்சிகள் பல்வேறு இடர்களைத் தாண்டி சாதனைகளை நாட்டி வருவதும் குறிப்பிடத்தக்கது. இதற்கு அந்த முயற்சியாளர்களின் அர்ப்பணிப்பும், தன்னம்பிக்கையுமே பிரதான காரணங்களாக உள்ளன. எனவே இப்பிரதேச செயலர் பிரிவில் சிறந்த வள வாய்ப்புக்கள் காணப்படுவதால் சிறு தொழில் முயற்சிகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்துவதன் மூலமாக முயற்சியாளர்களும், சமூகமும், பொருளாதாரமும் அதிக பயன்களைப் பெறமுடியும்.

**உசாவியவை :**


1. கரவெட்டி பிரதேச ஆவணங்கள்.
2. *Kuratko, Donald F., and Hodgetts, Richard M., Entrepreneurship, The Dryden Press : New York (1998)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் வழக்கிலிருக்கும் பழமொழிகள் ஓர் ஆய்விற்கான முன்னோட்டம்

**திரு. ஐ. சண்முகலிங்கம்**

ஓய்வுநிலை ஆசிரியர்

தமிழ் மக்களின் வாழ்க்கை இயக்கத்தில் பழமொழிகள் முக்கிய இடம் வகிக்கின்றன. ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய எமது சமூக வாழ்விலும் பழமொழிகள் வழக்கில் இருந்ததை அறியமுடிகிறது. பழமொழி நானூறு, முதுமொழிக் காஞ்சி முதலிய எமது பண்டைய இலக்கியங்கள் இந்த உண்மையை பறைசாற்றி நிற்கின்றன.

பழமொழிகள் அவை வழக்கில் இருக்கும் சமூகத்தின் பண்புகளை சுட்டிநிற்கின்றன. பிரதேச வட்டார வழக்குகள், பழக்கவழக்கங்கள், சமூகச் சுற்றுச்சூழல்களை படம் பிடிக்கின்றன. இறுக்கமும், தர்க்கமும், நகைச்சுவையும் பொருந்திய மொழியமைப்பில் சொல்லவேண்டியதைச் சொல்லிவிடுகின்றன.

இன்றைய நவீன யுகத்தில் இலத்திரனியல் அலையில் எத்தனையோ 'பழமைகளை' நாங்கள் இழக்கின்றோம். நமது முன்னோர் அளித்த அருஞ்செல்வங்களை, எமது 'முதுசொம்'களை இழக்கிறோம். எமது பண்டைய மூலிகைகளை, உயிரினங்களை, தொழினுட்பங்களை, ஏன் எமது மொழியின் 'வளமை'களையே இழக்கின்றோம்.

இந்தவகையில் எத்தனையோ 'சங்கதி'களை நாம் எமது எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். எமது இன - பாரம்பரிய பெருமைகளை, ஆற்றல்களை, அறிவுத் தொடர்ச்சியை, சிந்தனை மரபை பாதுகாப்பதன் மூலமே, எதிர்கால உலகில் எம்மையும் ஒரு 'தனித்துவம் மிக்க சமூகமாக' நிலைநிறுத்தமுடியும்.

அதிஷ்டவசமாக எம் மத்தியில் ஒரு பல்கலைக்கழகம் இருப்பதும், ஆயிரக்கணக்கில் இளம் புத்திஜீவிகள் அங்கு உருவாகி வருவதும் நம்பிக்கை அளிக்கிறது. பதிவுசெய்யப்படவேண்டிய பல விடயங்கள் அங்கு பதிவுசெய்யப்படுவதும், ஆய்வுசெய்யப்படவேண்டியவை ஆய்வு செய்யப்படுவதும் வரவேற்கத்தக்கவை. உதாரணமாக யாழ்ப்பாணத்தின் ஊர்ப்பெயர் ஆய்வுகளை குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் எத்தனையோ விடயங்கள் ஆய்வுசெய்யப்படவேண்டியும், ஆவணப்படுத்தப்பட வேண்டியும் உள்ளன. சிந்திக்கையில் இரண்டு விடயங்கள் எனது உடனடிக் கவனத்திற்கு வந்தன. ஒன்று, ஊர்ப்பெயர்களைப் போலவே எமது தோம்புகளிலும், காணி உறுதிகளிலும் இடம்பெற்றிருக்கும் குறிச்சிப் பெயர்கள், வயாம்புலம், பங்கிலிட்டி, பள்ளிமால், பிரானையடி, வீரமலை, சோழங்கன், பாண்டியன் சீமா, தோப்பன் சீமா, எட்டுத்திட்டி என வரும் பெயர்களை ஆய்வு செய்யும்போது அவற்றின் பின்னால் வரும் சமூக - வரலாற்றுக் குறிப்புகள் பிரமிப்பை அளிக்கக்கூடும்.

இரண்டாவது பழமொழிகள். பிரதேச ரீதியாக, வட்டார ரீதியாக, சமூகக் குழுக்கள் ரீதியாக வேறுபட்டிருக்கும் இப்பழமொழிகள் சுவாரஷியமானவை; புதுமைகள் நிறைந்தவை; ஆச்சரிய உணர்வை ஏற்படுத்துபவை. பொதுவாக வழக்கில் இருக்கும், திரும்பத் திரும்ப ஊடகங்களிலும் - பாடப் புத்தகங்களிலும் கையாளப்பட்டு புதுமையிழந்த, உயிரிழந்த 'இயந்திரத் தரமான' பழமொழிகளுக்கு அப்பால் (உதாரணம் : அகத்தின் அழகு முகத்தில் தெரியும்) இந்த வட்டார ரீதியான பழமொழிகள் உயிர்த் துடிக்கும் அழகும், அங்கதமும், நுட்பமும் கொண்டவை.

இப்படியான பழமொழிகள்மீது எனக்கு ஓர் ஆர்வமும் - கவர்ச்சியும் ஏற்பட்டபின், நான் குறித்து வைத்துள்ள சில பழமொழிகளை இங்கு பட்டியலிடமுடியும். இவற்றில் சில ஏற்கனவே உங்களுக்கு பரிச்சயமானவையாக இருக்கலாம்.

1. அம்மியும் அப்பிடி; குழவியும் அப்பிடி;
அரைக்க வந்த கிழவியும் இப்பிடி.
2. அரிசிப்பொரியும் வித்ததாகுது; திருவாரூரும் பாத்ததாகுது.
3. உப்பிட்ட பாண்டமும், உபாயமாய் வாழ்ந்த குடியும்
தட்டி உடையாமல் தானே உடையும்.
4. ஊராவீட்டு நெய்யே; என் பெண்டாட்டி கையே.
5. ஆளைக்கண்டு ஏய்க்குதாம் ஆலங்காட்டுப் பசாசு.
6. கண்டறியாதவன் பெண்டிலை காடு மேடெல்லாம் கொண்டு திரிஞ்சவனாம்.
7. போச்சுதடா பானை; பொங்கலுக்குப் புத்தி என்ன?
8. இதைவிட்டால் கெதியுமில்லை; இதுக்கு மிஞ்சின வழியுமில்லை.
9. பொரிமாவை மெச்சினானாம் பொக்கு வாயன்.
10. சும்மா கிடந்த அம்மையாருக்கு அரைப்பணத்துத் தாலி போதாதோ?
11. சிரிக்கச் சிரிக்க சொல்லுறவை சீரழியச் சொல்லுறவை;
அழஅழச் சொல்லுறவை ஆதரிக்கச் சொல்லுறவை.
12. செத்தையில் பல்லியும் பல்லியோ; சித்தாத்தை பிள்ளையும் பிள்ளையோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. செருகிக்கிடந்த ஏப்பையும் சோறள்ள வந்திட்டுதோ?
14. நோஞ்ச பூனை மத்து நக்கினது போல - ஓய்ஞ்ச பெண்டுகள் மாரடிச்சது போல.
15. செத்தையிலும் பத்தையிலும் கிடந்தவையை மெத்தையிலை வைச்சதாலை வந்த வினை.
16. காட்டுத்தடியாச்சே; கணக்கன்ரை மாடாச்சே அடியடா அடி.
17. வேலி அம்பலம்; படலை சங்கடம்.
18. பகைவர் உறவையும், பனை நிழலையும் நம்பாதே.

இப்பட்டியலில் ஒரு சிலவற்றைத் தவிர மற்றவற்றை நான் வடமராட்சியிலேயே சேகரித்தேன். நான் அறிந்தவரையில், இவற்றில் பலவும் வடமராடசியிலேயே புழக்கத்திலுள்ள பழமொழிகள் ஆகும். குறிப்பாக, வடமராட்சியில் கிராமங்களில் வாழும் முதிர்ந்த வயதினரிடையே சந்தர்ப்பங்களுக்கேற்ப சர்வ சாதாரணமாக இப்பழமொழிகள் வழக்கில் உள்ளதை இன்றும் காணலாம்.

இப் பழமொழிகளை மேலோட்டமாக அல்லாது, சிறிது அக்கறையுடன் பார்க்கும்போது அவை தரும் சுவாரஷியம் அலாதியானது. உதாரணமாக 'உப்பிட்ட பாண்டமும் உபாயமாய் வாழ்ந்த குடியும் தட்டி உடையாமல் தானே உடையும்' என்ற பழமொழியை பார்ப்போம். முன்னைய காலங்களில் கிராமத்து வீடுகளில் மண்பானைகளிலேயே உப்பைப் போட்டு வைப்பார்கள். பின்னர் நாளாந்தம் தம் தேவைக்கேற்ப சிறிதுசிறிதாக அதனை உபயோகிப்பார்கள். பானையும் தன் தோற்ற மெருகு கெடாது அப்படியே இருப்பதைத் தெரியும். ஆனால் நாளடைவில் பானை, உப்பு ஊறி வெடித்து உடைந்துவிடும்.

அதுபோலவே 'உபாயமாய் வாழ்ந்த குடியும்' நல்லாய் இருப்பதாகவே வெளியாருக்கு தோற்றம் காட்டும். ஆனால் நாளாவட்டத்தில் உள்ளுக்குள் உருக்குலைந்து சீரழிந்து சிதறி அழிந்துவிடும். உபாயமாய் வாழ்ந்த குடி என்பது, மற்றவரை வஞ்சித்து - ஏமாற்றி செழிப்பாக வாழ்கிறோம் என்ற தோற்றம் காட்டிய குடி; குடும்பத்தவர்; சந்ததியினர்.

'உப்பிட்ட பாண்டம்' என்பது வருங்காலச் சந்ததியினருக்கு என்னவென்றே தெரியாமல் போகலாம். ஏன் இன்றைய காலத்திலேயே பலருக்குத் தெரியாது. முன்னொரு காலத்தில் எமது சமூகத்தில் எல்லாச் சமையல் பாத்திரங்களும் - நீர் சேகரிக்கும் பாத்திரங்களும் மண்ணினைப் பதப்படுத்தியே செய்யப்பட்டன என்பதும், அதனைச் செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட எளிய கிராமியத் தொழில் நுட்பமும் - உபகரணங்களும் இன்னும் சில காலங்களில் காணாது போகலாம். இன்றும் சில சமயச் சடங்குகளில் (மரணச் சடங்கு) பயன்படுத்தப்படும் மண் பானை சட்டிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையினால், குற்றுயிரும் குலையுயிருமாக உயிர்பெற்றிருக்கும் இத்தொழில் 'நவீன அலையின்' வீச்சில் அள்ளுண்டு போகலாம்.

'தட்டி உடையாமல் தானே உடையும்' - தட்டி உடைக்கிற சங்கதிகளை நாம் தினமும் கண்டுகொண்டிருக்கிறோம். தனி மனிதர்களுக்கிடையில், சமூகங்களுக்கிடையில், இனங்களுக்கிடையில், நாடுகளிற்கிடையில் 'தட்டி உடைக்கிற சங்கதிகள்' நடந்துகொண்டுதான் இருக்கின்றன. ஆனால் தானே உடைபவை, இவையும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. அடித்தளமில்லாத, தார்மீக பலமில்லாத, ஏமாற்றும் - புரட்டும் - வஞ்சனையும் நிறைந்த எல்லாமுமே, இவற்றில் கட்டியெழுப்பப்பட்ட எல்லாமுமே, சிறிதுகாலம் 'மாயக்கவர்ச்சி' காட்டி மற்றவரை மயக்கினாலும் - தானாகவே உருக்குலைந்து சீரழிந்து அழிந்துபோகின்றன. 'அழ அழ கொண்டவையெல்லாம் அழஅழப் போம்' என்பதாக.....

இப்படி இப்படியே, இந்தப் பழமொழிகளையெல்லாம், சிறிது அக்கறையுடன் பல்வேறு கோணங்களில் பார்க்கும்போது, அவற்றின் பின்புலத்தில் மறைந்துநிற்கும் அற்புதமான தகவல்கள் நிச்சயமாகவே பிரமிப்பைத் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயற்ற வாழ்வுபெற சித்த வைத்தியம் கூறும் வழி வகைகள்

*டாக்டர் சி. வேலும்மயிலும்*

நம் முன்னோர் அளித்த செல்வங்களில் தமிழ் வைத்திய முறையும் ஒன்றாகும். இதனை ஆக்கித்தந்த பதினெண் சித்தர்கள் முழுமுதற் கடவுளாகிய பரமசிவனை தம் ஆசாபாசங்களை அடக்கி அன்புடனும் பண்புடனும் தியானித்து பரமனிடம் உபதேசம் பெற்று அவரின் ஆணைப்படி மூலிகைகளை பல இடங்களில் அலைந்துதிரிந்து கண்டு அதை மருந்தாக செய்து தமது மனத்திருப்திப்படி கண்டறிந்து அவற்றை சுவடிகளில் பதித்து எமக்கு அளித்துள்ளார்கள்.

"நோயற்ற வாழ்வில் நான் வாழவேண்டும்" என்று இறைவனை வேண்டிக்கொண்டார் இராமலிங்க அடிகளார். இக்கேள்வி நியாயமானதே. இதையே பரமனிடம் பெற்ற செல்வமான வைத்தியமுறையினை உணர்ந்து அதன்படி அனுபவித்து அவற்றை எமக்கு சாலவும் சிறந்த ஆயிரம் ஆயிரம் வழிமுறைகளை வகுத்து தந்துள்ளார். அதன்படி நாமும் கடைப்பிடித்து வாழ்ந்துவருவோமானால் நோயில்லா வாழ்வு வாழ்ந்துவரலாம்.

சித்த மருத்துவப் பெரியார்களில் ஒருவரான தேரையர்

"திண்ண மிரண்டுள்ளேசிக்க வடகாமற்
பெண்ணின் பால் ஒன்றைப் பெருக்காமல் உண்ணுங்கால்
நீர் கருக்கிமோர் பெருக்கி நெய்யுருக்கியுண்பார்தம்
பேருரைக்கிற் போமே பிணி"

ஆண் பெண் சேர்க்கையில் அளவோடும், கட்டுப்பாட்டுடனும் நடந்தால்தான் வாழ்க்கை நீடிக்கும். விந்து இழப்பால் வீரியம் போகும். இதனால் உடலிலிருக்கும் நோய் எதிர்ப்பு அணுக்கள் குறைந்துவிடும். இதையே "விந்து விட்டார் நொந்து கெட்டாரென" பெரியவர் கூறியுள்ளார்கள். வெளியிலிருந்து வரும் நோய்க்கிருமிகளை எதிர்த்து போராடி உட்புகாமல் தடுக்கும் பலம் குன்றும். நோய்க்கு ஆளாக வேண்டி வரும். உண்ணும்போது வெந்நீரையே அருந்தவேண்டும். நெய்யை உருக்கியும் மோரை பெருக்கியும் உணவோடு கலந்து உண்ணவேண்டும்.

அடுத்து

பாலுண்போம் எண்ணெய் பெறின் வெந்நீரிற் குளிப்போம்
பகற்புணரோம் பகற்றுயிலோம் பயோதரமு மூத்த ஏலஞ்சேர்
குழலியரோடிளவெயிலும் விரும்போம்
இரண்ட டக்கோம், ஒன்றை விடோம் இடதுகையிற் படுப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலஞ்சேர் கறிநுகரோம் மூத்த தயிர் உண்போம்
முதனாளிற் சமைத்த கறி அமுதெனினு மருந்தோம்
ஞாலந்தான் வந்திடினும் பசித்தொழிய உண்ணோம்"

இரவில் பசுவின் பாலைக் காய்ச்சி அருந்தவேண்டும்
எண்ணெய் முழுக்கை வெந்நீரில் கொள்ளவேண்டும்
பகலில் உடலுறவு கொள்ளக்கூடாது
தன் வயதுக்கு மூத்தவரோடு உடலுறவு கொள்ளக்கூடாது
காலையில் வெய்யிலில் அலையக்கூடாது
மூலநோய்களை உண்டுபண்ணும் கறிகளை உண்ணக்கூடாது
மலத்தையும் மூத்திரத்தையும் அடக்கி இருத்தலாகாது
விந்துவை கட்டவேண்டும், இடக்கை கீழ்வைத்து நித்திரை கொள்ளவும்
புளித்த தயிரையே சேர்த்துக்கொள்ளவேண்டும்
முதல்நாள் சமைத்த கறி சிறந்ததாக இருந்தாலும் உண்ணக்கூடாது
பசியாமல் உண்ணக்கூடாது.

இதையே வள்ளுவப் பெருமான்
"அற்றால் அளவறிந்துண்க; அல்லது டம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு"

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி யுணின்"

"அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து"

உண்ட உணவு சீரணித்ததை தெரிந்து அடுத்த பொழுது உணவை அளவறிந்து சாப்பிட்டுவரின் மருந்து என்பது எடுக்கத் தேவையில்லை. நோயணுகாது உடலைப் பாதுகாக்கும்.

இதுதான்

தேரையர் அகஸ்தியர் என்னும் 18 சித்தர் பெருமக்கள் ஆராய்ந்து இன்ன உணவுகளை இப்படி உண்ணவேண்டும். அப்படி உணர்ந்து செய்துவரின் நோயற்ற வாழ்வு பெற வழியுண்டு என்றும் பொதுவாக உடல் நலத்தை கெடுக்கும் இன்ன உணவு செயல்களை தவிர்த்துவருவதும் உடலுக்கும் உயிருக்கும் ஊறுபாடு இல்லையென்பர்.

உணவை எத்தனை வேளை உண்பது?

"உண்பதிருபொழு தொழிய மூன்று பொழுதுண்ணோம்
உறங்குவது ராவொழியப் பகலுறக்கம் செய்யோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கடமை திங்களுக்கோர் காலன்றி மருவோம்
பெருந்தாக மெடுத்திடினும் பெயர்த்து நீரருந்தோம்
மண்பரவு கிழங்குகளிற் கருணையன்றிப் புசியோம்
வாழையிளம் பிஞ்சொழியக் கனியருந்தல் செய்வோம்
நண்பெற வுண்ட பின்பு குறு நடையுங் கொள்வோம்"

ஒரு நாளுக்கு இரண்டுமுறை உண்ணவேண்டும்
ஒருபோதுண்பவன் யோகி, இருபொழுதுண்பவன் போகி, முப்பொழுதுண்பவன் ரோகி, நான்குபொழுதுண்பவன் திடீரென மரணமடைவான் என்பர். பகலில் நித்திரை கொள்ளுதல் கூடாது. மாதம் ஒருமுறை சேர்க்கை. உண்ணும்போது இடையில் நீர் குடிக்கக்கூடாது. கிழங்குவகையில் கருணைக்கிழங்கை மட்டுமே சமைத்துண்பது நல்லது. சாப்பிட்டபின்பு சிறிது தூரம் நடக்கவேணும்.

"பாலோடாயிலும் காலமறிந்துண்"
"மோரும் கீரையும் இரவில் கேடு செய்யும்"
மேற்கண்டவற்றை உற்றுநோக்கி செயல்பட்டால் நோய் வராது காத்துக்கொள்ளலாம்.
சில சிகிச்சை முறைப்படி நடக்கின் நன்மை விளையும்.
"ஆறு திங்கட் கொருதடவை வமன மருந்தயில்வோம்
அடர்நான்கு மதிக்கொருகாற் பேதியுறை நுகர்வோம்
தேறுமதி ஒன்றரைக் கோர்தரம் நசியம் பெறுவோம்
திங்களரைக் கிரண்டுதரம் சவர விருப்புறுவோம்
வீறுசதுர் நாட்கொருகால் நெய்முருக்கைத் தவிரோம்
விழிகளுக்கஞ்சன மூன்று நாட்கொருகா விடுவோம்
நாறு கந்தம் புட்பமிவை நடுநிதியில் முகரோம்"

வாந்திமருந்து ஆறு மாதங்களுக்கு ஒருதரம்
பேதி மருந்து நான்கு மாதங்களுக்கொரு முறையும்
நசிய மருந்து ஒன்றரை மாதங்களுக்கொரு முறை
சவரம் செய்தல் ஏழு நாட்களுக்கொரு தரம்
எண்ணெய் முழுக்கு நான்கு நாட்களுக்கொரு முறை
கண்ணுக்கு மையிடல் மூன்று நாட்களுக்கொரு முறை
நறுமணம், பூமுகர்தல் (மணத்தல்) - நடு இரவில் கூடாது
முதிர்ந்த மாதரிலுண்டாகும் மணம், ஆடு, கழுதை, துடைப்பம் இவற்றிலிருந்து வரும் தூசு, மேலே படாதிருக்க பார்க்கவும். இரவில் விளக்கு, மரநிழல் இவற்றில் தங்கியிருக்கக்கூடாது. மாலைப்பொழுது அழுக்காடை, தலைசீவுதல் தவிர்க்கவேண்டும். உண்ட உணவு சீரணிக்கமுன்பு உடலுறவில் ஈடுபடக்கூடாது. உறக்கம், உணவுண்ணுதல், மலம் நீர் கழித்தல் மாலைப்பொழுது தவிர்க்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்றுடன் கூடி பசு, தெய்வம் குருவையும் வணங்கவேண்டும், பிறர் நகம், தலை மயிர், எழுந்து தெறிக்கும் நீர் உடலில் படாதிருக்க வேண்டுமென்கிறார் தேரையர்"

"உடம்புள்ளே உத்தமன் கோவில் கொண்டானென்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே" திருமூலர்

மேலே கூறிய தேரையர், வள்ளுவர், திருமூலர் என்னும் பெருமகன் கூறியபடி, உடம்பில் இறைவனிருப்பதால் உடல்நலத்தை பெரிதும் பாதுகாக்கவேண்டும். மேற்கண்ட நோயணுகா விதிகளைக் கடைப்பிடித்தால் நாம் நோயில்லாத வாழ்வை பெற்று நல்வாழ்வு பெறலாம்.

ஐம்பூதங்களாலும் ஆன இவ்வுடலில் ஏற்படும் எல்லா நோய்க்கும் அடிப்படைக் காரணங்கள் மேற்கண்ட தினசரிகளை கைவிடுத்ததும், இதனால் வாதம், பித்தம், கபம் (ஐயம்) என்பன எமது செய்கையால் குறையக்கூடும். இதனால் நோயுண்டாகின்றது.

"மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று" என்பர்.

வாத, பித்த, ஐய நாடிகள் உணவு, உறக்கம், உழைப்பு இவற்றின் அளவு குறைவதால் வேறுபடும். அப்போது நோயுண்டாகும்.

"ஓதுகின்ற மலக்கட்டை யொழிய வைத்தால்
உடலிலுள்ள வாதையெலா மொடுங்கிப்போகும்
நாதுற்ற சிறுநீரைத் தெளிய வைத்தால்
சடத்திலுள்ள வேகமெல்லாந் தணிந்து போகும்
கோலுற்ற உமிழ்நீரை முறிய வைத்தால்
கட்டிலுள்ள பகையெல்லாங் குலைந்து போகும்
கோதடர்ந்த இவைமூன்றும் களங்கமற்றால்
கொல்லவந்த காலனையும் வெல்லலாமே"

1. மலக்கட்டை - நீக்கிவிட்டால் உடம்பில் வலி இருக்காது
2. சிறுநீரை தெளியவைத்தல் - உடலுக்கு காங்கை கொதிப்பும் இருக்காது
3. எச்சிலை கபமில்லாது (சளி) முறித்துவிட்டால் - எந்த நோயும் வராது.

மேற்கண்டவை சீராக இருக்க வாத, பித்த, கபம் (ஐயம்) காரணமாகின்றன.

இவற்றை சீர்பெற கடைப்பிடித்துவரின் வந்துற்ற நோய் தீர்க்கவல்ல வைத்தியப் பெருமக்களை நாடவும்.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சித்தர்கள் எத்தனையோ கைமுறையினால் வந்துற்ற நோய்களை தணிப்பது பற்றிக் கூறிவைத்துள்ளார்கள். உதாரணம் : ஒருவருக்கு கையில் கட்டு வந்தால் அதை வெட்டி இரத்தம் சிந்தாமல் உடைத்து புண் மாறும் தன்மைகளைக் கூறியுள்ளனர். ஆனால் எம் வடமராட்சியில் எத்தனையோ பெருமை வாய்ந்த வைத்தியப் பெருமக்கள் சகல ரோகங்களுக்கும் அக்காலம் வைத்தியசாலைகள் இல்லாதிருந்தும் மக்களைப் பாதுகாத்து வந்துள்ளார்கள். அவர்கள் தம் திறமையுள்ள மருத்துவ அனுபவங்களை எல்லாருக்கும் பயன்பட கூறிவைக்காது தம்முடன் அழிந்துவிடச் செய்துவிட்டார்கள். தங்கள் சுயநலப் போக்கினால், மருத்துவம் பல்கிபெருகி எம்மக்களை பாதுகாத்து வரவேண்டுமென்ற எண்ணம் அற்றவர்களாகிவிட்டார்கள். கற்கோவளம் வைத்தியக் கலாநிதி ஆனந்தம் ஐயா (கண்டத்துக்கு மேல்), கலட்டி வைத்திய கலாநிதி கந்தையா ஐயா (சிறுபிள்ளை வைத்தியர்), பருத்தித்துறை செட்டி கந்தையா ஐயா (வாத ரோகம்), அல்வாய் மடத்தடி வைத்திய கலாநிதி தம்பையா ஐயா (சகல ரோகங்கள்), அல்வாய் மடத்தடி வைத்தியகலாநிதி ஐயாத்துரை ஐயா (சகல ரோகங்கள்) போன்றவர்கள் நினைவுகொள்ளத்தக்கவர்கள்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரவெட்டி பிரதேசத்தின் திண்ம கழிவு முகாமைத்துவம்

திரு. மு. கந்தசாமி
(வளவாளர்)
விவசாய தொழில்நுட்ப தகவல் மையம்

**எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்கு மனித வளம் அவசியம்**
**மனித வளத்தை அபிவிருத்திசெய்ய ஆரோக்கிய வாழ்வு அவசியம்**
**ஆரோக்கிய வாழ்வுக்கு சுகாதாரமான சூழலும் போசாக்கான நிறையுணவும் அவசியம்**
**எனவே ஆரோக்கிய வாழ்வுக்கு திண்ம கழிவு முகாமைத்துவம் அவசியம்**

ஆசாரத்துக்கும் தூய்மைக்கும் பெயர்பெற்ற கரவெட்டி பிரதேசம் இன்று அதன் தன்மைகளை இழந்துவருகிறது. ஆசாரமும் தூய்மையும் எம்முடனும் சூழலுடனும் இணைந்து செயற்படுவன. சுற்றுப்புறச் சூழலின் தூய்மையானது எமது மனோபாவம், அறிவு, செயல், ஊக்கம் என்பவற்றில் தங்கியுள்ளது. தமது இல்லங்களை மட்டும் தூய்மையாகவும் சுகாதாரமாகவும் வைத்திருந்தார்களே தவிர மற்றும்படி தெருவோரங்களில் கண்டகண்ட இடங்களில் திண்மக்கழிவுகளை போடுவதாலும் எரிப்பதாலும் ஏற்படும் சுகாதார சீர்குலைவுகள் சுற்றாடல் மாசுபடல் போன்ற பிரச்சனைகளை கவனத்தில் எடுப்பதில்லை. சோனப்பிலிருந்து உப்புமால் வரையுள்ள கிராய் வெளியில் திண்மக் கழிவுகளை பிரதேச சபையும் பொதுமக்கள் சிலரும் கொட்டுவதுடன் தமது கடமை முடிந்துவிட்டதாக எண்ணுகிறார்கள். கரவெட்டி பிரதேசம் விவசாயப் பிரதேசமாக இருப்பதால் இங்குள்ள விவசாயிகள் திண்ம கழிவுகளை விவசாய தேவைக்கு பயன்படுத்துவதால் விவசாயத்தில் ஈடுபடாத அல்லது பசளையை வாங்கி பாவிக்கும் ஒரு சிறு பகுதியினரால் மட்டுமே இப்பிரதேசத்தில் திண்ம கழிவுகள் குவிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. பொதுவாக நெல்லியடி நகரையும் நகரை அண்டிய நகர் புறங்களிலும் பெருமளவில் திண்ம கழிவு கொட்டப்படுகிறது. திண்ம கழிவகற்றல் பிரச்சனை எமது பிரதேசத்துக்கோ அல்லது நாட்டுக்கோ மட்டுமுரிய பிரச்சனையல்ல. உலகம் பூராகவும் காணப்படும் பிரச்சனையாகும். பல நாடுகள் இப்பிரச்சனையிலிருந்து விடுபட்டபோதும் மூன்றாம் உலக நாடுகளான இலங்கை போன்ற வறிய நாடுகள் சிக்கி தவிக்கின்றன. இந்நிலையில் நல்ல சுகாதார சூழ்நிலையை அளிக்கின்ற வளமான வாழ்க்கை முறையை ஏற்படுத்துவதற்கு திண்ம கழிவு முகாமைத்துவம் உதவுகின்றது.

## திண்ம கழிவு :

குசினிக்கழிவுகள், வீட்டுக்கழிவுகள், சந்தை கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுகள், இறைச்சி வெட்டும்போது உண்டாகும் கழிவுகள், மலம் போன்றவற்றை திண்மக் கழிவுகளாக குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்ம கழிவுகளை உக்கி சிதைவடையக்கூடிய கழிவுகள் எனவும் உக்க முடியாத கழிவுகள் என இரு வகைப்படுத்திக் கொள்ளலாம். உக்கக்கூடிய கழிவு சேதனக் கழிவு என அழைக்கப்படுகிறது. பொலித்தீன், பிளாஸ்டிக், றப்பர், நைலோன், தகரம், உலோகங்கள், கண்ணாடி போன்றவை உக்கமுடியாத திண்ம கழிவுப் பொருட்களாகும்.

### திண்மக்கழிவு தேங்குவதால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகள்

சுத்தம் சுகம் தரும் என்பது ஆன்றோர் வாக்காகும். அசுத்தம் நோய் தரும் என்பது இன்று நடைமுறையாகும். திண்ம கழிவுகள் தேங்குவதால் சுற்றுச்சூழல் மாசடைந்து நாம் ஆரோக்கியமாக வாழமுடியாது.

### நோய்களும் நோய் காவிகளும் பெருகுதல்

திண்மக் கழிவுகளை கண்டகண்ட இடங்களில் போடும்போது அவ்விடங்களில் நாய்கள் மலசலம் கழிப்பதுண்டு. சில இடங்களில் மனிதர்களும் மலசலம் கழிப்பதுமுண்டு. திண்ம கழிவுகள் மீது கொசுக்கள், ஈக்கள், நுளம்புகள் பெருகுகின்றன. அதேவேளை இவ்விடங்கள் நோய்கிருமிகளின் பெருக்கத்துக்கு ஏதுவான சூழலை வழங்குகின்றது. கொசுக்கள், ஈக்கள், நுளம்புகள் பல்வேறு விதமான நோய்களை காவிவந்து எமக்கு வாரி வழங்கும் வள்ளலாக தொழிற்படுகின்றன.

ஈக்கள் திண்மக் கழிவுகளான மலம், சாணி, சாக்கடை நீர், அழுகிய பழங்கள், பழுதடைந்த உணவுப்பண்டங்கள் இவற்றில் அமர்ந்து பின்னர் நமது உணவுப் பொருட்களில் எமக்கு தெரிந்தும் சிலவேளைகளில் எமக்கும் தெரியாமல் வந்து மேய்ந்து (அமர்ந்து) நெருப்புக்காய்ச்சல், வாந்திபேதி, காலரா போன்ற நோய்களை உண்டாக்குவதுடன் குடற்புழு, அமீபா போன்ற குடல் நோய்களையும் ஏற்படுத்துகின்றன. இவ்வாறே கொசுக்களும் பெருகி நோய்களை ஏற்படுத்துகின்றன. எம்மீது கண்நோய், மெற்றாஸ் ஐ போன்ற நோய்களை ஏற்படுத்திவிடும். நீர் தேங்கும் இடங்களில் அல்லது மழை பெய்யும்போது தகரம், போத்தல், சிரட்டை, ரயர், பிளாஸ்டிக் பாத்திரங்களில் நீர் தேங்கி நுளம்புகள் பெருகுகின்றன. நுளம்பு நோயுள்ளவர்களிலிருந்து இரத்தத்தை உறிஞ்சும்போது நோய்க்கிருமி உட்சென்று நோயற்றவரிடம் இரத்தம் உறிஞ்சி குடிக்கும்போது அவரை நோய் கிருமிகள் அடைகின்றன. மலேரியா, மூளைக்காய்ச்சல், யானைக்கால் போன்ற நோய்கள் பரவும் வாய்ப்புண்டாகும். அண்மைக்காலங்களில் சிக்குன்குனியா, டெங்குக் காய்ச்சல் போன்றவை ஏற்படுத்திய பாதிப்புகளை நாம் இன்னமும் மறக்கமுடியவில்லை. பறவைக் காய்ச்சலும் பாதிப்புகளையும் பொருளாதார இழப்புகளையும் உலக நாடுகளில் ஏற்படுத்தியுள்ளது.

### துர்நாற்றம் வீசுதல் :

திண்ம கழிவுகள் அழுகி உக்கும்போது துர்நாற்றம் வீசுகிறது. மழைகாலங்களில் நீர்நிலைகளுக்குள் கழிவுகளை கொட்டுவதால் மேலும் துர்நாற்றம் அதிகரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும். துர்நாற்றமானது எம்மை வெறுப்படையவைக்கிறது. எம்மை அறியாமலே மன அழுத்தத்துக்கு ஆளாக்கப்படுகிறோம்.

**வெள்ள வாய்க்கால்கள் அடைபடுதல்**

கரவெட்டி பிரதேசத்தில் 70%மான வீதிகள் மழைகாலத்தில் வெள்ள வாய்க்கால்களாக மாறி மழைநீரை கடலுக்கு எடுத்துச் செல்கின்றன. வெள்ள வாய்க்கால் வீதிகள் திண்ம கழிவுகளால் தடைப்படுவதால் வெள்ளம் தேங்கவேண்டிய சூழ்நிலை உருவாகும். சில இடங்களில் மதகுகள் அடைபடுகின்றன. இதனால் இயல்பு வாழ்க்கை பாதிப்படைகிறது. மேலும் வெள்ளம் மேல்பகுதியாலோ அல்லது கீழ் பகுதியால் ஊடுருவி கிணற்று நீர் அடைகிறது. இதனால் வயிற்றோட்டம், வாந்திபேதி போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டாகும்.

**சுற்றுச்சூழல் மாசுறுதல் :**

நகரை துப்பரவாக்கி திண்ம கழிவுகளை கிராயப்பகுதி நீர்நிலைகளில் கொட்டுவதால் கூழ்முட்டை மணமுள்ள ஐதரசன் சல்பைட் உண்டாகி நஞ்சு வாயுக்களை உருவாக்குகின்றன. இப்பகுதிகளில் இறைச்சி வெட்டியபின் கொட்டப்படும் கழிவுகளை நாய்கள் எடுத்துச் செல்கின்றன. குறிப்பாக வல்லை - முள்ளி வீதியை அண்மித்த ஆலய வீதிகளில் நாய்கள் எலும்புத் துண்டுகளை இழுத்துவந்து விடும் காட்சிகளை நாம் அன்றாடம் காணலாம். பொலித்தீன்கள் காற்றினால் எடுத்துவரப்பட்டு வயல்வெளிகளில் இருக்கும் காட்சிகளையும் நாம் அங்கு காணலாம். பொலித்தீன்கள் பயிர்ச்செய்கைக்கு பெரும் தீங்கை ஏற்படுத்துகின்றன.

**போக்குவரத்து தடைகள் :**

மனித நடமாட்டத்துக்கும் வாகன போக்குவரத்துக்கும் பல்வேறு விதமான இடைஞ்சல்கள் ஏற்படும் அதேவேளை விபத்துகள் ஏற்படவும் வாய்ப்புண்டாகும். சில இடங்களில் முன் கண்ணாடித் துண்டுகள் மூலம் காயங்கள் ஏற்படலாம்.

நல்ல சுற்றுச்சூழல் இருந்தால் நாம் ஆரோக்கியமாக வாழலாம். மனித நல வாழ்வுக்கு நல்ல சுற்றுச்சூழல் அடிப்படையாக அமைந்துள்ளது. மக்களின் சுக நல வாழ்க்கை என்பது புதிய மருத்துவமனைகளை ஏற்படுத்துவதிலோ அதிகளவு மருத்துவர்களை சேவையில் ஈடுபடுத்துவதிலோ மேன்மை அடையச் செய்யமுடியாது. அவர்கள் வாழக்கூடிய சூழலுக்கு ஊறு விளைவிக்காதவாறு இருந்தால் மட்டுமே சுகாதார வாழ்க்கை கிடைக்கும். நாம் இயற்கைக்கு மாறான செயல்களில் ஈடுபடுவதையோ அல்லது எரிப்பதையோ நிறுத்தி உக்கும் கழிவுகளை பசளையாகவும் உக்காத கழிவுகளை மீள்வட்ட பாவனைக்கு விற்பனை செய்து நலன்பெறலாம். சிறுவயது முதல் ஒவ்வொரு குழந்தையிடமும் தெருவில் திண்ம கழிவை வீசாதிருக்க பயிற்றுவிக்கவேண்டும். விழாக்காலங்களில் வீதிகளில் ரயர்கள் எரிப்பதை தவிர்த்து கொள்ளவேண்டும். திண்ம கழிவை தெருவில் வீசாதிருந்தால் துர்நாற்றமற்ற சுத்தமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றை நாம் சுவாசிக்க கூடியதாக இருக்கும். நாம் எப்பொழுதும் இயற்கையை நேசிக்கவும் மதிக்கவும் பழகிக்கொண்டோமாயின் கரவெட்டி பிரதேசம் சிறந்த சுற்று சூழலுள்ள இடமாக மாறும்.

## திண்ம கழிவு முகாமைத்துவம் :

இன்று ஊடகங்களில் பரவலாக அடிபடும் விடயங்களில் ஒன்று திண்ம கழிவு முகாமைத்துவம் (திடக் கழிவு மேலாண்மை) என்பதாகும். கிடைக்கக்கூடிய வளங்களை ஒழுங்குபடுத்தி சுகாதார, பொருளாதார, சமூக மட்டங்களில் மாற்றத்தை ஏற்படுத்தி உச்ச பலனை அடைவதற்குரிய வழிவகைகளை வழங்குவதே திண்ம கழிவு முகாமைத்துவமாகும்.

- நல்ல ஆரோக்கியமான சுகாதார சூழ்நிலையை அளிக்கின்ற சிறந்த மாற்றங்களை ஏற்படுத்தல்.
- வீதிகளில் திண்ம கழிவு கொட்டுவதை குறைப்பதன் மூலம் திண்ம கழிவகற்றும் வேலைகளையும் செலவையும் குறைத்துக்கொள்ளல்.
- விவசாயிகளிடையே உரப்பசளைக்கு மாற்றீடாக கூட்டெரு பாவனை அதிகரிக்க ஊக்குவித்தல்.
- இல்லங்கள் தோறும் கூட்டெரு மூலமான வீட்டுத்தோட்டச் செய்கையை ஊக்குவித்தல்.
- பயன்ற திண்ம கழிவுகளிலிருந்து பயனுள்ள பசளையையும் பெற்று வருவாய் பெற்றுக்கொள்ளல்.
- உக்காத திண்மக் கழிவுகளை மீள் சுழற்சி பாவனைப் பொருளுக்கு விற்று நலன் பெற்றுக்கொள்ளல்.
- பிரச்சனைகளையும் தடைகளையும் வென்றெடுப்பதற்கு சமூகங்களுக்கு சரியான வழிகாட்டல்களை ஏற்படுத்தல்.
- பொருத்தமான தொழில்நுட்ப தெரிவுகளுக்கு வாய்ப்பு ஏற்படுத்தல்.
- பயிற்சி மற்றும் கற்கை அறிவுகள், தகவல்கள் சகல மட்டங்களிலும் கிடைப்பதற்கு வசதியளித்தல்.
- பிரதேச சபையானது திண்ம கழிவகற்றலை விரைவுபடுத்தல்.
- அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் சேவையை ஒருங்கிணைத்தல்.

சுகாதார சூழ்நிலையை அளிக்கின்ற வாழ்க்கை முறையை ஏற்படுத்துவதற்கு சிறிய மாற்றங்களே போதுமானதாகையால் திண்ம கழிவு முகாமைத்துவத்தில் சமூகங்களின் பங்களிப்பு அளப்பரியது.

## பயன்ற கழிவுப் பொருட்களிலிருந்து பயன்பெறல் :

கழிவு என்றாலே பயனற்றது எனப்படுகிறது. பயனற்றதை குப்பையில் போடு என்கிறோம். அதையும் தெருவிலே போடு என்கிறோம். குப்பையிலே கோடி பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும் வழி எமக்கு முன்னே உள்ளது. நாம்தான் அதனை திரும்பி பார்க்கின்றோம் இல்லை.

சிதைவடையக்கூடிய சேதனக் கழிவுகளை பசளையாக மாற்றி பயன்பெறலாம். சிதைவடைய முடியாத திண்ம கழிவுகளை கழிவு மீள் சுழற்சி பாவனை நிலையங்களுக்கு மீள் பாவனைக்கு விற்பனை செய்து பயன் பெறமுடியும்.




**சேதனக்கழிவு** - கூட்டெருப் பசளை தயாரித்தலுக்கு பிரதான மூலப்பொருளாகும்.

**மீள் சுழற்சி பாவனைக்கு பயன்படும் பொருட்கள் :**

பிளாஸ்ரிக், நைலோன், இறப்பர், ரயர்
போத்தல், கண்ணாடித் துண்டுகள்
தகரம், உலோக வகைப் பொருட்கள்
கடுதாசி, தடித்த அட்டைகள், மட்டைகள்

மீள் சுழற்சி பாவனைக்கு உட்படும் பொருட்களிலிருந்து கைவினை பொருட்களை தயாரிப்பதற்கும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**தடி தண்டுகள் :** பச்சைத் தடி தண்டுகளை சிறுசிறு துண்டுகளாக்கி பசளை தயாரித்துக் கொள்ளலாம். குறிப்பாக பப்பாசித் தண்டு, முருங்கைத் தண்டு, வாழைத்தண்டு போன்றவற்றை சிறுசிறு துண்டுகளாக்கி பசளையாக மாற்றிக்கொள்ளலாம்.

**வாழைமடல் :** பல்வேறு வகையான கைத்தொழில் தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. சாப்பிடுவதற்கு தடல், (பட்டுப் புடவை நெய்யும்போது வாழைநார் நூலும் கலக்கப்படுகிறது) கயிறு, கொள்கலன்கள் போன்றவற்றுக்கு பயன்படுத்தப்படுகிறது. வாழைமடலை (2 - 3 மடலை முருக்கி) விறகாக இந்தியாவில் பயன்படுத்தப்படுகிறது. கமுகம் மடலிலிருந்து தட்டுகள் தயாரிக்கலாம்.

**இறைச்சி கழிவுகள் :** எலும்பையும் கறி உப்பையும் சேர்த்து கால்நடைகளுக்கான கனியுப்பு கலவை தயாரித்துக்கொள்ளலாம். எலும்பை பசளையாகவும் பயன்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளலாம். இரப்பை கழிவுப் பொருட்கள் அதிகளவு காபோவைதரேற்று விற்றமின் சத்துகளை கொண்டவை. இதை உலர்த்தி 10% வரை கோழி உணவில் கலந்துவிடலாம். கொம்பு, குளம்பு போன்றவை கைத்தொழில் தேவைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளலாம்.

**சந்தைக் கழிவு :** மரக்கறி பழக் கழிவுகள், மீன்சந்தை கழிவுகளை பன்றிக்கு உணவாக பயன்படுத்திக்கொள்ளலாம். மீன்சந்தை கழிவுகளை வெய்யிலில் உலர்த்தி கோழிகளுக்கு கோழியுணவுடன் கலந்து உணவூட்டலாம். சந்தை கழிவிலிருந்து கூட்டெருப் பசளை தயாரிக்கலாம். அதிலும் மண்புழு மூலமான கூட்டெரு தயாரிப்பதற்கு சந்தைக் கழிவு மிகவும் சிறந்த மூலப்பொருளாகும்.

**பொலித்தீன் ஒரு தொல்லை :** இது எந்தவித மீள் பாவனைக்கும் பயன்படுத்தமுடியாத பொருளாகும். விவசாய நிலங்களில் பயிரின் வேர் வளர்ச்சியைத் தடுத்தல், நீரை வடியவிடாமல் தடுத்தல், பண்படுத்தல் சிரமம் போன்ற தொல்லைகளை ஏற்படுத்துகின்றன. பொதுவாக புதுப்பிக்க முடியாத வளங்களை மட்டுப்படுத்தப் பட்ட அளவில் பாவித்தல் வேண்டும். தற்காலத்தில் வரும் உக்கக்கூடிய பொலித்தீன் வகைகளை பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

சேனாந்தை (பழைய நெல்லியடிச் சந்தை) யில் மீன் வாங்குவதற்கு பனை ஓலை சட்ட பெரிய இதழ்களால் உமல் இழைத்து விற்பார்கள். 6 - 7 தடவைகள் பாவித்தபின் கழித்துவிடுவார்கள். இம்முறையை பொலித்தீனுக்கு பதிலாக மீண்டும் பாவித்து பயன்பெறலாம்.

**அரிசி ஆலைக் கழிவு :** இங்கு திண்மக் கழிவாக உமியும் சாம்பலும் பெறப்படும். திறந்த வெளியில் உமியை எரிக்கக்கூடாது. உமியை எரிப்பதாயின் 30 அடி உயரமான புகைப்போக்கியுள்ள முழுமையான தகனப்பொறி பயன்படுத்தவேண்டும். வீடுகள் பொது இடங்களுக்குப் பக்கத்தில் உமியை குவித்துவைத்திருக்கக்கூடாது. நீர் நிலைகளிலும் உமியை கொட்டுவதை தவிர்க்கவேண்டும். உமி சவர் நிலங்களை திருத்துவதற்கு சிறந்த பசளையாகும். உமியை நெல் அவிப்பதற்காக எரிபொருளாக பயன்படுத்திக்கொள்ளலாம்.

**வெதுப்பகக் கழிவு :** நீர்நிலைகளில் அல்லது கண்ட இடங்களில் சாம்பல் கொட்டுவதை நிறுத்தி கூட்டெரு தயாரிப்பில் கலந்து பாவிக்கலாம்.

**கூட்டெரு :** தாவர, விலங்கு கழிவுகளான சேதனக் கழிவுகளை அதாவது பயனற்ற கழிவுப் பொருட்களை நுண்ணங்கிகள் மூலம் பகுதிபகுதியாக சிதைவடையச்செய்து விரைவாக பெறப்படும் பயனுள்ள இயற்கை வளமாக்கியே கூட்டெருவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கூட்டெருவுக்கான சந்தைவாய்ப்புகள் :**

இன்று உரப்பசளைகளால் ஏற்படும் தீமைகள் காரணமாக இயற்கை (சேதன) விவசாயம் பிரபலமடைந்துவருகிறது. இயற்கை விவசாயத்தின் அடிப்படையே சேதனப்பசளைகளான ஒருவகை, பட்டி அடைத்தல், குழை தாட்டல் போன்ற இயற்கை பசளைகளை இட்டு மேற்கொள்ளப்படுவதாகும். இயற்கை வேளாண்மை மூலம் நஞ்சுத் தன்மையற்ற சுவை மிகுந்த நிறையுணவை பெறக்கூடியதாகவுள்ளது. இயற்கைப் பசளைகளின் கிடைதன்மை மிக குறைந்து கொண்டு வந்துள்ளது.

***1) எரு வகை :*** எமது பிரதேசத்துக்கு வன்னி நிலப்பரப்பிலிருந்தும் மதவாச்சி அநுராதபுரம் போன்ற இடங்களிலிருந்தும் லொறி லொறியாக லேட் எரு வந்த காலம் உண்டு. இன்று இவை தடைப்பட்டுள்ளது. அதேநேரம் எருவுக்காக மாடு வளர்த்த காலமும் போய்விட்டதால் தேவையான எருவை போதுமான அளவு பெறமுடியாமல் உள்ளது.

***2) பட்டி அடைத்தல் :*** தோட்டங்களுக்கும் வயல்களுக்கும் மாறிமாறி செம்மறி ஆட்டுப்பட்டி, மாட்டுப்பட்டி என்று இரவுவேளைகளில் அடைக்கப்பட்டு வந்தது. போர்க்கால சூழல், இடப்பெயர்வு, பாதுகாப்பு இன்மை, பராமரிப்பதிலுள்ள சிரமங்கள் போன்றவற்றினால் இவை கைவிடப்பட்டு குறிப்பிட்ட ஒன்று, இரண்டு இடங்களில் மட்டும் சிறிய பட்டிகள் காணப்படுகிறது. மற்றும்படி முற்றாக கைவிடப்பட்ட நிலையே காணப்படுகிறது.

***3) குழை தாட்டல் :*** வேலி எல்லாம் மதில்களாக மாறியபின் குழைகளை பெற்றுக்கொள்வது முடியாத காரியமாகிவிட்டது. பனைகளும் குறைந்து செல்வதாலும் வெட்டுக்கூலி அதிகரிப்பதாலும் விவசாயிகள் குழை தாழ்க்கமுடியாமல் உள்ளனர். மேலும் குழை தாழ்ப்பதற்கான கூலி அதிகரித்தமையாலும் உற்பத்தி செலவு அதிகரித்து காணப்படும்.

**உரப் பசளைகளால் ஏற்படும் தீமைகள் :**

- பயிர்களுக்கு குறிப்பிட்ட பயிருணவை மட்டும் வழங்கும்.
- நுண் மூலக சத்து குறைவால் விளைச்சல் குறையும்.
- மண்ணில் நஞ்சுத்தன்மையை ஏற்படுத்தும்.
- சமநிலையில்லா உரப்பசளையால் பயிர் நோய்களும் பூச்சி புழுக்களும் அதிகரிக்கும்.
- நிலத்தடி நீரை மாசடையச் செய்வதால் நீலக்குழந்தை, புற்றுநோய் போன்ற நோய்களும் ஏற்பட வாய்ப்பு உண்டாகும்.

போதுமானளவு இயற்கைப்பசளை கிடைக்காதவிடத்து விவசாயிகள் உரப்பசளைகள் பயன்படுத்திக்கொள்ள முயற்சிப்பார்கள். இதனால் மேலும் பலவித பிரச்சனைகளை நாம் எதிர்கொள்ளவேண்டியிருக்கும். குறிப்பாக உரத்துக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானியம் மேட்டு நிலப்பயிர்களுக்கு கிடைக்காதபோது அதிகரித்த விலையில் உரத்தை பெறவேண்டியிருக்கும். இவற்றுக்கு சிறந்த மாற்றீடாக உக்கக்கூடிய திண்ணம் கழிவுகளிலிருந்து கூட்டெரு தயாரித்தல் அமையும். எனவே எதிர்காலத்தில் கூட்டெரு நல்ல சந்தை மானமுள்ள பொருளாக அமையும். வீணாகும் கழிவுப்பொருட்களை கூட்டெருவாக மாற்றுவதன்மூலம் வருமானத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

**கூட்டெருப் பசளையின் முக்கியத்துவம் :**

- மண்வளம் பெருகும்.
- பயிர் வேரின் ஊடுருவும் தன்மையை கூட்டும்.
- பயிருணவுகள் நீருடன் கலந்து கீழ் இறக்காமல் பிடித்துவைத்து பயிருக்கு கொடுக்கும்.
- பயிருணவை விரைவாக பயிர்கள் பெறும்.
- சகல பயிருணவும் பயிருக்கு கிடைக்கும்.
- சூழல் மாசடைவது தடுக்கப்படும்.
- மண்ணில் இளகு தன்மையும் பிணைப்பு தன்மையும் ஏற்படும்.
- நீரை பிடித்துவைத்து மேலதிக நீரை வடியவிடும்.
- மண்ணில் நுண்ணுயிர்களின் தொழிற்பாடு அதிகரித்து விரைவாக சேதனப் பொருள் உக்குவதற்கும் வளியிலுள்ள நைதரசனை நிலத்தில் நிலைநாட்டவும் உதவுகிறது.

**கூட்டெரு தயாரிக்கும் முறைகள்**

- குழி முறை
  - மூடிய முறை
  - திறந்த முறை
- குவியல் முறை
  - மூடிய முறை
  - திறந்த முறை
- பாத்திரமுறை
  - தகரம்
  - வேலி
  - சீமேந்து தொட்டி
  - பிளாஸ்டிக்

எந்தமுறையில் கூட்டெரு தயாரிக்கவேண்டும் என்பதை ஒவ்வொருவரிடமுள்ள வசதி, சேர்க்கப்படும் திண்மக் கழிவு, தேவை என்பவற்றைப் பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது.

**குழி முறை :** நிலத்தில் குழி அமைத்து திண்ம கழிவுகளை உக்கவைக்கும் முறையாகும். குழியின் நீள அகலம் சேர்க்கப்படும் கழிவுப்பொருட்களுக்கு ஏற்பவும் இடவசதிக்கேற்பவும் அமைத்துக்கொள்ளப்படும். ஆழம் 90 செ.மீ. இற்கு மேற்படக்கூடாது. குழியின் அடியில் உமி/ வைக்கோல்/ காய்ந்த புல் இட்டு கழிவுப் பொருட்களை பரவுவதன் மூலம் போசணை நிலத்தில் சேருவதை தடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திறந்த முறை :** குழியை பிரட்டுவதற்காக அகலப்பாட்டில் 60 - 75 செ.மீ. இடைவெளி விட்டு திண்ம கழிவை 15 - 20 செ.மீ படையாக பரப்பிவிடவேண்டும். அதன்மேல் ஊக்கி கலவையை பரவி அல்லது தெளித்துவிட வேண்டும். இவ்வாறு மாறிமாறி படை படையாக திண்ம கழிவை குழியின் வாய்வரை நிரப்பிவிடவேண்டும். பின் 2ம், 4ம், 8ம் கிழமைகளில் பிரட்டிவிடவேண்டும். 3 - 3½ மாதங்களில் கூட்டெருவைப் பெறலாம்.



**மூடிய முறை :** இடைவெளி விடாமல் திறந்தமுறை போன்று குழியின் விழிம்புவரை திண்ம கழிவை நிரப்பியபின் களிமண் சாணக் கரைசலால் மேற்பகுதியை மெழுகிவிட வேண்டும். இம்முறையில் கூட்டெரு பெற 6 - 9 மாதம் செல்லும். குழியை புரட்டுவதற்கு ஆள்வசதி இல்லாதவிடத்து இம்முறையை பயன்படுத்தலாம். விரைவாக கூட்டெருவை பெறமுடியாது.

**குவியல் முறை :** நீர் கசிவுள்ள இடங்களில் நீர் தேங்காத இடமாகத் தெரிவுசெய்து குவியல் முறை பயன்படுத்தப்படும். வர்த்தக ரீதியாக கொட்டகை அமைத்து கூட்டெரு தயாரிக்கும்போதும் குவியல் முறை பயன்படுத்தப்படுகிறது.

குழிமுறை போன்று திண்ம கழிவையும் ஊக்கியையும் மாறிமாறி படைபடையாக 120 செ.மீ உயரம் வரை நிரப்பிவிடவேண்டும். 2ம், 6ம், 10ம் கிழமை புரட்டியபின் ஒரு மாதம் விட்டு கூட்டெருவைப் பெறலாம். மூடிய முறைக்கு பொலித்தீனால் மூடி பொலித்தீன் ஓரங்களை களிமண்ணால் மூடிவிடலாம்.

**பாத்திர முறை :** நாளாந்தம் சேரும் கழிவுகளை படைபடையாக போட்டுக்கொண்டு வரவேண்டும். அடிப்பகுதியில் சிறு கதவு அல்லது துவாரம் அமைத்து 45 நாட்களின்பின் சிறிது சிறிதாக வெளியே எடுத்துக்கொள்ளலாம். சிறிய அளவில் வீடுகளில் கூட்டெரு தயாரிப்பதற்கு மிகவும் சிறந்த முறையாகும்.

**வேலி முறை :** பனம் மட்டை, கம்புகளை வைத்து வட்ட வடிவமாயின் 4 அடி விட்டமும் 5 அடி உயரமும் கொண்ட கூடுகள் அமைத்துக்கொள்ளலாம். செவ்வக வடிவில் கூடு அமைப்பதாயின் 4 அடி அகலம் 10 அடி நீளம் 5 அடி உயரமாக அமைக்கலாம். கிளிசிறியா,







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பில்இப்பில் போன்ற உயர்தடிகளாலும் வேலி அமைக்கலாம். குழையை வெட்டி பசளையுடன் கலந்துவிடலாம்.

**தகரப் பீப்பா உரத் தொட்டி :**

எண்ணெய் பீப்பா தகரங்களின் அடிப்பகுதியை அகற்றிவிட்டு பக்கங்களில் காற்றோட்டத்துக்காக சிறிய துவாரங்கள் இடவேண்டும். மூன்று கிழமையின்பின் 15 செ.மீ. உயரத்தில் வைப்பதன்மூலம் அடிப்பாகத்தில் கூட்டெருவை எடுக்கலாம். தகரத்தினால் அடியை மூடி கீழ்ப்பாகத்தில் கதவு அமைத்து மேலே மூடியுள்ளவாறு தகரப் பீப்பாகளை அமைத்துக் கொள்ளலாம்.



**சீமேந்து உரத் தொட்டி :**

சீமேந்து உரத்தொட்டி கொங்கிறீற் கலவையால் அச்சில் அரியப்படுகிறது. எட்டு பகுதிகளை கொண்டவை. இவற்றை இலகுவாக பொருத்திக்கொள்ளலாம். அடிப்பகுதியிலுள்ள கதவு மூலம் எருவை எடுத்துக்கொள்ளலாம். பக்கங்களில் துவாரமும் மேலே மூடியுமுள்ள அமைப்பும் கொண்டது.




**பிளாஸ்டிக் உரத்தொட்டி :**

இடவசதி மிகவும் குறைவான இல்லங்களுக்கு மிகவும் சிறந்த முறையாகும். குசினிக்குள் வைத்து பாவிக்கமுடியும்.

உரத்தொட்டிகள் வாங்கிய பணத்தை ஆகக்கூடியது மூன்று மாத காலத்தினுள் பெறும் எருவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரத்தொட்டிகள் குடியிருப்பாளர்களுக்கு தவணை முறையில் பணம் செலுத்தும் வசதியில் பெறமுடியுமாயின் அதிகளவு பாவனையாளர் உள்வாங்கப்படுவார்கள்.

## கூட்டெரு தயாரிப்பின்போது கவனிக்கவேண்டியவை

- திண்ம கழிவுகள் 10 - 14 நாட்களில் நிரப்பிமுடிக்கவேண்டும்.
- பச்சை தண்டுகளை சிறுசிறு துண்டுகளாக வெட்டி பரவிவிடுவதன் மூலம் விரைவில் உக்கச்செய்யலாம்.
- நேரடியாக வெய்யில் படுமாயின் நிழல் வழங்கல் அவசியம்.
- படைகள் ஈரலிப்பாக இருக்கக்கூடியவாறு தேவைக்கேற்ப நீர் ஊற்றுதல். ஈரலிப்பாகவோ அல்லது உலர்வாகவோ படைகள் இருக்கக்கூடாது.
- பிரட்டுவது காற்றோட்டத்தை வழங்கும். குறுகிய இடைவெளியில் விரைவாக கூட்டெரு உருவாக உதவும்.
- திறந்தமுறையில் கூட்டெரு தயாரிக்கும்போது காற்றோட்டத்தை அதிகரிப்பதற்காக 10 செ.மீ. விட்டமுள்ள தடிகளை வைத்து குழியை நிரப்பியபின் எடுத்துவிடவேண்டும்.

## கூட்டெரு தயாரிப்பதற்கு தேவையான பொருட்கள்

அ) உக்கக்கூடிய திண்ம கழிவுகள் (சேதனப்பொருட்கள்)

ஆ) ஊக்கி

ஒவ்வொரு திண்ம கழிவுப் படைக்குமேல் ஊக்கி பாவிக்கவேண்டும். இது திண்ம கழிவை விரைவாக உக்கச்செய்ய உதவுகிறது. ஊக்கியில் நுண்ணுயிர்களின் பெருக்கம் விரைவாகவும் அதிகமாகவும் இருக்கும். ஊக்கியாக பாவிக்கக்கூடிய பொருட்கள்

1) ஒரு மாதத்துக்கு மேற்பட்ட காலம் தயாரிக்கப்பட்ட கூட்டெரு.

2) நன்கு உக்கிய மாட்டெரு, மாட்டுச்சலம்

3) சாம்பல் (நடுநிலையாக்கும் காவிளாய், கிளிசிறியா, இப்பில்இப்பில் போன்ற பசும்தளைகளை இடைஇடையே படையாக பரவுவதன்மூலம் போசாக்கு மிகுந்த கூட்டெருவைப் பெறலாம். இவற்றைப் போடும்போது நுண்ணுயிர்கள் பெருகி விரைவாக கழிவுகள் உக்குகின்றன.

## சுற்றாடலில் சிறந்த மாற்றம்

பொருத்தமான தொழில்நுட்பம் விநாயகர் நலன்புரி நிலைய குடியிருப்புகளை ஒரு நுண் திண்ம கழிவு முகாமைத்துவ அலகாக மாற்றியமைமையை கடந்த ஆண்டில் (2008) காணக்கூடியதாக இருந்தது.

தென்மராட்சி பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கு கைவிடப்பட்ட நிலையிலிருந்த விநாயகர் வித்தியாலய பாடசாலையை சுற்றி நலன்புரி நிலையம் அமைக்கப்பட்டிருந்தது. இந்த நலன்புரி நிலையத்துக்கு சற்று அப்பால் நீண்டகாலமாக நகர திண்ம கழிவு கொட்டும் இடமும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரவெட்டி பிரதேச செயலகத்தின் நெறிப்படுத்தலில் இடம்பெயர்ந்தோருக்கான ஐ.நா. நிறுவனத்தின் (I.O.M) அனுசரனையுடன் ஊற்று நிறுவனத்தால் விநாயகர் நலன்புரி நிலையத்தில் திண்ம கழிவு முகாமைத்துவ செயல்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. திண்ம கழிவுகளை பசளையாக மாற்றுவதற்கு செயல்முறை பயிற்சி அளிக்கப்பட்டது. இங்குள்ளவர்களுக்கு வழங்கப்பட்ட குடியிருப்புகள் நெருக்கமாக அமைந்தமையால் இவர்களுக்கு கல்லால் அமைக்கப்பட்ட பசளை தயாரிக்கும் தொட்டி வழங்கப்பட்டிருந்தது. குடியிருப்பை சுற்றியுள்ள கழிவுகளை நாளாந்தம் துப்பரவு செய்யப்பட்டு பசளை தொட்டியில் இடப்பட்டது. நகர கழிவுகளையும் போட்டிபோட்டு பெற்று கூட்டெரு தயாரிக்க தொடங்கினார்கள். வேண்டிய தொழில்நுட்பங்களும் உதவிகளும் வழங்கப்பட்டன. இந்நிலையத்தில் ஏனையோருக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துமுகமாக அறுவடை விழா ஒன்று நடைபெற்றது.

அசுத்தமான காற்றை சுவாசித்த குடியிருப்பாளர்கள் நாம் அங்கு சென்றிருந்தபோது இப்பொழுதுதான் சுத்தமான காற்றை சுவாசிப்பதாக கூறி மகிழ்ச்சியடைந்தார்கள். அதேவேளை சுகாதார சீர்கேடுகள் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் மிகவும் தூய்மை பேணப்படுவதை அவதானிக்க கூடியதாக இருந்தது. தாம் தயாரித்த கூட்டெருவைக்கொண்டு வதிவிட வேளாண்மையை மேற்கொண்டிருந்தார்கள். கூட்டெருவை அரித்து இரண்டு கிலோப் பைககளில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. முழு கூட்டெரு பைகளும் சிறிது நேரத்தில் விற்று முடிக்கப்பட்டது சிறப்பு அம்சமாகும்.

நிஷா புயலுடன் நலன்புரி நிலைய மக்கள் வேறு இடத்துக்கு மாற்றப்பட்டமை யால் பழையபடி அந்த இடம் குப்பை மேடாகிறது.

விவசாயிகளை ஊக்கப்படுத்தும் முகமாக மத்தொணி, கரணவாய் போன்ற கிராமங்களில் விவசாயிகளிடையே தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு குழி முறையில் கூட்டெரு தயாரிப்பதற்கு பயிற்சி உபகரணங்கள், உதவிகள் வழங்கப்பட்டது. மிக சிறப்பாக வீடுகளில் கூட்டெரு தயாரிக்கமுடியும் என்பதை உணர்ந்து கொண்டார்கள். பயனாளிகளை தொடர்ந்து மேலும் சில விவசாயிகள் தன்னார்வமாக கூட்டெரு தயாரித்தலை பின்பற்றினார்கள். ஆயினும் ஒருசில விவசாயிகள் தமக்கு எதுவும் வழங்கப்படாமையால் கூட்டெரு தயாரிப்பில் கவனம் கொள்ளாமல் பணம்கொடுத்து கூட்டெரு வாங்கியதுவுமல்லாமல் அவர்கள் திண்ம கழிவுகளை கண்ட இடத்தில் போடுவதையும் அவதானிக்க முடிகிறது.

விவசாயிகளுக்கு சேதனப்பசளை கிடைப்பதில் பாரிய பிரச்சனை காணப்படுகிறது. விவசாயிகள் தமது பிரச்சனைகளைத் தீர்த்து அபிவிருத்தி அடையவேண்டும். அதற்கு அவர்களுக்கு தேவையான பயிற்சிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்பங்களையும் இலகுவில் பெரும் வழிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். மேலும் கலந்துரையாடல்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் பங்குபெறச் செய்வதன்மூலம் சிறந்த தெரிவுகளையும் பொருத்தமான தொழில்நுட்பங்களையும் ஏற்றுக்கொள்வார்கள் என்பதை இத்திட்டத்தின்மூலம் நாம் கற்றுக்கொண்டோம்.

## எவர் எதைச் செய்வது

### பிரதேச சபை

கரவெட்டி பிரதேசத்துக்குரிய திண்ம கழிவு முகாமைத்துவத்துக்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை பொறுப்பாகவுள்ளது. பிரதேச சபைக்கு திண்ம கழிவகற்றலில் ஆளணிப் பற்றாக்குறை, போதிய வாகன வசதியின்மை, நிதி நிலைமை போதாமை போன்ற தடைகளால் திண்ம கழிவு முகாமைத்துவத்தின் மூலம் மாற்றங்களை ஏற்படுத்துவதில் கஷ்டமுள்ளது.

- ❑ கண்ட இடங்களில் திண்ம கழிவு கொட்டுவதை தடுப்பதற்கு கழிவு போடும் தொட்டிகள் தேவையான இடங்களில் அமைக்கப்படவேண்டும்.
- ❑ இல்லங்களில் கூட்டெரு தயாரிப்பதற்குரிய தொட்டிகள் குடியிருப்பாளருக்கு கிடைக்க உதவுதல்
- ❑ கூட்டெரு தயாரித்து வருவாயை ஈட்டிக்கொள்ளல்.
- ❑ உக்காத பொருட்களை மீள்சுழற்சி பாவனைப் பொருள் தொழிற்சாலை அமைத்து செயல்படல் அல்லது உக்காத பொருட்களை விற்று வருவாயை பெற்றுக்கொள்ளல்.
- ❑ யாழ் மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகள் சித்திரை மாதம் திண்ம கழிவு பற்றிய விழிப்புணர்வு வாரம் கொண்டாடவுள்ளன. விழிப்புணர்வு வாரத்துக்காக செயல்படாமல் பிரதேச சபைக்கும் குடியிருப்பாளர்களுக்கும் பயன்படும் குறுகிய, நீண்டகால செயல்திட்டங்கள் வகுத்து செயல்பட வேண்டும். செயலூக்கமுள்ள வளவாளர் மூலம் விழிப்புணர்வு கலந்துரையாடல்கள் மேற்கொள்ளலாம்.

### பொதுமக்கள்

தமது இல்லமும் அதன் சூழலிலுமுள்ள திண்ம கழிவுகளை வெளியே கொட்டாமல் அல்லது எரிக்காமல் கூட்டெருவாக மாற்றவேண்டும். வதிவிடங்களில் தோட்டம் அமைத்து அதற்கும் அலங்கார செடிகளுக்கும் வேண்டிய பசளையை இட்டபின் மிகுதியை விற்று வருவாயை ஈட்டிக்கொள்ளலாம். மீள்சுழற்சி பாவனைப் பொருட்களையும் விற்று வருவாய் பெறலாம். அவரவரிடமுள்ள இடவசதிக்கேற்ப கூட்டெரு தொட்டிகளை தெரிவுசெய்துகொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகள்

பாடசாலைகளுக்கு உலக உணவுத்திட்டத்தின்கீழ் மதிய உணவுக்கான பொருட்கள் வழங்கப்படுகின்றன. மரக்கறி, இலைக்கறிகள் சந்தையில் வாங்கப்படுகின்றன. இவற்றை சந்தையில் வாங்கும்போது அவற்றிலுள்ள நஞ்சுத் தன்மையை நாம் கவனத்தில் கொள்வதில்லை. பாடசாலை தோட்டம் அமைத்தால் மாணவர்களுக்கு வேண்டிய நஞ்சுத்தன்மையற்ற மரக்கறி இலைக்கறிகளைப் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை தோட்டத்துக்கு தேவையான பசளையை பெற பாடசாலைகளில் திண்ம கழிவுகளை எரிக்காமல் கூட்டெருவாக மாற்றிக்கொள்ளவேண்டும். மாணவர் மட்டத்தில் திண்ம கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் மாணவரின் வெளிக்கள கற்றலுக்கும் உதவுகிறது.

## பொது அமைப்புகள்

சுய உதவிக்குழுக்கள், மாதர் சங்கங்கள், விவசாய சம்மேளனங்கள், கிராம அபிவிருத்திச் சங்கம் போன்ற பொது அமைப்புகள் கூட்டெருவை தயாரித்து விற்பனை செய்யலாம். இது ஒரு வருமானம் ஈட்டுவதற்குரிய குறைந்தளவு முதலுடனான பக்கத் தொழில் முயற்சியாகும். தம்மிடமுள்ள கழிவுப் பொருட்களுடன் பிரதேச சபையிடமிருந்தும் திண்ம கழிவுகளைப் பெற்று கூட்டெருவை தயாரித்துக் கொள்ளலாம்.

கூட்டெரு தயாரிப்பதற்கான தொட்டிகளை பூச்சாடிகள் தயாரிப்பது போன்று தயாரித்து விற்பனை செய்யலாம். இதுவும் ஒரு பகுதிநேர தொழிலாக செய்யக்கூடியது. வங்கிகள் கடன் வழங்கி உதவுகின்றன. கூட்டெரு தொட்டிகளுக்கான தேவை அதிகரித்து வருவதால் பலருக்கு வேலை வாய்ப்பூட்டும் தொழிலாக மேற்கொள்ளலாம். கூட்டெருவை தயாரித்தலோ அல்லது கூட்டெரு தொட்டிகளை தயாரித்தலோ அது மேலதிக வருமானம் ஈட்டும் தொழிலாக விளங்கும்.

## அரச சார்பற்ற நிறுவனங்கள்

பல வெளிநாட்டு, உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் திண்ம கழிவு முகாமைத் திட்டங்களை ஊக்குவித்துவருகின்றன. இனிவருங் காலங்களில் மேலும் பல கிராமசேவகர் பிரிவுகளில் செயல்திட்டங்களை விஸ்தரிக்கவேண்டும். குறிப்பாக பாடசாலை மட்டம், விவசாயிகள் மட்டம், சுய உதவிக் குழுக்கள் மட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவைகளை ஒருங்கிணைத்தல்

சேவைகள் தனித்தனியாக மேற்கொள்ளும்போதுள்ள வினைத்திறனைவிட சேவைகள் இணைக்கப்பட்டு செயல்படும்போது பல மடங்கு அதிகமான வினைத்திறன் காணப்படுகிறது. இணைப்பாளராக பிரதேச செயலகம் செயல்படும். பிரதேச சபை, விவசாயத்திணைக்களம் (விரிவாக்கம்), கமநல சேவைத் திணைக்களம், சுகாதார திணைக்களம், சுற்றாடல் அதிகார சபை, வலய/ கோட்ட கல்வி அலுவலகம் என்பவற்றில் சேவைகளும், அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளையும் குடியிருப்பாளர், விவசாயிகளின் பங்களிப்பையும் ஒருங்கிணைத்து திண்ம கழிவுகளை கழிவாக கருதாது பொருத்தமான தொழில்நுட்ப பிரயோகத்தால் சுகாதார மேம்பாடுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகின்ற திட்டங்கள் செயல்படுத்தப்படும்போது கரவெட்டிப் பிரதேசத்தின் ஒருங்கிணைந்த செழிப்பை காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2007ஆம், 2008ஆம், 2009ஆம் ஆண்டுகளில் விருதுகள் பெற்று பிரதேசத்திற்கு பெருமை சேர்த்தோர்

## கலாநிதி நாகலிங்கம் சிவயோகன் :



- விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு, 2006ஆம் ஆண்டுக்கான விஞ்ஞானத்தை மக்கள் மயப்படுத்தியமைக்கான அதிஉயர் விருதான 'இளம் விஞ்ஞானி' என்ற தேசிய விருதை, கலாநிதி நாகலிங்கம் சிவயோகன் அவர்களுக்கு 18.12.2007இல் வழங்கிக் கௌரவித்தது.
- 2007ஆம் ஆண்டுக்கான இலங்கையின் கௌரவத்துக்குரிய ஏழு பிரஜைகளில் ஒருவரான வீரகேசரி பத்திரிகை நிறுவனத்தினால் இவர் தெரிவு செய்யப்பட்டு, 09.09.2008இல் கௌரவிக்கப்பட்டார்.
- இலங்கை புத்தாக்குநர் சங்கம் 16 - 17, செப்ரெம்பர் 2008இல் நடத்திய புத்தாக்கக் கண்காட்சியில், திறந்த பிரிவில் அதிசிறந்த கண்டுபிடிப்புக்கான தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
- மருத்துவப் பௌதிக ஆய்வுக்காக, இலங்கை தேசிய ஆராய்ச்சிக் கழகத்தால் 2008இல் ஏழு மில்லியன் ரூபாய் பெறுமதியான ஆய்வுமானியம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

## திரு. தெணியான் (கலாபூஷணம் க. நடேசு)



- தமது வாழ்நாளில் கலை, இலக்கிய, பண்பாட்டுத் துறைகளுக்குப் பெரும் பங்காற்றிய ஆளுமைகளுக்கு வழங்கப்படும் 2008ஆம் ஆண்டுக்கான வடமாகாண 'ஆளுநர் விருதுக்காக' திரு. தெணியான் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டு, அவ்விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
- 2007 ஆம் ஆண்டு ஈழத்தில் வெளிவந்த ஆக்க இலக்கியங்களில் சிறுகதை சார்ந்த சிறந்த நூலுக்கு வழங்கப்படும் 'நாவேந்தன் விருது', 'இலக்கியப் பேரவைச் சான்றிதழ்' என்பன கலாபூஷணம் க. நடேசு (தெணியான்) அவர்கள் எழுதிய 'இன்னொரு புதிய கோணம்' என்ற சிறுகதை நூலுக்கும் இவ்வாண்டு வழங்கப்பட்டுள்ளன.

## கலாபூஷணம் சறோஜா தம்பு



- இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்படும் 2008ஆம் ஆண்டுக்கான 'கலாபூஷணம் விருது' இசைப்புலமைக்காக செல்வி சறோஜா தம்பு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- தமது வாழ்நாளில் கலை, இலக்கிய, பண்பாட்டுத் துறைகளுக்குப் பெரும் பங்காற்றிய ஆளுமைகளுக்கு வழங்கப்படும் 2009ஆம் ஆண்டுக்கான வடமாகாண 'ஆளுநர் விருது' செல்வி சறோஜா தம்பு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையால் 2008ம் ஆண்டுக்கான 'கலைவாரிதி' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட கலைஞர்கள்

## திரு. சுந்தரம் சதாசிவம்



பிறந்த திகதி : 29.02.1929
முகவரி : கிறிஸ்ரீனா, நெல்லியடி வடக்கு, கரவெட்டி.

திரு. சுந்தரம் சதாசிவம் அவர்களின் கலைப்பயணம் பாடசாலைக் காலங்களிலேயே ஆரம்பமாகியது. இவர் பல்வேறு சமூக, இசை நாடகங்களிலும் நடித்து பலரது பாராட்டுக்களையும் பரிசில்களையும் பெற்றார். இவர் ஓர் ஸ்திரிபாட் நடிகர். இவரது பெண் வேடம் பாத்திரப் பொருத்தத்தையும் நடிப்புப் பொருத்தத்தையும் பெற்றுத்தந்ததனால் பலரது பாராட்டைப் பெற்றது.

இவரது கலைப் பிரவேசத்திற்கு காரணமாகவும் வழிகாட்டியாகவும் இருந்தவர்கள் பல்கலைப் பண்டிதர் வதிரியூர் மு. கிருஷ்ணபிள்ளை, பெ. அண்ணாசாமி, கவிஞர் மு. செல்லையா, அல்வாயூர் எஸ். தம்பிஐயா போன்றவர்கள் ஆவர். முன்னணிக் கலைஞர்கள் பலருடன் நடித்துள்ள இவரது நாடகங்கள் இலங்கையின் பல பாகங்களிலும் மேடையேறியுள்ளன.

இவரது தந்தையார் மிருதங்கம் திருத்தும் விற்பன்னராக இருந்தமையால் சிறுவயது முதல் மிருதங்கம் வாசிப்பதில் பரிச்சயம் இருந்தது. பின் அதனை வதிரியூர் க. குண்டுமணியிடம் முறைப்படி கற்றுத் தேறினார். இதனால் இசை நாடகங்கள் பலவற்றிலும் இசைக்கச்சேரிகள் சிலவற்றிலும் மிருதங்கம் வாசித்துள்ளார்.

## திரு. கந்தையா விஜயரத்தினம்



பிறந்த திகதி : 07.09.1936 முகவரி : பாரதி வீதி, கம்பர்மலை.

திரு. க. விஜயரத்தினம் அவர்கள் காத்தவராயன் சிந்துநடைக்கூத்து அண்ணாவியாராகத் தொழிற்பட்டு வந்ததுடன் நந்தனார் நாடகத்தில் ஐயராகவும் பிரகலாதன் நாடகத்தில் மந்திரியாகவும் காவேரி நாட்டு இளவரசியின் தந்தையாகவும் நடித்துள்ளார்.

அத்துடன், கடதாசி கொண்டு பொம்மைகள், முகமூடிகள் ஆக்குவதிலும் இவர் வல்லவர். இவரது மண், கடதாசி கலந்து ஆக்கப்படும் பொம்மைகள் எந்நிலையில் வைக்கப்படினும் நிமிர்ந்து சமநிலையில் நிற்கும் சிறப்புடையன.

உடுக்கு அடி கலையில் வல்லவரான இவர் கரகாட்டம் பழக்கி ஆட்டுவித்து வருகின்றார். இக் கரகாட்டத்தினை பாடசாலைகள் சிலவற்றிலும் ஆலயங்களிலும் காணலாம்.

யோகாசனக் கலையிலும் வல்லவரான இவர் தனக்குத் தெரிந்த வித்தைகளை ஏனையவர்களுக்கும் பயிற்றுவிக்கப் பின்நிற்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. ஞானப்பிரகாசம் விசுவாசம்



பிறந்த திகதி : 10.09.1937
முகவரி : "வியாகுலவாசா", இமையாணன் மேற்கு, நாவலடி, உடுப்பிட்டி.

இவருடைய உறவினர்கள் ஆர்மோனியம், புல்லாங்குழல், முகர்சிங் போன்ற இசைக்கருவிகளை வாசிப்பதில் வல்லவர்கள். இதனால் இவருக்கும் சிறுவயது முதல் கலைத்துறையில் ஈடுபாடு வளர்ந்துவந்தது. இவரிடம் உள்ள ஆற்றலையும் ஆர்வத்தையும் அவதானித்த வளலாயைச் சேர்ந்த ஆர்மோனிய இசை வல்லுநர் அ. பிலிப், மிருதங்க வல்லுநர் றீ. அருளப்பு ஆகியோர் 1948ம் ஆண்டு யாழ்ப்பாணம் திரு. பாக்கியநாதன் என்பவரிடம் மிருதங்கம் கற்பதற்கு இவரை இணைத்துக் கொண்டனர்.

1955இல் பிரபல பாடகரான கம்பர்மலையைச் சேர்ந்த அமரர் குழந்தைவேல் அவர்களுக்கு மிருதங்கம் வாசித்ததனூடாக பிரபல்யம் ஆனார். 1960ல் வல்வெட்டித்துறை தர்மகுலசிங்கம் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற கலைவிழாவில் பாராட்டைப் பெற்றார். இவர் வடமராட்சியின் பிரபல நாடக நடிகர்களுக்கு மிருதங்கம் வாசித்துள்ளார்.

## திரு. செல்லையா நடராஜா



பிறந்த திகதி : 29.08.1935
முகவரி : ஆனைப்பந்தி, கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

திரு. செல்லையா நடராஜா அவர்கள் ஒரு சிறந்த ஊடகவியலாளர். இடைநிலைக் கல்வி வரை கல்வி கற்ற இவர் 1956ம் ஆண்டு தனது 21வது வயதில் ஊடகத்துறையில் விளம்பர மொழி பெயர்ப்பாளராக வீரகேசரி ஸ்தாபனத்தில் கால்பதித்தார்.

இவரது சிறப்பான சேவையின் காரணமாக 1960ம் ஆண்டிலேயே வீரகேசரி ஆசிரியர் பீடத்தின் உதவி ஆசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டார். இங்கு தனது எழுத்துத்துறையை விருத்தி செய்துகொண்ட நடராஜா அவர்கள், ராஜம், எஸ். என். ஆர். ஜா, செ. ந, பரீட்சையெடாத பண்டிதர், வாயாடி போன்ற புனைபெயர்களில் வீரகேசரி, மித்திரன் ஆகிய பத்திரிகைகளில் கட்டுரைகள், அரசியல் விமர்சனங்கள், சினிமா விமர்சனங்கள், புகழ்பெற்ற படுகொலைச் சம்பவங்கள் என்பவற்றை எழுதியுள்ளார்.

மேலும், 1981ம் ஆண்டு மதுரையில் நடந்த உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் வீரகேசரி நிருபராக பணியாற்றியதுடன் 1983இலிருந்து வீரகேசரியின் செய்தி ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து 59வது வயதில் பிரதம ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டார். இவரை ஜேர்மன் அரசு தமது மாநில சபைத் தேர்தல் முறைகளை அவதானிப்பதற்காக அழைத்திருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இவரது சேவையைப் பாராட்டுமுகமாக 1990ம் ஆண்டு "தமிழ் மணி" என்னும் விருதினை இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு வழங்கி கௌரவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. கதிரன் சின்னத்தம்பி



பிறந்த திகதி : *02.06.1941* முகவரி : வளர்மதி, கரவெட்டி கிழக்கு.

கதிரன் சின்னத்தம்பி அவர்கள் ஆரம்பத்தில் மேடைப்பாடகராக இருந்தார். இயல்பாக அமைந்த குரல்வளத்தை வளம்படுத்தியதன் வாயிலாக கிராமிய இசைகளையும் நாடகமேடைப் பாடல்களையும் இசைக்கும் வல்லமையைப் பெற்றார்.

மேலும் தனது சகோதரர்களிடம் இணைந்து நாடகங்களிலும் நடித்துள்ளார். இவர் 1972ஆம் ஆண்டு துன்னாலை தெற்கு கலிகைக் கந்தசுவாமி ஆலயத்தில் நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் பங்குபற்றி முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டார்.

2001ஆம் ஆண்டில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச கலாசாரப் பேரவை யாழ் F.M. வானொலி மேற்கொண்ட நாட்டார் இசைமாலை ஒலிப்பதிவில் பங்குபற்றி பலரதும் பாராட்டைப் பெற்றார்.

2003ம் ஆண்டு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை நடத்திய கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில் இவரது கலைசேவைக்கான செயலாளராக இருந்த பசுபதி அவர்களால் கௌரவிக்கப்பட்டார்.

## திரு. சின்னக்கண்டு சுந்தரலிங்கம்



பிறந்த திகதி : *25.09.1946*

முகவரி : தேவி இல்லம், பத்தியாவத்தை, வதிரி மேற்கு, கரவெட்டி.

திரு. சுந்தரலிங்கம் அவர்கள் சிறந்த ஓவியர், பத்திரிகை நிருபர். பனம் பொருட்களில் ஆக்கங்கள் செய்வதிலும் துணி அச்சிடுவதிலும் திறமையுண்டு.

இவர் பாடசாலைச் சஞ்சிகைகளில் எழுத ஆரம்பித்தார். ஆரம்பத்தில் கலைக்கன்னி என்னும் மாதாந்த சஞ்சிகையினை அச்சிட்டு வெளியிட்டுள்ளார். பின்னர் பத்திரிகைகள் வாயிலாக சுந்தர், ஈழத்தீபன், சுபைதா, ஆரூடவாகனன், ஜேணலசா, ஓவியன், பல்கலைவேந்தன், ஓவியா, வல்லைமைந்தன், பல்கலைச் செல்வன், வல்லைச் செல்வன், வல்லழகனார், சுனாமிசுந்தர் போன்ற புனைபெயர்களில் சோதிடம், அறிவியல், சித்திரம் போன்ற பல துறைகளில் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

இவர் ஈழத்தீபன் என்ற பெயரில் ஓவிய உலகில் ரவிவர்மாவின் தாமரைமலர் ஓவியம் செயற்கைத் தன்மையானது எனக்கூறி இயற்கையான தாமரைமலர் ஓவியத்தை வரைந்து கட்டுரையாகப் பிரசுரித்தார்.

இவர் சில பாடசாலைகளில் தொண்டு அடிப்படையில் சித்திரப்பாடத்தை போதித்ததுடன் தொலைக்கல்வி பாடநெறியின் துணி அச்சிடல், பன்னவேலை போன்றவற்றுக்கான போதனாசிரியராகவும் தொழிற்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. வேலாயுதம் முருகையா



பிறந்த திகதி : 01.03.1949

முகவரி : முருகன் கோயிலடி, நெல்லியடி.

திரு. வே. முருகையா பரம்பரை வழிவந்த நாதஸ்வரக் கலைஞர். எனவே இத்துறையில் இவருக்கு குருவாக இவரது தந்தையாரே இருந்து இத்துறையில் தேர்ச்சியடையக் காரணமாக இருந்தவர். இதனால் இவர் இலங்கையின் புகழ்பூத்த நாதஸ்வர வித்துவான் M.K.பத்மநாதன், M.P. பாலகிருஷ்ணன், கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி என்போரோடு நாதஸ்வரம் வாசித்துள்ளார்.

மேலும், இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற இடங்களுக்கும் சென்று கச்சேரிகள் செய்துள்ளார். மக்கள் இவருக்கு நாதவினோதன், நாதஸ்வர வித்துவான், நாதஸ்வரவேந்தன் போன்ற பட்டங்கள் வழங்கிக் கௌரவித்தனர்.

வடமராட்சியின் புகழ்பெற்ற நாதஸ்வரக் கலைஞருள் ஒருவராக விளங்கும் இவரது புகழ் பல்வேறு ஆலயங்களின் விழாக்களிலும் இனிதொலித்து வருகின்றது.

## செல்வி பேரின்பநாயகி சிவகுரு



பிறந்த திகதி : 19.05.1950

முகவரி : குருஷேஸ்திரம், கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

செல்வி பேரின்பநாயகி சிவகுரு அவர்கள் நடனம், சங்கீதம் போன்ற துறைகளில் ஈடுபாடு உடையவர். இவற்றை தரம் 9ல் கல்விகற்கும் காலத்திலிருந்து பிரம்மஸ்ரீ வீரமணி ஐயரிடமிருந்து முறைப்படி கற்றுக்கொண்டார். பாடசாலை மட்டப் போட்டிகளில் பரிசில்கள் பெற்றார். இவர் நல்லூரில் இயங்கிவந்த அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்திலும், யாழ் ரசிக ரஞ்சன சபாவிலும் பத்மலிங்கம், பாலசிங்கம், வேலாயுதபிள்ளை, மகேஸ்வரி, குலபூசணி, நமசிவாயம், ராதா, லீலா ஆறுமுகையா ஆகியோரிடமும் கற்றார்.

இவர் சிறந்த நடன ஆசிரியராக இருந்து மாணவர்களிற்கு பாடத்திட்டங்களிற்கு அமைவாகவும், கலைநிகழ்வு, போட்டி நிகழ்விற்கு ஏற்றவாறும் தயார்ப்படுத்தி வந்தார். அத்துடன் பல்வேறு கலைமன்றங்களிலும் உன்னத சேவைகளை வழங்கியதுடன் தனது வீட்டிலும் குருஷேஸ்திரம் என்னும் நடனப்பள்ளியை அமைத்து கற்பித்தும் வருகின்றார்.

இதன் காரணமாக 2005ம் ஆண்டு நாட்டிய எழில் கோலங்கள் என்னும் 4 மணித்தியால ஒலி நாடாவை வெளியிட்டார். "கலைக்கதிர்", நடன நட்டுவாங்க ஆசிரியர் "கலைவாரிதி" போன்ற விருதுகளையும் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. வீரகத்தி தனபாலசிங்கம்



பிறந்த திகதி : 01.09.1956 முகவரி : கரவெட்டி மத்தி, கரவெட்டி.

திரு. வீரகத்தி தனபாலசிங்கம் அவர்கள் ஆங்கில ஆசிரியராவார். இவர் பத்திரிகைத்துறையில் 1977ம் ஆண்டு முதல் வீரகேசரி பத்திரிகையின் ஒப்புநோக்காளராக தம்மை இணைத்துக்கொண்டார். பின் 1985ம் ஆண்டு முதல் உதவி ஆசிரியராக பதவி உயர்வு பெற்றார். 1988ம் ஆண்டு தொடக்கம் 1994ம் ஆண்டு வரை இப் பத்திரிகையின் பாராளுமன்றச் செய்தியாளராகவும் பின் மீண்டும் உதவி ஆசிரியராகவும் பணியாற்றினார்.

இவரது 12 வருடகால உதவியாசிரியர் சேவையின் பொழுது சத்தியன், பாலன், பரதேசி ஆகிய புனைபெயர்களில் வெளிநாட்டு அரசியல் விவகாரங்கள், உள்நாட்டு சமகால அரசியல் விவகாரங்கள், சமூகப் பிரச்சினைகள் தொடர்பாக பெருந்தொகையான கட்டுரைகள் எழுதியுள்ளார். அத்துடன் 1994ம் ஆண்டு தொடக்கம் 1997ம் ஆண்டு வரை வீரகேசரி வார வெளியீட்டின் செய்தி ஆசிரியராகவும் பணியாற்றினார்.

மேலும் தினக்குரல் பத்திரிகை வெளியிட முன்நின்று உழைத்ததுடன் அது 1997ம் ஆண்டு ஏப்ரல் வெளியான பொழுது அதன் செய்தி ஆசிரியராகவும் பொறுப்பேற்றுக் கொண்டார். அத்துடன் 2004ம் ஆண்டு முதல் பிரதம ஆசிரியராகவும் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இலங்கைப் பொதுசனத் தொடர்பாடல் வரலாற்றில் 32 வருடங்களுக்கு மேல் பணி யாற்றி உன்னத நிலையில் இருப்பவர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## திரு. இராசன் சிவபாதம் (கிளி)



பிறந்த திகதி : 07.07.1940

முகவரி : மனோகரா, அல்வாய் தெற்கு, அல்வாய்.

திரு. இராசன் சிவபாதம் அரிச்சந்திரா, சத்தியவான் சாவித்திரி, கோவலன் கண்ணகி, ஸ்ரீவள்ளி, அல்லி அர்ச்சுனா, பூதத்தம்பி போன்ற புராண நாடகங்களிலும் பல சமூக நாடகங்களிலும் நடித்துள்ளார். இவர் கவிஞர் மு. செல்லையா, நடிகநிலா ச. தம்பிஜயா, மு. பொன்னையா ஆகியோரின் மாணவரும் ஆவார்.

அல்வாய் சாமணந்தறைப் பிள்ளையார் ஆலயம் இவருக்கு “அரங்க இசைவாணன்' என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. தேவரையாளி இந்துக்கல்லூரி அதிபர் எஸ். சீனித்தம்பி அவர்களின் ஞாபகார்த்த விழாவில் “இசை நாடகமணி” என்ற பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவர் கரவெட்டியின் மூத்த நடிகர்கள் பலரோடும் இணைந்து நடித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அச்சுப்பதிப்பு :

தமிழ்ப்பூங்கா அச்சகம், நெல்லியடி, கரவெட்டி.

தொ.இல. : 021 2264014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலக நிகழ்வுகளின் பதிவுகள்

## திருவுடையாள் பிரதேச மலர் வெளியீடு - 2008





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச கலை இலக்கிய விழா - 2008









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவநெறி வெளியீட்டு விழா - 2008





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறிக் கருத்தரங்கு - 2008





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு விழா - 2008





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் முதியோர் தினம் - 2008





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி புலமைப்பரிசில் வழங்கல் விழா - 2008







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் தின விழா - 2008






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்
கௌரவ K. N. டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பிரதேச செயலகத்திற்கு
வருகைதந்தபொழுது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சர் கௌரவ பேராசிரியர் திஸ்ஸ விதாரண அவர்கள் கரவெட்டி பிரதேச செயலகத்திற்கான விதாதா வள நிலையத்தை திறந்துவைத்த பொழுது






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் 2008ம் ஆண்டு பிரதேச மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் முதலாவது இடத்தினைப் பெற்றுக்கொண்டமைக்காக பிரதேச செயலரும், கூடுதலான பங்களிப்புச்செய்த உத்தியோகத்தர்களும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு.க.கணேஷ் அவர்களால் பாராட்டி கௌரவிக்கப்படல்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிராம அலுவலர்களிடையே 2008ம் ஆண்டு நடத்தப்பட்ட முகாமைத்துவப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் இரண்டாவது இடத்தினைப் பெற்றுக்கொண்ட கரணவாய் கிராம அலுவலர் திரு.க.த.புவனேந்திரன் அவர்கள் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ரூபினி வரதலிங்கம் அவர்களால் பாராட்டி வெற்றிக்கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டபோது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்துறைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட பற்றிக் பிரிண்டிங் பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்த மாணவர்களின் கண்காட்சி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொழில்துறைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மின் இணைப்புப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களும் உத்தியோகத்தர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்துறைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கணனி வன்பொருள் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களும் உத்தியோகத்தர்களும்



தொழில்துறைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட இயந்திரம் பழுதுபார்த்தல் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களும் உத்தியோகத்தர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச பதிவாளர் அலுவலக நடமாடும் சேவை - 2008







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வூதியர்களுக்கான நடமாடும் சேவை - 2008



துரித அபிவிருத்தித் திட்ட வேலைத்திட்டங்கள்



நெல்லியடி சந்தைக் கட்டிடத் தொகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துரித அபிவிருத்தித் திட்ட வேலைத்திட்டங்கள்



கரவெட்டி மத்திய மருந்தகத்திற்கான தண்ணீர்த் தாங்கி

## கிராம எழுச்சி (கம நெகும) திட்ட வேலைத்திட்டங்கள்

காந்தி சனசமூக நிலையம்





இராஜகிராம சனசமூக நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம எழுச்சி (கம நெகும) திட்ட வேலைத்திட்டங்கள்



துன்னாலை தெற்கு கலாசார மண்டபம்



வீட்டுத்திட்டம்



மலசலகூடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள் எழுச்சித்திட்டம் - 2008







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org